3013.


[illegible]

01.03.1989 [illegible] 19. [illegible] 17.

16.03.1989 [illegible] 19 [illegible] 18


JL
V.211m, N70TA.
N89. 19.1
127074.


தமிழரசு




# சமணத்தைப் போற்றும் தமிழகம்



## இந்த இதழுடன்

**இலவச இணைப்பு**

# எழுச்சிக்கோலம் காண்போம்!

**தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஆளுநர் உரையின் மீதான விவாதங்களுக்குப் பதிலளித்து மாண்புமிகு முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை (முழு விவரம்)**

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2020
விபவ - மாசி 18
மலர்: 19 இதழ்: 17
1 - 3 - 1989

"ஆச்சாரிய பத்மசாகர் பெருமான், நாடு முழுவதும் தன்னுடைய மாணவர்களுடன் நடந்து சென்று பல கருத்துக்களை உணர்த்தி வருகிறார். 17 மாணவர்களை, அவர் கொண்டிருக்கிறார் என்று என்னிடம் கொடுக்கப்பட்ட குறிப்பில் படித்துத் தெரிந்து கொண்டேன். அவர்கள் 17 பேர் மாணவர்கள்-என்றால், நாங்களும் 17 பேர் அமைச்சர்களாக இருக்கிறோம் என்பதை ஒப்பிட்டுப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறேன்.

''இந்தியாவில் சமண மதத்திற்கு அதிக வாய்ப்பும், வசதியும் வழங்கிய பகுதி தமிழ்நாடு என்று சொன்னால், அதை வரலாறு மறுக்காது. பல தமிழ் நூல்கள் சமண முனிவர்கள்-சமணப் புலவர்களால் இயற்றப்பட்டு இருக்கிறது.

''இங்குப் பேசிய சிமன்பாய் படேல், திராவிடக் கலாச்சாரம் பற்றிப் பேசினார். திராவிடக் கலாச்சாரத்திற்கும், சமணத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அதனால் திராவிடப் பற்று கொண்ட என்னை, சமணத்தில் பற்று கொண்ட நீங்கள் அழைத்திருக்கிறீர்கள்.

''சந்தேகத்திற்கு அப்பால்' என்ற ஆங்கிலப் புத்தகம் இங்கு வெளியிடப்பட்டது. அதில் விரோதிகளாகப் பிறக்கும் மிருகங்கள்கூட நண்பர்களாக ஆகிவிடுவது உண்டு என்ற கருத்து வருகிறது. இந்தக் கருத்து மிருகங்களுக்குச் சொல்லப்பட்டவை அல்ல. மனிதர்களுக்குச் சொல்லப்பட்டவையாகும்.

''ஆனால், மனிதர்கள் அப்படியிருக்கவில்லை. மனிதர்கள் பிறக்கும் போது நண்பர்களாகப் பிறந்துவிட்டு, அதற்குப் பிறகு விரோதிகளாக ஆகிவிடுகிறார்கள். எனவே, நண்பர்களாகப் பிறக்கும் மனிதர்கள், விரோதிகளாக ஆகிவிடக்கூடாது என்பதற்காகத்தான் சொல்லப்பட்டு இருக்கிறது. எனவே, வன்முறை தவிர்த்து, ஒருவருக்கொருவர் நட்புடன் வாழ வேண்டும்''

—[சமண மதத் தலைவர் ஆச்சார்யா பத்மசாகர் சூரிஷ்வார்ஜி மகராஜுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவில் [25-2-89] மாண்புமிகு முதல்வர் கலைஞர் ஆற்றிய உரையிலிருந்து]

12 7074

# நிதி இழப்புக்கு ஈடு

"திரு சால்வே அவர்களே, டாக்டர் செல்லையா அவர்களே, நீதிபதி திரு.குரேசி அவர்களே, திரு.மகேஷ் பிரசாத் அவர்களே, மற்றும் நிதிக்குழுவின் அலுவலர்களே!

"என்னுடைய அமைச்சரவை சார்பிலும், அலுவலர்கள் சார்பிலும், உங்கள் ஒவ்வொருவரையும் உளமார வரவேற்கிறேன். நீங்கள் இம்மாநிலத்தில் தங்குவது குறுகிய கால அளவே என்றாலும், அது வசதியானதாக அமையும் என்பதோடு, நமது பேச்சு வார்த்தைகள், மாநிலத்திற்கு உதவிகரமானதாகவும் பயனளிப்பதாகவும் அமையும் என நான் நம்புகிறேன்.

"இன்று நாங்கள் உங்கள் முன் வைத்துள்ள இரண்டாவது துணை விழுமிய குறிப்பு, புதிதாகப் பதவியேற்ற இவ்வரசு மாநிலத்தின் நிதி நிலையை ஆய்வு செய்ததன் அடிப்படையிலும், உங்களுடைய பரிந்துரைகளுக்குரிய, 1990-95ஆம் ஆண்டுகளுக்கான இம்மாநிலத்தின் தேவைகளின் அடிப்படையிலும் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், இது மைய-மாநில உறவுகளின் கோட்பாடு மற்றும் அணுகுமுறையின் அடிப்படையிலும் அமைந்துள்ளது. முந்தைய அரசு பிப்ரவரி 1988இல் குழுவிற்கு அனுப்பிய முதல் விழுமிய குறிப்பு மற்றும ஜனவரி 1989இல் அளித்த முதல் துணை விழுமிய குறிப்பு ஆகியவற்றைத் தொடர்ந்து இந்த விழுமிய குறிப்பு அளிக்கப்படுகிறது. இந்த விழுமிய குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய பிரச்னைகளைப் பற்றி மட்டுமே நான் உரையாற்றவிருக்கிறேன்.

"இதற்குப் பின்னணியாக முதலில் இம்மாநிலத்தின் அமைப்புமுறையைப் பற்றிக் கூற விழைகிறேன். இந்திய மக்கள் தொகையில் 7 சதவீத மக்கள் தொகையைப் பெற்றுள்ள தமிழ்நாடு இந்தியாவின் பரப்பளவில் 4 சதவீதம் பரப்பளவை மட்டுமே பெற்றுள்ளது. இதனால் மக்கள் தொகைப் பெருக்கமும் மக்கள்-நில விகிதாச்சார அளவும் பாதகமாக உள்ளது. எங்களுடைய மக்கள் தொகையில் சுமார் மூன்றில் ஒரு பகுதியினர் நகர்ப் பகுதிகளில் வாழ்கின்ற காரணத்தினால் வீட்டுவசதி, குடிசைப் பகுதி மேம்பாடு, குடிநீர் வழங்கல், துப்புரவு வசதி, போக்குவரத்து மற்றும் சாலைகள் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கப் பெருமளவில் முதலீடு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. பழுப்பு நிலக்கரி மற்றும் சிறிதளவு எண்ணெய் வளம் ஆகியவை கிடைப்பதைத் தவிர, எங்களுக்குக் குறிப்பிடத்தக்க வகையில் எந்தக் கனிவளமும் இல்லை. மேலும், இந்தியாவில் நிலக்கரி பெருமளவில் கிடைக்கக்கூடிய பகுதிகளிலிருந்து வெகு தொலைவில் இம்மாநிலம் அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் ஆறுகள், ஏரிகள், நிலத்தடி நீர் போன்ற பாசன வாயில்கள் அனைத்தும், மழை நீரையே நம்பியுள்ளன..

"இம்மாநிலம், மிகக் குறைந்த மிதமான பருவ மழையைப் பெறும் மாநிலமாகும். தமிழ்நாடு அடிக்கடி தொடர்ந்து நீடிக்கும் வறட்சி நிலைக்கு உள்ளாவதோடு வடகிழக்குப் பருவ மழையின் காரணமாக வெள்ளமும், புயலும் ஏற்படுவது வழக்கமாகிவிட்டது. ஏற்கெனவே நிலமேற்பரப்புப் பாசன ஆதாரங்கள் ஏறக்குறைய முழுவதுமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேற்கொண்டு எதிர்காலத்தில் மேம்பாடு செய்வதற்கும் இதுவரை பெற்றுள்ள பாசன வசதிகளைத் தொடர்ந்து பெறவும் கூட நாங்கள், அண்டை மாநிலத்தின் ஒத்துழைப்பைச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது.

"நெல் விளைச்சலின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் அமைந்த வேளாண்மைப் பொருளாதாரம், கோதுமை உற்பத்தித் திறனுடன் ஒப்பு நோக்கின், குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை. இவ்வாறாக, மக்கள் தொகைப் பெருக்கம், குறைந்த அளவு நிதி ஆதாரங்கள், அமைப்பு ரீதியான குறைபாடுகள் போன்ற பல்வேறு அடிப்படைப் பிரச்னைகளுடன் தமிழ்நாடு போராட வேண்டியுள்ளது. இந்தச் சூழ்நிலைகளின் காரணமாகவே, இந்தியாவின் ஏழ்மையான மாநிலங்களில் ஒன்றாகத்தமிழ்நாடு உள்ளது. தமிழ்நாட்டின் நபர்வாரி வருவாய், அனைத்திந்திய சராசரி அளவை விட மிகவும் குறைவானதாகும்; ஏழ்மை விகிதாச்சாரம் பெருமளவில் அதிகமாக உள்ளதோடு, இம்மாநிலத்தில் வேலை வாய்ப்பற்றோரின் எண்ணிக்கையும் மிகவும் அதிகமாக உள்ளது.

"கடந்த பத்தாண்டுகளில் தொழில் வளர்ச்சி நிலையில் மிக அதிக அளவிற்குச் சரிவுகள் ஏற்பட்டிருந்த அதே நேரத்தில் தமிழகம் இந்திய தொழில் வரைபடத்தில் தனது முன்னணி நிலையைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ள முடிந்தது. பாசனம், மின்விசை ஆகியவற்றிற்கு, அதிலும் குறிப்பாக கிராமப்புற மின் இணைப்பிற்குக் கணிசமான அளவிற்கு நாங்கள் முதலீடு செய்துள்ளோம். இதன் மூலம் பாசன மேம்பாட்டிற்கு நிலத்தடி நீரைப் பெருமளவிற்குப் பயன்படுத்த முடிந்தது. ஆனால், இவ்வளர்ச்சிக்குப் பல பிரச்னைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது.

தமிழ்நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் மற்றும் பள்ளி செல்லும் மாணவர்களின் விகிதாசாரத்தின் அளவு மிகவும் அதிகமாக இருந்தபோதிலும், அண்டை மாநிலமான கேரளாவை விட மிகவும் பின் தங்கியுள்ளது. பிறப்பு வீதம் குறைவாக உள்ளது. ஆனால், இறப்பு வீதங்களும், குழந்தைகளின் இறப்பு வீதங்களும் தொடர்ந்து அதிகமாகவே உள்ளன. இதனை, இயன்ற வரையில் குறைக்க வேண்டியது அவசியமாகும். வீட்டுவசதி, வீட்டு மனைகள் வழங்குதல், குடிநீர் வழங்கல், சத்துணவு அளித்தல், ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நலன் ஆகியவை போன்ற மற்ற சமுதாய நலப் பணிகளைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு நல்ல முன்னேறிய நிலையில் உள்ளது. இந்தக் குறைந்த அடிப்படைத் தேவைகள் மக்களைச் சென்றடைவதற்கான வழி முறைகளைச் செம்மைப்படுத்த நாங்கள் கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது. எமது மக்களின் வாழ்க்கை நிலைகளைச் செம்மைப்படுத்த ஏற்படும் செலவிற்கேற்ற பயன்தரத்தக்க நலத்திட்டங்களுக்கு நேரடியாகவோ அல்லது நன்கொடை உதவித்

## முதல்வர் கலைஞர்

# நெறிமுறையில் நீதி

தொகைகள் மூலமாகவோ தகுந்த நிதி ஆதாரங்களுக்கு வகை செய்வது என்பது எமது அரசின் உறுதியான கொள்கையாகும்.

"உலகிலுள்ள வளரும் நாடுகளில், இந்தியா சில துறைகளில் வளர்ச்சி அடைந்தும், வேறு பல துறைகளில் மிகக் குறைந்த அளவே வளர்ச்சி அடைந்து உள்ளதுபோல், நான் தமிழ்நாட்டைப் பற்றி எடுத்துக் கூறியவற்றிலிருந்து, இம்மாநிலம் முன்னேற்றமடைந்த மாநிலமா அல்லது பின்தங்கிய மாநிலமா என்று எளிதில் வகைப்படுத்த இயலாத ஒரு மாநிலமாகுமென்பது தெளிவாகும். மிகக் குறைந்த நபர்வாரி வருமானம், உயரளவு வறிய நிலை, மிக அதிகமான வேலை வாய்ப்பின்மை ஆகியவற்றின் காரணமாக, தமிழ்நாடு எந்த முன்னேற்றம் அடைந்தாலும், தன்னிறைவுடன் இருக்க இயலாது என்பது தெளிவானதாகும். நாங்கள் பல்வேறு துறைகளில் பெருமளவிற்கு முன்னேற்றம் அடைய வேண்டியுள்ளது. இதற்கு, நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்காகத் தொடர்ந்து நாங்கள் எடுத்து வரும் முயற்சிகள் ஆதரவளிக்கப்படுவதோடு மத்திய அரசிடமிருந்து நிதி மாற்றங்களைச் செய்வதன் மூலம் வலுப்படுத்தப்படவேண்டும்.

"நிதிக்குழு அல்லது திட்டக் குழுவின் வாயிலாகவோ, சட்ட முறையில் அமையாத திட்டம் சாரா மாற்றங்கள் மூலமாகவோ அல்லது நிகர மத்தியக்







# பள்ளிக் கட்டடங்கள் உருவாக்க நிதி உதவி

ன்கள் மூலமாகவோ மத்திய அரசின் நிதி மாற்றங் ரில் தமிழ்நாடு தொடர்ந்து தனது நியாயமான ங்கைப் பெறவில்லை என்று இத்தருணத்தில் மிகவும் நத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களது மூமிய குறிப்பிலுள்ள புள்ளிவிவரங்கள் இதனை முழு துமாக உறுதிப்படுத்துகின்றன. நிதிக்குழுவின் மூலம் சய்யப்படும் மாற்றங்களைப் பொறுத்தவரை, ந்தைய குழுக்கள் பின்பற்றிய பற்றாக்குறையை ரப்பும் அணுகுமுறை. குறைந்த அளவு நபர்வாரி ருமானம் பெற்றிருந்தும், நிதி ஆதாரங்களைத் ரட்டுவது மற்றும் மதிநுட்பமிக்க நிதி நிர்வாகத்திலும் கரற்ற முயற்சிமேற்கொண்டுள்ள தமிழ்நாட்டை பாதிப் க்கு உள்ளாக்கியுள்ளது. உங்களது ஆய்வு வரம்பில், ற்றாக்குறையை நிரப்பும் அணுகுமுறை வரம்பின் டிப்படையிலான அணுகுமுறைக்கு மாற்றப்பட்ட ால், மதிநுட்பமிக்க முயற்சிக்குப் பாராட்டுகள் ளிக்கப்படுவதற்குப் பதிலாக தண்டனைக்குள்ளாக்கும் ந்த கால நடுநிலையற்ற செயலுக்குத் தீர்வுகாண யலும். இதனைக் கருத்தில் கொண்டு, உங்களது றிக்கை அமையுமென நான் நம்புகிறேன்.

''உங்களிடம் முன்னதாக அளிக்கப்பட்டுள்ள ன்னுடைய முழு உரையில், மாநிலங்களின் நியாய ான கோரிக்கைகளை இக்குழு எவ்வாறு அணுகலாம் ன்பதற்கான நியாயமான, நடைமுறை சாத்தியமான ழிவகைகள் பலவற்றைத் தெரிவித்துள்ளேன். அந்த ரம்பிற்குட்பட்டு, நீங்கள் அனுதாபத்துடன் பரிசீலிக்க வண்டிய தமிழ்நாட்டின் சிறப்புப் பிரச்னைகளையும் றிப்பிட்டுள்ளேன்.

''என்னுடைய உரையில் இடம் பெற்றுள்ள முக் ிய கருத்துக்களாவன:

நேரடி நிதி மாற்ற அளவை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள், குறிப்பாக, பங்கிடத் தக்க வரிகள் தொடர்பான வரி ஏய்ப்புக்களைத் தடுப்பது.

பிரித்துக் கொடுக்கத்தக்க வரித் தொகையில் கூட்டு நிறுவன வரியையும் சேர்க்க வேண்டியதன் அவசியம்.

மேற்கொள்ளும் சில பொருட்களுக்குக் கூடுதல் ஆயத் தீர்வை விதிப்பது குறித்த எந்த ஒரு செயற் குறிப்பிற்கும் எங்களின் எதிர்ப்பு

தமிழ்நாட்டைப் போன்ற அதிக வரிகள் விதிக்கப் படும் மாநிலங்களைப் பொறுத்த மட்டில், வரி வருவாயை மதிப்பிட யாதொரு மாற்றமும் இன்றி அடிப்படையிலான மதிப்பீடுகளைப் பின்பற்ற வேண்டியதன் அவசியம்.

சாராயம் மற்றும் கள்ளுக் கடைகளை மூடியுள்ள தால் ஏற்படக்கூடிய நிதி இழப்பு முழுவதையும் ஈடுசெய்ய வேண்டியதன் அவசியம்.

எங்கள் மாநிலப் பொதுத்துறை நிறுவனங்களி லிருந்து குறிப்பாக மின் வாரியம் மற்றும் சாலைப் போக்குவரத்துக் கழகங்களிலிருந்து கிடைக்கும் வருவாய்களைப் பொறுத்தமட்டில், நியாயமான நெறிமுறைகள் பின்பற்றப்பட வேண்டியதன் அவசியம்.

தற்போது வழங்கப்பட்டு வரும் உதவித் தொகை கள் மற்றும் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் சமூக நலத் திட்டங்கள் ஆகியவை முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம்.

பங்கீடு செய்யத் தக்க வரித் தொகைகள், கூடுதல் ஆயத் தீர்வைகள் மற்றும் இரத்து செய்யப்பட்ட இரயில் பயணிகள் கட்டணத்தின் மீதான வரிக்குப் பதிலான மானியம் ஆகியவற்றைப் பங்கிடுவதற்கு நியாயமான மற்றும் சமமான வரம்புகள்.

திட்ட நிதியுதவிக்கான நடைமுறைகள் மற்றும் ஏற்பாடுகளில் மாற்றங்கள் ஏதேனும் செய்யக் கருதப்படுமாயின் அவற்றைத் தேசிய வளர்ச்சிக் குழு முடிவு செய்ய வேண்டியதன் அவசியம்.

''அடுத்ததாக, தமிழ்நாட்டிற்குள்ள சில சிறப்புப் பிரச்னைகளுக்கு வருகிறேன். அவற்றைப் பற்றி எங் கள் விழுமிய குறிப்பில் குறிப்பிட்டுள்ளோம். அவற் றில், (1) சென்னை மாநகரின் குடிநீர்ப் பிரச்னை, (2) சென்னை மாநகரில் குடிசைப் பகுதி மேம்பாட்டிற்கான மானியங்கள், (3) சென்னை மாநகரில் நீர்வழிகளின் சுற்றுச்சூழல் மேம்பாடுகள், (4) பள்ளிக் கட்டடங்கள், (5) நிதி நிர்வாகத்தின் நிலை உயர்த்துதல் மற்றும் (6) கடற்கரையோர மாவட்டங்களில், கடல் நீர் நிலத் தடி நீரில் கலப்பதைத் தடுத்தல் ஆகியவையும் அடங்கும்.

இப்பிரச்னைகள் குறித்த விரிவான தகவல்களை எங்கள் விழுமிய குறிப்பில் அளித்துள்ளோம். இந்தச் சிறப்புப் பிரச்சினைகள் உங்களின் முழுக் கவனத்தையும் அனுதாபத்தையும் பெறும் என நம்புகிறோம். பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களைப் போன்றே ஏறக்குறைய அதே விகிதாச்சாரத்தில் குடிசைவாழ் மக்கள் சென்னை யில் உள்ளனர். ஆனால், அவர்கள் வாழும் குடிசைப் பகுதிகள் நகரெங்கும் பரவலாக உள்ளன. அப்படி யிருந்தும், குடிசைப் பகுதி மேம்பாட்டிற்காக பம்பாய், கல்கத்தா ஆகிய இரு பெருநகரங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 50 கோடி மானியம் வழங்கப் பரிந்துரைத்த நிதிக்குழு, சென்னையைப் புறக கணித்துள்ளது எங்களுக்கு ஆழ்ந்த ஏமாற்றம் அளிக் கிறது என்ற கருத்தை நான் எடுத்துரைக்காவிடில் இங்கே என்னுடைய கருத்துக்களை நான் வெளிப்படை யாகத் தெரிவிக்கவில்லையென்றாகிவிடும். இதேபோல, தொடக்கக்கல்வி நிலையில், சிறுவர்களைப் பள்ளியில் சேர்த்துக் கொள்வதில் தமிழ்நாடு பின் தங்கவில்லை என்றாலும், பள்ளிக் கட்டடங்கள் என்று வரும்போது தமிழ்நாடு பின் தங்கிய நிலையிலேயே உள்ளது.

தொடக்கக் கல்வி நிலையில் இம்மாநிலம் நன்கு முன்னேற்றமடைந்திருப்பதால், அப்பள்ளிகளுக்குக் கட்டடம் கட்டிக் கொடுப்பதிலும், பள்ளி செல்லும் சிறுவர்களுக்கு மற்ற வசதிகளைச் செய்து கொடுப்பதிலும் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆகையால், இவற்றிற்காகத் தனி நிதி யுதவி கோர எங்களுக்கு நியாயமான உரிமையுள்ளது. இது தொடர்பாகவும் இதுபோன்ற பிற இனங்கள் தொடர்பாகவும் மாநிலங்களுக்கிடையே பாகுபாடு காட்டுவதைத் தவிர்த்து ஒரு குறிக்கோளை முற்றி லும் பின்பற்றிய விதிமுறைகள் அடிப்படையில் நிதிக் குழு சிறப்பு மானியம் ஒதுக்கும் என்று நம்புவோமாக.

''புகழ்பெற்ற மற்றும் சிறந்த அனுபவம் வாய்ந்த உறுப்பினர்களைக் கொண்ட உங்கள் குழு, மாநிலங் களின் முறையீடுகளை ஒட்டுமொத்தமாக அனுதாபத் துடன் அணுகிப்பரிசீலிக்குமென்றும், அவ்வாறே, அதே வரம்பிற்குட்பட்டு, தமிழ்நாட்டின் தனிப் பிரச்னை கள் குறித்துப்பரிசீலிக்கும் — என்றும் நிச்சயமாக நம்பு கிறோம். மத்திய மற்றும் மாநிலங்களின் வரவுகள்- செலவுகள் குறித்து மதிப்பிடும்போதும், உங்களின் அணுகுமுறை ஒரே சீரானதாகவும், பாரபட்சமின்றி ஒரே மாதிரியாகவும் இருக்குமென நம்புகிறோம். ஒவ் வொரு மாநிலத்தின் சிறப்புப் பிரச்னைகளுக்குரிய முக்கியத்துவம் அளித்து, அவற்றுக்கு வரிகள் மற்றும் மானியங்களைப் பிரித்துக் கொடுப்பதிலும் நீங்கள் நியாயமாகச் செயல்பட்டு, சம முக்கியத்துவம் அளிப் பீர்கள் என்று நம்புகிறோம்.

''மத்திய அரசின் வருவாய்ப் பற்றாக்குறையைக் குறைக்க வேண்டுமென்ற நோக்கத்தில், உங்களின் பரிந்துரைகள், மாநிலங்களின் கணக்குகளில், தாங்க முடியாத சுமையை ஏற்றாது என்று நம்புகிறோம். நிதி நிலையில் ஏற்படும் பற்றாக்குறையை ஈடு செய்யும் வசதி மத்திய அரசுக்கு உள்ளதைப்போல மாநில அரசு களுக்கு இல்லாத காரணத்தினால் இது ஒரு அடிப்படை முக்கியப் பிரச்னையாகின்றது. ஆகையால், நாங்கள் எங்களுக்கென்று வழங்கப்படும் நிதி ஆதாரங்களுக்குள் செயல்பட வேண்டியுள்ளது. இவ்வாறு வழங்கப்படும் நிதி ஆதாரங்கள், எங்கள் மக்களுக்கான நல, வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்த எங்களுக்குள்ள அதிகமாகப் பெருகி வரும் பொறுப்புகளை நிறைவு செய்யக்கூடிய அளவுக்குத் தாராளமாக இருக்க வேண்டும். இயன்ற அளவிற்கு வருவாய்ப் பற்றாக்குறையைக் குறைப்பதில் நாங்களே உன்னிப்பாக இருக்கும் அதே நேரத்தில், மாநில அரசுகளின் பங்கில், வருவாய்ப் பற்றாக்குறை களைப் போக்க, முறையற்ற கடுமையான இலக்குகளை நிர்ணயிக்கவேண்டாம் என்று நான் குழுவை வலியுறுத்து கிறேன்.

"வருவாய்ப் பற்றாக்குறையை விரும்பத்தக்க அளவிற்குக் குறைக்கும் முயற்சியானது உண்மையான மற்றும் நியாயமான கால கட்டத்திற்குள் படிப்படியாக மேற்கொள்ளப்படவேண்டியிருக்கும். இதைச் சரிக்கட்டும் முறை தற்போதுள்ள நலப் பணிகளைப் பாதிக்கக்கூடிய அளவிற்குக் கடுமையானவையாக இருக்கக்கூடாது. வளர்ந்து வரும் நாடுகள் அவற்றின் வெளி நிதியுதவித் தொடர்பாக ஒரு சம நிலையை எய்துவதில், அனைத்து நாட்டு நிதி நிறுவனங்கள் முன் இதே கருத்தைத்தான் எடுத்து வைத்துள்ளன என்பதை இக்குழு அறியும். வளர்ச்சி மற்றும் சமூக நீதி ஒரு சேர நடைபெற வேண்டுமென அனைத்து நாட்டு அமைப்புகள் முன் பாக வாதிடுவதில் இந்திய அரசு முன்னணியில் உள்ளது. இதே நெறிமுறை மத்திய, மாநில நிதி மாற்றங்களுக் கும் பின்பற்றப்பட வேண்டுமென வலியுறுத்துகிறோம்.

''உங்களின் தமிழகப் பயணம் பயனுள்ளதாக வும், மகிழ்வானதாகவும் அமைய விரும்புகிறேன். இவ் வுரையில் நான் எங்களது முக்கியமான பிரச்னைகளை மட்டுமே சுட்டிக் காட்டியுள்ளேன். அவை குறித்த விளக்கங்கள், உங்களிடம் அளிக்கப்பட்டுள்ள விழுமிய குறிப்பில் விவரிக்கப்பட்டுள்ளன. மேலும் தேவைப்படும் விளக்கங்களும் விவரங்களும் நமது பேச்சு வார்த்தை களின்போது அளிக்கப்படும்.

நன்றி, வணக்கம்!

—ஒன்பதாவது நிதிக்குழுவின் முன் தமிழகத்தின் கோரிக்கைகளை எடுத்துக்கூறி, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 24-2-89 அன்று ஆற்றிய உரை

## செய்திகள் செய்திகள் செய்திகள்

தமிழ்நாட்டில் 50,000 எக்டேர் நிலத்தில் பாமா யில் எண்ணெய் உற்பத்திக்கான ஆப்பிரிக்க ரகப் பனை களைச் சாகுபடி செய்யத் திட்டமிட்டுள்ளதாக இந்திய விவசாய ஆராய்ச்சிக் கவுன்சிலின் தலைமை இயக்குநர் திரு எம்.வி.ராவ் அவர்கள் 20.2.89 அன்று துடியலூரில் தெரிவித்தார்.

விவசாயிகள் தங்கள் கால்நடைகளுக்கு உணவாக பருத்திக்கொட்டையை நேரடியாகத் தரவேண்டாம் என்றும் அதிலிருந்து சமையலுக்குப் பயன்படும் எண் ணெய்யைப் பிரித்தெடுத்தபின் பிண்ணாக்கைக் கால் நடைகளுக்கு வழங்குமாறும் அவர் கேட்டுக் கொண் டார்.

இந்திய விமானப்படையின் விமானதளம் ஒன்று திருச்சியில் அமைய உள்ளது. 10 யூனிட்டுகளாக அமைய இருக்கும் இந்தத் தளத்தில் போர் விமானங்கள், குண்டு வீசும் விமானங்கள், ஹெலிகாப்டர் பிரிவுகள் உள்ளடங் கும். 350 ஏக்கர் நிலத்தில் தளம் உருவாகும்.

ஐந்து நெடுஞ்சாலைகளைத் தேசிய நெடுஞ்சாலை களாக மத்திய அரசு அறிவித்துள்ளது. இதில் மதுரையி லிருந்து கொச்சி செல்லும் 280 கி.மீ. நீளமான சாலை யும் அடங்கும்.

சோவியத் யூனியனில் உள்ள ஆர்மீனியா மாநிலத் தில் கடந்த ஆண்டு டிசம்பர் திங்களில் நடந்த கொடிய பூமி அதிர்ச்சி காரணமாக ஏற்பட்ட மொத்தச் சேத மதிப்பு ரூ. 225 ஆயிரம் கோடி. இறந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 25 ஆயிரம். காயமடைந்தோர் 19 ஆயிரம். உயிரிழந்தோர் குடும்பத்திற்கு இதுவரை 433 மில்லியன் ரூபிள்ஸ் (பணம்) உதவி செய்யப்பட் டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் 16.2.89 அன்று நடைபெற்ற 14வது பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெற்ற 227 பட்டதாரிகளுள் 101 பெண்கள் பி.எஸ்சி. விவசாயத்தில் பட்டம் பெற்றவர் களாவர். இது தவிர பட்டமேற்படிப்பு வகுப்பிலும் கணிசமான பெண்கள் பட்டம் பெற்றுள்ளனர்.

சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகத்திற்கு நெதர்லாந்து அரசு, சுமார் ரூ. 3.32 கோடி மதிப்புள்ள 'பிரஸ்டீஜ்' என்ற பல்வேறு பணித்திறன் கொண்ட கப்பல் (Multi Purpose / Harbour Vessel) ஒன்றைப் பரிசாக வழங்கியுள்ளது.

தேசிய வேளாண்மை ஆராய்ச்சித் திட்டத்தின் இரண்டாவது பகுதியை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உலக வங்கியின் உதவியுடன் ரூ. 487 இலட்சம் செலவில் மேற்கொண்டுள்ளது.

# சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட சட்டமுன் வடிவுகள்

## மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் பதவிக் காலம் குறைப்பு

21 வயதானவர்களைக் கொண்ட வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் மாநகராட்சி தேர்தலை நடத்தவும், மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக் காலத்தை ஆறு ஆண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகளாகக் குறைக்கவும், மாநகராட்சி மன்றத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் பதவிக் காலத்தை இரண்டு ஆண்டுகளிலிருந்து ஓராண்டாகக் குறைக்கவும் வகை செய்யும் (1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (தனி வகை முறைகள் மற்றும் திருத்த) சட்டமுன் வடிவு 17-2-89 அன்று சட்டப் பேரவையில் நிறைவேறியது. இதற்கான தீர்மானத்தை ஆதரித்து 125 வாக்குகளும், எதிர்த்து 30 வாக்குகளும் கிடைத்தன. இறுதியில் தீர்மானம் நிறைவேறியது.

## பதவிக் காலம் உயர்வு

நகராட்சி-ஊராட்சி ஒன்றியம் ஊராட்சி ஆகியவற்றின் பதவிக் காலம் 3 ஆண்டில் இருந்து 5 ஆண்டாக உயர்த்த வகை செய்யும் சட்ட முன் வடிவு 18-2-89 அன்று சட்டப்பேரவையில் நிறைவேறியது.

## தமிழகத்தில் மீண்டும் மேலவை

தமிழகத்தில் மீண்டும் சட்ட மன்ற மேலவையைக் கொண்டுவர வகை செய்யும் சட்ட முன் வடிவு 20.2.89 அன்று சட்ட மன்றத்தில் நிறைவேறியது. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் முன்மொழிந்த இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக 169 வாக்குகளும், எதிராக 22 வாக்குகளும் கிடைத்தன.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானம் வருமாறு:

"தமிழ்நாடு மாநிலத்தில் சட்ட மன்ற மேலவை ஒன்றைத் தோற்றுவிக்கலாம் என்றும், அதற்குரிய சட்டத்தினை, அந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குச் செயல் விளைவு அளிக்க தேவைப்படுகிற அரசமைப்புத் திருத்தத்திற்கான வகைமுறைகளையும், மற்றும் நாடாளுமன்றம் தேவையென கருதலாகும் நிறைவுரு மற்றும் இடைவுரு மற்றும் விளைவுரு வகைமுறைகளையும் உள்ளடக்கிய வகையில் இந்திய அரசியலமைப்பின் 169ஆம் உறுப்பின் (1)ம் கூறின்கீழ் நிறைவேற்றலாம் என்றும் இந்தப் பேரவை தீர்மானிக்கிறது."

## பெரும் ஊழல் தடுத்து நிறுத்தப்பட்டது

அமெரிக்காவில் இருக்கும் இந்தியரான (என்.ஆர்.ஐ) டாக்டர் பழனி பெரியசாமியை நிர்வாக இயக்குநராகக் கொண்ட பல்லவன் ஓட்டல் நிறுவனத்துக்கு, கடந்த கால ஆட்சியில் சென்னை மாநகராட்சியிடமிருந்து திரும்பப் பெற்று சுமார் 324கிரவுண்டு நிலம் மாற்றம் செய்ய 1987 ஆகஸ்ட், டிசம்பர் மாதங்களில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் 18-2-89 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டம் விரிவாக ஆய்வு செய்தது.

பொதுமக்களிடமிருந்தும் பத்திரிகைகளின் மூலமும் இந்த விவகாரத்தில் முறைகேடுகள் நடந்திருக்கின்றன என்றும் சுற்றுச் சூழலுக்கு இடையூறு ஏற்படுமென்றும் பல ஆட்சேபணைகள் எழுந்ததையொட்டி இதுகுறித்து இன்றைய அமைச்சரவை விவாதித்தது.

சுமார் நாற்பது கோடி ரூபாய் மதிப்புள்ள நிலத்தை ஒரு கோடியே எழுபத்தாறு இலட்ச ரூபாய் என மதிப்பிட்டு; அந்தத் தொகையையும் தமிழ்நாடு சுற்றுலா வாரியப் பங்குத் தொகையாக மாற்றிக் கொள்ள கடந்த ஆட்சியில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடந்த கால ஆட்சியில் நடைபெற்றுள்ள இந்தப் பெரும் ஊழலைத் தடுத்து நிறுத்தும் வகையில் சம்பந்தப்பட்ட அரசாணைகளை உடனடியாக ரத்து செய்து நிலத்தை அரசு எடுத்து சுற்றுச் சூழலுக்குப் பாதகமில்லாத வகையில் பயன்படுத்துவதென விரிவான அரசாணை விரைவில் வெளியிடப்படும்.

## அட்டையில்

தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் சென்னையில் நடைபெற்ற 'பாய்மரம்' பொருட்காட்சியினை 1.3.89 அன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்களும் பார்வையிட்டார்கள்.

இப்பொருட்காட்சியில் இடம் பெற்றிருந்த பெருமைமிக்க மரபு வழி மரவேலைப்பாட்டுப் பொருட்கள் காண்போர் அனைவரையும் கவர்ந்தன. கலைநயமிக்க அப்பொருட்களின் சிறப்பினை இந்த இதழ் அட்டை சித்திரிக்கின்றது.

## தண்டனைக் குறைப்பு

மதுவிலக்குக் குற்றங்களுக்கு விதிக்கப்படும் தண்டனையின் கடுமையைக் குறைக்க 1989ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு 2ஆம் திருத்த சட்ட முன்வடிவு 22.2.89 அன்று மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா அவர்களால் சட்டப் பேரவையில் அறிமுகம் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

அந்தச் சட்டமுன்வடிவில் கூறப்பட்டிருப்பதாவது:

மதுவிலக்குக் குற்றங்களுக்குக் கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட்டு உள்ளன. இது நீதி மன்றங்களில் ஒவ்வொரு வழக்கிற்கும் எதிர்விளைவுகளை ஏற்படுத்தி உள்ளது. நீதிமன்றங்களில் 6 இலட்சத்துக்கு மேற்பட்ட வழக்குகள் இன்னமும் முடிவடையாத நிலையில் உள்ளன.

இந்தச் சட்டத்தினைப் பயனுள்ள முறையில் செயல்படுத்துவதற்காக தண்டனை பற்றிய வகைமுறைகளைக் கடுமை குறைந்தனவாக ஆக்குவதோடு, இச்சட்டத்தின் 6 மற்றும் 52-இ பிரிவுகளின் கீழ் வருகிற குற்றங்களைத் தவிர மற்ற குற்றங்கள் அனைத்தையும் இணக்கமாகத் தீர்த்துக் கொள்வதற்கு வகை செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

3 ஆண்டுகள் வரைகடும் சிறைத் தண்டனையும், 3000 ரூபாய்வரை அபராதமும் விதித்து தண்டிக்கப்பட வேண்டும் என்பதற்குப் பதிலாக 3 மாதம் வரை சிறைத் தண்டனையோ, அல்லது 1,000 ரூபாய் வரை அபராதமோ விதிக்கவேண்டும் என்று மாற்றி அமைக்கப்படுகிறது.

5 ஆண்டு வரை சிறைத் தண்டனையும், 7000 ரூபாய் வரை அபராதமும் விதிக்கப்படவேண்டும் என்பதற்குப் பதிலாக, 3 மாதம் வரை சிறைத் தண்டனையோ, அல்லது 1000 ரூபாய் வரை அபராதமோ விதிக்கப்படவேண்டும் என்று மாற்றப்படுகிறது.



# தொழிலாளர்களுக்கு நிவாரண உதவி



**செய்தியாளர்:**

உள்ளாட்சி மன்றங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள், இப்போது உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரம் கொடுத்த காரணத்தால் தங்கள் நிலை குறித்து குழப்பமான நிலையில் இருப்பது போல் தெரிகிறது. அது குறித்து விளக்கம் தர முடியுமா?

**முதல்வர் கலைஞர்:**

உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரங்களை அறிவித்தபோதே, அதிலே பணிபுரியும் ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாகத்தான் கருதப்படுவார்கள் என்று தெளிவாக நான் ஏற்கெனவே சொல்லியிருந்தேன். குடும்ப நலத்திட்டம், சிறுசேமிப்பு போன்ற கல்வி சேராத பணிகளில் ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்படுவார்களோ என்ற சந்தேகம் அவர்களுக்கு இருப்பது போல் தெரிகிறது. நிச்சயமாக அந்தப் பணிகளில் அவர்கள் ஈடுபடுத்தப்பட மாட்டார்கள். மேலும் ஆசிரியர்களை இடமாற்றம் செய்கின்ற அதிகாரமும் உள்ளாட்சி மன்

## மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் செய்தியாளர்கள் சந்திப்புக்களின்போது தெரிவித்த கருத்துகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன

றங்களுக்கு நிச்சயமாகத் தரப்பட மாட்டாது. அரசுப் பணியாளர்களாக அவர்கள் கருதப்படுகின்ற காரணத்தால் ஆசிரியர்கள் இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கின்ற எந்த நியாயமான உரிமைகளுக்கும் இந்த அதிகார மாற்றத்தால் பாதகம் வராது. உள்ளாட்சி மன்றங்கள் அந்தப் பள்ளிகளின் மேம்பாட்டுத் திட்டங்களைக் கவனித்துக் கொள்ளும்.

**செய்தியாளர்:**

உள்ளாட்சி மன்றங்கள் நிதிப்பற்றாக்குறையில் இருப்பதைப் போக்க என்ன செய்யப் போகிறீர்கள்?

**முதல்வர் கலைஞர்:**

பல பள்ளிக் கட்டடங்களே இடிந்திருக்கின்றன. அதையெல்லாம் பராமரிக்க அரசாங்கம் உடனடியாகக் கவனம் செலுத்தும். பட்ஜெட் கூட்டத் தொடருக்குப் பிறகு அந்தப் பணிகள் எல்லாம் நடைபெறும். பொதுவாக உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிகாரங்களும், நிதி ஆதாரங்களும் வழங்குவதில் இந்த அரசு அக்கறை கொள்ளும். ஆசிரியர்கள் பிரச்னை குறித்து தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் மன்றத்தின் சார்பாக ஒரு கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு எந்த அச்சமும் தேவையில்லை என்று உறுதி கூறுகிறேன்.

**செய்தியாளர்:**

சர்வீஸ் கமிஷன் தேர்வு பல ஆண்டுகளாக நடைபெறாமல் இருக்கிறதே?

**முதல்வர் கலைஞர்:**

சர்வீஸ் கமிஷன் பணிகள் பல ஆண்டுகளாக நடக்கவில்லை என்பது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. அதற்குரிய நடவடிக்கைகள் முறைப்படி மேற்கொள்ளப்படும்.

(சென்னை 19.2.89)

**செய்தியாளர்:**

இன்றைய (23.2.'89) அமைச்சரவைக் கூட்டத்தில் முக்கியமாக என்ன பேசப்பட்டது?

**முதல்வர் கலைஞர்:**

நிதி நிலைக்குழுவும், அமைச்சரவைக் கூட்டமும் நேற்றும் இன்றும் நடைபெற்றன...

**செய்தியாளர்:**

ஏதாவது முக்கியமான முடிவு எடுக்கப்பட்டதா?

**முதல்வர் கலைஞர்:**

நிதிநிலை அறிக்கை தயாரிப்பது பற்றி விவாதம் நடைபெற்றது. மேலும், மூடிக்கிடக்கின்ற நலிந்த நூற்பாலைகளைத் திறக்கும் முயற்சியில் ஈடுபடுவது குறித்து விவாதிக்கப்பட்டது. உடனடியாக மூடிக்கிடக்கும் நலிந்த நூற்பாலைகளின் தொழிலாளர்களுக்கு நிவாரணமாகத் தொழிலாளர் நல நிதியிலிருந்து, ஒவ்வொரு தொழிலாளருக்கும் இருநூற்று ஐம்பது ரூபாய்

வீதம் மொத்தம் சுமார் முப்பது இலட்சம் ரூபாய் வழங்குவது என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

**செய்தியாளர் :**

மொத்தம் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனைத் தொழிலாளர்கள் இருப்பார்கள்?

**முதல்வர் கலைஞர் :**

கிட்டத்தட்ட பதினோரு ஆயிரம் பேர் இருப்பார்கள்.

**செய்தியாளர் :**

முந்தைய ஆட்சியில் ஒப்பந்த அடிப்படையில் மூவாயிரம் பேரை ஆசிரியர்களாக நியமித்திருந்தார்கள். அதில் 1,500 பேரை மட்டும் நிரந்தரம் செய்துவிட்டார்கள். மீதியிருப்பவர்களை ஆளுநர் ஆட்சியில் விட்டுவிட்டார்கள். அவர்களும் நிரந்தரமாக்கப்படுவார்களா?

**முதல்வர் கலைஞர் :**

அதுபற்றி கோரிக்கை வந்தால் பரிசீலிக்கப்படும்.

**செய்தியாளர் :**

கவர்னர் ஆட்சியிலே ஒருசில அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் அது இப்போது என்னவாகும்?

**முதல்வர் கலைஞர் :**

கவர்னர் ஆட்சியில் தவறு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் இந்த ஆட்சியிலும் அந்த நடவடிக்கை குறித்து நடவடிக்கை தொடரும்.

**செய்தியாளர் :**

நுழைவுத் தேர்வு குறித்து பேசப்பட்டதா? அது தொடருமா?


**முதல்வர் கலைஞர் :**

நுழைவுத் தேர்வு எப்படி செயல்படுகிறது என்பதை இந்த ஆண்டு ஆய்வு செய்து, அதன்பிறகு தான் அதுகுறித்து முடிவெடுக்கப்படும். (சென்னை 23-2-89)

**செய்தியாளர் :** மத்திய அரசின் ரெயில்வே பட்ஜெட்டில் தமிழகத்திற்குத் தேவையான திட்டங்கள் அதிகமாக இல்லையே?

**முதல்வர் கலைஞர் :** அது குறித்து தமிழ்நாட்டின் சார்பாக தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். தமிழ்நாட்டின் திட்டங்களுக்கு இன்னும் அதிகமாக ஒதுக்கியிருக்க வேண்டும். சென்னை மெட்ரோ திட்டத்திற்குக் கூட ஒதுக்கியிருக்கும் தொகை மிகமிகக் குறைவானது. அதிக நிதி இந்தத் திட்டங்களுக்கு ஒதுக்க வேண்டும் என்பது குறித்து தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்துவோம்.

**செய்தியாளர் :** இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் மாணவர்கள் பெருமளவில் காப்பி அடிப்பதைத் தடுக்க ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டு, அது அமுலாக்கப்படாமல் இருந்தது. அந்தச் சட்டத்தின்படி மாணவர்கள் பத்தாண்டு காலத்திற்கு தேர்வு எழுதக் கூட முடியாத நிலை ஏற்படும். இப்போது அந்தச் சட்டத்தை மீண்டும் அமல்படுத்தப் போவதாக திருச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அதிகாரிகள் முடிவெடுத்திருப்பதாக ஒரு செய்தி வந்திருப்பது குறித்து என்ன கூறுகிறீர்கள் ?



● வாலிபர்களுக்கு வெறும் உற்சாகமும், துணிவும், தியாகபுத்தியும் மாத்திரம் இருந்தால் போதாது. நன்மை, தீமையை அறியும் குணமும், சாத்தியம், அசாத்தியம் அறியும்குணமும், ஆய்ந்து ஓய்ந்து பார்க்கும் தன்மையும் இருந்தால்தான் வாலிபர்கள் பொதுவில் பயன்படக்கூடியவர்கள் ஆவார்கள்.

● எதற்கும் சலியாது உழைத்துத் துன்பம் வந்தாலும் ஏச்சு வந்தாலும் எவ்வித இழப்புகள் ஏற்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாது எதிர்த்துழைத்துக் கடைசிவரை கொள்கையை நழுவ விடாது காத்து நிற்பதே உண்மைத் தொண்டின் குணமாகும்.

—தந்தை பெரியார்

**முதல்வர் கலைஞர் :** இது குறித்து உடனடியாக விசாரிக்கச் சொல்கிறேன்.

**செய்தியாளர் :** அறநிலையத்துறை குறித்த விவாதம் எப்போது?

**முதல்வர் கலைஞர்:** இந்து அறநிலையத்துறைகுறித்த ஆலோசனைக்கூட்டம் மார்ச் மாதம் 10-ஆம் தேதி காலையில் தலைமைச் செயலகத்தின் கான்பரன்ஸ் ஹாலில் நடைபெறும். அதற்கு மடாதிபதிகள், மற்றும் ஆன்மீகவாதிகள் அழைக்கப்படவிருக்கிறார்கள். அவர்களுக்கு எழுதப்பட்டுள்ள கடிதத்தில் ஆலய நிர்வாகம், மற்றும் இந்து மத அறநிலையத்துறையின் செயலாக்கத்தில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் குறித்து கலந்து பேசி நல்முடிவுகள் மேற்கொள்ளும் நோக்கத்துடன் இந்தக் கூட்டம் நடத்தப்படுகிறது. முக்கியமாக கோவில்களின் நிர்வாகம் அமைய வேண்டியமுறை, கோயில்களின் சொத்துக்களைப் பாதுகாத்தல், மற்றும் மேலும் வளப்படுத்தல், கோவில்களின் நிதி ஆதாரத்தைப் பெருக்குதல், பாதுகாத்தல் போன்ற பல்வேறு பொருள்கள் குறித்து விவாதிக்கப்படும்.

**செய்தியாளர் :** தமிழ்நாட்டின் ஆண்டுத்திட்டம் எவ்வளவு என்பது உறுதியாகிவிட்டதா?

**முதல்வர் கலைஞர் :** மார்ச் மாதம் 15-ஆம் தேதி டெல்லியில் திட்டக்குழுவுடன் அது குறித்து விவாதிக்க இருக்கிறேன்.

**செய்தியாளர் :** ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரிக்குக் கட்டடம் கட்ட அவர்கள் தங்களுடைய சொந்த இடத்தை விட்டு விட்டு, அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு இடத்தில் கட்டடம் கட்டியிருப்பதாகக் கூறப்படுகிறதே, அது குறித்து என்ன செய்யப் போகிறீர்கள்?

**முதல்வர் கலைஞர் :** நீங்கள் கூறிய தகவல்கள் குறித்து விசாரிக்கிறேன்.

**செய்தியாளர் :** குடிநீருக்கான வரி பல ஆண்டுகளாகப் போடப்படாமல் எல்லாவற்றையும் சேர்த்து உடனடியாகக் கட்ட வேண்டுமென்று இப்போது நோட்டீஸ் விடப்பட்டிருக்கிறது. மேலும் அண்ணா நகரில் பல கட்டடங்களுக்கு பிராப்பர்ட்டி டாக்ஸ் நிர்ணயமே செய்யப்படாமல் இருக்கிறதே?

**முதல்வர் கலைஞர் :** பல ஆண்டுகளாக குடிநீர் வரி நோட்டீஸ் அனுப்பப்படாமல் இருந்தது தவறு. இப்போது மொத்தமாகச் சேர்த்து கேட்கப்படுமானால் அதைத் தவணை முறையில் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யலாம்.

(சென்னை 28.2.89)



தமிழ் வளர்த்த பெரியார் :

# சங்க இலக்கியங்களை அழியாது காத்த உ.வே.சா.

கடந்த நூற்றாண்டில், பழந்தமிழ் ஏடுகள் பலவும் அச்சாகாத நிலையில், தமிழ் கற்கப் புகுவார் எத்தகைய ஏடுகளை மட்டுமே பயின்றார்கள் என்பதை அறிந்தால் தமிழ் வளர்ச்சிக்குத் தடையாக இருந்த சூழல் புலப்படும்.

டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் அவர்கள் வாழ்க்கை வரலாற்றிலிருந்து இது விளங்கும். அவர், குடந்தையில் தமிழாசிரியர் பணி பூண்ட தொடக்க நாட்களில் அங்கு தமிழ்ப்பற்று மிக்க சேலம் இராமசாமி முதலியார் அவர்கள் நீதிபதியாகத் திகழ்ந்தார். முதன் முதலாக நீதிபதியைக் காணச் சென்ற போது அவர் கேட்டதற்கிணங்கத் தாம் கற்ற இலக்கியங்களின் பட்டியலை ஐயர் விளக்கினார்.

குடந்தை அந்தாதி, மறைசை அந்தாதி, புகலூரந்தாதி, திருவரங்கத்தந்தாதி, அழகரந்தாதி, கம்பரந்தாதி, முல்லையந்தாதி, மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழ், திருக்கோவையார், தஞ்சைவாணன் கோவை எனத் தொடர்ந்து அந்தாதிகளில் இருபது, கலம்பகங்களில் இருபது, கோவைகளில் பதினைந்து, பிள்ளைத் தமிழில் முப்பது, உலாக்களில் இருபது, தூதுகள் பல என ஐயர் கூறினார்.

அதைக் கேட்டுக்கொண்டிருந்த நீதிபதி, "இதெல்லாம் படித்து என்ன பயன்!" என்று வினவ, ஐயர் மேலும் தொடர்ந்து,

திருவிளையாடற் புராணம், மயூரப்புராணம், குற்றாலப் புராணம் முதலான புராணவரிசையைமுடித்து நைடதம், பிரபுலிங்க லீலை, சிவஞான போதம், சிவஞான சித்தியார் உரை முதலானவற்றோடு கம்ப இராமாயணத்தை ஒரு முறைக்கு இரு முறை படித்திருப்பதாகத் தெரிவித்தார்.

இந்தப் பட்டியலைக் கேட்டும் நீதிபதி மகிழாமல் ஐயரைப் பார்த்து, "சீவக சிந்தாமணி படித்திருக்கிறீர்களா? மணிமேகலை படித்திருக்கிறீர்களா? சிலப்பதிகாரம் படித்திருக்கிறீர்களா"? என்று கேட்க, ஐயரோ, "புத்தகம் கிடைக்கவில்லை, கிடைத்தால் அவற்றையும் படிக்கத் துணிவுண்டு" என்று பதிலளித்தார். அவரது உள்ளத்திலோ என் ஆசிரியரே படித்ததில்லை, நானும் படித்ததில்லை, இத்தகைய புத்தகங்களைக் கூட நான் கண்ணால் பார்த்ததில்லையே என்னும் நினைவு அப்பொழுதுதான் பிறந்தது என்று தோன்றுகிறது.



மாண்புமிகு கல்வி அமைச்சர்
பேராசிரியர் க.அன்பழகன்

"பிரபந்தங்கள் இயற்றுவதிலே புகழ் பெற்ற மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடமும், வேறு பல தக்க தமிழ்ப் பெருமக்களிடமும் பாடங் கேட்டவரும், தமிழ் கற்கும் ஆர்வம் மிக்கவரும், ஒரு கல்லூரி ஆசிரியருமாக விளங்கிய ஐயரவர்களே கற்கக் கூடியதாக வாய்த்திருந்த ஏடுகள் எவை எவை என்பதிலிருந்து அக்காலத்தில் (கி.பி.1880) தமிழ் இலக்கியம் பரவியிருந்த நிலை தெளிவாகின்றதன்றோ?

அந்த உரையாடலைத் தொடர்ந்து சேலம் இராமசாமி முதலியார், ஐயரவர்களிடம் சிந்தாமணித் தாள் ஏடு ஒன்றை அளித்ததோடு, "சிந்தாமணி மிகச் சிறந்த நூல். கம்ப ராமாயணத்தின் கவிதை நெறிக்கெல்லாம் இந்தக் காவியமே வழிகாட்டி. இதைப் படித்துப் பொருள் கண்டு விளக்கினால் உங்களுக்கும் நன்மை, எனக்கும் இன்பம் பயக்கும்" என்று தெரிவித்தார். அது முதலாகவே சிந்தாமணியைப் படித்தல் அரும்பிய விருப்பம், பொருள் காணும் முயற்சியாக மலர்ந்து, பல படிகளை ஒப்புநோக்கிச் சரியான பாடம் காண்பதாகக் காய்த்து, புதிய அச்சுப்பதிப்பாகக் கனிந்தது என்று தெரிகிறது.

சேலம் இராமசாமி முதலியாரிடத்தே ஐயருக்குத் தொடர்பு ஏற்படாதிருக்குமாயின், அக்காலத்துப் பழந்தமிழ் இலக்கியங்களின் அருமை அவருக்கு விளங்கியிருக்க வேறு ஏதுவில்லை என்று ஐயருடைய எழுத்தால் தெரிய வருகிறது. "அவருடைய நட்பினால் என்னுடைய வாழ்க்கையில் ஒரு புதுத்துறை தோன்றியது. தமிழ் இலக்கியத்தின் விரிவை அறிய முடிந்தது. அந்தாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், உலா, கோவை முதலிய பிரபந்தங்களிலும், புராணங்களிலும், தமிழின் இன்பங் கண்டு மகிழ்வதோடு நில்லாமல் பழமையும்பெருமதிப்புமுடையதண்டமிழ் நூல்களில் பொதிந்து கிடக்கும் இன்றமிழ் இயற்கை இன்பத்தை மாந்தி, நான் மகிழ்வதோடு பிறரும் அறிந்து இன்புறச்செய்யும் பேறு எனக்கு வாய்த்தது" என ஐயரவர்கள் நன்றியோடு மகிழ்ந்து கூறியுள்ளார்.

அக்காலத்தில் வழங்கிய ஏடுகளின் படி கிடைப்பதும் அரிதாக இருந்ததால், ஐயர் பட்ட துன்பங்கள் பல. திருக்குறள் உரையுடன் கூடிய நூல் ஒருவரிடம் இருப்பதை அறிந்து அதைப் பெறுவதற்குப் பல மைல் நடந்திருக்கிறார். இராமாயணம் ஏழு காண்டங்களும் மாயூரத்தில் ஒரு கடையில் இருந்ததைக் கண்டு உடனே அதன் விலைக்காகும் தொகையைப் பெற்றுவரத் திருவாவடுதுறை வரை சென்று திரும்பியிருக்கிறார்.

அரிதான ஏடுகளுங்கூட முறையாக அழிக்கப்பட்டு வந்த விதத்தையும் வருத்தத்தோடு குறிப்பிட்டுள்ளார். அவர் பழைய தமிழ்ச்சுவடிகளைத் தேடிச் சென்றபோது வரகுண பாண்டியன் வைத்திருந்த ஏடுகள் கரிவலம்வந்த நல்லூர் ஆலயத்தில் இருக்கின்றன என்று கேள்வியுற்று வினவியபோது, அறங்காவலர் குழுவைச் சேர்ந்த ஒருவர்,

"குப்பை கூளமாகக் கிடந்த சுவடிகளை நான் பார்த்திருக்கின்றேன். அந்தக் கூளங்களையெல்லாம் என்ன செய்வதென்று யோசித்தார்கள். ஆகம சாத்திரத்தில் சொல்லியிருக்கிறபடி, செய்து விட்டார்கள்" என்று கூறினார். அதைக் கேட்டு ஐயருக்கு ஒன்றும் புரியவில்லையாம்! "என்ன செய்து விட்டார்கள்" என்று பதற்றத்துடன் கேட்டாராம்.

"பழைய ஏடுகளைக் கண்ட கண்ட இடங்களிலே போடக்கூடாதாம். அவற்றை நெய்யில் தோய்த்து ஹோமம் செய்து விட வேண்டுமாம்; இங்கே அப்படித்தான் செய்தார்கள்" என்றார் அவர்.

"ஆ" என்று தம்மையும் மறந்து அலறினார் ஐயர்.


"குழிவெட்டி, அக்கினி வளர்த்து நெய்யில் தோய்த்து, அந்தப் பழைய சுவடிகள் அவ்வளவையும் ஆகுதி செய்து விட்டார்கள்" என்றார் அவர்.

"இப்படி எங்காவது ஆகமம் சொல்லுமா? அப்படிச் சொல்லியிருந்தால் அந்த ஆகமத்தை அல்லவா முதலில் ஆகுதி செய்ய வேண்டும்!" என்று கோபம் கோபமாக வந்தது, என்று ஐயரவர்கள் வேதனையை வெளியிடுகின்றார்.

ஆகமத்தின் பெயரால் வளர்ந்த அறியாமை நெய்க்கு மட்டுமேயன்றி தமிழுக்கே அழிவை உண்டாக்கியதை இது காட்டும். "பழைய சுவடிகள் சிதிலமான நிலையில், அவற்றைப் புதிய படி எடுத்துக் கொண்டு பழையவற்றை ஆகுதி செய்வது வழக்கம். பிற்காலத்து மேதாவிகள், படி செய்வதை மறந்து விட்டுச் சுவடிகளைத் தீக்கு இரையாக்கும் பாதகச் செயலைச் செய்தார்கள். என்ன பேதமை! இத்தகைய எண்ணத்தால் எவ்வளவு அருமையான சுவடிகள் இந்த உலகத்திலிருந்து மறைந்தன" என்றும், "அது முதல் என் உள்ளத்தில் அமைதியில்லாமற் போயிற்று. இனி இந்த நாட்டிற்கு விடிவு உண்டா" என்றும் எழுதியுள்ளார், ஐயர்.

மற்றோர் இடத்திற்குச் சுவடி தேடிச் சென்றபோது ஏக்கமுற்று அவருக்குக் கிடைத்த பதில் இது.

"எங்கள் வீட்டில், ஊர்க்காட்டு வாத்தியார் சுவடிகள் வண்டிக் கணக்காக இருந்தன. எல்லாம் பழுதுபட்டு முடிந்துபோய்விட்டன; பயனின்றி இடத்தை அடைத்துக் கொண்டிருந்த அவற்றில் என்ன இருக்கிறதென்று பார்க்கவும் எனக்குத் திறமை இல்லை. அச்சுப் புத்தகங்கள் வந்துவிட்ட இக்காலத்தில் இவற்றைச் சுமந்துகொண்டிருப்பது என்ன பயன் என்றெண்ணினேன்.



தமிழர் வாழ்வு தழைக்க தமிழ் மணம் நாடெங்கும் செழித்துக் கொழிக்க, தமிழர் தமிழராய் வாழ, தன்மானத்துடன் வாழ, தமிழன் தன்னைத்தான் உணர்ந்து தன்னம்பிக்கை பெற்றுத் தன்னையும், தன்னைச் சுற்றிலுமுள்ள சமுதாயத்தின் சூழ்நிலையைத் தெரிந்து – புரிந்து – தெளிந்து – வாழும் நிலைக்கான வகையில்; வழியில், முறையில் முத்தமிழ் விளங்க வேண்டும், பயன்பட வேண்டும், பயன்படுத்தப்பட வேண்டும்.

□ □

ஒருவரை ஒருவர் கண்டவுடன் முகமலர்ச்சி சிரமமின்றி ஏற்பட வேண்டும். பயன்கருதி அல்ல-அர்த்தமற்றும் அல்ல-கண்டதும் களிப்பு-நம்மைப்போல ஒருவன் என்ற நினைப்பிலிருந்து அந்தக் களிப்பு மலரவேண்டும். அதுவே தோழமை.

□ □

வாலிபர்கள் ஆசிரியர்களாக வேண்டும். உலகத்தைக் கிராமத்தாருக்குக் காட்டவேண்டும். வாலிபர்கள் வைத்தியர்களாக வேண்டும். உடல்,உள்ளம் இரண்டிலும் உள்ள நோய் தீர்க்கும் மருந்தளிக்க வேண்டும். வாலிபர்கள் பாலம் அமைக்க, நீர்த் தேக்கம் அமைக்க, உழவு முறையை மாற்றப் பணிபுரிய வேண்டும். பழமையின் பிடியிலிருந்து மக்களைப் பக்குவமாக விடுவித்துப் புதுமையின் சோபிதத்தைக் காட்டிப் புத்துலகு அமைக்க வேண்டும் வாலிபர்கள். இதற்கான திறமும் தீரமும் தேவை. அறிவு ஆராய்ச்சி தேவை. இதற்கான வெளி உலகத் தொடர்பு தேவை.

—பேரறிஞர் அண்ணா

ஆற்றிலே போட்டு விடலாமென்றும் ஆடிப்பதினெட்டில் சுவடிகளைத் தேர்போல் கட்டி ஆற்றிலே விடுவது முறையென்றும் சில முதிய பெண்கள் சொன்னார்கள். நான் அவ்வாறே ஓர் ஆடிப் பதினெட்டாந் தேதி அவற்றை வாய்க்காலில் விட்டு விட்டேன்"

இதைக் கேட்டுத் "தமிழின் பெருமையைச் சொல்லிய சிலர், அது நெருப்பிலே எரியாது நின்றதென்றும், நீரிலே ஆழாமல் மிதந்ததென்றும் பாராட்டியிருக்கிறார்கள். அதே தமிழ் இன்று நெருப்பில் எரிந்தும், நீரில் மறைந்தும் புறக்கணிக்கப்படுவதை அவர்கள் பாராமலே போய்விட்டார்கள். பார்த்து இரங்குதற்கு நாம் இருக்கிறோம்" எனக் கண்ணீர் விடுகிறார் ஐயர்.

மற்றொரு கவிராயரிடத்தே சென்றபோது அவர் "சிலப்பதிகாரம் என்று சொல்லக்கூடாது. சிறப்பதிகாரம் என்றுதான் கூற வேண்டும்" என்று உரைத்ததோடு, அதைக் காட்டுமாறு கேட்டபோது, அவ்வளவு சுலபமாகக் காட்ட முடியுமா? இப்போதெல்லாம் அவற்றைத் தொடலாமோ! சரசுவதி பூசையில் தான் அர்ச்சனை பண்ணிப் பூசை செய்து எடுக்க வேண்டும்" என்றும் கூறினாராம். இவ்வாறு பூசா மனோபாவம் வளர்ந்து, அறிவுக்குத் தடை விதித்து, அர்ச்சனை என்னும் பெயரால் சுவடிகளை அரித்து வந்ததை இது காட்டும்.

மற்றோரிடத்தில், "ஏட்டுச் சுவடிகளின் (ஓலை தொடுக்கும்) கயிறுகளை எல்லாம் உருவி எடுத்துக் கொண்டு ஒரு கயிற்றில் பல சுவடிகளைக் கட்டியிருந்தார்கள். சுவடிகளைக் காட்டிலும் கயிறுதான் அவர்களுக்குப் பெரிதாகப்பட்டது. கணக்குச் சுருளைகளும் கம்ப இராமாயண ஏடுகளும் கலந்திருந்தன" என்று ஐயர் கூறுகிறார்.

இவ்வாறு உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தபழந்தமிழ்ஏடுகளைப் பதிப்பித்து வெளியிடும் விருப்பம் கொண்ட ஐயரவர்கள், மேற்கொண்ட உழைப்பு சிறிதன்று.

ஏடு தேடும் முயற்சியில் நாடெங்கும் உள்ள கவிராயர் வீடெல்லாம் ஏறி இறங்க வேண்டும். வேண்டி ஏடு கண்டபோது அதை உரியவரிடமிருந்துபெறுவதும் எளிதாக இராது. ஒரு நூலைப் பதிப்பிக்குமுன் கிடைத்தசுவடியை வேறு பல சுவடிகளோடு ஒப்பு நோக்கிக் காண வேண்டும். அவ்வாறு நெடிய பலப்பல இரவுகள் கண் விழித்திடவும் வேண்டும். ஒப்பு நோக்குமிடத்துப் பாட வேற்றுமை தோன்றின், சரியான பாடத்தைத் தெளிய, உரையும் தெளிய வேண்டும். பழைய உரையுள்ள ஏடெனில் உரையில் ஆளப்பட்டுள்ள எடுத்துக்காட்டுகளை உரிய நூலும் இடமும் காட்டிக் குறிக்க வேண்டும். இவ்வாறு ஒப்பு நோக்கி ஆராய்ந்து பாடம் இதுவெனவும், முறையான உரை இதுவெனவும் முடிவு கட்டிப் பாட வேறுபாடும் குறிப்புத்தந்து அச்சியற்ற முற்படும்போது, அச்சுப் பிழை மலியாதவாறு பரிசலித்த வண்ணம் இருக்க வேண்டும். அச்சு இயற்றியவுடன் விலைக்கு வாங்கத் தக்கவரிடத்தே முன்னமே ஒப்பமும் பெற்றுக்கொள்ள வேண்டும். இவ்வளவு பணியும் இடையூறின்றியே நிறைவேறுமோ? வரும் இடையூறுகளைத் தாங்கிக்கொள்ளும் உரமும் வேண்டும். இவ்வாறு ஒரு நூலை முற்ற முடித்து வெளியிடுதல் அரிய செயலன்றோ?

ஐயரவர்கள் முதன் முதல் பதிப்பித்த இலக்கியம் சீவக சிந்தாமணி. அதைப் பதிப்பிக்க அவர் எடுத்துக் கொண்ட முயற்சியின் அருமை அவர் எழுதிய இக்குறிப்பால் உணரலாம். "பலவகையில் முயன்று தேடியதில் சிந்தாமணி ஏடுகள் இருபத்து மூன்று கிடைத்தன. அவற்றைப் பார்க்கப் பார்க்கப் பல உண்மைகள் புலப்பட்டன. பாட பேதக் கடலுக்குக் கரை காணவே முடியவில்லை.

"சுவடிகள் எழுதப்பட்டுள்ள முறையில் இது கொம்பு, இது சுழி என்று பிரித்து அறிய முடியாது. மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளியிராது. 'ர'' கரத்திற்கும் காலுக்கும் வேற்றுமை தெரியாது. சரபம், சாபமாகத் தோற்றும். சாபம் சரபமாகத் தோற்றும், ஓரிடத்தில் "சரடு என்று வந்ததை" "சாடு' என்றே பல காலம எண்ணியிருந்தேன். "தரன்" என்பதைத் "தான்" என்று நினைத்தேன். "யானை நாகத்திற்றோற்றுதலின்" என்று பல ஏடுகளில் காணப்பட்ட ஒருவரி, "யானை நாதத்தில் தோற்றுதலின்" என்றிருக்க வேண்டுமென்பதை ஒரு படியால் தெளிந்தேன். இடையின 'ர' கரத்துக்கும், வல்லின "ற" கரத்துக்கும் பேதந் தெரியாமல் தடுக்கி நின்ற இடங்கள் பல. உரை இது, மூலம் இது, மேற்கோள் இதுவென்று தெரியாமல் முட்டுப்பட்ட இடங்கள் பல.

"இவ்வாறு தடுமாறித் தடுமாறிச் சிரமப்படுவதில் எனக்கு அலுப்புத் தோன்றவில்லை. மயங்கித் தவித்து நின்று, பிறகு உண்மை விளங்கும் போது பின்னும் பன்மடங்கு ஊக்கம் ஏற்படும்".

இவ்வாறு ஏடு பதிப்பிப்பது குறித்து ஐயரே விளக்கியுள்ளார். சிந்தாமணியை அவர் பதிப்பிக்க முயன்று கொண்டிருந்த காலை, அறிஞர், சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்களும் அம்முயற்சியில் ஆர்வமுடையவராய், ஐயரைக் கண்டு, தம் விருப்பத்தைத் தெரிவித்துத் தம்மிடத்தே அப்பணியை விடக்கேட்டனர்.

ஐயரவர்களோ தாம்மேற்கொண்டு செய்திருந்த "ஆராய்ச்சி முதலானவை வெளிப்படுவதற்கு அதுவே வாய்ப்பு என்று கருதாமையினால், அதற்கு இசைய மறுத்து விட்டார். எனினும் அப்பெரியார்களிடையே தோன்றிய நட்பும் மதிப்பும் குன்றாது வளர்ந்திட அவ்விருவரும்



தகுதி, திறமை, திட்டமிடும் வன்மை, எதையும் திருத்தமாக, தெளிவாக முடித்திடும் ஆற்றல், அறிவு, ஆராயுந்திறன் இத்தனையும் இன்று தேவை மனிதனுக்கு.

மனிதவாழ்வு இன்று முன்னேற்றமடைய மூளைபலம் அதிகம் தேவைப்படுகிறது. சிந்தனைத் தெளிவு, சிக்கலான பிரச்னைகளை ஆராய்ந்து, அலசிப்பார்த்து முடிவு கட்டிடும் மனத்திறன், மனவலிமை முக்கியமான அங்கம் வகிக்கிறது மனித வாழ்வில்!

●●●●

தமிழன் தமிழைப் படிக்க வேண்டும். தமிழினத்தைப் போற்றவேண்டும்; தமிழ்நாட்டைப் பாதுகாக்க வேண்டும்; தமிழன் தன்மானத்துடன் வாழவேண்டும் என்ற எழுச்சி முரசொலி இதய கீதமாக்கப்பட வேண்டும்; இளந் தமிழனது இதய பேரிகை இவையாகத்தான் இருக்கவேண்டும்.

●●●●

அறிவு! பிறந்த ஒவ்வொரு மனித இனத்திற்கும் இருக்கிறது. இயற்கையிலேயே இருக்கும் அறிவு தெளிவுபெற பகுத்தறிவு பெருக, கல்வி கேள்வி முக்கியம்.

●●●●

விஞ்ஞானம் மனித வாழ்வை மங்காத ஒளியாக, மட்டற்ற மகிழ்ச்சிப் பூங்காவாக, இருள் நீங்கிய வானமாக, உழைப்பைக் குறைத்து, உணர்வைப் பெருக்கிடும் துணைவனாக, தோழனாகத் தொண்டு செய்கிறது.

— முதல்வர் கலைஞர்

மேலும் பல நல்ல நூல்களைப் பதிப்பிக்கும் முயற்சியில ஈடுபட்டு ஒருவருகொருவர் உறுதுணையாகவே வாழ்ந்தனர்.

உ.வே.சாமிநாத ஐயர் அவர்கள் கி.பி.1855ல் தஞ்சை மாவட்டம் உத்தமதானபுரத்தில் பிறந்தவர். சிறு வயதில் துணைப் பள்ளியில் ஏடும் எழுத்தாணியுங் கொண்டு பயின்றவர். தந்தையார் இசைப் பயிற்சி உடையவராதலின், அவருக்கும் தமிழ்ப் பாட்டுகளை இசையுடன் பாடும் பயிற்சி ஏற்பட்டது. இசையில் ஏற்பட்ட ஆர்வத்தினும் தமிழிலேயே அவரது ஆர்வம் மிகுந்தது. அவரது பதினேழாம் வயது வரை தமிழ்ப்புலவர் பலரிடம் பயின்று, பின்னர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களை அடைந்து, பல நூல்களைப் பாடங் கேட்டார். அவ்வாறு கற்குங்காலத்து, ஆசிரியர், பல பாடங்களைப் புதியனவாக இயற்றிக்கூற, அவற்றை அவ்வாறே ஓலைகளில் பிழையின்றி எழுது வந்துள்ளார். மகாவித்துவான் மறைந்த பின்னர், திருவாவடுதுறை மடத்துத் தலைவராக விளங்கிய சுப்பிரமணிய தேசிகர் அவர்களிடமும் பல நூல்களைக் கற்றுத்தெளிந்தார். அக்காலத்தில் குடந்தைக் கலலூரியில் தமிழ் ஆசிரியராக விளங்கிய தியாகராயச் செட்டியார் அந்தப் பணியினின்றும் விலகிக்கொணடபோது, அவர் உதவியால் கி.பி.1880இல் ஐயர் அப்பதவியில் அமர்ந்தார். அதனால் அவரது பேரும் புகழும் சிறக்கலாயின.

அவ்வாறு கல்லூரி ஆசிரியராக இருந்த காலத்திலேயே, சிந்தாமணி பதிப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கி பி 1887இல அந்நூலை நச்சினார்க்கினியரது உரையோடும் வெளியிட்டுப் பலருடைய பாராட்டுகளையும் பெற்றார்கள். ஐயர், சமண சமயத்தினர் அல்லாதவர் என்ற கண்கொண்டு, அந்நூல் பதிப்புக்குறையுடைய தாகவே இருக்கும் என எண்ணிக் கண்டனம் செய்தவரும் நாளடைவில் அதன் சிறப்பை உணரலாயினர். இந்த நூலை வெளியிட்டதினால் கிடைத்த பாராட்டும் புகழும் ஊக்குவித்ததனால், தொடர்ந்து சங்க இலக்கியங்களிலே தலையான நூலாக விளங்கும் பத்துப்பாட்டைப் பதிப்பிக்க முற்பட்டார். இரண்டே ஆண்டுகளில் பத்துப்பாட்டையும் நச்சினார்க்கினியர் உரையோடு அச்சிட்டு வழங்கினார்.

பத்துப்பாட்டு என்னும் நூல் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலத்ததுஆதலின், அதன் மூல ஏடுகள் கிடைத்தும் உரையுள்ள ஏடுகளைத் தேடி அவர் பட்டபாடு பெரிதாகும.

அடுத்து, அவர் சிலப்பதிகாரத்தை யாராய்ந்து, அடியார்க்கு நல்லார் உரையோடும, பழைய அரும்பத உரையோடும பதிப்பித்தார். அதற்குச் சில ஆண்டுகள் முன்பே சோடசாவதானம் சுப்பராய செட்டியார், சிலப்பதிகாரத்தை அடியார்க்கு நல்லார் உரையோடு பதிப்பித்திருந்தார். எனினும் ஐயர் தம் பதிப்பில அரும்பத அகராதித் தொகுப்பும், அரிய செய்திகள் குறிப்பும், அரசர், புலவர், நாடு முதலான பெயர்களின் வரிசையும், விளக்க மேற்கோள் அகராதியும, கதைச் சுருக்கமும், ஆசிரியர் இளங்கோவடிகள் வரலாறும் எழுதுச் சேர்க்கப்பட்டதால் இப்பதிப்பு நிறைவுடையதாயிறறு. இப்பதிப்பு வெளியான காலத்து, தமிழ்ப்புலவர்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை ஐயர் இவவாறு குறிக்கின்றார்;

''சீவக சிந்தாமணியும், பத்துப்பாட்டும் தமிழ நாட்டில் உலாவத் தொடங்கிய பிறகு பழந்தமிழ் நூல்களின பெருமையை உணர்ந்து இன்புறும் வழக்கம் தமிழர்களிடையே உண்டாயிற்று. அவற்றின் பின்பு சிலப்பதிகாரம் வெளிவரவே பண்டைத் தமிழ்நாட்டின் இயல்பும் தமிழில் இருந்த கலைப் பரப்பின் சிறப்பும் யாவர்க்கும் புலப்படலாயின. ''கண்டறியாதன கண்டோம்'' என்று புலவர்களும் ஆராய்ச்சியாளர்களும் உவகைக் கடலில் மூழ்கினர்.

ஒவ்வொரு நூலையும் பதிப்பித்த போதே பிற நூல்கள் பற்றி அவருக்குக் கிடைத்த குறிப்புகளையும் பிறவற்றையும் அவர் குறித்துக்கொண்டு வந்ததால், அடுத்த வேறு சுவடிகளைப் பதிப்பிக்கும் முயற்சி அவருக்குக் கைவந்ததாயிற்று. அதன் பயனாக 1894-ஆம் ஆண்டில் புறநானூற்றைப் பதிப்பித்தார். அடுத்த ஆண்டிலேயே புறப்பொருள் வெண்பாமாலை பழைய உரையுடன் சேறியது. அடுத்த மூன்று ஆண்டுகளில், ''மணிமேகலை'' அதன் உரையோடும் புத்த சமயம் பற்றிய விரிவான ஆராய்ச்சிக் கட்டுரையோடும் வெளிவந்தது. பின்னர், பதிற்றுப்பத்து, பரிபாடல் முதலான சங்க நூல்களையும் பதிப்பித்து வழங்கினார். உதயணன் கதைச் சுருக்கம் மற்றும் பல் உரைநடை நூல்களும் எழுதினார். அவர் எழுதிய வாழ்க்கை வரலாறு நூல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்த ''தமிழ்க்கல்வி நிலையைப்'' படம் பிடித்துக்காட்டுவதாம்.

சாமிநாத ஐயர் அவர்கள் புலவராய், பண்டிதராய், பதிப்பாசிரியராய்ச் சிறந்த காலத்து 1906ல் ''மகாமகோபாத்தியாயர்'' என்னும் பட்டத்தை அரசினரிடம் பெற்றார். பின்னர், ''தாட்சிணாத்திய கலாநிதி'' என்னும் சிறப்பையும், சென்னைப் பல்கலைக்கழகம் அவரது தமிழ்த்தொண்டைப் பாராட்டி வழங்கிய ''டாக்டர்'' பட்டத்தையும் பெற்றுத் திகழ்ந்தார்

சங்கத் தமிழ் இலக்கிய நன்மணம் பரவுவதற்கு ஐயரவர்கள் ஆற்றிய தொண்டினைப் பெரிதும் பாராட்டித் தமிழன்பு மிக்க மேல் நாட்டவரான ஜி.யு.போப் அவர்கள் கடிதம் வரைந்துள்ளார். பேராசிரியர் ஜூலியன் வின்சோன் என்னும் பிரெஞ்சு அறிஞரே சிந்தாமணி பதிப்பைப் பாராட்டி, பாரிசிலிருந்து மடல் எழுதியுள்ளார். தமிழகத்தில் வாழ்ந்த பல்துறை அறிஞர்களான மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை, பூண்டி அரங்கநாத முதலியார் முதலான பலர் அவரது பணியைப் பாராட்டியுள்ளனர். ஆம். ஐயரவர்களின் திருப்பணியும், தாமோதரம் பிள்ளை அவர்களது திருத்தொண்டுமே மேன்மை மிகு சங்கத் தமிழ் நூல்கள் நமக்குக் கிடைக்கச் செய்யக்காரணம் என்றால் தமிழறிந்த யார்தாம் அவர்களை மறக்கக்கூடும்!

''என்னுடைய வாழ்வின் நோக்கமெல்லாம் பெரும்பாலும் தமிழ்த் தொடர்புடையதுதான். தமிழ் நூல்களை ஆழ்ந்து பயில வேண்டும். கற்றவரிடத்து ஒழுங்காகப் பாடங் கேட்க வேணடும். கேட்டவற்றைச் சிந்தித்து முறையாகப் பாடஞ் சொல்ல வேண்டும். அதைவிடப் பெரிய உபகாரம் (தொண்டு) வேறில்லை'' என்று அடக்கத்தோடு தமது குறிக்கோளைத் தெரிவித்துள்ள ஐயர் அவர்கள், அந்தக் குறிக்கோள்வழித் தொடர்ந்து பல பத்தாண்டுகள் அரும்பாடுபட்டு அயராது உழைத்து, தமிழ் காக்கும் திருப்பணியில் வெற்றி கண்டுள்ளார். எந்நாளும் உளவாகும் தமிழ் இலக்கியங்களோ அவர் தம் நினைவும் உளதாகும். வாழ்க தமிழ் காக்கும் திருப்பணி!

(சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்ட "தமிழ்க்கடல் அலைஓசை' என்னும் நூலிலிருந்து)

## தடுப்பு மருந்து கிங் நிறுவனம்

சென்னை கிண்டியிலுள்ள தடுப்பு மருந்து கிங் நிறுவனம், தமிழ்நாடு மாநிலத்திற்கு அம்மைப்பால் தயாரித்து வழங்குவதற்காக, ஆவின் அம்மை கொப்புளங்களிலிருந்து சீநீர் எடுக்கும் பிரிவாக முதலில் தொடங்கப்பட்டது.

7-11-1899 அன்று இந்நிறுவனத்தை ஏற்படுத்தியவர் தமிழ்நாடு அரசின் அப்போதைய துப்பரவு ஆணையாளர் லெப்டினென்ட் கர்னல்-டபிள்யூ ஜி. கிங் (CIEIMS) ஆவார். இந்நிறுவனத்திற்கு அவருடைய பெயரே சூட்டப்பட்டது.

# திறந்தவெளிப் பள்ளியின் சிறந்த கல்விப் பணி

பேராசிரியை என். இலலிதா,
பேராசிரியை மற்றும் தலைவி,
தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம்.

தமிழ்நாடு அரசு 1988ஆம் ஆண்டு முதல் புதிய திறந்தவெளிப் பள்ளிக் கல்வித் திட்டத்தைத் தொடங்கி நடத்தி வருகிறது. இடைநிலைக் கல்வியைப் பள்ளியில் தொடர முடியாமல் பள்ளியிலிருந்து இடையில் விலகியவர்களும், வீட்டில் இருந்துகொண்டே படிக்க விரும்பும் தாய்மார்களும், அலுவலகங்களிலும், பணிமனைகளிலும் பணியாற்றுகின்றவர்களும், ஓய்வு நேரத்தில் படித்து பதவி உயர்வும் முன்னேற்றமும் பெற இத்திட்டம் வழிவகுக்கிறது. இவர்கள் தங்களது இடைநிலைக் கல்வியை வெற்றிகரமாக முடித்து ஒளிமயமான எதிர் காலத்தினைப் பெற இத்திட்டம் வாய்ப்பளிக்கிறது.

சிறிது சிறிதாக அவ்வப்போது பாடங்களைப் படித்து முடித்துக் கொண்டு இயல்பறி தாள் என்னும் சோதனைத் தாள்களுக்கு விடை எழுதுவதன் மூலமும், நேர்ப்பயிற்சி வகுப்புகளில் கலந்துகொண்டு விளக்கம் பெறுவதுடன், இவ்வகுப்புகளில் அளிக்கப்படும் சோதனைத்தாள்களுக்கு விடையளிப்பதன் மூலமும் ஆழ்ந்த அறிவை எளிதில் பெற முடியும். தேர்ச்சிக்கு உதவும் மதிப்பெண்களையும் பெற வழியுண்டு.

இப்பயிற்சி தமிழ்நாடு கல்வியாராய்ச்சிப் பயிற்சி நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழ்மட்டுமே பயிற்று மொழியானதால் இந்தியா முழுவதிலுமுள்ள தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்த அனைவரும் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம்.

பயிற்சிக்காலம் ஓராண்டாகும். ஒவ்வோர் ஆண்டும் சனவரியில் தொடங்கி டிசம்பரில் பயிற்சி முடிவடையும். தேர்வு பிப்ரவரி திங்களில் நடைபெறும். தேர்வு முடிவுகள் ஏப்ரல் திங்களில் வெளியிடப்பெறும்.

8ஆம் வகுப்புத் தேறியவர்கள் அல்லது இ.எஸ்.எல்.சி. தேறியவர்கள் இத்திட்டத்தில் சேரத் தகுதி பெற்றோராவர். பயிற்சியில் சேர விரும்புவோர் பிப்ரவரி முதல் நாளன்று 15வயது நிறைவுபெற்றவராக இருத்தல் வேண்டும்.

கற்பித்தல், அஞ்சல் வழியே நடைபெறும். தமிழ்மட்டுமே பயிற்று மொழியாக இருக்கும். இடைநிலைக்கல்விச் சான்றிதழ் (பத்தாம் வகுப்புப் பயிற்சியில்) தற்போதுள்ள எஸ்.எஸ்.எல்.சி. போன்று 1. தமிழ் 2. ஆங்கிலம் 3. கணக்கு 4. அறிவியல் 5. வரலாறு புவியியல், ஆகிய 5 பாடங்கள் இருக்கும்.

பயிற்சிக் கட்டணம் ரூ. 200 ஆகும். அஞ்சல் வகுப்பு மூலம் அனுப்பப்படும் பாடங்களில் மாணவர்க்கு ஏற்படும் ஐயங்களைத் தீர்த்திடவும், நமது பாடங்களை மாணவர்கள் செவ்வனே கற்றிடவும் இத்தொடர்பு வகுப்புகள் பயிற்சிக் காலத்தின் இடையில் ஒருவார காலம் நடைபெறும். இந்த நேர்ப் பயிற்சி வகுப்புகள் சென்னையிலுள்ள நந்தனம், செனாய்நகர், திருவல்லிக்கேணி, சைதாப்பேட்டை மற்றும் காஞ்சிபுரம், வேலூர், திண்டிவனம், தஞ்சாவூர், திருச்சி, இராமநாதபுரம், தருமபுரி, சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் நடைபெறும்.

மாணவர்களின் கற்றல் திறன்கள் அக மதிப்பீட்டு முறை (Internal Assessment) புற மதிப்பீட்டு முறை (External Assessment) என இருமுறைகளில் மதிப்பிடப்படும். மாணவர்கள் ஒவ்வொரு பாடத்திலும் இரு இயல்பறி தாள்களுக்கு விடையளிக்க வேண்டும்.


அகமதிப்பீட்டிற்கு (Internal Assessment) மொத்தம் 20மதிப்பெண்கள். 10 மதிப்பெண்கள், இயல்பறிதாள்களுக்கும், 10 மதிப்பெண்கள், நேர்ப்பயிற்சி வகுப்புகளுக்குரிய வருகைப் பதிவுக்கும், அங்கு நடத்தப்படும் சிறுதேர்வுக்கும் வழங்கப்படும்.

புறமதிப்பீடான (External Assessment) எழுத்துத் தேர்வுக்கு மொத்தம் 80மதிப்பெண்கள். ஒவ்வொரு பாடத்திலும் அக, புற மதிப்பீடு இரண்டிலும் சேர்த்து 35 மதிப்பெண்கள் பெற்றவர் தேர்ச்சி பெறுவர். தொலைக்காட்சி, வானொலி வழியாக உரிய காலத்தில் சில சிறப்புப்பாடங்கள் அஞ்சல் செய்யப்படும்.

விளக்க உரையுடன் கூடிய விண்ணப்பப்படிவம் வேண்டுவோர், பேராசிரியை, பிரிவு-5திறந்தவெளிப் பள்ளி, தமிழ்நாடு கல்வியாராய்ச்சி, பயிற்சி நிறுவனம், கல்லூரிச்சாலை சென்னை-600006என்ற முகவரிக்கு எழுத வேண்டும். விண்ணப்பம் பெறுவதற்கான கடைசி தேதி 30-3-89.

திறந்தவெளிப் பள்ளியில் வழங்கப் பெறும் சான்றிதழ் நடைமுறையிலுள்ள எஸ்.எஸ்.எல்.சிக்கு ஈடானது. தாழ்த்தப்பட்டவருக்கும், மலைவாழ்சாதியினருக்கும் பயிற்சியில் சேர முன்னுரிமைகள் வழங்கப்படும். தெளிவுடனும், எளிய நடையுடனும், மாணவர் மனதைக் கவரும் வகையிலும் அஞ்சல் பாடங்கள் இருக்கும்.

நேரடிப் பயிற்சியில் அனுபவமும் ஆற்றலுமிக்க ஆசிரியர்களால் விரிவான போதனை விளக்கமுடன் தரப்படுகிறது.





மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்களை ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப்பின் தலைவர் திரு ராபர்ட் அவுஸ்டன் 22.2.89 அன்று சந்தித்தார்.




சென்னை வந்திருந்த 9-வது நிதிக்குழுத் தலைவர் திரு என்.பி.கே. சால்வே அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 24-2-89 அன்று மாலை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கினார்.



மேற்குவங்க சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு அனில் முகர்ஜி அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் தமிழ்க்குடிமகன் அவர்களை 18-2-89 அன்று சந்தித்துப் பேசினார்.



மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திருஎஸ்.ஜே.சாதிக் பாட்சா அவர்கள், பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட வல்லுநர் குழுவுடன் 16-2-89 அன்று ஆலோசனை நடத்தினார்.



# படமும் செய்தியும்

வள்ளுவர் கோட்டத்தைச் சீரமைப்பது தொடர்பாக மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்கள் 22.2.89 அன்று வள்ளுவர் கோட்டத்தைப் பார்வையிட்டு அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

தமிழ்நாட்டில் மூடிக்கிடக்கும் மில்களைத் திறக்க தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடனும், அலுவலர்களுடனும் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு பொன். முத்துராமலிங்கம் அவர்கள் 25.2.89 அன்று தலைமைச் செயலகத்தில் ஆலோசனை நடத்தினார்.





பூந்தமல்லி வெள்ளவேடு கிராமத்தில் 20.2.89 அன்று நடைபெற்ற கால்நடைப் பராமரிப்பு முகாமில், சிறந்த கால்நடைகளுக்கான பரிசையும், வங்கிக் கடனையும் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் டாக்டர் சந்திரசேகரன் அவர்கள் வழங்கினார்.

# உயிர் வாட்டும் காலம்



சூல்கொண்ட கருமேகம் மலையுச்சி தாவும்!
தோகைமயில் பூப்புதரில் துணையோ டடங்கும்!
பால்கொண்ட தாய்மடியை இறுகணைக்கும் குட்டி!
பசுமுங்கில் தேனடையைச் சிதைத்துண்ட மந்தி
மால்கொண்ட கடுவன்வால் பாம்பென்றே அஞ்சும்!
மரக்கிளையில் கருங்குயில்கள் வாய்பொத்தி நிற்கும்!
வேல்கொண்ட குறத்தியரின் விழிகண்ட வேடன்
மெய்ம்மறக்கும் அந்தியென்றன் உயிர்வாட்டும் காலம்

கூடடையும் இளம்பேடை ஆளின்வழி பார்க்கும்!
குளித்துடலை அழகுசெய்யும் ஓடையிலே சிட்டு!
பூடடையும் வண்டினங்கள்! புதரடையும் மான்கள்!
பொழுதடையும் செவ்வானில்! ஒளியேங்கும் மேற்கில்!
ஆடடையும் பட்டியிலே! அழகடங்கும் பூவில்!
அடர்காட்டில் இருளடங்கும்! ஒலியடங்கும் தோப்பில்!
காடடையும் இருள்திரையுள்! கண்ணடையும் சோர்வு!
கவலைதரும் அந்தியென்றன் உயிர்வாட்டும் காலம்!

படைகலியச் செல்லுகின்ற யானைகளைப் போலக்
குளம்விட்டுப் பாய்ந்துவரும் எருமைகளின் கூட்டம்!
நடைமெலிய இடைமெலியப் பெண்கள்சாய்ந் தாடி
நடந்துவரும் நீர்மொண்டு! நடந்துவரும் அந்தி!
பெடைமெலியக் காணாத ஆண்கிளிகள் வீட்டின்
பெருஞ்சுவரின் பொந்தடையும்! கொம்படையும் சிட்டு.
கடைமெலிய என்கால்கள் நடந்தலுத்துப் போகும்!
கருத்தழிக்கும் அந்தியென்றன் உயிர்வாட்டும் காலம்!

நீரடங்கும் ஏரியிலே! நிழலடங்கும் தன்னில்!
நீள்கழுத்துப் பெருநாரை கோரையுள் ளடங்கும்!
காரடங்கும் தொடுவானில்; இருள்தாவும் கீழ்வான்!
கண்ணடிக்கும் ஒன்றிரண்டு முன்எழுந்த விண்மீன்!
ஏரடங்கும் கொட்டகையில்! கன்றடங்கும் தூம்பில்!
இறைப்பினிலே அணிலடங்கும்! கூடடங்கும் சேவல்!
கூரடங்கும் விழிகளிலே! மனப்போ ரடங்கா!
குடிகெடுக்கும் அந்தியென்றன் உயிர்வாட்டும் காலம்!

குளத்தினிலே தாமரையின் குதிப்படங்கும்! தக்கைப்
பூண்டிலைகள் காம்படங்கும்! அலையடங்கும் நீரில்!
களத்தினிலே பிணைஅடித்த பண்ணடங்கும்! வாய்க்கால்
கரையடங்கும் நீர்ப்பாம்பு! மரமடங்கும் நொள்ளை!
தளத்தினிலே குதித்தாடும் நிலாக்கூட்டம் பெண்கள்
தாழ்வாரத் துள்ளடங்கும்! அடங்கும்கைப் பிள்ளை!
உள்ளத்தினிலே மகிழ்வடங்கும்! நினைவடங்கும் தோளில்!
ஊரடங்கும் அந்தியென்றன் உயிர்வாட்டும் காலம்!

அலையடங்கும் நீள்கடலில்! வளையடங்கும் நண்டு!
மணல்மேட்டின் அருகுள்ள நீண்டவளத் தெங்கில்
தலையடங்கும் வெண்காக்கை! தலையடங்கும் வானில்
முனைமடிந்த நீள்வாளாம் தாழைமடல் பூக்கத்
தலையடங்கும் கழிநீலம்; தலையடங்கும் இருளில்!
சாய்புன்னைக் கரையோரம் மணல்அடங்கும் ஆமை!
உலையடங்கும் கருமானின் கொட்டகைபோல் வானம்!
உருமாறும் அந்தியென்றன் உயிர்வாட்டும் காலம்!

கவிஞரேறு வாணிதாசன்

— மலர் நிலையம் வெளியிட்ட 'வாணிதாசன் கவிதைகள்' நூலிலிருந்து.

குடும்ப நலம் வீட்டைக் காக்கும், தொழில்வளம் நாட்டைக் காக்கும்

TAMIN

தமிழ்நாடு கனிம நிறுவனம்
சென்னை-600 005.
( தமிழ் நாடு அரசு நிறுவனம் )

உலகப் புகழ் பெற்ற குன்னம், பைத்தூர் கரும்பாறைகளோடு செந்தாரப்பள்ளி சாம்பல் நிறப்பாறைகளையும் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏற்றுமதி செய்கிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனத்துக்குச் சொந்தமான நூறு விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய "டாமின் கிரானைட்ஸ்" 2-3 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட கற்பலகைகள் மற்றும் சுவர்களில் பதிக்கவல்ல கற்பலகைகள் மற்றும் 10-15 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட நினைவுக் கற்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்கிறது.

இந்நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்துவரும் இதர உயர்வகைக் கனிமங்கள்.

1. இந்திய தர மணல் : ஐ.எஸ். 650/1966
2. சுண்ணாம்புக் கல் : கெமிகல் கிரேடு சராசரியாக +91% $CaCo_3$
3. வெங்கச் கல் (குவார்ட்ஸ்) : +99.8% $Sio_2$
4. பெல்ட்ஸ்பார் : +12% $K_2o$
5. ரோஸ் குவார்ட்ஸ் ஆபரணங்கள் செய்யும் தரம் உடையது
6. சிலிகா மணல் : +99.7% $Sio_2$
7. வெப்பந்தாங்கும் களிமண் : ரிப்ராக்டரி கிரேடு 32.1% $Al_2O_3$
8. வெர்மிகுலைட் : சராசரியாக 14 மடங்கு கனபரிமாணம் விரிவடையும் தன்மையுடையது.
9. விரிவுபடுத்தப்பட்ட வெர்மிகுலைட் : பொன் நிறமானது
10. சுண்ணாம்புச் சிப்பி : சராசரியாக $CaCo_3$ +94%

தேவைக்கு அணுக வேண்டிய முகவரி:

தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு கனிம நிறுவனம்,
TWAD House 31 காமராஜர் சாலை
தபால் பெட்டி எண். 2961
சேப்பாக்கம், சென்னை-600 005.
தொலைபேசி எண். 848932
டெலக்ஸ் — 41 6081 TNMLIN
DIPR/1174/MS/88/ARIES

தொழிற்சாலை

டாமின் கிரானைட்ஸ்
மணலி - பொன்னேரி ரோடு
மணலி,
சென்னை - 600 068.
தந்தி - MINESALITE

# மின்னல்

"தள்ளி உட்காரும், அய்யா!"

"தள்ளி உட்காராமல் இப்பொழுது என்ன உமது தலையிலா ட்கார்ந்திருக்கிறேன்?"

"தள்ளி உட்காரச் சொன்னால் துக்கு ஐயா கத்துகிறீர்? இவ்வளவு ரோசம் உள்ளவர் சொந்தப் பிளஷரில் போகணும்"

"ஏன் நீர் சொந்தப் பிளஷரில் போகிறது தானே?"

"உஸ்; அப்பப்பப்பா!"

"என்ன புழுக்கம்; என்ன வேக்காடு!"

"இந்த பஸ் இப்போதைக்கு நகராது"

"இந்தப் பிரயாணம் ஜன்மத்துக்கும் போதும்!"

"உஷ்! ராமா, ராகவா, என் அப்பனே!"

பஸ்ஸில் உள்ளே இருந்தவர்கள் வெந்து மடிந்து கொண்டிருந்தனர்.

அந்தப் பஸ்ஸில் நாற்பத்தைந்து பிரயாணிகள் இருந்தனர். நாற்பத்திரண்டு ஆண்கள், மூன்று கிழவிகள்.

கி. ராஜநாராயணன்



பஸ் ஸ்டாண்டில் மர நிழல் இருந்தது. பஸ்ஸை நிறுத்துவதற்கென்றே போட்டிருந்த கொட்டகையும் இருந்தது.

அங்கெல்லாம் பஸ்ஸை நிறுத்தியிருக்கலாம். ஆனால் எதற்காக அப்படி நிறுத்த வேண்டும்? நிறுத்த வேண்டுமென்று என்ன ஆத்திரம்?

உட்கார்ந்த பிரயாணிகளில் ஒரு தடியான ஆசாமி, பாவம்! 'கேஸ் பூஸ்' என்று மூச்சு வாங்கி இளைத்துக் கொண்டிருந்தார். ஆஸ்துமா காரணமாகவோ, அல்லது திட்டம் இல்லாமல் தின்றுகொழுத்து விட்டதனாலோ, யாருக்குத் தெரியும்?

ஒரு போலீஸ்காரர், துப்பாக்கியைத் தோளில் சாத்திக்கொண்டு, முகத்தை அஷ்டகோணலாக வைத்துக்கொண்டு தூங்கி வழிந்துகொண்டிருந்தார். கேலிச் சித்திரக்காரன் எவனாவது அப்போது அவரைக் கண்டிருந்தால் விடவே மாட்டான்.

இன்னொருவர் பல் டாக்டர். வாரம் ஒரு தடவை அந்த ஊருக்கு வந்து போவார். ஒரு காலத்தில் அவர் முகம் பார்ப்பதற்கு எவ்வளவு அழகாக இருக்கும்! இப்பொழுது அவருக்கு நல்ல வரும்படி, நோயாளிகளின் ஊத்தை நிறைந்த பற்களைப் பார்த்துப் பார்த்து, துர்வாடையையும் அனுபவித்து, அவருடைய முகத்தில் அருவருப்புத் தங்கி, அதுவே நிரந்தரமாகி விட்டது.

அவருக்கு எதிரில் நீண்ட பற்களையுடைய ஒருவன் உட்கார்ந்திருந்தான். அவனுக்கு நீண்ட பற்கள் மாத்திரம் அல்ல; ஒவ்வொரு பல் இருக்கவேண்டிய இடத்திலும் இரண்டு பற்களும், சில இடங்களில் மூன்று பற்களும் முளைத்திருந்தன. டாக்டர் அவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

கிழவிகள் மூன்று பேரும் வரிசையாக ஒரே இருக்கையில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அதில் ஒரு கிழவி மட்டும் தூங்கிக்கொண்டிருந்தாள். தன் பொக்கை வாய் நிறைய கருப்பட்டிப் புகையிலையைக் குதப்பிக்கொண்டு ஒரு கண்ணை மூடியும் இன்னொரு கணணைப் பாதி மூடியும் தூங்கிக்கொண்டிருந்தாள். அவளது வாய்க் கோடியில் புகையிலை எச்சில் ததும்பி நின்று கீழே உதிர, முகூர்த்தம் பார்த்துக் கொண்டிருந்தது. பக்கத்தில் இருந்த கிழவி அவளை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். அது விழுந்தால் தன்மீதுதான் விழும் என்ற பயம் அவளுக்கு. பஸ் புறப்பட இன்னும் சில நிமிடங்களே இருந்தன. மரங்களின் இலைகூட அசையவில்லை.

பிரயாணிகள் முணுமுணுத்தார்கள். கொட்டாவி விட்டார்கள். தங்களையே நொந்து கொண்டார்கள். சில பிரயாணிகள் தைரியமாக கண்டக்டரையும் டிரைவரையும் பஸ் கம்பெனியையும் வாய்விட்டுச் சபித்தார்கள். மரத்தின் நிழலடியில் கண்டக்டர்களும் டிரைவர்களும் ஏதோ ஒரு விவகாரத்தில் உற்சாகமாக ஈடுபட்டிருந்தனர்.

ரோடு வழியாக ஒரு வாத்தியார் இந்த வேகா வெயிலில் சின்னஞ் சிறு குழந்தைகள் பலரை வரிசைப் படுத்தி அழைத்துக் கொண்டு போனார். ஒருவேளை அவர்கள் உல்லாசப் பயணம் போகிறார்களோ என்னவோ?

மூட்டை தூக்கிப் பிழைக்கும் கூலிச் சிறுவர்கள் ஒருவரோடு ஒருவர் ஆபாசமாகப் பேசிக்கொண்டும் வைது கொண்டும் விளையாடிக் கொண்டும் இருந்தார்கள்.

பஸ் புறப்படும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. இரண்டு பிரயாணிகள் பஸ்ஸினுள் நின்று கொண்டிருந்தனர். இரண்டு பிரயாணிகள் தாங்கள் எங்கே உட்காருவது என்று அவர்களுக்குத் தெரியவில்லை.

ஒரு வழியாக வந்து சேர்ந்தார் கண்டக்டர். கடவுளைக் கண்டது போலிருந்தது; சிலர் கொலைப் பார்வை பார்த்தனர் கண்டக்டரை.

நின்று கொண்டிருந்த அந்த இரண்டு பேரையும் ''இறங்குவேய்!'' என்றார் கண்டக்டர். மன்னன் பேச்சுக்கு மறுபேச்சு உண்டா? அவர்கள் இறங்குவதைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. இறங்கியவர்களைப் பார்த்துக் கண்டக்டர், ''ஏறுவேய்'' என்றார்! அவர்கள் மறுபடியும் ஏறிக் கொண்டார்கள். கண்டக்டர் முகத்தில் இன்னும் திருப்தி ஏற்படவில்லை. கடுகடுப்பு மறைந்தபாடில்லை. அப்புறம் அவர் பிரயாணிகளை ஒழுங்குபடுத்த ''அடுக்கினார், அடுக்கியதை எல்லாம் எண்ணினார், திரும்பவும் எண்ணிவிட்டு டிரைவரை நோக்கிக் குரல் கொடுத்தார். ''சீட் நாப்பத்தி அஞ்சி; நம்பர் எளநூத்தி நாப்பத்ரெண்டு, ஆலம்பட்டி ஒரு இறக்கம், ரைட்

ஆலம்பட்டி இறக்கத்தில் பஸ் வந்து ஓர் அசைப்பு அசைந்து நின்றது. தூங்கிக்கொண்டிருந்த பிரயாணிகள் எல்லோரும் தங்கள் தலைகளை உடம்போடு ஓர் அசைப்பு அசைத்து மெதுவாகக் கண்களைத் திறந்தும் திறக்க இஷ்டப்படாமலும் இருந்தார்கள்.

மூன்றாவது கிழவி மெதுவாக எழுந்து பனைநார்ப் பெட்டியில் இருந்த தன் சாமான்களோடு இறங்கினாள்.

இந்தச் சமயம் மென்மையான குளிர்ந்த காற்று பஸ்ஸினுள் ஊடுருவிப் புகுந்து பிரயாணிகளைத் தடவிச் சென்றது; ஏறக்குறைய அதே சமயம் யௌவனம் மிகுந்த பெண்ணின் கலகலவென்ற சிரிப்பொலி எல்லோர் காதுகளிலும் புகுந்தது அதை ஒட்டி மருக்கொழுந்தின் வாடையும் கம்மென்று பரவியது. கிராமப் பெண்ணொருத்தி, இடுப்பில் குழந்தையுடன் உள்ளே வந்தாள். போலீஸ்காரரைக் கண்டதும் அந்தக் குழந்தை சிரித்தது! போலீஸ்காரர் விழித்துப் பார்த்தார். அவர் முகத்தில் இருந்த கோணல் மறைந்து குதூகலம் படர ஆரம்பித்தது.

சுருட்டை முடியும் மழுமழுவென்ற பால் கன்னங்களும், கருவண்டு போன்ற கண்களும், சிரித்த செந்தாமரை போன்ற முகமும் கொண்டு தன் அழகான கழுத்தைத் திருப்பி எல்லோரையும் சுற்றிப் பார்த்தது குழந்தை. மென்மையான குளிர்ந்த காற்று, பஸ்ஸினுள் ஊடுருவிப் புகுந்து சென்றது. குழந்தை ஆனந்தமாகக் கைதட்டிச் சிரித்தது. பஸ்ஸினுள் மூதேவிக்களை விலகி லட்சுமிகரம் வழிய ஆரம்பித்துவிட்டது. பிரயாணிகள் எல்லோருக்கும் குழந்தையையும் தாயையும் பார்த்ததில் ஒரே உற்சாகம். சொர்க்கத்தையே தன் கையில் ஏந்தி நின்ற அந்தப் பெண்மணியை எல்லோருக்கும் சிரம் தாழ்த்தி வணங்க வேண்டும்போல் இருந்தது.

ஒரு கிழவி குழந்தையை, ''வா ராசா'' என்றாள். இன்னொரு கிழவி ''என் செல்லக் கனியில்லே'' என்று அழைத்தாள்.



குழந்தை சிரித்தபடியே தலையை ஆட்டி ஆட்சேபம் தெரிவித்தது. டிக்கெட் கிழித்து, கண்டக்டர் அந்தக் குழந்தையிடம் கொண்டுவந்து கொடுத்தார். அதை வாங்கி ஜன்னல் வழியே காற்றோடு விட்டது குழந்தை.

கண்டக்டர் பிரமிப்புத் தட்டியது போல் நடித்தார். மீண்டும் அந்தப் பெண் கலகலவென்று சிரித்தாள். என்ன அற்புதமான சிரிப்பு.

''போக்கிரிப் பயலே!'' என்று போலீஸ்காரர் கொஞ்சினார். பஸ் வேகமாகச் சென்று கொண்டிருந்தது. கிழவிகள் இருவரும் அந்தப் பெண்ணோடு பேசிக்கொண்டே வந்தார்கள். மலர்ந்த முகத்தோடு அந்தப் பெண் பதில் சொல்லிக் கொண்டே வந்தாள்.

பல் டாக்டரும் அந்தப் பெண்ணின் சிரித்த முகத்தையே பார்த்துக் கொண்டு வந்தார்.

என்ன அழகான பற்கள்! என்ன ஆரோக்கியமான பிரகாசம் பொருந்திய பற்கள்! இப்படிப் பற்களைப் பார்த்து எத்தனை நாள் ஆகின்றன.

அந்த டாக்டருக்குத் தாம் பிறந்த பூமியின் ஞாபகங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் வந்தன. அவருடைய முகத்தின் பழைய அழகு வந்து குடி புகுந்தது.

நாலாவது மைலில் வந்து பஸ் நின்றது. பெண்ணும் குழந்தையும் இறங்கினார்கள். கிழவிகள் இருவரும் குழந்தையின் கன்னத்தைத் தடவி, தடவிய தங்கள் கையை முத்தமிட்டார்கள்.

''போயிட்டு வாடா கண்ணு''

எல்லாரும் மானசிகமாக அவர்களுக்குப் பிரியாவிடை கொடுத்து அனுப்பினார்கள்.

பஸ் மெதுவாக, சகிக்க முடியாத பெருத்த இரைச்சலுடன் நகர்ந்தது.

தடியான ஆசாமி, சோம்பல் முறித்து எரிச்சலுடன் ஒரு பெரிய நீண்ட கொட்டாவி ஒன்றை விட்டார். மீண்டும் அவருக்கு இளைப்பு ஆரம்பமாகிவிட்டது. அவரைத் தொடர்ந்து இன்னொருவர் துணைக் கொட்டாவி விட்டார். போலீஸ்காரரும் அந்தக் கிழவியும் தூங்க ஆரம்பித்தார்கள்.

டாக்டர் தம் எதிரே உட்கார்ந்து கொண்டிருந்தவனைப் பார்த்துக் கொண்டே இருந்தார். அவர் முகத்தில் கொஞ்சங் கொஞ்சமாக அருவருப்புவளர்ந்துகொண்டே வந்தது.

''உஸ்! அப்பப்பா! என்ன வேக்காடு, என்ன வேக்காடு, கொஞ்சம் தள்ளி உட்காரும், ஐயா! எத்தனைத் தடவை சொல்லுவது?''

கண்டக்டர் அவர்களை நோக்கிக் கையை நீட்டி ஏதோ கோபமாகக் கத்தினார். பஸ்ஸின் ஹாரன் சப்தத்தில் அது ஒருவர் காதிலும் விழவில்லை.

('கதவு' என்ற சிறுகதைத்தொகுப்பிலிருந்து.)

# நிலக்கடலை விளைச்சல் அதிகரிக்க...

தென்னை நார்க்கயிறு தயாரிக்கும் தொழிற்சாலைகளில் தென்னை நார்க்கழிவு 'மஞ்சியை' குவியல் குவியலாகக் குவித்து வைக்கப்பட்டிருக்கும். இதை புளூரோடஸ் காளான் வித்து மற்றும் யூரியாவுடன் கலந்து மக்கிய எருவாக்கிப் போடுவது நல்ல பலனை அளிக்கின்றது.

நார்க் கழிவினை மக்க வைக்கும் முறை:

நாருடன் நார்க் கழிவினை எருவாக்கத் தேவையான பொருட்கள்.


1 டன் நார்க்கழிவு
5 கிலோ யூரியா
புளூரோட்டஸ் -சோஜார்.

காஜ் காளான் வித்துக்கள் 5 புட்டிகள், நிழலான 5 மட்டர் நீளம் 3 மீட்டர் அகலம் கொண்ட இடத்தில் (முதலில் 100 கிலோ நார்க்கழிவினைச் சீராக பரப்பி(முதலில் 100 கிலோ 4 முழுசாக்கு நார்க்கழிவு) அதன்மீது ஒரு புட்டிகாளான் வித்தினைத் தூவிவிட வேண்டும். பிறகு அதன் மேல் அடுத்த 100 கிலோ நார்க் கழிவிலைப் பரப்பிவிட்டு ஒரு கிலோ யூரியாவைத் தூவி விடவேண்டும். மீண்டும் அதனமேல் அடுத்த 100கிலோ நார்க்கழிவினைப் பரப்பிவிட்டு ஒரு புட்டி காளான் வித்து தூவுதல் பிறகு நார்க்கழிவு யூரியா என்றுஅடுத்தடுதது 1 மீ. உயரம் வரும் வரையில் போட்டு தண்ணீர் தெளித்து விடவேண்டும். ஒருமாதம் வரையிலும் மக்க வைக்கவேண்டும்.

(ஒரு காளான் வித்து புட்டியின் விலை ரூ. 2.50 ஆகும்.)

எக்டேருக்கு மக்கிய நார்க்கழிவு உரத்தை 12.5 டன் வீதம் கடைசி உழவிற்கு முன்பு போட்டு உழுது நிலக்கடலை விதைக்கவும். பரிந்துரை செய்யப்படும் மணிச்சத்து சாம்பல் சத்து மட்டும் இடவும். நார்க்கழிவு மக்க வைக்க யூரியாவை உபயோகிப்பதால் பயிருக்குத் தனியாகப் போட வேண்டியது தேவையில்லை. மக்கிய நார்க்கழிகவு இடுவதால் மண்ணின் தண்ணீர் பிடிப்புத் தன்மை 8-10 சதவீதம் அதிகரிக்கின்றது. மேலும் மண்ணின் பௌதிகத் தன்மையை சீரமைப்பதால் மண்ணில் நிலக்கடலை நன்கு திரண்டு குறிப்பாக வித்துக்கள் திரட்சியுடன் காணப்படுகின்றது. இதனால் நிலக்கடலை மகசூல் 20 சதவீதம் எக்டேருக்கு 3-4 குவிண்டால் அதிகரிக்கின்றன. செலவுபோக எக்டேருக்கு ஏறத்தாழ ரூ. 500-400 கிடைப்பதோடு மண்ணின் வளத்தினையும் அதிகரிக்க வழி செய்யலாம்.

தகவல்: வேளாண் தகவல் பணி மையம்,
தமிழ்நாடுவேளாண்மைப்பல்கலைக் கழகம்
கோவை.



# தஞ்சை ஓவியங்கள்



இராசராசனும் கருவூர்த் தேவரும் - பெரியகோயில் —சோழர்கால ஓவியம்



நடனமாடும் பெண் — பெரியகோயில் — சோழர்கால ஓவியம்

கலைகளுக்கெல்லாம் சிறப்பான இடம் தஞ்சையாகும். தஞ்சை மாவட்டத்திலேதான் எண்ணற்ற கோயில்கள் இருக்கின்றன. இக்கோயில்கள் பலவற்றில் ஓவியங்கள் காணப்படுகின்றன. சோழர் காலத்திலிருந்து மராட்டிய மன்னர்கள் காலம் வரையிலும் ஓவியங்களை கால அடிப்படையிலே பிரித்துக் காணலாம். தமிழ் மக்களின் ஓவியக்கலைச் சிறப்பினை அறிந்து கொள்பவர்களுக்கு தஞ்சை மாவட்டத்திலே காணப்படும் ஓவியங்கள் ஒரு அரிய கலை விருந்தாக அமைகிறது. தமிழகத்தின் நெற்களஞ்சியம் என தஞ்சையை அழைக்கிறோம். ஓவியக் கலைக்கும் இம் மாவட்டம் களஞ்சியமாக விளங்குகிறது எனக் கொள்வதில் தவறில்லை.

**சோழர் கால ஓவியம்:**

சோழர் கால ஓவியங்களை முதலில் காண்போம். தமிழகத்தில் சோழ மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள் அதிக அளவில் இருக்கின்றன. அவற்றின் கட்டடக்கலைச் சிறப்பும், சிற்பங்கள் மற்றும் செப்புத் திருமேனிகளின் எழிலும் நம் பெருமையை எடுத்துக் காட்டும் வகையில அமைந்துள்ளன. ஆனால் சோழர் காலத்தில் தீட்டப்பட்ட ஓவியங்களை மட்டும் காண இயலவில்லை. தஞ்சை பெரியகோயில் மட்டும் சோழர் கால ஓவியங்களைக் காணலாம். இவை நன்முறையில்பேணிப்பாதுகாக்கப்பட்டு வருகின்றன. கருவறையைச் சுற்றியுள்ள சுற்றுப் பாதையில் இவ்வோவியங்கள் காணப்படுகின்றன. இவ்வோவியங்களின் மீது பின்னர் தஞ்சை நாயக்க மன்னர் காலத்தில் ஓவியங்களைத் தீட்டியுள்ளனர். நாயக்கர் கால ஓவியங்களை இரசாயன முறையில் அகற்றி சோழர் கால ஓவியங்களைக்கண்டு களிக்கும் வண்ணம் அமைத்தும், பாதுகாத்து வருகின்றனர், மத்திய தொல்பொருள் ஆய்வுத்துறையினர்.

கருவறையின் சுற்றுப்பாதையில் இடமிருந்து வலமாக சுற்றிவரும் பொழுது சிவபெருமான் ஆலமர் செல்வனாக அமர்ந்திருக்கும் கோலத்தைக்காண்கிறோம். ஞானத்தின் இருப்பிடமாக அமர்ந்திருக்கின்றான் இறைவன். மரத்திலே பல பறவைகளையும்விலங்கினங்களையும் காண்கிறோம். சிவந்த உடல் வண்ணம் கொண்டவராக அமர்ந்து முனிவர்களுக்குப்போதிக்கும் நிலையில் உள்ள இவ்வோவியம் எழிலுடன் விளங்குகிறது. இவ்வோவியத்தின் மேற்பகுதியில் சிவபெருமான் பைரவ வடிவில் இருக்கும் கோலத்தைக் காண்கிறோம்.

தொடர்ந்து செல்லும்பொழுது முதலில் கண்ணில்படுவது ஒரு நடன மங்கையின் தோற்றமாகும். இடக்காலை ஊன்றி வலக்காலைத் தூக்கிச் சதுர தாண்டவ அமைப்பில் வைத்து, இடக்கையை மடக்கி வலக்கையை நீட்டி முகத்தை இடது தோள் பக்கம் வளைத்துத் தன்னை மறந்து ஆடுபவளாகத் தீட்டப்பட்டுள்ளது. வேகமாக நடனமாடும் பொழுது ஒரு பெண்ணின் ஆடை ஆபரணங்கள் எவ்வாறு இருக்குமோ அவ்வாறு இயற்கையாக தீட்டப்பட்டுள்ளது. உடல் வண்ணமும் மிகவும் அழகாக உள்ளது. மிகவும் சிறப்பான ஓவியமாகும் இது. இவ்வோவியத்தைக் காணும் பொழுது,

மின்னெடும் புருவத்தின் மயி
லனையர்
விலங்கல் செய் நாடக சாலை
யின் நடம் பயிலும் இஞ்சி சூழ் -
தஞ்சை இராசராசேச்சரத்தி
வர்க்கே!

என்ற கருவூர்த்தேவரின் திருவிசைப் பாடல் வரிகள் நம் கண்முன் தோன்றும்! அடுத்து சுந்தரர்பெருமானை தடுத்தாட்கொண்ட புராண வரலாறு ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. தமிழ்ப் பெருங்காப்பியம் இங்கு ஓவியமாகத் திகழ்வதைக் காண்கிறோம். வரலாறு மூன்று பகுதியாகக் காணப்படுகிறது. சுந்தரர் திருமண ஏற்பாடுகள் நடக்கின்றன. அவர் மணக்கோலத்தில் இருக்கிறார். அப்பொழுது இறைவன் கிழவேதியராக ஒரு குடை ஏந்தி வருகிறார். பெரிய புராணத்தின் ஆசிரியரான சேக்கிழார் பெருமான் இவ்வோவியத்தைக் கண்டு மகிழ்ந்திருப்பார். எனவே தம் பாடலில் வேதியரின் உருவத்தை அப்படியே வர்ணித்திருக்கிறார். அப்பாடல் இதோ.

"காதிலணி கண்டிகை வடிந்த
குழை தாழச்
சோதிமணி மார்பின் அசை நூலி
னொடு தோளின்
மீது புனை உத்தரிய வெண் நுகில்
நுடங்க
ஆதபம் மறைக் குடை அணிக்கரம்
விளங்க"

ஓவியத்தைக் காண்போம். மறையவர்கள் பலர் அமர்ந்திருக்கின்றனர். கிழவரின் கையில் ஓலை உள்ளது. மறையவர்களின் முகங்கள் பல்வேறு பாவங்களைக் காட்டுகின்றன. அவ்வோலையில் சோழர் கால எழுத்தில் 'இப்படி அறிவேன் இராப்பகலாக' என எழுதப்பட்டுள்ளது. சற்று மேலே திருவெண்ணைநெல்லூர் கோயில் காட்டப்பட்டுள்ளது. "வேதியன் ஆகி என்னை வழக்கினால் வெல்லவந்த ஊதியம் அறியாதேனுக்கணர்வுதந்துய்யக் கொண்ட கோதிலா அமுதே இன்றுன் குணப் பெருங்கடலை நாயேன் யாதினை அறிந்தென் சொல்லிப் பாடுகேன் என மொழிந்தார்" எனச் சேக்கிழார் பெருமான் உணர்ச்சி ததும்பக் கூறியுள்ளதை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது இவ்வோவியம். இதற்கு மேலே தில்லைக்கோயில் ஆடவல்லான் பெருமானை சுந்தரர் வணங்கும் காட்சியும், தொடர்ந்து சுந்தரர் பெருமானும், சேரமான் பெருமான் நாயனாரும் கயிலை நோக்கிச் செல்லும் காட்சி காணப்படுகிறது. சுந்தரர் கயிலை செல்லும் இக்காட்சிக்கு 'வெள்ளானைச் சருக்கம்' என்று பெயர். அவ்வற்புதக் காட்சியே இவ்வோவியத்தில் இடம் பெற்றுள்ளது. சுந்தரர் இராவதம் எனப்படும் யானையின் மீது அமர்ந்துள்ளார். அவருக்கு முன்னே சேரமான் பெருமாள் நாயனார் குதிரைமீது விண்ணிலே விரைவது போல காட்டப்பட்டுள்ளது. கயிலையில் இறைவனும் இறைவியும் வீற்றிருக்கிறார்கள். தேவலோக அரம்பையர் நடனமாடுகின்றனர். சிவகணங்கள் இசைக் கருவிகளை வாசிக்கின்றன. மிகவும் அற்புதமான ஓவியம் இது.

அடுத்து, தில்லைக் கோயிலின் அமைப்பும், இறைவன் நடனமாடும் கோலத்தைக் காண்கிறோம். ஆடவல்லான் பெருமானை அரசனும், அவன் தேவியரும் வணங்குவது போலக் காணப்படுகிறது.

சோழர்காலப் பெண்களின் வடிவமைப்பினையும் அவர்கள் அணிந்திருக்கும் ஆடை அணிகலன்களையும் கண்டு மகிழ இவ்வோவியம்

**கி. ஸ்ரீதரன்,**
**தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை.**

உதவி செய்கிறது. இதற்கு அடுத்ததாக வெண் தாடியோடு, மிடுக்கான தோற்றம் உடைய முனிவர் ஒருவர் காணப்படுகிறார். அருகில் சடைமுடி அணிந்து அமைதியும் அழகும் உடைய அரசன் போல ஒருவன் காணப்படுகின்றான். இவர்களை கருவூர்த்தேவர், இராஜராஜன் என அழைக்கின்றனர். தொடர்ந்து சிவபெருமானின் திரிபுரம்எரித்த தோற்றம் காணப்படுகிறது. தேர் மீது செல்லும் காட்சியும் சிவபெருமானின் சிவந்த உடலும், கோபப் பார்வையும் இக்கோபப் பார்வையைக் கண்ணுற்றே சாயும் அசுரர் கூட்டத்தையும் ஓவியத்தில் காணலாம். இராஜராஜ சோழன் திரிபுரம் எரித்த இறைவனிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தான் போலும்! கோயிலின் விமானத்தின் மேற்பகுதியில்திரிபுராந்தகரின் திருஉருவங்களை சிற்ப வடிவில் திரும்ப திரும்ப அமைத்திருப்பதைக் காணலாம். திரிபுரம் எரித்த வரலாறு தொடர்ச் சிற்பமாகவும் இக்கோயில் காணலாம். தன்வெற்றிக்கெல்லாம் அடிப்படையாக இருந்ததால் என்னவோ இத்தெய்வத்திற்கு இக்கோயிலில் தனிச்சிறப்பு செய்து மகிழ்ந்திருக்கிறான் இராஜராஜன் என்று எண்ணத் தோன்றுகிறது.

தஞ்சைக் கோயிலில் உள்ள சோழர் கால ஓவியங்களில் காணப்

படும். வண்ணமும், உடலின் அமைப்பும், முடி அலங்காரமும், இக்கோயிலை தமிழகத்தின் அஜந்தா என்று அழைக்கத் தோன்றுவதில் தவறில்லை.

இராஜராஜனுக்கு பின்னர் வந்த சோழ மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்ட பல கோயில்கள் உள்ளன. அவற்றின் ஓவியங்கள் ஏதும் காணப்படவில்லை. இது ஏன் என்பது புரியவில்லை. ஒரு வேளை அவர்கள் தங்கள் திறமையை சிற்பங்கள், செப்புத் திருமேனிகளை அமைப்பதில் மாற்றிக் கொண்டு விட்டார்களோ எனக் கொள்ளலாம்.

**விஜய நகர மன்னர்கள் காலம்:**

சோழர்களை அடுத்து விஜயநகர கால ஓவியங்களை நன்னிலம் வட்டத்தில உள்ள திருவீழிமிழலை கோயிலிலும், குடந்தைக்கு அருகில் உள்ள திருவலஞ்சுழி கோயிலிலும் காணலாம். தற்பொழுது திருவலஞ்சுழி கோயிலின் ஓவியங்களைக் காண இயலாத வகையில் சுண்ணாம்புபூசப் பட்டுவிட்டது. ஆனால் இவ்வோவியங்களைப் பற்றி கலை வல்லுநரான திரு. சிவராமமூர்த்தி அவர்கள், தமது 'தென்னிந்திய ஓவியங்கள்' என்ற நூலில் அரிய நிழற்படங்களுடன் கட்டுரை எழுதியுள்ளார். சிவபெருமானின் பல்வேறு வடிவங்களை இங்கு ஓவியத்தில காண்கிறோம். சிவபெருமான் தாண்டவம் செய்கிறார். அருகில் தேவி சிவகாமசுந்தரியாக மலர் ஏந்தி நிற்கிறார். பிரம்மா தாளம் போட, திருமால் மிருதங்கம் வாசிக்க, நந்தி குடமுழா என்னும் பஞ்ச முகவாத்திய கருவியை வாசிக்கின்றார். சிவபெருமானின் பிட்சாடனர் கோலத்தில் செல்லும் காட்சியும், ரதி மன்மதன் உருவங்களும் தொடர்ந்து காண்கிறோம்.



மராத்திய அரண்மனையில் காணப்படும் சரபோஜி மன்னரின் ஓவியம் — தஞ்சாவூர்

தொடர்ந்து சிவபெருமானும், பார்வதிதேவியும் ரிஷப வாகனத்தின் மீது அமர்ந்திருக்க எதிரே திருமால் வணங்கி நிற்கின்றார். சிவபெருமான் திருமாலுக்கு சக்கரம் தானம் செய்த மூர்த்தியாக இங்கு விளங்குகிறார். அடுத்த காட்சியிலும் சிவபெருமான் தேவியுடன் அமர்ந்திருக்க எதிரே ரிஷிகளும், பிரம்மாவும் வணங்கி நிற்கின்றனர். அவர்களுக்கு முன்னால் சிறு பையன் ஒருவன் நிற்கின்றான். சுப்ரமணியர் பிரணவ மந்திரத்தை பிரம்மாவுக்கு உபதேசித்து குருமூர்த்தி என்று பெயர் பெற்ற காட்சியையே இது சித்திரிக்கிறது.

நன்னிலம் வட்டம் திருவீழிமிழலைக்கோயில், அப்பர், சம்பந்தரால் பாடல் பெற்ற தலமாகும். இங்கு ஓவியங்கள் ஒரு மண்டபத்தில் காணப்படுகின்றன. மண்டபத்தின் தூணில் உள்ள கல்வெட்டுக்கள் இம்மண்டபம் 'உக்கன் திரான் எதிசி சோழ பல்லவராயன்' என்பவரால் 11ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது எனக் கூறுகின்றன. அரவின் மீது கிருஷ்ணன் ஆடுகின்றார். அவரது இருபுறமும் ருக்மணி, சத்யபாமா இருவரும் மலர் ஏந்திய நிலையில் இருக்கிறார்கள். ஓவியத்தில் கடைசியில் இரு கொடிப் பெண்கள் நிற்கின்றனர். இக்காட்சியைக் காணும்பொழுது.

'காளியன் பொய்கைகலங்கப்பாய்ந்திட்டு-அவன்
நீள்முடி ஐந்திலும்நின்றுநடஞ்செய்து
மீள அவனுக்கருள் செய்த வித்தகன்,

என்ற பாடல் நம் நினைவுக்கு வருகிறது.

இன்னொரு ஓவியத்தில் கிருஷ்ணன வேணுகோபாலனாகக் குழல் ஊதிக் கொண்டிருக்கிறார். அருகில் பசுக்களும், பெண்டிரும் மெய் மறந்து கேட்டுக் கொண்டிருப்பதாக் தீட்டப்பட்டுள்ளது. இங்குள்ள ஓவியங்கள் மஞ்சள், பச்சை, சிகப்பு வண்ணங்களில்தீட்டப்பட்டுள்ளதைக் காண்கிறோம். ஆடை அணிகலன்கள், முடி அலங்காரங்கள் ஆந்திர மாநிலத்தில் உள்ள லேபாக்ஷி ஓவியங்களை ஒத்து காணப்படுகின்றன. மேலும் இக்கோயிலுக்கு விஜயநகர மன்னர்களில் ஒருவரான வீர விருப்பண்ண உடையார் காலத்தில் பல தானங்கள் அளிக்கப்பட்டதாக கல்வெட்டுக்கள் கூறுகின்றன. எனவே இங்குள்ள ஓவியங்கள் விஜயநகர காலத்தைச் சேர்ந்தவை எனக் கூறலாம். இதே போன்று திருவலஞ்சுழி ஓவியங்களும் உருவ அமைப்பினைக் கொண்டு காணும்பொழுது இக்காலத்தைச் சேர்ந்தவை என உறுதியாகக் கூறலாம்.

**நாயக்கர் கால ஓவியங்கள்:** தஞ்சையை 16-17 ஆம் நூற்றாண்டுகளில் தஞ்சை நாயக்கர்கள் ஆண்டனர். இவர்கள் பல கோயில்களைக் கட்டியும், பல கோயில்களுக்கு கோபுரங்களைக் கட்டியும், மண்டபங்கள் கட்டியும் பெரும் தொண்டாற்றியுள்ளனர். நாயக்கர் கால ஓவியங்கள் தஞ்சை பெரிய கோயில், குடந்தை ராமசாமி கோயில், பட்டீச்சரம், தாராபுரம், திருவையாறு முதலிய கோயில்களில காணப்படுகின்றன.

தஞ்சை பெரிய கோயிலில் சோழர் கால ஓவியங்களின் மீது நாயக்கர் கால ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவை தஞ்சை நாயக்க மன்னன் இரகுநாத நாயக்கன் காலத்தில் தீட்டப்பட்டிருக்க வேண்டும். சில ஓவியங்களின் கீழ் தெலுங்கு எழுத்துக்கள் காணப்படுகின்றன. இங்கு கண்ணப்பர், சக்ர தான மூர்த்தி, திசைக் காவலர்களான யானையின்மீது இந்திரன், ஆட்டு வாகனத்தின் மீது அக்னி, எருமையின் மீதுயமன், மனிதன்மீது நிருத்தி, மகரத்தின் மீது வருணன், மான் மீது வாயு ஆகியோரது உருவங்களும், தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடையும் காட்சியும் துர்க்கை சும்பன், நிசும்பனுடன் சண்டையிடும் காட்சியும் ஓவியமாக தீட்டப்பட்டுள்ளது. மேல் வரிசையில் கருவறையின் வெளிச் சுவரில் திரிபுராந்தகரின் சிற்பங்கள் இருப்பது போன்று, திரிபுராந்தகரின் வடிவங்கள் திரும்பத் திரும்ப ஓவியமாக தீட்டியுள்ளது ஒரு சிறப்பாகும்.

திருவையாற்றில் ஐயனாரப்பன் கோயில் முதல் சுற்று விதானம், சோமாஸ்கந்தர் மண்டபம், திருச்சுற்று மாளிகையின் சுவர்கள், தென் கயிலாய முன் மண்டப விதானம் ஆகியவற்றில் ஓவியங்கள் காணப்படுகின்றன.

முதல் திருச்சுற்று விதானத்தின் பூக்களும், அவற்றைச் சுற்றிச் சுற்றி வட்டமாகப் பின்னிய கொடிகளும் உள்ளன. இங்கு காணப்படும் வெள்ளை ஆரஞ்சு வண்ணங்கள் கண்ணைக் கவருகின்றன. சோமாஸ்கந்தர் மண்டபத்தில் சூரியன் தன் இரு கரங்களில் தாமரை மலரை ஏந்திய நிலையிலும், இருபுறமும் தேவியருடன் நிற்கின்றார். அருகில் நவக்கிரகங்களின் உருவங்களும் காணப்படுகின்றன. திருச்சுற்று மாளிகையில் திருவையாற்றுப் புராணக் காட்சிகள் தீட்டப்பட்டுள்ளன. திருவையாற்றுப் புராணத்தை வடமொழியிலிருந்து தமிழாக்கம் செய்ய அச்சுதப்ப நாயக்கனின் அமைச்சரான கோவிந்ததீட்சிதர் ஆதரவு தந்தார். இவ்வோவியத்தில் காவிரி சமுத்திரராசனை மணந்து கொள்வது, சுவர்க்க நரககாட்சிகள், சுதர்சன மகாராஜா சர்வசித்து என்ற அரசனுடன் போரிடும் காட்சி, சுதர்சன மகாராஜா உத்ர, தட்சிண கயிலாயம் கோயில்களைக் கட்டும் காட்சி, திருவையாறு கோயில் விழாக்கள், நந்தி தேவர் திருமண காட்சி ஆகியவை காணப்படுகின்றன.

அப்பர் பெருமான் திருவையாற்றில் தான் கைலாயக் காட்சி கண்டதாக நாவுக்கரசர் வரலாறு கூறுகிறது. இங்குள்ள தென் கைலாயம் கோயிலில் அப்பர் பெருமான் கைலாச காட்சி காணுதல், அப்பூதி அடிகள் புராணம் ஆகியவை காணப்படுகின்றன. இவ்வோவியங்கள் மிகவும் அண்மைக் காலத்தில் திருத்தப்பட்டதாகத் தெரிகிறது.

கும்பகோணம் அருகில் உள்ள பட்டீச்சரம் பாடல் பெற்ற தலம். அமைச்சர் கோவிந்த தீட்சதர் இக்கோயிலுடன் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தார். இங்குள்ள ஓவியங்களில் இக்கோயிலின் தல புராணம் இடம் பெற்றுள்ளது. பெரும்பாலானவை அழிந்த நிலையில் உள்ளன. அம்மன் கோயிலிலும் சில ஓவியங்கள் காணப்படுகின்றன.


கும்பகோணம் இராமசாமி கோயில் ரகுநாத நாயக்கன் காலத்தில் கட்டப்பட்டதாகும். இங்கு இராமாயணக்காட்சிகள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. இது பிற் காலத்தில் திருத்தி எழுதப்பட்டுள்ளது. தாராசுரம் கோயிலின் கருவறைச்சுவரின் மீதும் நாயக்கர் கால் ஓவியங்கள் காணப்படுகின்றன.

**மராத்தியர் காலம்**

தஞ்சையை நாயக்க மன்னர்களுக்குப் பின்னர் மராத்திய மன்னர்கள் ஆண்டனர். இவர்கள் காலத்தில் தஞ்சை ஓவியங்கள் சிறப்பானதொரு இடம் பெற்றன. சிற்பக் கலையை விட ஓவியத்தின்பால் அவர்கள் அக்கறை கொண்டவராக விளங்கினார்கள். இவர்களின் ஓவியம் 'தஞ்சை ஓவியம்' என்று சிறப்பாக அழைக்கப்பட்டது. இது மொகலாயர் பாணியையும், நாயக்கர் பாணியையும் இணைத்து 18-19 ஆம் நூற்றாண்டில ஏற்பட்ட நெருங்கிய ஐரோப்பியர் தொடர்பால ஏற்பட்ட மரபாகும். இக்காலத்தில் ஏராளமான மனித உருவங்கள் வண்ண ஓவியமாக வரையப்பட்டன. இப்பொழுது போட்டோ எடுப்பது போல ஏராளமான மராட்டிய அரசர்களையும் அரசியர்களையும் இராஜ பிரதானிகளையும், பெரிதாகவும் சிறிய வடிவிலும் தீட்டியுள்ளனர். சில கண்ணாடிகளிலும் தந்தத்திலும்கூட தீட்டப்பட்டுள்ளன. மேலும் இவர்களது ஓவிய படைப்புகளை காகிதம், துணி, மரம் மைக்கா ஆகியவற்றிலும் காண முடிகிறது. பலகையில் பல வண்ணக் கற்களையும், கண்ணாடிகளைப்பதித்தும், தங்க வண்ணங்களைப் பூசியும் நவநீதகிருஷ்ணன், கோபிகா கிருஷ்ணன், சீதாராம பட்டாபிஷேகம் போன்றவை ஏராளமாக செய்யப்பட்டன. இன்று பலரது வீடுகளில் இப்படங்கள் வழிபாட்டில் இருப்பதைக் காணலாம்.

தஞ்சைப் பெரிய கோயிலின் திருச்சுற்றில் அம்மன் கோயில் முன் மண்டபத்து விதானத்திலும், சுப்ரமணியர் கோயில் முன் மண்டபத்திலும் ஓவியங்கள் காணப்படுகின்றன. மராட்டிய அரசர்களில் புகழ் பெற்ற சரபோஜிமன்னன் காலத்தில இவை தீட்டப்பட்டன. சுப்பிரமணியர் கோயில் முன் மண்டபத்தில் மராத்திய அரசர்கள் மற்றும் அரசிகளின் உருவங்கள் பெரிய அளவில் காணப்படுகின்றன. ஒவ்வொருவரின் படத்தின் மேற்புறம் பெயரும் எழுதப்பட்டுள்ளது. பல்வேறு வண்ணத்துடன் இவ்வோவியங்கள் எழிலுடன் விளங்குகின்றன. இவ்வோவியங்கள் இருக்கும் மண்டபத்தை 'உருவப் படங்களின் கலைக்கூடம்' (PORTRAIT GALLERY) என அழைக்கலாம்.

ஓவியமயமாகத் திகழும்
மராத்திய அரண்மனை — தஞ்சாவூர்



தஞ்சை பெரிய கோயிலின் திருச்சுற்றில் திருவிளையாடற் புராணம் முழுவதும் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. அம்மன் கோயிலின் முன் மண்டப விதானத்தில் ஓவியங்கள் தேவி மகாத்மியபுராண கதையைச் சித்திரிக்கின்றன. மகிஷாசுர மர்த்தினியின் வரலாறும், சும்ப, நிசும்ப மர்த்தினியின் வரலாறும் ஓவியமாகக் காணப்படுகின்றன. சந்நிதிக்கு நுழைகின்ற இடத்திலிருந்து கதை துவங்குகிறது. சும்ப, நிசும்பனை வதம் செய்த தேவியை தேவர்கள் துதிப்பதோடு ஓவியம் முடிவடைகிறது. காட்சிகளின் மேல்கொச்சைத் தமிழ் வாக்கியங்களில் விளக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. மேலும் தட்சியஞ்மும், மார்க்கண்டேயபுராணமும் இங்கு இடம் பெற்றுள்ளன. பக்கச் சுவர்களில் வள்ளி, ராதா, மீனாட்சி, சூரியன், சந்திரன், பிரம்மா, நந்திகேசுவரன், திருமால், பிள்ளையார் ஆகியோரது திருமணக் காட்சிகள் காணப்படுகின்றன. தஞ்சைக்கு அருகில் உள்ள வெண்ணாற்றங்கரை கோயிலிலும் இக்கால ஓவியங்கள் காணப்படுகின்றன. தஞ்சை அரண்மனையில் பல பகுதிகளில் மராத்தியர் ஓவியங்கள் காணப்படுகின்றன. இவை அனைத்தும் வழிபாட்டிற்காக அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இங்கு தர்பார் ஹால் எனப்படும் பகுதியில் சுண்ணாம்பினால் மறைந்த ஓவியத்தை இரசாயன முறையில் தூய்மை செய்த பொழுது சில ஓவியங்கள் காணப்பட்டன. இது மராத்தியர்களின் காலத்திற்கு சற்று முந்தைய நாயக்கர் கால பாணியை ஒத்துக் காணப்படுகிறது. இதில் அரசன் ஒருவன் யானையின் மீது ஊர்வலம் செல்லும் காட்சி காணப்படுகிறது. தர்பார் மண்டபத்து ஓவியங்களைப் பற்றி மராத்திய மன்னன் சகஜீ காலத்து நூலான 'சாகேந்திர விலாசம்' மிகத்தெளிவாக விளக்குகிறது. மேலும் இங்கு முருகன், வள்ளி, தெய்வானை ஆகியோரது மற்றும் பண்டரிபுரத்து பாண்டுரங்கன் திரு உருவமும், வேணுகோபாலன் திருஉருவமும் தீட்டப்பட்டுள்ளன. தர்பார் மண்டபத்து பின்புறச்சுவரில் மராட்டிய மன்னர் சிவாஜியின் அழகான ஓவியம் காணப்படுகிறது. அதற்கு மேலே மராத்திய மன்னர்கள் தஞ்சைப் பெருவுடையாரை வணங்கும் கோலம் காணப்படுகிறது. தர்பார் ஹால் முழுவதும் விதானத்திலும் பலவகையான வண்ண வேலைப்பாட்டுடன் வண்ண களஞ்சியமாக விளங்குகிறது. தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையத்தில் உள்ள காகிதச் சுவடிகளிலும் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. கஜ சாஸ்திரம் போன்ற சுவடிகளில் மராத்திய கலை வண்ணத்தைக் காணலாம்.

திருக்கடவூர் கோயிலிலும் மராட்டிய மன்னர்களின் ஓவியங்கள் தீட்

டப்பட்டுள்ளன. திருவாரூர்க்கோயிலில் தேவாசிரிய மண்டபத்தில் முசுகுந்த புராணமும், மனு நீதிச்சோழன் கதையும் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளன. முசுகுந்த புராணக் கதை ஓவியம் சில இடங்களில் அழிந்திருந்தாலும் பொதுவாக நல்ல நிலையில் உள்ளது. தேவர் உலகத்தில் நிகழ்ந்த வாலாசுரனுடன் சண்டை இந்திரன் முசுகுந்தன் துணையை நாடல், திருமால் சிவனருளால் சோமாஸ்கந்தர் திருமேனி பெறுதல், தியாகரர் திருமேனியோடு ஆறு விடங்க மூர்த்திகளையும் திருவாரூக்கு எடுத்து வருதல், திருவாரூரின் பத்து நாள் திருவிழாக் காட்சிகள், திருக்கோயில் அமைப்பு நகரின் முக்கிய மனிதர்கள் இசை நிகழ்ச்சிகள், பரத அபிநயங்கள், வான வேடிக்கைகள் முதலிய காட்சிகளை ஓவியத்தில் காணகிறோம். ஒவ்வொரு காட்சிக்கும் கீழ் அக்காட்சி பற்றிய விளக்கங்கள் தமிழில் எழுதப்பட்டுள்ளன. மேலும் ஓவியங்களில் கூத்துகளின் பெயர்கள், முக்கிய மனிதர்களின் பெயர்கள், இசைக் கருவிகளின் பெயர்கள், வான வேடிக்கைகளின் பெயர்கள் இவையெல்லாம் ஆங்காங்கே எழுதப்பட்டுள்ளன. இவ்வோவியங்கள் 18ஆம் நூற்றாண்டில் இருந்த சமூக வாழ்க்கை, மக்களின் திறமை ஆகியவற்றைப் பற்றி அறிந்து கொள்ள உதவும் வகையில் இவ்வோவியங்கள் கலைக்கூடமாக விளங்குகிறது. இவ்வோவியங்களை எழுதியவனின் பெயரும், உருவமும் காணப்படுகிறது. ஓவியனது உருவத்தின் கீழே 'இந்த சித்திரம் எழுதுகிற சித்திர வேலை சிங்காதனம் சதா சேவை' என எழுதப்பட்டுள்ளது ஒரு சிறப்பாகும்.

மராத்தியர் காலத்திற்கும் சற்று பிற்பட்ட காலத்தைச் சேர்ந்த சில ஓவியங்கள் திருக்கடவூர் மயானம், திருவீழிமிழலை, திருமங்கலக்குடி, குறிச்சி, வேதாரண்யம் ஆகிய கோயில்களில் காணப்படுகின்றன.

திருக்கடவூர் மயானம் கோயில் முன் மண்டபத்தில் 12 ராசிகள் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளன. அதனைச் சுற்றி திருமால், லட்சுமி வீரலட்சுமி, பைரவர், ரதி, சிவன் பார்வதி, மன்மதன், சிவன், பிட்சாடனர், கோலம் தனலட்சுமி, பைரவர், காமதேனு, கற்பக விருட்சம் ஆகிய உருவங்கள் தீட்டப்பட்டுள்ளன. இதில் லட்சுமி திரு உருவங்களுக்கு அருகில் 'லெச்சுமி' 'வீரலெச்சுமி' என எழுதப்பட்டுள்ளன. திருச்சுற்று மாளிகையில் 'மாயவரம்' 'வைத்தீஸ்வரன்கோயில் என எழுதப்பட்டு அதன் கீழ் அக்கோயில்களின் வடிவங்கள் தீட்டப்பட்டுள்ளன.

கும்பகோணத்திலிருந்து பந்தநல்லூர் செல்லும் வழியில் குறிச்சி என்ற ஊரில் கோவிந்த ராஜ பெருமாள் கோயிலில் இராமாயணம் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. கோபுரத்தின் உட்பகுதியில் இவ்வோவியத்தை வரைய உதவி செய்தவர்களின் உருவங்கள் காணப்படுகின்றன. அவ்வுருவங்களுக்கு மேலே நாராயணன், சபாபதி செட்டி, அபிராம ஆச்சி என எழுதப்பட்டுள்ளது. இங்கு இவ்வோவியங்களை வரைந்தவன் தரையில் படுத்து வணங்குவது போல தீட்டப்பட்டுள்ளது. அவனுக்கு மேற்பகுதியில் 'வர்ணக்காரன் பானு ரெங்கராஜ சேவை செய்கிறான்'' என எழுதப்பட்டுள்ளது.



மராத்திய கால ஓவியம்

திருவாவடுதுறையிலிருந்துமூன்று கல் தொலைவில் உள்ள திருமங்கலக்குடி கோயிலின் முன் மண்டபத்தில் தல வரலாறு ஓவியமாகத் திகழ்கிறது. இவ்வோவியத்தை 'பொன்னம்பல பிள்ளை மகன் சாமிநாத பிள்ளை எழுதி வைத்தார்' என எழுதப்பட்டுள்ளது. இவ்வோவியத்தை எழுதிய ஓவியன் பெயரை கோவிந்தப்ப நாயக்கர் மகன் வேங்கடபதி நாயகன் எழுதினான், என்று குறிக்கிறது. தஞ்சை ஓவியங்களில், திருவாரூர், குறிச்சி, திருமங்கலக்குடி ஆகிய இடங்களில் உள்ள ஓவியங்களை வரைந்த ஓவியர்களின் பெயர்கள் வருவது ஒரு சிறப்பு அம்சமாகும்.

திருமறைக்காடு என அழைக்கப்படும் வேதாரண்யம் கோயிலில் திருச்சுற்று மாளிகையில் பெரிய புராணம் ஓவியமாக தீட்டப்பட்டுள்ளது. துவக்கத்தில் சேக்கிழார் பெருமான் யானையில் அமர்ந்திருக்கிறார். அவருக்குப் பின்வே அநபாயச் சோழன் அமர்ந்து கவரி வீசுகிறான். அவருடைய கையில் ஏந்தியிருக்கும் சுவடியில் - உலகெல்லாம், என்ற சொற்றொடர் காணப்படுகிறது. மேலே சேக்கிழார் சுவாமிகள் என எழுதப்பட்டுள்ளது. பெரிய புராணம் தாராசுரம் கோயிலில் சிற்ப வடிவில் அமைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். இங்கு ஓவியத்தில் காண்பது ஒரு சிறப்பாகும். இன்னும் பல கோயில்களில் ஓவியங்கள் காணப்படுகின்றன. கால அடிப்படையில் பார்ப்போமானால் சோழர் கால ஓவியங்கள் தீட்டப்பட்ட முறையிலும் பிற்கால ஓவியங்கள் தீட்டப்பட்ட முறையிலும் வேறுபாடுகள் உள்ளன. வண்ணங்களும் மாறுபட்டு உள்ளன. ஓவியங்கள் கண்ணுக்கு மட்டும் விருந்தாக அமையாமல், அப்பொழுது நிலவிய சமய ஒற்றுமை, புராண வரலாறுகள், மக்களின் நிலை பற்றி அறிய உதவும் பண்பாட்டுக் களஞ்சியமாக விளங்குகிறது என்று கொள்வதில் தவறு இல்லை. ●



குழல் ஊதும் கண்ணன் — விஜயநகர மன்னர்கால ஓவியம் — திருவீழிமிழலை



# அரசின் அறிவிப்புகள்-ஆக்கப்பணிகள்

## குத்தகை விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றத் தடை

புயலாலும் மற்றும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்களுக்குச் சட்டம் 60-86ன்படி 30.6.1984 வரை கட்ட வேண்டிய குத்தகை நிலுவைகளை ஐந்து சம தவணைகளில் வட்டியின்றிச் செலுத்திட வகை செய்யப்பட்டது. இச்சட்டத்தின்படி அளிக்கப்பட்ட கடைசித் தவணை 30.9.1988-உடன் முடிவடைந்தது.

1987ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் கடும் வறட்சி நிலவியது. 1988-ஆம் ஆண்டில் தென்மேற்குப் பருவமழை சாதகமாக இருந்த போதிலும், வடகிழக்குப் பருவமழை பொய்த்துவிட்டது. அதனால் பயிரிடும் குத்தகைதாரர்கள் மேலே குறிப்பிட்ட பருவநிலை பாதிப்பின்றி மீள முடியாத நிலை ஏற்பட்டு, தவணை முறையில் செலுத்த வேண்டிய குத்தகை நிலுவைகளைச் செலுத்த முடியாமல் போய்விட்டது.

அதனால் பயிரிடு குத்தகைதாரர்களுக்கு நிவாரணம் அளிக்க அரசு கருதுகிறது. இதற்கு உரிய சட்டம் இயற்ற அவசியம் ஏற்படுகிறது. எனவே, அரசு 30.9.1986இல் உள்ள நிலுவையையும் மற்றும் 20.2.1989 வரையில் நிலுவையிலுள்ள குத்தகைப் பாக்கிகளையும செலுத்த இயலாத பயிரிடு குத்தகைதாரர்கள் தனிப்பட்ட நிலவுடைமையாளருக்கோ அல்லது பொதுப்பொறுப்புக் கழகங்களுக்கோ குத்தகைத் தொகை நிலுவைகளைச் செலுத்தாத காரணத்திற்காக நிலத்திலிருந்து 30.9.1986 அன்றும், அதன் பிறகும் வெளியேற்றப்பட்டவர்களை மீண்டும் தொடர்ந்து பயிரிடு குத்தகைதாரர்களின் மீதான நில வெளியேற்ற நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கவும், மேற்கண்ட பயிரிடு குத்தகைதாரர்கள் 31.3.1990ஆம் நாளுக்குள் தவணை பாக்கிகளைச் செலுத்த அவகாசம் அளிக்கவும், அரசு கருதுகிறது. குத்தகை செலுத்தாத காரணத்திற்காக எந்தவொரு பயிரிடு குத்தகைதாரரையும் 31.3.1990 வரை நிலத்திலிருந்து வெளியேற்றம் செய்யக்கூடாதெனவும் அரசு கருதுகிறது.

இது சம்பந்தமாக உரிய சட்டம் கொண்டுவரப்படும்.

**மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் 21-2-89 அன்று சட்டப்பேரவை முன் அளித்த அறிக்கையிலிருந்து**

## தமிழ்நாட்டில் சுற்றுலா மையங்கள்

உலகப் பயணிகளைக் கவரும் வகையில் தமிழ்நாட்டின் பல இடங்களில் சுற்றுலா மையம் உருவாக்கத் திட்டம் உள்ளது. ஆனால் நிதிப் பற்றாக்குறை காரணமாக இத்திட்டங்கள் படிப்படியாக நிறைவேற்றப்படும். சென்னையில் பொருட்காட்சி நடைபெறும் தீவுத்திடலில் நிரந்தரப் பொருட்காட்சி அமைக்கப்படும்.

மேலும், தென்சென்னையில் உள்ள கிண்டி சிறுவர் பூங்காவில் மிகப் பெரிய சுற்றுலா மையம் உருவாக்கப்படும். இங்கு 30 ஏக்கர் நிலமும் அதையொட்டி வனத்துறைக்குச் சொந்தமான 500 ஏக்கர் நிலமும் உள்ளது. இங்குப் போதிய தண்ணீர் வசதியும் உள்ளது. ஆனால் மரங்கள்தான் பசுமையாக இல்லை. வறட்சியாகவும் காணப்படுகிறது.

இதை முறையாக அபிவிருத்தி செய்தால், மிகப்பெரிய சுற்றுலா மையமாக உருவாகும். அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள மிகப் பெரிய முக்கிய சுற்றுலா மையங்களை இணைக்கும் வகையில் கேபிள்கார் விடும் திட்டமும் பரிசிலனையில் உள்ளது.

**—சென்னைத் தீவுத்திடலில் உள்ள அகில இந்தியச் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியில் 16-2-89 அன்று நடந்த செய்தியாளர் கூட்டத்தில் மாண்புமிகு சுற்றுலா மற்றும் இந்து அறநிலையத்துறை அமைச்சர் திரு கே. பி. கந்தசாமி அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.**

## மூடப்பட்ட பஞ்சாலைகள் திறக்கப்படுகின்றன

தமிழ்நாட்டில் மூடப்பட்டுள்ள பஞ்சாலைகளைத் திறக்கச் செய்வதற்கான முயற்சிகள் குறித்து மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு பொன். முத்துராமலிங்கம் அவர்கள் 25.2.89 அன்று முதற்கட்ட ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினார். தொழிற்சங்கங்கள் சார்பில் 75 பேரும், நிர்வாகச் சங்கங்களின் சார்பில் 13 பேரும், அரசு தரப்பில் 10 அலுவலர்களும் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு எஸ். தங்கவேலு அவர்களும் கலந்து கொண்டார்.

**மாண்புமிகு . செய்தி-மற்றும் தொழிலாளர்நலத்துறை அமைச்சர் திரு பொன். முத்துராமலிங்கம் அவர்கள்**

செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

''அவினாசியிலுள்ள தமிழ்நாடு ஸ்பின்னிங் மில், கோயம்புத்தூரிலுள்ள கே.ஜி.எஸ். ஸ்பின்னர்ஸ், வாசுவேர் டெக்ஸ்டைல்ஸ் ஆகிய மூன்று ஆலைகளை மார்ச் 15ஆம் நாளுக்குள் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகம் ஆகிய இரு தரப்பினருக்கிடையே சுமுகமான நல்லுறவு ஏற்படும் விதத்தில் இக்கூட்டத்தின் பேச்சுவார்த்தைகள் அமைந்தன. இத்தகைய நேரங்களில், மின்வெட்டிலிருந்து விலக்கு அளிப்பது, விற்பனை வரிச்சலுகை போன்ற சலுகைகளை அரசு நிர்வாகத்துக்குக் கொடுப்பதுஆகும். தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகத்தினர் ஆகிய இருதரப்பினராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் மூடப்பட்ட ஆலைகளைத் திறக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மூடப்பட்ட 22 பஞ்சாலைகள் மீண்டும் திறக்கப்படும்போது அவற்றில் பணியாற்றிய சுமார் பத்தாயிரம் தொழிலாளர்கள் பயன்பெறுவர்''.

## பாசனப் பெருக்குத்திட்டங்களுக்கு உலகவங்கி உதவி

புதுடெல்லியில் உள்ள உலக வங்கியின் தலைமைத் திட்ட அலுவலர் திரு ஏ. வெங்கிடராமன், அமெரிக்காவில் வாஷிங்டனிலுள்ள இவ்வங்கியின் அலுவலர்கள் திருமதி ஸ்டெர்ன் மற்றும் நாசர் ஆகியோர் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு கோ.சி.மணி அவர்களை 22.2.89 அன்று சென்னையில் சந்தித்தனர்.

இந்தியாவில் ஏதாவது ஒரு மாநிலத்தைத் தேர்ந்தெடுத்து அம்மாநிலத்தில் வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த திட்டங்களுக்கு உலகவங்கி பெருமளவில் நிதி உதவ செய்யத் தயாராய் இருக்கிறது. எனவே இதற்கான முக்கிய திட்டங்களை தமிழ்நாட்டில் தெரிவு செய்யுமாறு குழுவினர் கேட்டுக்கொண்டனர்.

பொதுவாக தமிழ்நாடு டெல்டா பகுதிகளிலும் குறிப்பாகத் தஞ்சாவூர் டெல்டாப் பகுதிகளிலும பாசனப்பெருக்குத் திட்டங்களைப் புதிய உத்திகளில் மேம்படுத்தவும் மற்றும் மானாவாரி பகுதிகளில் பாசன வசதிகளை அதிகரிக்கும் திட்டங்களிலும் கவனம் செலுத்தி இதற்கான நிதி உதவியை உலக வங்கியிடமிருந்து பெறலாம் என்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் ஆலோசனை கூறினார்.

மேலும் காவிரி டெல்டாப் பகுதியில் தண்ணீர் பற்றாக்குறை உள்ளதால் இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாணும் வகையில் சிறு ஏரி அணைக்கட்டு பாசனத் திட்டம் வகுக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் கருத்து தெரிவித்ததுடன், இதற்கான திட்டங்களை உலக வங்கியினர் அரசிக்குச் சமர்ப்பித்தால் தமிழக முதல்வரிடம் தாமே அணுகி அதற்கான அறிவுரையைப் பெற்றுத் தருவதாகவும் கூறினார்.

## மிசரியோர் நூற்பாலைக்கு அரசு நிதி உதவி

ஆதிதிராவிடர் நலத்திட்டங்களின் கீழ் மிசரியோர் நூற்பாலைக்கு தமிழக அரசு ரூ. 150 லட்சம் நிதியுதவி வழங்கி, அந்தக் கூட்டுறவு நூற்பாலையை விரிவாக்கம் செய்திட முடிவு செய்துள்ளது.

இதுபற்றிய விவரம் வருமாறு:

மதுரை மாவட்டம் தோப்பூரில் உள்ள மிசரியோர் கூட்டுறவு நூற்பாலையில் ஏற்கெனவே 6,000 கதிர்கள் இயங்கி வருகின்றன. தற்போது மேலும் 6,000 கதிர்களைக் கொண்டு விரிவாக்கம் செய்ய தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

விரிவாக்கம் செய்ய அரசு ரூ. 112.50 இலட்சங்களும், நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் மூலம் ரூ.37.50 இலட்சங்களும் மிசரியோர் நூற்பாலைகளுக்குக் கிடைக்க இந்த அரசு ஆணை வகை செய்கிறது. இதனால் மொத்தம் 12,000 கதிர்கள் இயக்கும் நிலை உருவாக இருக்கிறது. இந்நூற்பாலையில் மேலும் ஆதிதிராவிடர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க தமிழக அரசு ரூ. 75 இலட்சம் அரசு மானியமாக வழங்கியுள்ளது. தாட்கோ நிறுவனம் மூலம் ரூபாய் 37.50 இலட்சமும், நிதிநிறுவனம் மூலம் ரூ.37.50 இலட்சமும் வழங்கியுள்ளது. ஆக மொத்தம் ரூ. 150 இலட்சம் தமிழக அரசு இந்தக் கூட்டுறவு நூற்பாலைக்கு வழங்கியுள்ளது.

விரிவாக்கத்தின் மூலம் இந்த நூற்பாலையில் மேலும் 180 ஆதிதிராவிடர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும். ஏற்கெனவே இந்த நூற்பாலையில் 225 ஆதிதிராவிடர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு பணி புரிந்துவருகின்றனர்.

## தமிழ் கற்க வாய்ப்பு

தமிழ் நீங்கலாக இதர மொழிகளின் மூலம் கல்விபயிலும் பள்ளி மாணவர்கள் தங்களது மொழியைத் தவிர தமிழ் மொழியைக் கூடுதலாகக் கற்க விரும்பினால், அவர்களுக்குத் தேவையான வசதிகளையும் சலுகைகளையும் தமிழ்நாடு அரசு அளிக்கிறது.

அந்த மாணவர்கள் பள்ளி நேரங்களைத் தவிர மற்ற சமயங்களில் தமிழைக் கற்றுக் கொள்ளலாம். இதற்காக மாணவர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது.

தமிழ் தவிர, தெலுங்கு, மலையாளம், கன்னடம், குஜராத்தி உருது, இந்தி ஆகிய மொழிகள் மூலம் கல்வி கற்கும் மாணவர்களுக்குரிய பாடத் திட்ட நூல்களை தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் தயாரித்து வெளியிடுகிறது.

## "பார்த்தோம் படித்தோம்"

புதிய அமைச்சரவைப் பதவி ஏற்பு விழா மற்றும் தேர்தல் சிறப்பிதழ் கண்டேன். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் வண்ண முகப்பு அழகோ அழகு. செய்திகளும், படங்களும் பாதுகாத்து வைக்க வேண்டிய பொக்கிஷம்.

—எஸ். குல்முகம்மது
சிதம்பரம்.

ரஹ்மானியா, இட்டச்சேரி; எஸ். பிரபாகரன், மேல்பாலானந்தல்; ஜி. டி. ராஜா-பிரபு, கிழப்பழுவூர்; கே. பாலசுப்பிரமணியன், செய்துங்கநல்லூர்; எம்.பாஸ்கரன், ஆவரங்குளம்; எல்.முத்து, ஊத்தங்கரை; பி. கோவிந்தசாமி, ஊத்தங்கரை;

சுவையான துணுக்குச் செய்திகளும், செய்தித்துறை அமைச்சர் அவர்களின் கட்டுரையும் அருமை.


—ப. முருகேசபாண்டியன்,
கரப்பாடி.

## பெண்களுக்கு இட ஒதுக்கீடு செயலாக்கம்

அரசு, அரசைச் சார்ந்த நிறுவனங்கள், உள்ளாட்சித்துறை ஆகியவற்றில் உள்ள பணிகளில் நேரடி நியமனத்திற்கு இனி ஏற்படும் காலியிடங்களில் 30 சதவீதம் பெண்களுக்கு ஒதுக்கப்படும் என மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். இத்திட்டத்தை அனைத்துத் துறைகளும் உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு அரசு ஆணையிட்டிருந்தது.

முதன்முதலாக சமூக நலத்துறையில் 20.2.89 அன்று 30 பதவிகளுக்குப் பணியாளர் தேர்வு நடைபெற்றது. 10 இளநிலை மறுவாழ்வு அலுவலர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இதில் முறைப்படி பெண்களுக்கு 30 சதவீதம் வழங்கப்பட்டு 9 பெண்கள் பணியில் சேர்க்கப்பட்டனர்.






### சோழனின் காதலி

ஆசிரியர் : ராஜகுரு

வெளியீடு: செல்லம் பதிப்பகம்,
4ஏ/4 தர்மகோயில்
தெரு,
திருவாரூர்-610 002.

விலை : ரூ. 10. பக்: 98

ராஜராஜன், பதியிலார்க்கு வீடும் நிலமும் வழங்கியதாகக் கூறும் திருவாலங்காட்டுச் செப்புப் பட்டயத்தை ஆதாரமாகக் கொண்டு 'சோழனின் காதலி' கற்பனையில் பிறந்திருக்கிறாள். இது, முதல் கதை.

படித்த இளைஞன் சத்தியன். வேலைக்காக அரசாங்கத்தை எதிர்பார்த்துச் சோம்பிக் கிடக்காமல் தன்னைப் போன்ற சிலரோடு டீ விற்கும் தொழில் செய்கிறான். அவன் அன்றாடம் சந்திக்கும் சம்பவங்களே இனிய விடியல்கள். இது இரண்டாவது கதை.

முதல் கதை வரலாற்றுக் கதை; இரண்டாவது சமூகக் கதை.

வரலாற்றுக் கதையில் அதற்கேற்ற கம்பீரமான உரையாடல்களும் சம்பவங்களும், சமூகக் கதையில் அதற்கேற்ற நடையும், உரையாடல்களும் சிறப்பாகக் கையாளப்பட்டுள்ளன.

இரண்டாவது கதையில் உறுத்தலின்றி மெலிதாகப் படிப்பினைகளைக் கூறி இருக்கும் விதம் பாராட்டுக்குரியது.

—என்.குமாரசாமி

### சீன எழுத்தாளர் லூசுன் சிறு கதைகள்

தமிழாக்கம்-கே.கணேஷ்

வெளியீடு-

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098

விலை : ரூ.18 – பக்கம் : 216

ஏறத்தாழ அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்ட சீனச்சிறுகதைத் தொகுப்பு நூல். சீன இலக்கியத்தின் முன்னோடியான லூசுன் எனும் புகழ்மிக்க எழுத்தாளரின் சுவையான ஒன்பது சிறுகதைகளைத் தன்னகத்தே கொண்டது.

இச்சிறுகதைகள் இலங்கைக் கவிஞராகிய கணேஷ் என்பவரால் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது நல்ல முறையில்.

இலங்கைத் தமிழரின் நாவில் நடமிடும் இனிய தமிழ்ச் சொற்கள் பலவாக விரவிக்கிடக்கின்றன, நூலெங்கும். அதனால் நடையழகு சிறக்கின்றது.

'மதுக்கடையில்' என்ற கதையில் குடிகாரரின் நிலையைக் குறிக்க வரும் உவமை நன்றாக உள்ளது.

தந்தையைக் காரணமின்றிக் கொன்ற அரசனைப் பழிவாங்குவதற்காகத் தயாரிக்கப்பட்ட வாளையும், அரசன் மரணத்தையும் குறிக்கும் கதை, 'பதப்படுத்திய வாள்'

அன்றைய கால கட்டத்தின் சீன நாடு பழக்க வழக்கங்கள் எண்ணஓட்டங்கள், செயல் முறைகள் நிறைந்த கதைத் தொகுப்பு.

—சிவஅரசி முத்துக்காளத்தி.

### விஞ்ஞான உலகில் சிறுவர்கள்

ஆசிரியர்: புலவர் அண்ணாமலை, பம்மி பதிப்பகம, வெளியீடு: 32, வெங்கடரங்கம் பிள்ளைத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600005.
விலை: 9.00 பக்கங்கள்: 96.

இன்றைய விஞ்ஞான வளர்ச்சியின் பலன்கள் அளவிடமுடியாதது. அவற்றைச் சின்னஞ்சிறு கதைகள் மூலம் சிறுவர்களுக்காக எளிய நடையில் கூறப்பட்டிருக்கிறது.

பனி மனிதன், இயந்திர மனிதன் விண்வெளிப்பயணம், தீயால் பாதிக்காத உடை, அதிசய உலகம் என்று பல்வேறு கருத்துக்கள் கதைகளில் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு கதையிலும் ஒரு புதிய கண்டுபிடிப்பு மையமாக வைத்துப் புனையப்பட்டிருக்கிறது.

இவற்றைப் படிக்கும் இளம் உள்ளங்களின் நினைவுகளில் இக்கதைகள் நிலையான இடம பிடித்துவிடும்.

—அ.மருதவிநாயகம்.

### குழந்தைகள் விரும்பும் நேரு காவியம்

ஆசிரியர்: துரை. மாலிறையன்
வெளியீடு: மலரொளி பதிப்பகம்
6, சாந்தி நகர், புதுவை
605 011.

விலை : ரூ. 26.' பக்: 352.

பண்டித ஜவகர்லால் நேருவின் வாழ்க்கை வரலாற்றினைக் கவிதை வடிவில் கூறும் நூல். நேருவின் பிறப்பு, வளர்ப்பு, அவர் ஆற்றிய நாட்டுத் தொண்டு, அவரது சிறப்பியல்புகள் முதலான பண்புகள் அழகிய கவிதை மலர்களாக மணக்கின்றன.

'நேரு திருமுகம் காண்கையிலே—
நிலவும் ஒளியில் குறையும் அம்மா!!
(பக்கம் 15)

என்று நேருவின் திருமுகத்தை வர்ணிக்கிறார் கவிஞர்.

காந்தி, நேரு சந்திப்பைப் பற்றிக் கூறுகையில்,

திருமறைக் காட்டில்
திருநா வரசை
ஞான சம்பந்தன் கண்டதுபோல்
பெருமனக் காந்தி
பிழையிலா நேரு

இருவர் சந்தித்துக்கொண்டனரே என்று அழகாகக் கூறுகிறார்(பக்95).


இப்படி நூல் முழுவதும் கவிஞரின் புலமை ஒளிவிடுகின்றது;

பக்கத்துக்குப் பக்கம் கண்கவர் படங்கள், நல்ல அச்சு அமைப்பு நூலுக்கு அணி சேர்க்கின்றன. கவிஞரின் உழைப்பினை இந்நூல் பறைசாற்றுகின்றது.

—பொ. மறைமலை

சிந்திக்காதபடி படித்தால் மனத்திற்குக் குழப்பம் தரும். படியாதபடி சிந்தித்தால் மனத்தின் சமநிலையைக் கெடுத்துவிடும்.

— சீனா



## மீன் உண்பதில் சாம்பியன்கள்!

ஜெர்மனியர்கள் மீன் உணவுமீது கொண்ட ஆர்வம் கடந்த 5 ஆண்டுகளில் 25 சதவீதம் அதிகரித்துள்ளது.

1986-ஆம் ஆண்டில் மட்டும் 8,06,000 டன் மீன், ஜெர்மனியாகளின் உணவுக்காகப் பயன்பட்டுள்ளது. ஹெர்ரிங்க் எனப்படும் மீன் வகையையே அவர்கள் அதிக அளவில் விரும்பிச் சாப்பிடுகின்றனர். அடுத்து சால்ட்வாட்டர் சாலமன் எனப்படும் மீனும், இறாலும் அவர்களால் பெரிதும் விரும்பிச் சாப்பிடப்படுவனவாகும். ஆம். மீன் உணவு உடலுக்கு நல்லதுதானே?

மனப் பண்பிற்கு அஸ்திவாரமாயுள்ளவை நான்கு :-

- ○ தேகத்திலே ஒரு தெம்பு
- ○ மனத்திலே ஒரு தைரியம்
- ○ உள்ளத்திலே ஓர் உணர்ச்சி
- ○ புத்தியில் ஒரு வேகம்

— பெர்ட்ரண்ட் ரஸ்ஸல்

## சிற்றெறும்பு

—முல்லை நிலவழகன்

சிற்றெறும்பு வரிசையாக
செல்லுகின்ற அழகைப்பார்-அது
கற்றுத்தரும் பாடமிது-நீ
கற்றும்கொள்ளும் நேரமிது!

சுறுசுறுப்பாய் வேலைக்கது
போகின்ற போக்கைப் பார்-அது
ஒருபோதும் சோம்பலாக
இருப்பதில்லை! எண்ணிப் பார்!


உண்ணும் உணவைஅது
தேடுகின்ற திறனைப் பார்-நமக்கு
என்றும்அது வேண்டுமென-அது
சேமிக்கின்ற முறையைப் பார்!

பிழைக்க வழியில்லை-என
என்றும் நீ! சொல்லாதே!-உலகில்
உழைத்தே நீ! உண்ண
எந்நாளும் தவறாதே!

செய்யும் தொழில் எதுவோ
அதுவேதான் தெய்வமென-நீயும்
மெய்யாய் உழைத்து விடு!
உயர்வு உனக்குண்டு!

## மங்காப் புகழ் பெற்ற மாமனிதர்

தெரிந்து கொள்ளுங்கள்




ஜான் பிட்ஸ்ஜெரால்ட் கென்னடி அமெரிக்காவின் புகழ் மிக்க ஜனாதிபதிகளுள் ஒருவர். ஜனாதிபதியாக அவர் பதவி வகித்தபோது, அவரது காந்தக் கவர்ச்சியால் உலகம் முழுமையுமே அவர்பால் ஈர்க்கப்பட்டது.

தமது 46-வது வயதில் அவர் அகால மரணமடைந்தபோது, அடுத்த ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற லிண்டன் ஜான்சன் பின் வருமாறு குறிப்பிட்டார்: "தமது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டோரிலேயே மிகவும் இளையவர் இவர்தாம். மூன்றே ஆண்டுகள்தாம் இவர் பதவி வகித்தார். ஆனால், அந்தக் குறுகிய காலத்திற்குள்ளாக, 'அமெரிக்கா என்றாலே இளமையும், செயல்துடிப்பும், உறுதியும் மிக்கதோர் நாடு' என்னும் அழியாத சித்திரத்தை உலகோர் மனங்களில் அவர் பதிய வைத்து விட்டார்... தமது வாழ்விலே அனைவருக்குமே அவர் ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார். நீதி, சமத்துவம், சகோதரத்துவம், செயலில் மேன்மை ஆகிய நெறிகளை நிலை நாட்டுவதற்கான நமது முயற்சிகளிலே கென்னடி என்றென்றும் வாழ்வார்".

கென்னடி படுகொலை செய்யப் பட்டு 25 ஆண்டுகள் கழிந்து விட்டன; எனினும், உலக மக்களிடம் அவர் காட்டிய மனிதாபிமானத்திற்காகவும், மனித சமூகத்தின் மேன்மையில் அவர் வைத்திருந்த அசைக்க முடியாத நம்பிக்கைக்காகவும், இன்னும் அவர் உலக மக்களால் நினைவு கூறப் படுகிறார்.

ஜான் பிட்ஸ்ஜெரால்ட் கென்னடி 1917 மே 29-ந் தேதி பிறந்தார். இரண்டாம் உலகப் பெரும்போரின் போது அமெரிக்கக் கடற்படையில் அவர் 'கமாண்டர்' ஆகப் பணியாற்றினார். அப்போது இரண்டு முறை அவர் வீரப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். நான்கு ஆண்டு 'காலச் சிறப்பான சேவைக்குப் பிற்கு, 1945-ம் ஆண்டில் அவர் கடற்படையிலிருந்து ஓய்வு பெற்றார். 1946-ல் அவர் நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார். 1952-ம் ஆண்டில் அவர் செனட் சபைக்குப் போட்டியிட்டார். தம்மை எதிர்த்துப் போட்டியிட்டவர்களுள், தமக்கு அடுத்தபடியாக அதிக வாக்குகளைப் பெற்றவரைக் காட்டிலும் 70,000 வாக்குகள் கூடுதலாகப் பெற்று கென்னடி வெற்றி பெற்றார். அதற்கு 6 ஆண்டுகளுக்குப் பிறகு, 870,000 வாக்குகள் என்னும் மகத்தான வித்தியாசத்தில் அவர் மறுமுறையும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவரது வாழ்வின் நோக்கம் என்னவாக இருந்தது என்பதை அவரது பின்வரும் பொன்மொழிகளே நன்றாக விளக்குகின்றன. "ஒரு மனிதன் இறக்கலாம்; நாடுகள் எழுச்சி பெறலாம் அல்லது வீழ்ச்சியுறலாம்; ஆனால் கருத்துக்கள் என்றென்றும் நீடித்து வாழ்கின்றன; கருத்துக்களுக்கு இறப்பே இல்லை". ✱



## முடித்துக் காட்ட எழு தம்பி!

— பல்லவன்

எத்தனை முறைநீ முயன்றாலும்
எத்தனை பாடு பட்டாலும்
நித்தம் முயற்சி செய்தாலும்
நிழலைக் கையால் எடுப்பாயோ?

நீல வானைத் தொட்டாலும்
நிலவில் கால்கள் பட்டாலும்
கோல நிலவைப் பூமிக்குக்
கொண்டு வந்து விடுவாயோ?

குடத்தால் முகந்து பார்த்தாலும்
குனிந்து நிமிர்ந்தே இறைத்தாலும்
கடலை வற்றச் செய்திடவே
கண்ணே! உன்னால் முடிந்திடுமோ?

முடியும் செயல்கள் பலவுண்டு!
முடியாச் செயல்கள் சிலவுண்டு!
முடியும் செயல்கள் தம்மையுமே
முடித்துக் காட்ட எழுவாயே!




# தமிழகம் வளம் நோக்கி

வனவளர்ப்பு, வனவிலங்குப் பாதுகாப்பு ஆகிய சேவைக்கெனத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் மறைந்த வனத்துறை அலுவலர் திரு வி. சிதம்பரம்.

அவரது சேவையைப் பாராட்டி 'சௌர்ய சக்கரம்' விருதை அவரது நினைவாக வழங்க மேதகு குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார். சத்தியமங்கலம் காட்டில் குண்டர் பள்ளம் பகுதியில் யானைகளை வேட்டையாடவும், சந்தனக் கட்டைகளைக் கடத்தவும் வந்த கும்பலை எதிர்த்து நடந்த மோதலில் சுட்டுக் கொல்லப்பட்டவர் சிதம்பரம்.

பல வன்க் குற்றங்களைக் கண்டுபிடிக்க உதவியதற்காக ஏற்கெனவே பல பரிசுகளை, திரு சிதம்பரம் பெற்றுள்ளார்.

இந்த ஆண்டின் லலித்கலா அகாதமி விருது பெறும் 10 கலைஞர்களுள் தமிழ் நாட்டைச் சேர்ந்த திரு முருகேசன் என்பவரும் ஒருவர். சிறந்த சிற்பக் கலைக்கான விருதுபெறும் இவருக்குப் பாராட்டுப் பதக்கமும் ரூ. 10,000 ரொக்கமும் பரிசாக வழங்கப்பட உள்ளது.

உடல் ஊனமுற்றவர்களை அதிக அளவில் பணிக்கு அமர்த்தும் அரசுத்துறை நிறுவனங்களுக்கான விருதிற்குத் தமிழ்நாடு மின்வாரியம், தென்னக ரயில்வே ஆகியவற்றின் சென்னைப் பிரிவுகள் தேர்வு பெற்றுள்ளன. பொதுத்துறை நிறுவனங்களுள் ஊட்டியிலுள்ள இந்துஸ்தான் புகைப்படச்சுருள் உற்பத்தி நிறுவனம் தேர்வு பெற்றுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள 3 துணிஆலைகள்அகில இந்திய விருதுகளைப் பெற்றுள்ளன. எட்டயபுரத்தில் உள்ள பாரதி கூட்டுறவுத் துணி ஆலை, ஆரல்வாய்மொழியில் உள்ள கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவுத் துணி ஆலை, நெல்லையில் உள்ள தென்னிந்தியக் கூட்டுறவுத் துணி ஆலைஆகிய இம்மூன்றும் 1987-88ல் அதிக அளவில் துணி உற்பத்தி செய்தவையாகும். இந்தியா முழுவதும் உள்ள மொத்தம் 163 ஆலைகளில் முதல் 3 பரிசும் தமிழக ஆலைகளுக்குக் கிடைத்துள்ளன.

அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் வா.செ. குழந்தைசாமி அவர்களுக்கு சாகித்திய அகாடமி விருது வழங்கப்பட்டுள்ளது. அவர் எழுதிய 'வாழும் வள்ளுவம்' என்ற தலைப்பிலான நூலுக்கு இவ்விருது கிடைத்துள்ளது. திருக்குறள் பற்றிய புதிய நோக்கு ஆராய்ச்சி நூலிது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

அதி / நவீன / பட்டு / வகைகள்



100% உன்னதமான பட்டு
உத்தரவாதமான சரிகை


உங்கள் உலகில் முக்கிய பங்கு பெறுவது வண்ணங்கள்... அவைகளின் அழகு ஜாலங்களை பொலிவும் நேர்த்தியும் மிக்க பட்டு வகைகளில் உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் — உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.


• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங் • பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA




தமிழரசு

Licence No. TN/MS(C)/PP-23



ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப்பின் தூதுக்குழுத் (இ.இ.சி) தலைவர் திரு ராபர்ட் அவுஸ்டான் அவர்கள் 22.2.89 அன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.



மாண்புமிகு முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 6.3 89 அன்று தலைமைச் செயலகத்தில் தொழிலதிபர்களைச் சந்தித்து உரையாடினார்.



# இந்த இதழில்...


| | |
|---|---|
| தொழில் வளர்ச்சிக்கு ... | 2 |
| அறநிலையப் பணிகள் சிறந்தோங்கிட ... | 5 |
| இலக்கிய விருந்து | 9 |
| உலக மகளிர் நாள் விழா | 12 |
| தமிழுக்கு மாட்சி (கவிதை) | 17 |
| திருநெல்வேலி மாவட்ட வளர்ச்சிப் பணிகள் | 18 |
| சன்னல் (சிறுகதை) | 20 |
| ஆயிரம் கலைஞர்கள் அறிமுகம் ஆனார்கள் | 24 |
| காகதீய மன்னர் கணபதி காசுகள் | 29 |
| யாழ்நூல் தந்த விபுலானந்தர் | 33 |
| ஊரின் பெயர் உருவானது எப்படி? | 35 |
| இந்தியாவில்... | 40 |
| அரசின் அறிவிப்புகள், ஆக்கப் பணிகள் | 41 |
| இருபது சதவிகித தனி இட ஒதுக்கீடு | 43 |
| செய்திகள்...செய்திகள்...செய்திகள்... | 46 |
| வெண்பாப் போட்டி அறிவிப்பு | 48 |



திருவள்ளுவர் ஆண்டு 2020
விபவ - பங்குனி 3
மலர் : 19 இதழ் : 18
16-3-1989

தமிழரசு



# தொழில் வளர்ச்சிக்கு மாநிலத் திட்டக்குழுவே

"அன்பார்ந்த அரசு தலைமைச் செயலாளர் அவர்களே, முதல் அமைச்சரின் ஆலோசகர் அவர்களே, தொழில் துறைச் செயலாளர் அவர்களே மற்றும் அனைத்துத் துறைச் [illegible] அவர்களே, அழைப்பினை ஏற்று வந்துள்ள அன்பிற்குரிய தொழில் அதிபர்களே, பல ஆண்டு இடைவெளிக்குப் பிறகு நாம் எல்லாம் சந்திக்கின்ற ஒரு வாய்ப்பு இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. [illegible]னும் சொல்ல வேண்டுமானால், நீங்கள் பல ஆண்டுகளுக்குப் பிறகு [illegible] முதலமைச்சரைச் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறீர்கள் என்று கருதுகிறேன்.

"நாம் இன்று இங்கே கூடியிருப்பது தமிழ்நாட்டினுடைய பொதுப் பிரச்சினையைக் குறித்து, குறிப்பாக தொழில் வள மேன்மையைக் குறித்து கலந்துரையாடுவதற்காக.

"கழகம் ஆட்சிப் பொறுப்பில் தமிழகத்தில் இருந்தபோது மத்திய அரசின் துணையோடு மாநில அரசாங்கத்தின் பொறுப்பிலே, பொதுத் துறை தனிப்பட்ட தொழில் அதிபர்களுடைய நல்ல ஊக்க உணர்வோடு தனியார் துறையும் சிறப்பாகவும், செயல்பட்டு-தொழில் வளம் சிறக்க நாம் அனைவரும் சேர்ந்து பணியாற்றியிருக்கிறோம். அந்தப் பணியைத் தொய்வில்லாமல் எதிர் காலத்திலே தொடர்ந்து நடத்த வேண்டும். அதற்கான அரிய கருத்துக்களை உங்களிடமிருந்து பெற வேண்டுமென்பதற்காகவே இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

"தமிழகத்தில் தொழில் வளர்ச்சியில் ஒருங்கிணைந்த கவனம் சில ஆண்டுகளாக, கடந்த காலத்திலே செலுத்தப்படவில்லை என்பதை ஏதோ அரசியல் நோக்கோடு அல்ல, ஒரு நாட்டினுடைய வேலை வாய்ப்பு, தொழில் வளம் போன்ற முக்கியப் பிரச்சினைகளை மனதிலே வைத்துக் குறிப்பிட விரும்புகிறேன்.

"தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மூலப் பொருள்கள் மற்றும் மின்சாரம், தேர்ந்த தொழில் அறிவு, ஒருமித்த தொழில் கொள்கை போய்விட்டது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். தொழில் முதலீடு செய்ததில் கூட சில தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் பல மாதங்களுக்குத் தொடர்ந்து இருக்கும் மின்வெட்டு போன்ற நிலை தொழில் வளர்ச்சிக்குப் பாதமாக இருந்திருக்கிறது.

"தொழிற்சாலைகளுக்காக உரிமங்கள், சரியான நேரத்தில் வழங்கப்படாமல் இருப்பதும், தொழில் வளர்ச்சி குன்றியமைக்கான காரணங்கள் என்பதைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

"பெரிய தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய நிதி ஆதாரங்களை ஐ.டி.பி.ஐ., ஐ.எப்.சி., ஐ.சி.எப்.சி., ஆகியன வழங்கி வருகின்றன. தமிழ்நாட்டிலே தமிழக அரசின் சார்பில் சிப்காட், டி.ஐ.ஐ.சி. போன்ற நிறுவனங்கள் நிதியுதவி செய்து வருகின்றன. இவைகளில் நிதிப் பற்றாக்குறை காரணமாக, பல கோடி ரூபாய் நிலுவையில் இருப்பதால் வேண்டிய நிதி ஆதாரங்களை வழங்க முடியவில்லை.

"மாநிலங்களுக்கான மத்திய அரசின் தொழில் முதலீடு, கடந்த சில ஆண்டுகளில் 13-14 வருடங்களில் குறிப்பிடத்தக்க வகையில் எதுவும் இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் அந்த மாநிலத்தின் முதலீடு இருந்தால் மட்டும் போதுமானது அல்ல. மத்திய அரசின் முதலீடும் தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. இதில் மத்திய அரசு சற்று மந்தமாக இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்மையில், கடந்த காலத்திலே கவர்னரின் ஆட்சியில் தொழில் வளர்ச்சிக்குச் சில சலுகைகள் தரப்பட்டு உள்ளன. அவற்றில் சில, நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன. சில நடைமுறைப்படுத்தப் படாமல் இருக்கின்றன. பெரிய தொழில்களைத் தொடங்குவோர்க்கு இன்றியமையாத வசதிகள் அனைத்தும் அளிக்கப்பட வேண்டும். தொழில் தொடங்குவதற்கான நிலம், மின்சாரம் மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைப் போக்கியே ஆக வேண்டும்.

**தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில், தமிழகத் தொழில்வள மேம்பாட்டுக்கான கருத்தரங்கு 6.3.89 அன்று நடைபெற்றது. இக்கருத்தரங்கில் முதல்வர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டு தொழிலதிபர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்தார். இக்கருத்தரங்கின் தொடக்கத்திலும் முடிவிலும் முதல்வர் கலைஞர் அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். தமிழகத்தில் தொழில் வளம் பெருகிட அரசின் ஊக்கமும் உற்சாகமும் உதவியும் அளிக்கப்படும் என்று இந்தக் கருத்தரங்கில் உறுதி அளித்த முதல்வர் அவர்கள், 'மாநிலத் திட்டக்குழு, தொழில் வளர்ச்சிக்குச் சிந்தனைக் களஞ்சியமாகச் செயல்படும்' என்று அறிவித்தார்கள்.**



# 'சிந்தனைக் களஞ்சியமாக' செயல்படும்

## முதல்வர் கலைஞர்

"நம்மிடமிருக்கக்கூடிய மூலப் பொருள்களைக் கொண்டு அதிக அளவில் வேலைவாய்ப்பு ஏற்படுத்துவதற்கான வசதிகளைப் பெருக்க வேண்டும். வெளிநாட்டிலிருந்து தொழில் நுட்ப அறிவைப் பெற்று, அதை நம் தொழில்களில் புகுத்த வேண்டும். ஏற்கெனவே உள்ள தொழில் நிறுவனங்களுக்கு அளிக்கப் பட்டுள்ள வசதிகளைக் கொண்டு அவற்றின் உற்பத்தி அளவைப் பெருக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மத்திய அரசின் தொழில் முதலீடு, நம் மாநிலத்தில் ஏற்படச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். நரிமணம், பரங்கிப் பேட்டை ஆகிய இடங்களில் எரிவாயு கிடைக்கிறது என்பது உற்சாகத்தைத் தருகிற செய்தி, அதனை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை விரைவுபடுத்த மத்திய அரசாங்கத்தோடு கலந்தாலோசிக்க வேண்டும். நெய்வேலியில் மின்சார உற்பத்தி அதிகரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

"நிலக்கரி கிடைப்பது அரிதாக இருப்பதால் இனிமேல் நிறுவப்பெறும் அனல் மின் நிலையங்களில் பழுப்பு நிலக்கரியைக் கொண்டு செயல்படச் செய்யலாமா என்பதற்கான ஆராய்ச்சி தேவைப்படுகிறது.

"பெரிய தொழில்கள், நடுத்தரத் தொழில்கள், பொதுத்துறை, கூட்டுறவுத் துறை, தனியார் துறை ஆகியவற்றின் நோக்கம் உற்பத்தியைப் பெருக்குவது, பொருளாதாரத்தை மேம்படுத்துவது, வேலை வாய்ப்பை அதிகரிப்பது, வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். அந்த நோக்கம் நிறைவேற அரசு ஆவன அனைத்தும் செய்யும். அதற்கு உங்களுடைய துணை தேவை. தமிழகத்தில் தொழில் அமைதி குலையாமல் பாதுகாக்க வேண்டும். தமிழகத்தில் தொழில் வளம் பெருக அரசின் ஊக்கமும், உற்சாகமும், உதவியும் தர, உறுதிமொழி கூறுகின்றேன். உங்களுடைய நல்ல கருத்துக்களை எடுத்துரைத்து, தமிழகம் மீண்டும் ஒளிமயமாவதற்கான வாய்ப்பினை வழங்குங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### கலந்துரையாடல் முடிவில்...

"பெருமதிப்பிற்குரிய தொழிலதிபர்களே, கடந்த இரண்டரை மணி நேரத்துக்கு மேலாக நல்ல கருத்துக்களைத் தொழில் வளர்ச்சி அடிப்படையிலே வழங்கியதற்கு அரசின் சார்பாக-இந்த மன்றத்தின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"இந்தக் கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்து கொள்ளும்போது அண்மையில் சட்டமன்றத்தில் நான் கூறிய சில வார்த்தைகளை மீண்டும் நினைவுபடுத்திக் கொள்கின்றேன்.

"சட்ட மன்றத்தில் சொன்னேன், முதல் தலைமுறையில் பல பெரியவர்களை இந்த மாமன்றத்தில் நான் சந்தித்திருக்கின்றேன். இப்போது அவர்களுடைய பிள்ளைகளையெல்லாம் இந்த மன்றத்திலே சந்திக்கிறேன் என்று குறிப்பிட்டேன்.

"அதேபோலத்தான் தொழிலதிபர்கள் கூட்டத்திலும் இரண்டாவது தலைமுறையைச் சந்திக்கின்றேன். இங்கே குறிப்பாக ஏ.எல்.முதலியாருடைய மகன், கிருஷ்ணா அவர்களுடைய மகன், தியாகராஜர் அவர்களுடைய மகன் கண்ணன், ஈஸ்வர அய்யரின் மகன் இப்படி இவர்களையெல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெறுவது தொழில்துறை வளத்தைக் காப்பாற்ற, அந்தத் தலைமுறையைத் தொடர்ந்து அடுத்த தலைமுறை தயாராகிக் கொண்டிருக்கின்றது. அந்தத் தலைமுறையோடு பழகிய நான், இந்தத் தலைமுறையோடும் பழகுகிற ஒரு வாய்ப்பைப் பெற்றிருப்பதிலே பெருமகிழ்ச்சி எனக்கு ஏற்படுகின்றது.

"நம்முடைய கிருஷ்ணா இங்கே பேசும்போது! 'எங்களுக்கு எந்தச் சலுகையும் வேண்டாம், மரியாதை கொடுத்தால் போதும்' என்று சொன்னார். அதற்குப் பஞ்சமில்லாத இடம் இது என்பதையும்-என்னுடைய இருதயம் அது என்பதையும் வெளிப்படையாக நான் உணர்த்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்றால் இன்றைக்கு உங்களுடைய முதலமைச்சராக இருக்கின்ற நான் ஒரு சாதாரணக் குடும்பத்திலே பிறந்தவன். சாதாரண மக்களுடைய நல்வாழ்வை அடிப்படையாக வைத்து என்னுடைய பொது வாழ்க்கையைத் தொடங்கியவன். அந்த ஒரு காரணத்தினாலேயே நான் அனைவரையும் மதித்துப் பழக்கப்பட்டவன். பிறரை மதித்து நட என்ற பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பள்ளியில்-கல்லூரியில் -பல்கலைக் கழகத்தில் பயின்றவன். எனவே, மரியாதைக்கு என்றைக்கும் பஞ்சம் இருக்காது என்பதை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

"அதற்குப் பின்னாலே இன்னொன்றையும் சொன்னார்கள். வெளி மாநிலங்களிலிருந்து தொழிலதிபர்களையெல்லாம் இங்கே அழைக்கின்ற அளவிற்கு அரசு நடந்து கொள்ள வேண்டும் என்று. வெளி மாநிலத் தொழிலதிபர்களை அழைக்கிறோமோ இல்லையோ இந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் வெளி மாநிலத்திற்குச் செல்லாமல் பார்த்துக் கொள்வதிலே நாங்கள் மிகுந்த அக்கறையுள்ளவர்கள் என்பதைச் சுட்டிக் காட்ட நான் விரும்புகிறேன்.

"நம்முடைய ஏ.எல்.முதலியாருடைய மகன் பேசும்போது சொன்னார் (Think Tank) என்று ஒன்றை உருவாக்க வேண்டும் என்று குறிப்

பிட்டார். இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழ்நாட்டிலேதான் கடந்த காலத்தில் தி.மு.கழக ஆட்சியில் மாநிலத் திட்டக்குழு என்று ஒன்று அமைக்கப்பட்டு. அந்தத் திட்டக்குழுவினுடைய தலைவராக முதலமைச்சர் அமைந்து, துணைத் தலைவராகவும் உறுப்பினர்களாகவும் மேதைகள் அமைக்கப்பட்டு அது நடந்தது. அந்தத் திட்டக்குழு அமைந்தபோது அப்பொழுது மத்தியிலே அமைச்சராக இருந்த சி.சுப்ரமணியம் அவர்கள் இந்தியாவிலேயே முதன்முதலாக இப்படியொரு முயற்சியைத் தமிழ்நாடு அரசு எடுத்திருப்பது பாராட்டத்தக்கது என்று புகழ்ந்துரைத்தார்.

அதற்குப் பிறகு அந்தத் திட்டக் குழு-76க்குப் பிறகு சரிவர நடைபெறவில்லை என்பதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம்.

Think Tank என்பது ஏற்கனவே கழக ஆட்சியில் அமைக்கப்பட்டது என்பதுதான். மாநிலத் திட்டக் குழுவே Think Tank ஆக சிந்தனைக் கூடமாகவோ, சிந்தனைக் களஞ்சியமாகவோ, சிந்தனை அரங்கமாகவோ செயல்பட்டு திட்டக் குழுவின் தலைவராக இங்கே அவர் சொன்ன யோசனைகளை நீங்கள் சொன்ன யோசனைகளாக ஏற்று -நானே அமர்ந்து அந்தக் குழுவைச் செயற்படுத்த விரும்புகின்றேன்.

"அதைப்போலவே, அதிலே யார் யார் இருக்க வேண்டும் என்பதில்- Senior Economist, Scientist, Agriculturist, Retired Finance officer, Professional Industrialist என்றெல்லாம் அந்த Advisory body-இப்படி ஆந்திராவிலே அதைப்போல கர்நாடகாவிலே இருப்பதையெல்லாம் சுட்டிக்காட்டினார்கள்.

"ஏற்கனவே எனக்கு ஆலோசகராக Retired finance Officer தான் இருக்கிறார் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். மற்றும் அதில் குறிப்பிட்டிருக்கின்ற பொருளாதார மேதைகள், விஞ்ஞான மேதைகள், வேளாண்மைத் துறை நிபுணர்கள், திட்டங்களைத் தயாரிக்கக் கூடிய நல்ல அறிஞர்கள் எல்லாம் இடம் பெறச் செய்வதற்கு அந்த Think Tank மாநிலத் திட்டக் குழு செயல்படும் என்ற உறுதியை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"இதுபோன்ற ஒவ்வொரு முறையும் அடிக்கடி தொழிலதிபர்களுடைய பிரச்சினைகளை எடுத்துக் கூறுகின்ற கூட்டங்களை இவ்வளவு பெரிய அளவில் கூட்ட இயலாது. அதைக் கருத்தில் கொண்டுதான் 1984ஆம் ஆண்டு - அன்றிருந்த அரசு, ஸ்டேட் லெவல் இண்டஸ்ட்ரியல் அட்வைசரி கமிட்டி என்ற ஒரு கமிட்டியை அமைத்தது. உங்களில்

## திட்டக் குழுவின் தலைவர் மாண்புமிகு முதல்வர்

மாநிலத் திட்டக்குழு குறித்துத் தமிழக அரசு மறுஆய்வு செய்து 7.3.89 அன்று ஆணை வெளியிட்டுள்ளது.

முன்பு 25.5.1971 ஆம் நாளிட்ட அரசு ஆணையில் முதலமைச்சர் அவர்களைத் தலைவராகவும், ஒரு துணைத்தலைவர், முழுநேர,பகுதி நேர உறுப்பினர்கள், செயலாளர் மற்றும் துணைச் செயலாளர் ஆகியோரைக் கொண்டும் மாநிலத் திட்டக் குழு அமைக்கப்பட்டது.

பின்னர் 21.8.81ஆம் நாளிட்ட அரசு ஆணையின்படி மாநில தலைமைச் செயலாளர் பதவி நிலையில் முழுநேரத் திட்டக்குழுத் தலைவர் பதவி உருவாக்கப்பட்டது.

1971ல் இருந்தபடி மாண்புமிகு முதல்வர் அவர்களே திட்டக்குழுவின் தலைவராக இருப்பார் என தற்போதைய (7-3-89) அரசு ஆணை தெரிவிக்கிறது.

பலபேருக்கு அது மறந்துபோய் இருக்கலாம். ஏனென்றால் அது அடிக்கடி கூடாத காரணத்தினால்! அதன் முதல் கூட்டம் 1987இல் நடந்தது. அப்படி நடைபெற்ற போது தனித்தனியாக ஒவ்வொரு துறைக்கும் இண்டஸ்ட்ரியல் பாலிசி என்பதற்கு முதல்வர் தலைமையிலே ஒரு குழுவும், இன்சினியரிங் இண்டஸ்ட்ரியல் என்ற துறைக்கு ஒரு குழுவும், ஆட்டோமொபைல்ஸ் என்ற துறைக்கு ஒரு குழுவும்,எலக்ட்ரானிக் இண்டஸ்ட்ரிஸ் என்ற துறைக்கு ஒரு குழுவுமாக அன்றைக்கு அமைக்கப்பட்டது. ஆனால் இதுவரையில் அந்தக் குழுக்கள் கூடினதாகவும், செயல்பட்டதாகவும் தெரியவில்லை.

"நல்ல எண்ணத்தோடு அன்றைக்கு ஒரு கருத்து விதைக்கப்பட்டது. ஆனால் அது முளைக்கவில்லை. இப்பொழுது நல்ல உரமிட்டு அந்த விதை முளைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இதுபோன்ற குழுக்கள் மீண்டும் அமைக்கப்படும். அந்தக் குழுக்களில் யார் யார் இருக்க வேண்டும் என்பதைத் தொழிலதிபர்களாகிய நீங்கள் அரசுக்கு எழுதி, ஒரு ஐந்து பேர் இருக்கக் கூடிய குழுவுக்கு எட்டுப் பேரோ, ஏழு பேரோ எழுதி அனுப்பினால் 5 பேரைக் கொண்டு அந்தக் குழுக்களை அமைக்கலாம். இப்படிக் குழுக்களை அமைக்கும் நேரத்தில் அந்தத் துறை பற்றிய பிரச்சினைகளை அந்தக் குழுக்கள் அரசிடம் நேரடியாகச் சந்தித்து மனம்விட்டுக் கலந்து பேசி தீர்த்துக் கொள்ள ஏதுவாக இருக்கும் என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

"பல கருத்துக்கள் பல்வேறு கோணங்களில் இங்கே கூறப்பட்டிருக்கின்றன. அரசு நன்றாகச் செயல்பட வேண்டும். தொழில் துறையிலே என்பது போன்ற கருத்துக்கள் மாத்திரம் அல்லாமல், ஒவ்வொரு தொழில் துறை பற்றியும் இங்கே எடுத்துக்கூறிய கருத்துக்கள் அனைத்தும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கின்றது. பலரின் கருத்துக்கள் அவர்களின் பேச்சுக்களிடையே எங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. வழங்கப்படாத பேச்சுக்களும் அரசு அதிகாரிகளால் குறிப்பெடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்த்து, வருகின்ற வரவு செலவுத் திட்டத்தில் எந்தெந்தக் கருத்துக்களை எடுத்துச் செயல்படுத்தலாம் என்பதை அறிவிப்போம்.

"நானே தொழில் துறைக்கு அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கின்ற காரணத்தால், எல்லாவற்றையும் வரவு செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்காமல், தொழில்துறை மானியம் வருகிற நேரத்திலும் அவைகளெல்லாம் தொகுத்து அளிக்கப்படும் என்று கூறிக் கொண்டு எல்லாவற்றையும் செய்துவிட்டால் பிறகு அடிக்கடி குழுக்கள் கூடுவதற்குத் தேவையில்லாமல் போய் விடும், அந்தத் தேவையையும் நிறைவு செய்யக் கூடிய அளவுக்குக் கொஞ்சநஞ்சம் பாக்கி வைத்து உங்களை அடிக்கடி சந்திக்கின்ற அந்த வாய்ப்பைப் பெறுவேன் என்று கூறி, எனது அழைப்பை ஏற்று வருகை தந்த உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்."





# அறநிலையப் பணிகள்

## சிறந்தோங்கிட ஆலோசனைக்குழு

"அரசின் சார்பில் விடுத்த அழைப்பினை ஏற்று வருகை தந்துள்ள பெருமதிப்பிற்குரிய மரியாதைக்குரிய சமயச் சான்றோர்களே, உங்கள் அனைவரையும் இதயமார வரவேற்பதில்பெருமை கொள்கிறேன்.

இந்த அரசு அமைவதற்கு முன்பு தேர்தல் நேரத்திலேயே அறநிலையத் துறை தொடர்பாக மேலும் செம்மைப்படுத்தப்பட வேண்டிய பல செயல்பாடுகள் குறித்து இந்த அரசு அமையுமேயானால் -சமயச் சான்றோர்களை அழைத்து அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டு அதன் அடிப்படையிலே முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன் தொடர்பாகத்தான் இந்தக் கருத்துரை வழங்குகின்ற கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு அழைப்பினையேற்று நீங்களும் வருகை தந்திருக்கிறீர்கள்,

குறிப்பாக இந்த அரசு இது போன்ற அறநிலையச் செயல்பாடுகளில் எப்படியிருக்குமோ என்ற ஐயப்பாடு இன்று நேற்றல்ல, நீண்டகாலமாகவே எழுப்பப்பெற்று, அதற்குக் கடந்த காலத்தில் 67 முதல் 76 வரை நடைபெற்ற கழக அரசு தன்னுடைய செயல் மூலம் விடையை அளித்திருக்கிறது.

என்னைப் பொறுத்தவரையில் நான் பிறந்த ஊரே ஒரு பெரிய திருத்தலம். நால்வரால் பாடப் பெற்ற திருக்கோளிலியம்பதி எனப் படும் திருக்குவளை என்ற கிராமம் தான் நான் பிறந்த ஊர். இன்னும் சொல்லப் போனால் -மிகப் பழுத்த ஆத்திகரான முத்துவேலருக்கு நான் மகனாகப் பிறந்தேன்.

சின்னஞ்சிறு வயதிலேயே அந்தச் சிற்றூரில் கோயிலை நம்பி வாழ்கின்ற கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை நான் மிக நன்றாக உணர்வேன்.

பெரியார் அவர்களுடைய சுயமரியாதைக் கருத்துகளால் நான் ஈர்க்கப்பட்டு இளம் வயதிலேயே துடிப்போடு அவைகளைப் பரப்புகின்ற நேரத்திலும்கூட ஆலயங்களை நம்பி வாழுகின்ற கிராமாந்திர ஊழியர்கள் பற்றிய அனுதாப உணர்ச்சி என் உள்ளத்தில் இடம் பெற்றே இருந்தது.

அந்தக் காலத்தில் கோயில்களை ஏராளமாகக் கட்டியது பக்தியின் அடிப்படையிலே மாத்திரமல்லாமல், சிற்பிகள், கொத்தர்கள், கருமான்கள் போன்ற தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கவும் என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது.

கடவுள் கொள்கையில் தந்தை பெரியார் மிகவும் தீவிரவாதி!

**இந்து அறநிலையத் துறையைச் செம்மைப்படுத்தவும் அனைத்து திருக்கோயில்களின் பணிகளும் செவ்வனே நடைபெறவும் சமயச் சான்றோர்களுடன் கலந்து பேசித் தக்க முடிவுகள் எடுக்க நமது அரசு முடிவு செய்தது. அதன் அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் சமயச் சான்றோர்கள் கருத்துரை வழங்குகின்ற ஆலோசனைக் கூட்டம் 10.3.89 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை இங்கே இடம் பெறுகிறது.**

''உண்டென்பார் சிலர். இல்லை என்பார் சிலர், எனக்கில்லை கடவுள் கவலை'' என்றவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற திருமூலர் கொள்கையே தி.மு கழகத்தின் கடவுள்கொள்கை என்று அறிவித்தவர் பேரறிஞர் அண்ணா.

''கோயில் கூடாது என்பதல்ல, கோயில் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக்கூடாது'' என்பது நாம் ஏற்றுக் கொண்ட கொள்கை- இந்த வாசகத்தை நான் இன்றல்ல- இந்த நிகழ்ச்சிக்காக அல்ல-ஏற்கெனவே பல நேரங்களில் குறிப்பிட்டிருக்கிறேன்.

நான் முன்பு முதலமைச்சர் பொறுப்பில் இருந்த அந்தக் காலகட்டத்தில் ஆத்திகப்பெரியோர்கள் கூடிய - தெய்வீகப் பேரவை. சார்பில் நடத்தப்பட்ட ஒரு விழாவில் பேசிய மடாதிபதி,

''கருணாநிதி கடவுளை ஏற்றுக் கொள்ளமாட்டார் என்றாலும் கடவுள் காரியங்களுக்கு அவர்ஆட்சி குறுக்கே நிற்கவில்லை'' என்றார்.

அதற்குப் பதிலளிக்கும்போது நான் ''கடவுளை நாம் ஏற்றுக் கொள்வது பெரிதல்ல. கடவுள் நம்மை ஏற்றுக் கொள்கிற அளவிற்கு நாம் நடக்கிறோமா என்பதுதான் முக்கியம்'' என்று சுட்டிக் காட்டினேன்.

''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்'' என்ற கவி தாகூரின் தத்துவங்களைத்தான் அறிஞர் அண்ணாவும் -அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட கழக அரசும் செயல்படுத்தினர் என்பது நன்றாகத் தெரியும்.


''வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்'' என்ற வடலூர் வள்ளலாரின் கருத்தாழம் மிக்க வரிகளை மறவாமல் கடவுள் பணி என்ன என்பதைத் தெளிவாக உணர்ந்து கழக அரசு காரியமாற்றி இருக்கிறது.

1967-ஆம்ஆண்டு நடைபெற்ற தேர்தலில் செய்யப்பட்டபிரச்சாரமே ''கழகம் வென்றால் தேவாலயங்கள் இடிக்கப்படும். தேர்த் திருவிழா நின்றுவிடும், தெப்ப உற்சவம் தடுக்கப்படும். மதவாதிகள் மனம் புண்படுத்தப்படும். ஆண்டவன் திருஉலா இருக்காது. ஆறு கால பூஜை நடக்காது, ஆடிக் கிருத்திகை இல்லை, மாசி மகம் இல்லை, திருமஞ்சனம் இல்லை; பங்குனி உத்திரமில்லை, கார்த்திகை தீபமில்லை, கருமாரியம்மன் விழாக்கூட இல்லை'' என்றெல்லாம் பேசினார்கள்.

ஆனால், ஒன்பதாண்டுக் கால ஆட்சியிலே அன்றைக்குச் செய்யப்பட்ட சாதனைகளின் பட்டியலைப் பார்த்தால்—

எழுநூறு ஆண்டுகளுக்கு முன்பு மன்னர்கள் காலத்தில் எழுப்பப் பெற்ற ஆலயம் திருநெல்வேலியில் உள்ள நெல்லையப்பர் கோயில்- அந்தக் கோயிலை எழுநூறு ஆண்டுகளுக்குப் பிறகு அந்த ஆலயத்தின் பல கோபுரங்கள் பழுது பார்க்கப்பட்டு-புதுப்பிக்கப்பட்டு -திருப்பணி நிறைவேறி குடமுழுக்கு நடத்தப்பட்டது கழக ஆட்சியிலே தான்! அதற்கான செலவு அப்போதே ஏழு இலட்ச ரூபாய்.

சென்னையில் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் திருப்பணி நடந்து 1975-ஆம்ஆண்டு மார்ச்சுத் திங்களில்தான் குடமுழுக்கு நடைபெற்றது.



பேரூர் பட்டிப் பெருமாள் கோயில் 1975ல் திருப்பணி முடிந்து 1976 பிப்ரவரியிலே குடமுழுக்கு நடைபெற்றது.

சென்னை வடபழனி ஆண்டவர் கோயில் குடமுழுக்கு 1975ஆம் ஆண்டு நடைபெற்றது.

பழனி தண்டாயுதபாணி கோயில் விமானத்துக்குத் தங்கத் தகடுகள் போட்டு நாற்பது இலட்ச ரூபாய் செலவில் குடமுழுக்கு 1975ஆம் ஆண்டு நடைபெற்றது.

தஞ்சை மாவட்டம் சுவாமிமலைக் கோயில் குடமுழுக்கு அப்போது நடைபெற்றது.

கொடுமுடி மகுடேஸ்வரசாமி கோயில் குடமுழுக்கு-திருவண்ணாமலை அருணாசலசாமி கோயில் குடமுழுக்கு - இராமேஸ்வரம் ராமனாதஸ்வாமி கோயில் குடமுழுக்கு- திருவில்லிப்புத்தூர் ஆண்டாள் கோயில் திருப்பணி தொடங்கப் பட்டது; பழனிக்கோயில் மலையினை விரிவுபடுத்தும் திருப்பணி வேலை 105 இலட்ச ரூபாய் செலவில் நடைபெற்றது.


நெல்லையில் கிருஷ்ணாபுரம் கிருஷ்ணன் கோயில் திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருந்த போது கழக ஆட்சி கலைக்கப்பட்டது. நெல்லையப்பர் கோயில் கலைக்கூடம் அமைக்கும் அந்த வேலையை நானும் அன்றைய அறநிலையத்துறை அமைச்சரும் தொடங்கி வைத்தோம்.

சங்கரன் கோயில் ஆலயத் திருப்பணி அப்போது தொடங்கப்பட்டது திருவைகுண்டம் கள்ளபிரான் கோயில் திருப்பணி தொடங்கப்பட்டது.

ஆழ்வார் திருநகர் வடுலூர் கோதண்டராமசாமி கோயில்-திண்டுக்கல் காளகத்தீஸ்வரர் கோயில்- தஞ்சை மாவட்டம் பருத்தியப்பர் கோயில்-பந்தணை நல்லூர், திருமுல்லைவாயில், மதுரை கூடலழகர் கோயில், சோளிங்கர், விருத்தாசலம் விருத்தகிரீஸ்வரர் கோயில், சிதம்பரம் நடராஜர் கோயில், திருமுஷ்ணம்கோயில், திருச்செங்கோ அர்த்தநாரீஸ்வரர் கோயில், வ சென்னை பாலசுப்பிரமணிய கோயில், இடும்பாவனம், தாராபுரம், மூலனூர், வஞ்சியம்மன் கோயில், அவிநாசி கோயில், காரமடை ரங்கநாதர் கோயில், அய்யம பாளையம் வாழைத் தோட்டத்து அம்மன் கோயில் ஆகியவைகளில் திருப்பணி முடிந்து குடமுழுக்கு நடைபெற்றும், சிலவற்றில் திருப்பணி நடைபெற்றுக் கொண்டும் கழக ஆட்சி கலைக்கப்பட்டபோது இருந்தது.

அது மாத்திரமல்ல, இன்னும் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட கோயில்களில் திருப்பணி முடிந்து குடமுழுக்கு நடைபெற்றது. அவைகள் எல்லாம் சற்று அளவில் சிறிய கோயில்கள் என்ற பட்டியலில் உள்ளவை.

திருத்தணி, பழமுதிர்சோலை, சென்னிமலை ஆகிய மலைக்கோயில்களுக்குச் சிரமமின்றிச் செல்வதற்கு ஒழுங்கான சாலை அமைக்கப்பட்டதும் கழக ஆட்சியிலேதான்.



1270 74

# அறநிலையத் துறை ஆலோசனைக் குழு

இந்து அறநிலையத்துறை ஆக்கப் பணி ஆலோசனைக் குழுவினை, தமிழக அரசு அமைத்துள்ளது. அதன் விவரம் வருமாறு:

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள்

முன்னாள் நீதிபதி கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள்,

திருவரங்கம் திருமலை அய்யங்கார் அவர்கள்,

காஞ்சி மடத்தைச் சேர்ந்த ஆஸ்தானப் புலவர் செந்தில்நாதன் அவர்கள்,

திருமதி ராதா தியாகராஜன் அவர்கள், —ஆகிய ஐவர், இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

இந்தக் குழுவின் அமைப்பாளராக இந்தத் துறையின் செயலாளர் செயல்படுவார்.



இந்தக்குழு மூன்று மாதக் காலத்திற்குள்ளாக அறிக்கையைத் தர, அந்த அறிக்கையின் அடிப்படையில், அரசு அவர்களோடு கலந்து ஆலோசித்து, இந்து அறநிலையத் துறையின் ஆக்கப் பணிகள் எவ்வாறு செம்மையாக நடைபெற வேண்டும், ஆலயங்கள் எவ்வாறு நெறிமுறையோடு நடைபெற வேண்டும் என்பதற்கான செயல் வடிவத்தை தரும்.

பழனியிலே திருப்பணி தொடக்க விழாவும், அந்த ஆலயத்தின் சார்பில் அமைக்கப்பட்ட செவிடர், ஊமையர் பள்ளிகள் தொடக்க விழாவும் நடைபெற்று நானும் அமைச்சர்களும் அதிலே கலந்து கொண்டோம்.

திருப்பணிகள், குடமுழுக்குகள் மாத்திரமல்ல, ஏழை எளிய மக்கள் குறைந்த செலவில் திருமணங்கள் நடத்திக்கொள்ள எண்பது திருமண மண்டபங்கள் கழக ஆட்சி கலைக்கப்பட்டபோது கட்டி முடிக்கப்பட்டன. மேலும் கட்டிமுடிக்கப்படும் தறுவாயில் 120 திருமண மண்டபங்களும் இருந்தன.

இவை மாத்திரமல்ல—

எல்லாக் கோயில்களிலும் தமிழில் அர்ச்சனை—

தகுதி படைத்த அனைத்து வகுப்பாரும் அர்ச்சகராக வர வேண்டுமென்று சட்டம் கொண்டுவரப்பட்டது!

கோயில் அறங்காவல் குழுவில் கட்டாயம் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் இடம் பெற வேண்டுமென்று சட்டத்திலே வகைசெய்து இரண்டாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் அப்படிப்பட்ட அறங்காவல் குழுக்களிலே இடம் பெற்றார்கள்.

சட்ட மன்ற மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையை ஏற்று, கோயில்களில் வி.ஐ.பிக்களுக்குத் தரப்படும் பரிவட்டம், பூர்ணகும்பம் போன்ற தனி மரியாதைகள் கழக ஆட்சியில் நிறுத்தப்பட்டன.

ஆலயப் பணிகள் புரிந்த ஐம்பதாயிரம் ஊழியர்களுக்கு முதற்கட்டமாக வேலையிலே நிரந்தரமாக்க வாய்ப்பு-கோயில் வருவாய்க்கு ஏற்ற ஊதிய உயர்வு-குடும்பப் பாதுகாப்புத் திட்டம் -அரசு ஊழியர்களுக்கு இருந்ததைப் போல ஆலய ஊழியர்களுக்கும் அன்றைக்கு வழங்கப்பட்டது. ஆலய ஊழியர்களுக்குத் திருமணக் கடன் வழங்கப்பட்டது.

அதற்கு முன்பிருந்த ஆட்சிக் காலத்தில் அறநிலையத் துறை மானியத்தைச் சட்ட மன்றத்தில் விவாதிக்கத் தனி விவாதம் என்று இருந்ததில்லை. ''பல்வகை'' Miscellaneous என்கிற சில்லறைத் துறையாக -ஏதாவது ஒரு மானியத்தோடு சேர்ந்து அறநிலையத்துறை மானியம் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

1970ஆம் ஆண்டு கழக ஆட்சியில் அறநிலையத் துறைக்குத்தனி அமைச்சரும், தனி வரவு-செலவுத் திட்டமும், பேரவையிலே தனி விவாதமும் என்ற நிலை உருவாக்கப்பட்டது அனைவருக்கும் தெரியும்.

1967-ஆம் ஆண்டு, 9,600 அறநிலையங்கள் மட்டுமே இந்தத் துறையின் பொறுப்பிலே இருந்தன. துறைக்குக் கட்டுப்படாமல் பல்லாயிரக் கணக்கான கோயில்களும் அவற்றுக்குச் சொந்தமான லட்சக் கணக்கான ஏக்கர் நிலங்களும் தனியார் ஆதிக்கத்தில்இருப்பது தெரிந்து அவைகளைக் கண்டுபிடிக்கக் கழக ஆட்சியில் ஒரு தனி அலுவலர் ஆய்வு நடத்த நியமிக்கப்பட்டார். அவர் நடத்திய ஆய்வுக்குப் பிறகு - கழக ஆட்சியில் - 41,306 அறநிலையங்களும், அவைகளுக்குச் சொந்தமான 2,01,343 ஏக்கர் நிலமும் தனியார் ஆதிக்கத்தில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவைகளில் சுமார் 25,000 அறநிலையங்களும், சுமார் 65,000 ஏக்கர் நிலமும் அறநிலையத் துறையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

1967-இல் தமிழ்நாட்டுக் கோயில்களின் மொத்த வருமானம் ஆண்டுக்கு 3 கோடி ரூபாய் அளவிற்கு இருந்தது.

1975-76இல் அந்த வருமானம் 12 கோடி ரூபாயாக உயர்ந்தது.

இப்படி ஆலயங்களுடைய நிர்வாகம், பூஜைகள், விழாக்கள் ஆகியவைகளுக்கு எந்தவிதமான ஒரு ஊனமும் ஏற்படாத வகையில் கழக ஆட்சிக் காலத்தில் அன்றைக்கும் நடந்து கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கும் அப்படி நடந்து கொள்வதில் நாங்கள் முனைப்பாகச் செயல்படவே விரும்புகிறோம். இதில் இன்னமும் இதை எப்படிச் செம்மைப்படுத்தலாம் -எந்தெந்த முறையில் நிர்வாக அமைப்பில் காரியங்கள் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்ற அரியகருத்துக்களை உங்களிடமிருந்து பெற வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வருகைதந்துள்ள சமயச் சான்றோர்கள், ஆன்மீகப் பற்றாளர்கள்

47ஆம் பக்கம் பார்க்க





# மாதரும் மலர்ப் பொய்கையும்

இலக்கியங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டுவன; காலக் கண்ணாடியாக விளங்குவன. அதுமட்டுமல்ல, படிக்கப் படிக்கச் சுவை தருவன.

இலக்கியங்களின் நயங்களை அவ்வப்போது தமிழறிஞர்கள் தமிழ்ப்பெருமக்களுக்கு விருந்தாக வழங்கியிருக்கிறார்கள். அத்தகைய இலக்கிய விருந்து தமிழரசு வாசகர்களுக்குத் தொடர்ந்து கிடைக்கும். சுவைத்து மகிழலாம்.

மலர் நிறைந்த பொய்கையும், மீன்நிறைந்த வானமும் என்றென்றும் கவிஞர் மனத்தைக் கவரும் இயற்கைக் காட்சிகளாகும். காலையிலே தோன்றும் கதிரவனொளியால் களித்து விரியும் கமல மலரைக் காணும்பொழுது கவிஞரின் உள்ளமும் மலர்வதாகும். இத்தகைய இயற்கை அழகினை மாந்தி இன்புற்ற கவிஞர் தரும் காட்சிகளைப் பார்ப்போம்.

நீலத்திரை விரித்த வானத்திலே, கதிரவன் ஒளி வீசி எழுந்தான். கண்களைக் கவரும் அழகு வாய்ந்த கமல மலர்களில் கள்ளுண்டு களிக்கப் போந்த கருவண்டுகள் பொய்கையின்மீது சுற்றிச் சுழன்று இன்னிசை பாடின. பகலவன் ஒளியால் இதழ் விரித்து இலங்கிய செங்கமல மலரில் வெள்ளை அன்னம் ஒன்று இனிது அமர்ந்திருந்தது. காலைப் பொழுதில் வீசிய இளங்காற்றின் இனிமையை நுகர்ந்து அன்னம் தென்னிய திரைகள் காலாட்டக் கமலப் பள்ளியில் இனிது துயின்றது. இவ்வாறு பூஞ்சேக்கையில் கண்வளர்ந்த அன்னத்தின் அழகினை,

''தாய்தன் கையின் மெல்லத்
தண்னென் குறங்கி னெறிய
வாய்பொன் அமளித் துஞ்சும்
மணியார் குழவி போலத்
தோயும் திரைகள் அலைப்பத்
தோடார் கமலப் பள்ளி
மேய வகையில் துஞ்சும்
வெள்ளை அன்னம் காண்மின்''

என்று பாடினார் சிந்தாமணி ஆசிரியர்.

அன்பார்ந்த குழவியை அழகிய மஞ்சத்திலமைத்து அதன் மேனியைக் கைகளால் தடவித் துயில்விக்கும் அன்னை போல் ஈரம் வாய்ந்த பொய்கை, கமலப் பள்ளியில் அமர்ந்த அன்னத்தைத் தன் அலைக்கைகளால் தட்டித் துயில்வித்ததென்று கவி அமைத்துள்ள உவமை சால அழகியதாகும். தண்மைவாய்ந்த பொய்கை, தலையாய அன்பு வாய்ந்த அன்னையை ஒத்தது. மெல்லிய திரைகள் அன்னையின் மெல்லியகரங்களை ஒத்தன. அத்திரைகள் தோய்தலால் அன்னம் அடைந்த இன்பம், அன்னையின் கை தோய்தலால் அருங்குழவி யடையும் இன்பத்தை நிகர்த்தது. அன்னம் துயிலுதற் கமைந்த நறுமணங்கமழும் கமலப் பள்ளி மெல்லிய வெண்பட்டு விரித்த விழுமிய மஞ்சம் போன்றது என்று கவிஞர் எழுதி யமைத்த ஓவியம் கற்போர் மனத்தைக் கவர்வ தாகும்.

இத்தகைய பொய்கையில் நீலத் துகிலுடுத்த ஒரு மங்கை நீராடச் சென்றாள். அவ்வழகிய ஆடையில் குயிற்றிய செம்மை சான்ற மணிகளிலே கதிரவன் ஒளி வீசியபொழுது அம்மணிகளினின்று எழுந்த நிழற் சுடர்கள் பொய்கையின்மீது விழுந்து நெருங்கிப் பூத்த செந்தாமரையை நிகர்த்தன. அச்சுடர்களைச் செய்ய மலரிருந்து கண்ட மட அன்னம் ஒன்று விரைந்தோடிச் சென்று ஆர்வத்தாற் கவ்விற்று. மணிகளின் நிழலாகிய சுடர்கள் வாயில் அகப்படாமையால் தன் மடமையை நினைந்து நாணிய அன்னம், வந்த வழியே வெட்

—டாக்டர் ரா. பீ. சேதுப்பிள்ளை

மூற்று விரைந்து சென்றது. இத்தகைய இனிய இயற்கைக் காட்சியை,

''நீலத் துகிற் கிடந்த
நிழலார் தழலம் மணிகள்
கோலச் சுடர்விட் டுமிழக்
குமரி அன்னம் குறுகிச்
''சால நெருங்கிப் பூத்த
தடந்தா மரைப்பூ வென்ன
வாவிச் சுடர்கள் கவ்வ
அழுங்கும் வண்ணம் காண்மின்''

என்று கவிஞர் நயம்படப் பாடினார்.

நீலத் துகிலின் இடையே இலங்கிய செம்மணிகள் பசுமையான தாமரை இலைகளின் நடுவே விளங்கிய மலர்போல் நுகழ்ந்தன. நீராடப் போந்த மங்கையின் நீலப்புடைவையில் செம்மணிகள் நெருக்கமாகப் பதிந்திருந்தமையால், கதிரவன் ஒளியில் அவற்றின் நிழல்கள் நீர்ப்பரப்பில் நெருங்கி வீழ்ந்து சால நெருங்கிப் பூத்த செந்தாமரையை நிகர்த்தன. நாள்தோறும் நற்றாமரைக் குளத்துவாழ்ந்து, செங்கமல மலர்களைச் செவ்வையாக அறிந்திருந்த அன்னமே, செம்மணியின் சுடர்களைச் செந்தாமரை என்று மயங்கிற்றென்றால், அம்மணிகளின் செம்மை சான்ற ஒளி, சொல்லாமலே விளங்குமன்றோ? அச்சுடர்களைத் தாமரை என்று கருதி அன்னம் விரைந்து சென்று கவ்விய ஆர்வமும், அச்சுடர்கள், வாயிலகப் படாமையால் அழுங்கிய தோற்றமும் நகைச் சுவை பயப்பனவாகும். ஆகவே, மங்கை புனைந்திருந்த மணியாடையின் சிறப்பையும், அம்மணிகள் கதிரவன் ஒளியால் சுடர் உமிழ்ந்த செம்மையையும், சிந்தாமணிக் கவிஞர் அழகுற உணர்த்துப் போந்தார்.

மலர்ப் பொய்கையின் அழகையும் மெல்லிய பூங் காற்றின் இனிமையையும் நுகர்ந்து, நெடுநேரம், மங்கை நீராடுவாளாயினாள்; பொய்கையிலே இயற்கை இன்பம் நுகர்ந்த நிலையில் வீட்டையும் மறந்தாள்; தன்னோடு போந்த பஞ்சரக் கிளியின் பசியையும் மறந்தாள். இவ்வாறு தன்னையும் மறந்து தாமரைத் தடாகத்தில் விளையாடிக் கொண்டிருந்த மங்கையைக் கரையேற்றுதற்கு ஒரு சூழ்ச்சி செய்தது அவ்விளங் கிளி. தன்னைக் காதலித்து வளர்த்த தலைவியை நோக்கி, 'பாம்பு, பாம்பு' என்று பதறிக் குளறிக் கூறிற்று. 'பாம்பு' என்ற சொற்கேட்ட மங்கை மனம் பதைத்துக் காதில் அணிந்த தோடு கழல, விரைந்தோடிக் கரை சேர்ந்தாள். இந் நிகழ்ச்சியை ஒரு சொல்லோவியமாக எழுதி அமைத்தார் சிந்தாமணிக் கவிஞர்.

"தீம்பாற் பசியி னிருந்த
செவ்வாய்ச் சிறுபைங் கிளிதன்
ஓம்பு தாய்நீர் குடைய
ஒழிக்கும் வண்ணம் நாடிப்
பாம்பா மென்ன வெருவிப்
பைம்பொன் தோடு கழலக்
காம்பேர் தோளி நடுங்கிக்
கரைசேர் பவளைக் காண்மின்"

என்பது அவர் பாட்டு.

பால் நினைந்தூட்டி வளர்த்த பசுங்கிளியின் பசியையும் மறந்து, தலைவி நீராடத் தலைப்பட்டாள் என்று கவிஞர் கூறுமாற்றால், மாண்பமைந்த மலர்ப் பொய்கையின் பெருமை இனிது விளங்குவதாகும். அத்தலைவி, தன்னைக் கிளியோடு பாலூட்டும் தாய் ஆதலால், மதி நலம் வாய்ந்த கிளி அவள் மனத்தைத் துன்புறுத்தாது தன் பசியைத் தீர்த்துக் கொள்ள ஒரு வழியை நாடிற்று. மலர் நிறைந்த பொய்கையில் மீன் முதலாய உயிர்களும், அன்னம் முதலாய பறவைகளும் நிறைந்திருப்பினும், மங்கைக்குப் பாம்பினிடத்துள்ள பயம் மிகப் பெரிதெனக் கருதிய கிளியின் மதி நலம் அறிந்து மகிழத்தக்கதாகும். இவ்வாறு செவியறிந்து பேசுதற்குரிய முறையில் அக்கிளியைப் பயிற்றியிருந்த மங்கையின் மதிநலமும் நன்கு விளங்குகின்றது. ஆகவே, குளிர்ந்த நீர் நிறைந்த பொய்கையின் பெருமையும் அந்நீரில் மகிழ்ந்து விளையாடிய மங்கையின் மதி நலமும் சிந்தாமணிக் கவிஞரால் சிறப்பாக உணர்த்தப் பட்டன.

மங்கை, அஞ்சி ஓடிக் கரையேறிய பொழுது அவள் காதிலணிந்திருந்த தோடுகளில் ஒன்று கழன்று தண்ணீரில் விழுந்துவிட்டது. தோடிழந்த பாவை துடித்தாள்;







# முத்துப் ப
# முறுவலிக்க

பற்களை நாள்தோறும் சுத்தம் செய்ய வேண்டும். பலர் காலை நேரத்தில் ஒரு வேளை மட்டும் பல் துலக்குவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இதுமட்டும் போதாது. ஒவ்வொரு தடவை சாப்பிட்ட பின்னும் வாயை நன்கு கொப்பளித்துச் சுத்தம் செய்யவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் உண்ட உணவின் சில பகுதிகள் பற்களின் சந்துகளில் தேங்கி நின்று, அழி பொருளாக மாறுகின்றன. இவைகளில் நுண் கிருமிகள் பல வளர்வதற்கு ஏதுவாகும். அத்துடன் பற்களின் நிறமும் மாறும்.

இனிப்புப் பண்டங்கள் சாப்பிட்ட பின் நன்றாக வாயைக் கழுவ வேண்டும். குறிப்பாக, பற்களின் உட்புறத்தில் நன்றாகத் தேய்த்துக் கழுவ வேண்டும். இரவில் தூங்கப் போவதற்கு முன்னால், வாயைக் கொப்பளிப்பது மிக அவசியம். அங்ஙனமே காலை எழுந்ததும் வாயைக் கொப்பளித்து விட்டு வேறு வேலைகளைக் கவனிக்க வேண்டும். இப்படிச் செய்தால் பற்களால் தொந்தரவு எதுவும் உண்டாகாது.

பற்களைச் சுத்தம் செய்வதற்கு ஆல விழுது, வேலங்குச்சி, வேப்பக்குச்சி முதலியவைகளை உபயோகிப்பது நமது நாட்டில் தொன்றுதொட்டு இருந்துவரும் ஒரு பழக்கம். வேலங்குச்சியையோ, வேப்பங்குச்சியையோ ஒவ்வொரு நாளும் பசுமையானதாகவும், இனிமையானதாகவும், தெரிந்தெடுத்து உபயோகப்படுத்தும்போது அவை எகிறைக் கிழிக்காமலும், பல்லின் மேல் உள்ள எனாமலைச் சுரண்டி விடாலும் இருக்கும்.

பற்களின் இடையே பச்சையாகத் தோன்றி, கடுமையான வலியைக் கொடுக்கும் 'பயோரியா' நோய் தொடர்ந்து நீடித்தால் அதற்குத் தக்க பரிகாரம் காண வேண்டும். கடுக்காயின் மேல் தோலை நன்றாக இடித்து வஸ்திர காயம் செய்து கொண்டு அந்தப் பொடியை யும், வலது கை ஆள்காட்டி விரலின் மீது வைத்து எகிறையும் பல்லையும் நன்றாகத் தேய்த்தால் நோய் குணமடையும். இதற்கு மேலும் வலி தொடர்ந்தால் பல் மருத்துவரிடம் போவது நல்லது.

பற்குச்சிகளைக் கொண்டு மேற்சொன்னவாறு பல் துலக்கிய பின் அதனை எறிந்து விடக்கூடாது. குச்சியை முன்னம் பற்களால் கடித்து இரண்டாகப் பிளந்துகொண்டு அவற்றைக் கொண்டு நாக்கை வழிக்க வேண்டும். நாக்கின் மேலுள்ள அழுக்கை இப்படி வழித்து எடுக்காவிட்டால், பெருங்குடலுக்குள் சென்று ஜீரணத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும். இத்தகைய பழைய அழுக்குகளின் மூலம் உணவுக் குழாய்களில் புண்ணோ அல்லது வயிற்றில் வலியோ உண்டாகலாம். நாக்கை வழிப்பதை, பல் சுத்தம் செய்வதன் ஒரு பகுதியாகவே கருதவேண்டும்.

—திரு க. அருணாசலம் எழுதிய 'பற்களைப் பேணல்' என்னும் நூலிலிருந்து.

கண்ணீர் வடித்தாள். 'ஐயோ' நான் என்ன செய்வேன்? 'பொய்கைக்குப் போக வேண்டாம் என்று அன்னை தடுத்தாளே! அவள் தடையை மீறி வந்தேனே! வெறுங் காதுடன் வீட்டிற்குச் சென்றால் அன்னை சீறுவாளே! திட்டிக்கொட்டுவாளே! இப்பொய்கையில் இறங்கித் தேடித் தருவார் யாரையும் காணேனே, என் கன்னையைய தோழியரும் கைவிட்டுச் சென்றார்களே! அதோ ஒரு மெல்லியல் அன்னம் கரையருகே நீந்தி வருகின்றது. இன்னல் உற்ற என் நிலையைக் கண்டு இரக்கமுற்றுத்தான் வருகின்றது போலும்' என்றெண்ணிப் பேசலுற்றாள் மெல்லியல்; 'அன்னமே' உன்னை வணங்குகின்றேன். எனக்கு நீ ஒரு நன்மை செய்ய வேண்டும். நீ வாழும் பொய்கையில் என் காதணி கழன்று விழுந்துவிட்டது. அதை நினைத்தால் என் நெஞ்சம் நடுங்குகின்றது. என் தாய் பொல்லாதவள்! நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும்; போக்கடித்த நகையை எடுத்துத் தரவேண்டும்' என்று கைகூப்பித் தொழுதாள்.

"மின்னொப் புடைய பைம்பூண்
நீருள் வீழக் காணாள்
அன்னப் பெடையே தொழுதேன்
அன்னை கொடியள் கண்டாய்
என்னை அடிமை வேண்டின்
நாடித் தாஎன் றிறைஞ்சிப்
பொன்னங் கொம்பின் நின்றாள்
பொலிவின் வண்ணம் காண்மின்"

என்பது சிந்தாமணி.

பொய்கையிலே காதணியைப் போக்கடித்த மங்கை, ஒரு பெண் அன்னத்தை நோக்கித் தன் குறையை முறையிட்டாள் என்று பொருத்தமாகக் கூறினார் கவிஞர். 'பெண்ணுக்குப் பெண்மைதான் இரங்கும்' என்று எண்ணி, 'அன்னப்பெடையே' என்று அழைத்தாள்; அதன் கருணையைப் பெறுவதற்காகக் கைகூப்பித் தொழுதாள்; மேலும், அதன் உள்ளத்தி லெழுந்த இரக்கத்தைப் பெருக்கும் பொருட்டு, 'அன்னைகொடியள்' என்று அறிவித்தாள். காலத்திற் செய்யும் உதவிக்கு என்றென்றும் கடமைப்பட்டவள் என்று தன் நன்றியறிதலைப் புலப்படுத்தினாள் என்பது கவிஞர் கருத்து. இத்தகைய நயங்களெல்லாம் சிந்தாமணிச் சொல்லோவியங்களிற் சிறந்து விளங்கக் காணலாம்.

—'தமிழ் இன்பம்' என்னும் நூலிலிருந்து.

# உலக மகளிர் நாள் விழா :




# பெண்கள் பொருளாதாரச் சமத்துவம் பெறவேண்டும்

'உலக மகளிர் நாள்விழா' சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கத்தில் 8.3.89 அன்று மாலை சிறப்புற நடைபெற்றது.

சமூக நல இயக்குநர் திருமதி வீணாராணி கங்கத் வரவேற்புரையாற்றினார். தமிழ்நாடு கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் வாரியத் தலைமைச் செயல் அலுவலர் திருமதி வீனா பாலகிருஷ்ணன் விழாத் தலைமையேற்றார். சமூக நலத்துறை கூடுதல் இயக்குநர் திருமதி ஜெயஸ்ரீ பாலசந்தர் நன்றி கூறினார்.

"மகளிரிடையே விழிப்புணர்வு தேவை" என்பதை வலியுறுத்திய அவர்கள் அனைவருமே, "பொருளாதாரச் சமத்துவம் பெறப் பெண்கள் பாடுபடவேண்டும்" என்றும் தெரிவித்தார்கள்.

'உலக மகளிர்நாள் விழா'வையொட்டி நடத்தப்பட்ட பேச்சுப் போட்டிகளில் வென்ற மாணவ மாணவிகளுக்குப் பரிசு வழங்கி, டாக்டர் அ. கலாநிதி எம்.பி., சிறப்புரையாற்றினார்.

விழாவில் பங்கேற்றுச் சிறப்புரையாற்றிய பேராசிரியை அரசு மணிமேகலை குறிப்பிட்டதாவது:

"இந்தச்சமுதாயத்தில், பெண்கள் திருமணத்திற்கென்றே வளர்க்கப்படுகிறார்கள். ஒருத்தி சிறுமியாக



இருக்கும்போது-"யாரைக் கட்டிக்கப்போறே?" என்று வேடிக்கையாகக் கேட்பவர்கள், அவள் பருவமடைந்தபின் அப்படிக் கேட்பதில்லை; அப்போது அவள் விருப்பம் அலட்சியப்படுத்தப்படுகிறது. கற்புநிலை பெண்களுக்கே உரியது என்று வலியுறுத்தப்படுகிறதே தவிர, ஆண்கள் அதை மதிப்பதில்லை. சகல உரிமைகளோடு ஆண்மக்களும், ஒருவித அவமான உணர்வோடு பெண்மக்களும் வளர்க்கப்படும் நிலைமை எப்போது இந்தச் சமுதாயத்தைவிட்டு நீங்குகிறதோ, அப்போதுதான் பெண்ணினம் சம உரிமை பெறமுடியும்."

திருமதி நிர்மலாசுரேஷ் தமது சிறப்புரையின்போது தெரிவித்ததாவது:

"இந்தியாவின் பிரதமராக இந்திரா காந்தியும் பாகிஸ்தான் அதிபராகப் பெனாசிர் புட்டோவும் பதவி பெற்றது அவர்கள் குடும்பப் பாரம்பரியப் பெருமையினால்தான் என்றே தெரிகிறது; அவர்களேகூட, 'பெண்மைக்கு மதிப்பளிக்கும் பெருந்தன்மையால் பதவிபெற்றதாகத் தெரியவில்லை. இந்தியாவில் மட்டுமல்ல, உலகநாடுகள் எல்லாமே அத்தகைய உயர்ந்த எண்ணத்தோடு இயங்கவில்லை. இந்த நிலை மாறவேண்டும். பீடி விளம்பரமானாலும் ஜோடித்த பெண்படம் போடாவிட்டால் சோபிக்காது வியாபாரம் என்ற அளவிலேயே பெண்கள் பயன்படுத்தப்படும் நிலைமை நீங்கவேண்டும். அதுவே பெண்ணினம் பெருமை பெறச் செய்வதாக இருக்கும்."




மகளிர் நலத் திட்டத் துணை இயக்குநர் திருமதி சோபியா ஹாசன் பேசுகையில், -"பெண்கள் கல்வியறிவு பெறுவதில் தயக்கம் காட்டக்கூடாது. நாமெல்லாம் நிறைந்த கல்வியறிவு பெற்றாலே பொருளாதாரச் சமத்துவம் பெற்றுவிட முடியும்" என்று குறிப்பிட்டார்.

## போட்டிகளில் வென்றோர்

உலக மகளிர்நாள் விழாவையொட்டி, முன்னதாக அனைத்துக் கல்லூரிகளிலும் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டிகளில் மாணவ-மாணவிகள் 30 பேர் கலந்து கொண்டனர்.

இராணிமேரி கல்லூரியைச் சேர்ந்த செல்வி சி.மகாலட்சுமி,







அண்ணா ஆதர்ஷ் கல்லூரியைச் சேர்ந்த செல்வி கலா வெங்கட்ராமன் (ஆங்கிலப் பேச்சு) இருவரும் முதல்பரிசு பெற்றார்கள். பச்சையப்பன் கல்லூரி மாணவர் திரு. பாலசீனிவாசன், பாரதி மகளிர் கல்லூரி மாணவி செல்வி சாரதா (ஆங்கிலப்பேச்சு), லயோலா கல்லூரி மாணவர் திரு ஜான்வர்கீஸ், கிறிஸ்தவக் கல்லூரி மாணவி செல்வி டி. வசந்தி ஆகியோர் இரண்டாவது, மூன்றாவது பரிசுகளைப்பெற்றனர்.

'வலுவுள்ள பெண்கள் சமுதாயத்தை உருவாக்குவதில் சமுதாயத்தின்பணியும் அரசின் பங்கும்' என்பது போட்டிக்கான தலைப்பாகும்.

முதலாவது பரிசாக இரண்டாயிரம் ரூபாயும், இரண்டாவது பரிசாக ஆயிரம் ரூபாயும், மூன்றாவது பரிசாக ஐந்நூறு ரூபாயும் வழங்கப்பட்டது.

## நலிவுற்றோருக்கு நிதியுதவி

இந்த விழாவில், பொருளாதாரத்தில் நலிவுற்ற பெண்மணிகள் 16 பேருக்குச் சிறுதொழில் தொடங்கும் வகையில் நிதியுதவி அளிக்கப்பட்டது.

ரூ. 27 ஆயிரத்திற்கான காசோலைகள் இதற்காக யூகோ வங்கி மூலம் வழங்கப்பட்டிருந்தன.

பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கியும், பொருளாதாரத்தில் நலிவுற்ற பெண்மணிகளுக்கு நிதியுதவி அளித்தும் -விழா நிறைவுச் சிறப்புரையாற்றுகையில் டாக்டர் அ.கலாநிதி எம்.பி.அவர்கள் தெரிவித்ததாவது:

"பெண்கள் சமமாகக் கருதப்பட வேண்டும் என்ற கருத்து எல்லோராலும் ஏற்கப்படவேண்டியதே ஆகும்.

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடவேண்டுமம்மா" என்று கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை பாடினார். ஆனால், பெண்ணாகப் பிறந்தவர்களே 'என்ன பாவம் செய்தேனோ-பெண்ணாகப் பிறந்தேனே' என்று நொந்து கொள்ளுவதையும் நாம் பார்க்கிறோம். இத்தகைய தாழ்வு மனப்பான்மை நீங்கிவிட்டாலே சமுகத்தில் பெண்கள் சம அந்தஸ்து பெற்று விடமுடியும்.

"பெண்கள் சமுதாயம் பெருமையுற வேண்டும் என்பதற்காகத் தமிழக அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. அரசுமட்டுமே அத்தகைய உயர்வை அளித்துவிட முடியாது. அந்த வகையில் அரசு மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றிபெறப் பெண்களும், மகளிர் மன்றங்கள் போன்ற பல அமைப்புகளும் அரசோடு ஒத்துழைக்க முன்வரவேண்டும்.

"பெண்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படவேண்டும் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், சில பெண்கள் நடந்துகொள்ளுவதைப் பார்க்கும்போது நாம் பெண்களுக்கு அதிக உரிமை கொடுத்துவிடுவோமோ என்று எண்ணத்தோன்றுகிறது. ஒரு கையால் ஒலி எழுப்ப முடியாது; இரண்டு கையும் சேர்ந்தால்தான் ஓசை. ஆகவே ஆணும் பெண்ணும் சம அந்தஸ்து பெறுவதற்கான முயற்சி இரண்டு சாரினராலும் மேற்கொள்ளப்படவேண்டும். மகளிர் சமுதாயம் மாண்புற இந்த அரசு ஆவன செய்யும். உங்கள் தொண்டு தொடர்க."

விழா முடிவில், எழும்பூர் பால்வாடி அமைப்பைச் சேர்ந்த சிறுவர், சிறுமியர் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.


—நிகழ்ச்சித் தொகுப்பு:
பி. எல். ராஜேந்திரன்



# மகளிர்நலன் சமூக நலத்துறைப் பணிகள்

மகளிர் நலனுக்கென்றே தொடங்கப்பட்ட துறை, இன்று விரிவு அடைந்து 'சமூகநலத்துறை' என்ற பெயர் பெற்று மகளிர் நலனையும், அவர்கள் மனம் மகிழக் குழந்தைகளின் நலனையும் கவனிக்கப் பல திட்டங்கள் தீட்டிச் செயல்பட்டு வருகின்றது.

அவைகளைப் பற்றிய விவரம் வருமாறு:



ஏதோ ஒரு காரணத்தினால் கல்வி கற்பது தொடர முடியாமல் நின்று, பின்னர் பல காரணங்களினால் வாழ்க்கை நிலை பாதிக்கப்பட்டு, வாழ வழி தெரியாமல் கலங்கும் ஆதரவற்ற ,கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்குச் சேவை இல்லங்களின் மூலம் குறுகிய காலப்பயிற்சி, 8வது வகுப்பு,பிறகு பத்தாவது வகுப்பு, பிறகு 12வது வகுப்பு என்ற முறையில் கல்வி வழங்கப்படுகிறது. வேலைவாய்ப்புப் பெற, தையல் பயிற்சியும் அளிக்கப்படுகின்றது. இவர்களுக்கு ஆசிரியர் பயிற்சியும் அளிக்கப்படுகின்றது.

இது போன்ற இல்லங்கள் அரசின் நேரடிப் பார்வையிலும், தனியார் துறைகளுக்கு மானியம் வழங்கப்பட்டு, அவற்றின் மூலமும் இயங்கி வருகின்றன.

ஆதரவற்ற குழந்தைகளுக்கு, 5 முதல் 18 வயது வரை பராமரிக்கும் இல்லங்கள் அரசின் நேரடிப் பார்வையிலும், தனியார் நிறுவனங்கள் மூலமும் இயங்கி வருகின்றன.

ஆதரவற்ற ஏழை மகளிர், விதவையர், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் உடல் ஊனமுற்ற பெண்கள் ஆகியோருக்கும் சுயவேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு இலவசமாகத் தையல் இயந்திரம் வழங்கப்படுகிறது.

விதவை மறுமணத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, விதவை மறுமணம் புரிந்த தம்பதியரின் பெயரில் ரூ. 5000 க்கான ஏழாண்டு தேசிய சேமிப்புப் பத்திரம் வழங்கப்படுகிறது.

வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள விதவைகளின் 13 முதல் 30 வயதுள்ள பெண்களின் திருமணத்திற்காக ரூ.1000 வீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

ஆதரவற்ற பெண்களின் திருமணத்திற்காக ரூ. 1000 வீதம் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

ஏழை விதவை ஈன்றெடுத்த 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்குக் குறிப்பேடுகளும், 9 முதல் 12-ஆம் வகுப்புவரை பயிலும் குழந்தைகளுக்குப் பாடநூல்களும் குறிப்பேடுகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

பணிபுரியும் பெண்களுக்குப் பாதுகாப்பாகத் தங்கிப் பணிபுரிய அரசின் நேரடிப்பார்வையிலும், தனியார் நிறுவனங்கள் மூலமும் உழைக்கும் மகளிர் தங்கும் இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

மகளிருக்கு இழைக்கப்படும் கொடுமைகளைத் தடுப்பதற்கான கல்வித்திட்டங்களும், சாராயம் மற்றும் போதைமருந்துகளுக்கு அடிமையானோர் மற்றும் இதர சமூகக் குற்றம் இழைப்போருக்கு அறிவுரை கூறி மறுவாழ்வு அளிக்கும் திட்டங்களும், துயருற்ற மகளிரின் மறுவாழ்விற்காகப் பயிற்சி நிலையங்கள் நிறுவும் திட்டங்களும், இன்றைய சமுதாயப் போக்கின் அமைப்பிலிருந்து ஏதோ ஒரு காரணத்தினால் பாதை மாறி,பிறகு அல்லல்படும் மகளிருக்குப் புதுவா[illegible] அளிக்க குறுகிய கால இல்லங்களை ஏற்படுத்[illegible] திட்டங்களும் இத்துறையில் உள்ளன. முதியோர் நலனைக் காக்கவும், ஓர் தனித் திட்டம் உள்ளது. 6 வயதுக்குழந்தைகளின் வளர்ச்சிக்கும் திட்டங்கள் உள்ளன.



கிராமப்புறங்களில், ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் மகளிர் மன்றங்கள் செயல்படுத்தப்படுகின்றன. அதில் பங்கேற்கும் அவர்களை ஊக்குவிக்கப் பரிசுகளும் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தின் கீழும், கிராமப்புறத்துப் பெண்களை ஊக்குவிக்கவும் அவர்களுக்குப் பயனுள்ள விவரங்களை அளிக்கவும் வரையறுக்கப்பட்ட சிறுதிட்டங்களும் உள்ளன.

சமுதாயத்தில் மகளிர் நலிந்து விடாமல் அவர்களைப் பாதுகாத்து, அவர்களின் நிலை உயர, தமிழக அரசு சிறந்த நோக்கத்துடன் இது போன்ற திட்டங்களைச் சமூகநலத் துறையின் மூலம் செயல்படுத்தி வருகிறது.



# படமும் செய்தியும்



மாண்புமிகு முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 6-3-89 அன்று, தலைமைச் செயலகத்தில் குழுமியிருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார்.



மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் சிறந்தகல்லூரி முதல்வர்,நல்லாசிரியர் ஆகியோருக்கு 5.3.89 அன்று விருதுகளை வழங்கினார்.




வைரம் மற்றும் வைடூரியம் தயாரிக்கும் இயந்திரங்கள் கண்காட்சியினை மேதகு ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்கள் 4.3.89 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் தொடங்கி வைத்தார்.





சென்னை வந்துள்ள இங்கிலாந்து நாட்டுச் சுற்றுலா ஆய்வுக் குழுவினருக்கு, மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு கே.பி. கந்தசாமி அவர்கள் 5.3.89 அன்று விருந்தளித்து உபசரித்தார்.



மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு ஆற்காடு வீராசாமி அவர்கள், கும்பகோணத்தில் நடைபெற்ற விவசாயக் கருத்தரங்கு மாநாட்டில் உரையாற்றினார்.





அண்ணா மாவட்டம், வேடசந்தூர் அருகே அழகாபுரியில் குடகனாற்றின் குறுக்கே 10.12 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுவரும் அணையை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்கள் பார்வையிட்டார்.

விநாடிக்கு 3 இலட்சம் கன அடி தண்ணீரை வெளியேற்றும் திறன் கொண்ட இந்த அணையின் மூலம் 9000 ஏக்கர் நஞ்சை நிலங்கள் பாசன வசதி பெறும். இன்னும் இரண்டு ஆண்டுகளில் இந்த அணை கட்டி முடிக்கப்பட உள்ள போதிலும், இந்த ஆண்டு தேக்கி வைக்கப்படும் தண்ணீர் இந்த ஆண்டு விவசாயப் பருவத்தின்போது பாசனத்திற்குத் திறந்துவிடப்படும். இதுவரை இந்த அணையின் மறு கட்டுமானப் பணிக்காக ரூபாய் 7.15 கோடி செலவிடப்பட்டுள்ளது.






# தமிழுக்கு மாட்சி

தேனோடும் சோலையிலே தினம்ஓடும் மான்கூட்டம்!
வான்ஓடும் நிலவுக்கு வழிகாட்டும் மேகங்கள்!
நான்பாடும் கவிகேட்டால் நடனமிடும் விண்மீன்கள்!
கூன்போட்ட ஔவையினைக் கொஞ்சுதமிழ் நிமிர்த்திற்று!
தேன்போட்டுப் பிசைந்தெடுத்த தினைமாவின் சுவையைப் போல்
ஏன்? என்னும் வினாவின் விடை இனியசுவை தரவேண்டும்.
ஒரு கேள்வி சிறுகேள்வி உங்களைநான் கேட்கின்றேன்!
வருமான நினைப்பின்றி வாழ்பவன்நான்! நம்நாடு
தமிழ்நாடு நீங்களிதைத் தயக்கமின்றி ஏற்பீரா?
கமழ்கின்ற மலர்மணம்போல் காலமெல்லாம் மணக்கின்ற
தாய்மொழிநம் தமிழ்என்பீர்! தாய்மொழிபோல் ஆங்கிலத்தை
காய்மொழிகள்பிறவற்றைக்கருதுவதும் சரிதானா?
விடியவில்லை பொழுதென்ற வேதனையில் நாமிருந்தோம்!
விடியவில்லை யா?பொழுது விடிந்தது; கண் விழித்தீரா?
நம்நாடு தமிழ்நாடு; நாமெல்லாம் தமிழ்மக்கள்!
நம்நாட்டில் இப்போது நடப்பதுவோ தமிழ்ஆட்சி!
காலம் கனிந்துளதே! கவலையெல்லாம் நீங்கிடுமே!
ஞாலம் நமைமதிக்க நாமெல்லாம் தலைநிமிர்வோம்!
பெரியாரை நம்முடைய பேரறிஞர் அண்ணாவைச்
சரியாகப் புரிந்திருந்தால் சங்கடங்கள் ஏதுமில்லை!
அந்தவழி வந்தவரின் ஆட்சி நடக்கிறது!
செந்தமிழுக் கினிமேல்தான் மாட்சி இருக்கிறது!

கவியரசர் பொன்னிவளவன்

# திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1988-89ஆம் ஆண்டிற்கு ரூ.236.119 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இது வரையிலும் ரூ.227.790 இலட்சம் செலவிடப்பட்டு உள்ளது. இதன் மூலம் 11,524 பயனீட்டாளர்களுக்கு அரசு மானியத்துடன் கடன் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டிற்கு ரூ. 291.390 லட்சம நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அடைந்த மனித நாட்திறன் 17.561 லட்சம் ஆகும். இதுவரை ரூ. 311.278 லடசம் செலவிடப்பட்டுள்ளது.

ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 178.367 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரையிலும் ரூ. 136.708 லட்சம் செலவிடப்பட்டு, 7.161 லட்சம் ஆட்திறன் நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

சிறப்பு அரிசி உற்பத்தித் திட்டத்தின் கீழ், இம்மாவட்டத்தில் 3.20 லட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காகப் பாசன ஆதாரங்களை மேம்படுத்தி 38 லட்சமும், சிறு பாசனங்களை மேம்படுத்த 19 லட்சமும் ஒதுக்கப்பட்டு செலவினம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் 620 லட்சம் ரூபாய் பயிர்க் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டு, இதுவரை 610 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. சொட்டு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் ஏக்கருக்கு ரூ. 1500 மானியம், மிகச் சிறு விவசாயிகளுக்கு ரூ. 2000, ஆதி திராவிடர் விவசாயிகளுக்கு ரூ. 3000 வழங்கப்படுகிறது.

1988-89ஆம் ஆண்டில், இம்மாவட்டத்திற்கு ரூ. 500 லட்சம் பயிர்க் கடன் வழங்கக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு இதுவரையிலும் சிறப்பு அரிசி உற்பத்தித் திட்டத்தின்கீழ் நெல் பயிர்க்கு ரூ. 241.90 லட்சமும், எண்ணெய் வித்துக்கள் மற்றும் இதர வகைப் பயிர்களுக்கு ரூ. 254.97 லட்சமும் ஆக மொத்தம் ரூ. 496.87 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 14,729 நபர்கள் பயன் அடைந்துள்ளனர்.

ஆதி திராவிடர் உழவர்களுக்கான திட்டத்தின் கீழ் பல்வேறு வகையான கடன் சலுகைகள் 65.64 லட்சம் ரூபாய் அளிக்கப்பட்டு இதன் மூலம் 5510 நபர்கள் பயன்பெற்றுள்ளனர். மேலும் மத்திய கூட்டுறவு வங்கி மூலமாக மொத்தத்தில் பல்வேறு வகையான கடன்களைப் பெறுவதற்காக 12,855 பெண் அங்கத்தினர்களுக்கு 119.41 லட்சம் ரூபாயும், உடல் ஊனமுற்றோர் 165 நபர்களுக்கு 4.80 லட்சம் ரூபாயும், முன்னாள் இராணுவத்தினர் 70 பேர்களுக்கு 1.76 லட்சம் ரூபாயும் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

1987-88ஆம் ஆண்டில் கிராமக் குடிநீர்த்திட்டத்தின் கீழ் 115 குடியிருப்புகளுக்கு, கையிறைப்பான்கள் பொருத்தப்பட்ட ஆழ்துளைக் கிணறுகள் மூலமாகவும், மதி 34

> வேளாண்மை, குடிநீர், கல்வி, மக்கள் நல்வாழ்வு முதலான பணிகள் விரைவாகவும், செம்மையாகவும் நடைபெறுகின்றன திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில். அவற்றைத் தொகுத்துக் கூறுகிறது இக்கட்டுரை.

குடியிருப்புகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலமாகவும் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக இதுவரையில் ரூ. 202.00 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 9 கிராமங்களுக்கு கையிறைப்பான் மூலமாகக் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 1.36 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

வறட்சி நிவாரணப் பணித் திட்டத்தின் மூலமாக 1987-88இல் 340 கையிறைப்பான்கள் இம்மாவட்டத்தில் இதுவரை நிறுவபபட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் (1986-89) 145 கிராமங்களுக்கு சுமார் ரூ. 205.00 லட்சம் செலவில் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் 1,71,000 மக்கள் பயன்பெறுவார்கள். இதில் 114 குடியிருப்புகளுக்கு ரூ. 208.00 லட்சம் செலவில் 1,19,035 மக்கள் பயன் பெறும் வகையில் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், இம்மாவட்டத்தின் கிராமப்பகுதிகளில் இவ்வாண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் 114 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.

இந்தியப் பிரதமரின் சிறப்பு நிதி உதவித் திட்டத்தின் கீழ் 25 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குச் சுமார் ரூ. 20.00 லட்சம் செலவில் குடிநீர் வழங்கத் திட்டம் அமைக்கப்பட்டு இதுவரை 21 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மார்ச் மாத இறுதிக்குள் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுக் குடிநீர் வழங்கப்படும்.

சிறுதொழில் மையத்தின் 31.1.89 வரை 305 சிறுதொழில் நிறுவனங்களுக்கு நிரந்தரச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 1386 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்தியப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 751 விண்ணப்பங்கள் தேர்வு செய்யப்பட்டு ரூ. 132.40 லட்சம் கடனுதவி அளிக்கப் பல்வேறு வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டு உள்ளது. இதில் 118 விண்ணப்பங்கள் ரூ. 18.55 லட்சத்திற்கு வங்கிகளால் கடன் அனுமதிக்கப்பட்டு, அதில் 79 விண்ணப்பங்களுக்கு ரூ. 11.52 லட்சத்திற்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

1988-89ஆம் ஆண்டில் இம்மாவட்டத்திற்கு இலவசப் பாடப்புத்தகங்கள் மொத்தம் 2282 ஆதி திராவிடர் மாணவ-மாணவிகளுக்கு விநியோகம் செய்திட 95 ஆயிரம் ரூபாய் அனுமதிக்கப்பட்டு இதுவரை 2262 மாணவ-மாணவிகளுக்குப் பாடப் புத்தகங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

நடப்பு ஆண்டில் 5530 ஆதி திராவிடர் மாணவ-மாணவியருக்கு இலவசச் சீருடைகள் வழங்குவதற்காக 2.79 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை 4281 மாணவ மாணவியருக்கு ரூ. 2.89 இலட்சம் ரூபாய் செலவில் சீருடைகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

நடப்பு ஆண்டில் 600 ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்குவதற்காக 3 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை 608 நபர்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள 47 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மூலமாக, கர்ப்பிணித் தாய்மார்களுக்குப் பரிசோதனைகள் செய்து, சுகாதார வசதிகள் அளித்திட 1988-89ஆம் ஆண்டிற்கு 41,350 நபர்கள் தேர்வு செய்திடக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை 36,309 கர்ப்பிணித் தாய்மார்கள் பதிவு செய்யப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளனர். 8933 நபர்களுக்குக் காலரா தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது. 23 கிணறுகளுக்கும் 16 நீர்த்தேக்கங்களுக்கும் குளோரினேஷன் செய்யப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் 1988-89இல் 24482 மின் இணைப்புகள் இதுவரை கொடுக்கப்பட்டுள்ளன. இதனுடைய பளு மொத்தமாக 17,987 கி.வா. மின்சார வாரியத்தால் அளிக்கப்பட்டுள்ளது. இதில் 3 பெரிய தொழிற்சாலை 288 தொழில் நிலையம், 66 குடிநீர் இணைப்பு, 18247 வீடு, 1909 வியாபாரக்கடைகள், 180 தெரு மின் விளக்குகள், 1817 குடிசைகள், 2182 விவசாய மின் இணைப்பு ஆகியன அடங்கும். இவ்வேலைகளுக்காக மின் அனுப்புதலுக்கு ரூ. 86 லட்சமும், விநியோகத்திற்கு ரூ. 34.26 லட்சமும் ஆக மொத்தம் 120.26 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

1988-89ஆம் ஆண்டில் 500 சாண எரிவாயுக் கலன்கள் அமைத்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 15.2.89 முடிய 240 கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 5700 சூளை அடுப்புகள் நிறுவுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் இதுவரை 5161 அடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை மூலமாக 2268 கி.மீ. நீளமுள்ள சாலை பராமரிக்க இவ்வாண்டிற்கு 196.60 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 1989 ஜனவரி முடிய ரூ. 185.38 லட்சம் இச்சாலைகள் பராமரிப்பிற்குச் செலவிடப்பட்டுள்ளது. 12 பால வேலைகள் ரூ. 228.55 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன, அவற்றில் 7 பால வேலைகள் ஏற்கெனவே முடிவடைந்துவிட்டன. விக்கிரமசிங்கபுரம் பழைய இரும்புப் பாலத்தைச் செப்பனிட ரூ. 65 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

தொகுப்பு:
வை. புண்ணியமூர்த்தி
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருநெல்வேலி.



# சன்னல்

## சுந்தர ராமசாமி

நான் படுத்திருந்த கட்டில், சன்னல் அருகே கிடந்தது. சில மாதங்களுக்கு முன் ஒருநாள் அந்தி வேளையில் இழைந்து இழைந்து படுக்கையில் போய் விழுந்தேன். பின்னால் எழுந்திருக்கவே முடியாமல் போய்விட்டது. இவ்வளவு நீண்ட நாட்கள் கட்டிலோடு கட்டிலாய் கிடக்க நேருமென்று எண்ணவே இல்லை. ஐந்தாறு மாதங்களாகி விட்டன. இல்லை, இன்னும் அதிகமாகவே இருக்கும். என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியாது. இது எந்த மாதம் என்று எனக்குத் தெரியாது. தேதியும் தெரியாது; கிழமையும் தெரியாது.

நான் நீண்ட நாட்களாக, சன்னல் அருகே கிடக்கும் இந்தக் கட்டிலில் விழுந்து கிடக்கிறேன்.

என் காலும் கையும் குச்சி மாதிரியாகி விட்டன. உடம்பு இளைத்து விட்டது. ஒரு நாள் என் தங்கை கட்டிலின் பக்கத்தில் வந்து வெகு நேரம் என்னை இமைக்காமல் பார்த்துவிட்டு என்ன தோன்றிற்றோ தெரியவில்லை. "அண்ணா நீ பல்லி மாதிரி இருக்கிறாய்' என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டது. கட்டிலிலிருந்து முழ உயரம் மேலே சென்று மீண்டும் பொத்தென்று விழுந்தது போல் இருந்தது எனக்கு. நான் என்னைக் கண்ணாடியில் பார்த்து வெகு நாட்களாகிவிட்டன. எனக்கு கண்ணாடி கொண்டு தருவாரில்லை. ஒரு தடவை என் முகத்தைப் பார்த்துக் கொள்ள ஆசை. மனத்திற்குள் ஒரே நமைச்சல். நான் சொல்வது யாருடைய செவியிலும் விழவில்லை. ஒரு சமயம் நான் என் முகத்தைப் பார்த்தால் கண்ணீர் சிந்துவேன் என்று எண்ணுகிறார்கள் போலிருக்கிறது. இருந்தாலும் ஒரு தடவை என் முகத்தைப் பார்த்துக் கொள்ள, கொள்ளை ஆசை இருக்கிறது.

விலா எலும்புகள் கூடைப் பின்னல் மாதிரியாகி விட்டதால் கனமான பஞ்சு மெத்தை உறுத்திற்று. சதை வற்ற வற்ற எலும்புகள் துருத்திக்கொண்டு வந்ததில், கழுத்துக்குக் கீழே ஒரு பள்ளம்; ஆழாக்குத் தண்ணீர் பிடிக்கும்.

எனக்குக் கையைக் காலை மடக்க முடியாது; அசைக்க முடியாது. கை, கால்களில் கணுவுக்குக் கணு வீக்கம். படுக்கைதான்; படுத்த படுக்கை.



சில சமயம் வலி கருட்டிப் பிசைந்துவிடும். அங்கங்களில் எரி கொள்ளியால் தடவுவது போலிருக்கும். கண்களிலிருந்து தாரை தாரையாய்க் கண்ணீர் வழியும். இருந்தாலும் வாயைத் திறக்கமாட்டேன். வாயைக் கட்டிக் கொண்டு வலியை, வேதனையை மென்று மென்று தின்பதில் எனக்கு நீண்டகாலப் பயிற்சியுண்டு.

ஒருநாள் நடந்த சம்பவம்—

கூரையிலிருந்து ஒரு குளவி பொத்தென்று என் நெஞ்சில் வந்து விழுந்துவிட்டது. ஆள் மாற்றி ஆள மாற்றி அக்கா, தங்கை, அம்மா, அப்பா என்று யாராவது காவலிருப்பார்கள் என்னருகில், விபரீதம், அன்று யாருமே இல்லை என் செய்வேன் நான்?

மேல் கூரையிலிருந்து ஒரு குளவி நெஞ்சில் நட்ட நடுவில் விழுந்து விட்டது. விழுந்த குளவி நெஞ்சில் சுற்றிச் சுற்றி வந்தது. சுற்றிக் கழுத்திலேறி விட்டது. நான் இமை தாழ்த்திப் பார்த்தேன். தெரியவில்லை. குளவியின் ஊரல் புலன்களைத் தாக்கிக்கொண்டிருந்தது.

அறையில் ஒருவருமில்லை.



சப்தம் போடலாம். சப்தம் எழாது, தொண்டையில் வீக்கம். சப்தம் குதிக்காது. வலியோ, துடித்துவிடும்.

ஊர்ந்து ஊர்ந்து குளவி காதருகே வந்துவிட்டது.

காதிற்குள் போய்விட்டால்?

"அம்மா"

சப்தம் கிளம்பவில்லை.

கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்து கண்ணீரில் தலையணை நனைந்தது.

அந்த வயதிற்குள்ளாகவே எவ்வளவோ கண்ணீர் விட்டவன் நான். நான் கண்ணீரைக் குடித்து வளர்ந்தவன்.

கண்களுக்குப் புலப்படாத எந்த மகாசக்தி தாயின் காதிற் சென்று ஓதியதோ, ஓடோடி வந்தாள் தாய். என் அறையில் தீப்பற்றிக் கொண்டதுபோல் வந்தாள். யாரோ கையைப் பிடித்து இழுத்து வந்தது போல் வந்தாள்.

குளவி நாசியில் ஏறி, நெற்றிப் பொட்டை நோக்கி ஊர்ந்து கொண்டிருந்தது.

"அம்மா"

என்னுடைய உட்செவிக்குள் தான் என் குரல் எதிரொலித்தது.

அப்பொழுது என் தாய் வாசலில் வந்து நின்றாள்.

"அம்பி' என்று கத்திக்கொண்டே என்னருகே வந்தாள்.

புடவைத் தலைப்பால் முகத்தை விசிறினாள். புடவைத் தலைப்பால் முகத்தைத் துடைத்தாள்.

அவள் கண்களிலிருந்து குருதி தான் வழிந்தது.

என் அறை எனது கண்களுக்குப் புளித்துவிட்டது.

மஞ்சள் பூசிய சுவரை எத்தனை நேரமதான் பார்த்துக் கொண்டிருப்பது? அந்தச் சுவரில் தெளிவாகத் தெரிந்த நாலு கறுப்புப் புள்ளிகளைப் பார்த்துக்கொண்டே இருந்தேன். இரண்டு இடங்களில் சுண்ணாம்பு வெடித்து, சிப்பி மாதிரி உயர்ந்து 'இப்பவா, அப்பவா' என்று விழக் காத்துக்கொண்டிருந்தது. ஒன்று, இரண்டு மாதங்களுக்கு முன் உதிர்ந்து விட்டது. இதுவும் உதிர்ந்துவிடும். கட்டிலின் உயரத்திற்கு ஒரே ஒரு இடத்தில் மட்டும் மூக்கை வழித்துத் தேய்த்திருந்தது. அது உலர்ந்து பார்ப்பதற்கு அருவருப்பாக இருந்தது. அதைப் பார்க்கவே கூடாது என்று தினம் தினம் சங்கல்பம் செய்து கொள்வேன். ஒவ்வொரு நாளும் பார்க்கத் தவறவுமில்லை.

கட்டில் பக்கத்தில் ஒரு முக்காலி. கையை நீட்ட முடியுமென்றால் தொட்டு விடலாம். அதில் நோயாளியின் ஏகபோக சொத்துக்கள். காப்பித் தம்ளர் வைத்த இடத்தில் வட்டக்கறை வளையங்கள் இரண்டு தெளிவாகத் தெரியவில்லை.

என் கண்களுக்கு மேல் பதினொன்று உத்தரக் கட்டைகள்.

அந்தக் கட்டைகளில் -போதும்' எனக்கு அலுத்துவிட்டது. என் கண்களுக்கு என் அறை புளித்துப்போய் விட்டது. அதே காட்சிகள், அதே மாதிரி, ஒவ்வொரு நாளும், எனக்கு வெறுப்புத் தட்டிவிட்டது.

ஆனால்—

நான் படுத்திருந்த கட்டில் சன்னல் அருகே கிடந்தது.

அந்தச் சன்னல் பெரிது என்பதில்லை; சிறிது என்பதுமில்லை. ஆனால் என் கண்களுக்கு அந்தச் சன்னல் பெரியதாகத்தான் காட்சி தந்து கொண்டிருந்தது. அன்று எனக்கு அது மதிக்க முடியாத ஒன்றாக இருந்தது.

சன்னலுக்கு நாலு கம்பிகள். அதற்கு முன் ஒரு பந்தல். வெக்கைக்கைக்குப் போட்ட வேலி.

அந்தப் பந்தலில் சாய்ப்பு மூங்கிலைப் பார்த்துக் கொண்டே இருப்பேன். அதில் பிளக்கப்படாத உருண்டை மூங்கில்களில் பல துவாரங்களைக் கவனித்தேன். யார் போட்ட துளைகள் அவை? ஒரு நாள் துவாரங்களை எண்ணிப் பார்த்தேன். ஏழு. பத்து நாட்கள் கழிந்தன. மீண்டும் எண்ணிப் பார்த்தேன். பத்து.....அடி சக்கை' இதென்ன மாயம்? ஒவ்வொரு நாளும் கவனித்தேன். அப்பொழுது ஒரு நாள் மத்தியானம் ஒருவர் வந்தார். வேறு யாருமில்லை. ஒரு வண்டு. கன்னங்கரேலென்று. ஒஹோ நீரா இந்த வேலை பண்ணுகிறீர். பலே ஆளய்யா நீர். வண்டுகள் 'ஸ்ஸ்' என்று சப்தம் செய்து கொண்டே அந்தரத்தில் சுழன்றபடி நாட் கணக்கில் துளைகள் போடுகின்றன... பேஷ், அப்படியா சங்கதி'.

பந்தலை அடுத்தாற்போல் காம்பௌண்டுச் சுவர். அதையொட்டி இரண்டு ரோஜாச்செடிகள். ஒன்று பெரியது; மறறொன்று சிறியது. அம்மா ரோஜா, குழந்தை ரோஜா.

காலையில் கண் விழித்ததும் ரோஜா மொக்குகளை எண்ணுவேன். மறுநாள் அவைகள் மலர்ந்து தென்றலை ஊசலாடும். மீண்டும் புது மொக்குகள். காலையில் ரோஜா.மழை பெய்தால் சொட்டச் சொட்டக் குளித்துவிட்டு,என்னைப் பார்த்துச் சிரிக்கும். சிரிப்பாய்ச் சிரிக்கும்.

ஒரு நாள் பால்காரியின் பெண், ரோஜாச் செடி பக்கத்தில் வந்து நின்றாள். வழக்கமாக அந்தப் பெண்ணின் தாயார்தான் பால் கொண்டு வருவாள். இத்தனை மணிக்கு இனனார் சன்னலைத் தாண்டிப் போவார்கள் என்பது எனக்கு அத்துபடி. காலோசை கேட்டால், இன்னார் என்று மனதில் தீர்மானித்துக்கொண்டே திரும்பிப் பார்ப்பேன். நான் நினைத்தபடிதான் இருக்கும். இதில் எனக்குப் பெருமை.



அன்று பால்காரிப் பெண், ரோஜாச் செடியின் பக்கம் வந்தாள். அங்கு சன்னலோரத்தில் நான் படுத்திருப்பது அவளுக்கு எங்கே தெரியும்? அக்கம் பக்கம் பார்த்துவிட்டுச் சட்டென்று இரண்டு ரோஜா மலரைப் பறித்து, பால் செம்பில் போட்டுக்கொண்டாள். தலை நிமிர்ந்து சன்னலைப் பார்த்தாள். முகம் சுண்டிப் போய்விட்டது. எனக்குத் தர்மசங்கடமாகப் போய் விட்டது. 'யாரிடமும் சொல்லமாட்டேன்' என்று கண்களால் செய்தி சொன்னேன். சிரித்துக் கொண்டே ஓடி விட்டாள் அவள்.

சில சமயம் எதிர்வீட்டு வாழைத் தோட்டத்தைப் பார்த்துக்கொண்டிருப்பேன். நான் படுக்கையில் விழுந்த அன்றுதான் கன்றுகள் நட்டார்கள். அவைகள் என் கண் முன்னே வளர்ந்தன. வளர்ந்து பெரிதாயின. அந்த வீட்டு மாமி மாதிரி புஷ்டியாக இருந்தது. ஒவ்வொரு வாழையும், இலை மிகப் பெரியது; என் மெத்தையை விடப் பெரியது. பின்னால் குலை தள்ளிற்று. அழகான குலைகள். அந்தி வேளையில் வௌவால்கள் வாழைத் தோட்டத்தில் சுற்றிச் சுற்றி வரும். வாழைப் பூவிலிருந்து தேனைப் பருகும் காட்சி அற்புதமாக இருக்கும். எனக்குச் சொல்லத் தெரியவில்லை. மிகவும் அற்புதமாக இருக்கும்.

என் கண்களுக்கு ரோடு தெரியாது. ஆனால் மின்சாரத் தூண்களின் தலையும் தலையோடு ஓடும் கம்பிகளும் தெரியும். நான் படுக்கையில் விழுந்த புதிதில் கவனித்திருக்கிறேன். முன்னை விடவும் கம்பிகள் மிகவும் தேய்ந்துபோய் விட்டன. இப்பொழுது கம்பியை இழுத்துக் கட்ட ஆட்கள் வருவார்கள் என்று எண்ணினேன். பின்னால் ஒரு சமயம் பார்த்த பொழுது பழையபடி விறைப்பாக இருந்தது. ஆச்சரியம்தான். எனக்கு மர்மம் புரியவில்லை. அம்மாவிடம் சொன்னேன். அவளுக்கும் புரியவில்லை. என்ன மாயமோ என்று சொல்லி விட்டாள்.

சாரல் சமயங்களில் தண்ணீர்த் திவலைகள் மின்சாரக் கம்பி வழியாக சிறிது தூரம் கீழ் நோக்கி ஓடிவிட்டு, உதிரும். அப்பொழுது இளம் வெயிலும் அடித்துவிட்டால் போதும். அற்புதமாக இருக்கும். ஒரு திவலைத் தண்ணீரில் ஓராயிரம் நிறங்கள். அப்படி ஒரே ஒரு தடவை தான் பார்க்கக் கிடைத்தது எனக்கு.

சடக் சடக்கென்று ஓயாமல் வண்டிகள் நகரும். ஆனால், வண்டிகள் போவது என் கண்களுக்குத் தெரியாது. வைக்கோல் வண்டிகள் போனால், வைக்கோல் மட்டும் தெரியும்; சில சமயம் அதன் மேல் ஒருவன் 'நான்தாண்டா ராஜா' என்கிற தோரணையில் வீற்றிருப்பான். உடம்பு சொஸ்தமானதும் ஒருநாள் வைக்கோல் வண்டியில் சவாரி போக வேண்டுமென்று நானும் தீர்மானித்துக் கொண்டேன். குத்தகைக்காரன் தாணுமாலையனிடம் சொல்லி வைக்க வேண்டும்.

அய்யரின் வீட்டுக் கூரையில் ஒரு பக்கம் மட்டும் தெரியும். அங்கு சில சமயம் காக்காய்க் கூட்டம் கூடி விடும். காக்காய்ப் பள்ளிக்கூடப் போலிருக்கிறது. சற்றுப் பெரிய, காக்கை ஜாதியிலும் கறுப்பாக ஒரு காக்காய், கூட்டத்தில் தனித்துத் தெரியும்படி உட்கார்ந்து கொண்டிருக்கும். அவர்தான் ஹெட்மாஸ்டராக இருக்க வேண்டும். நான் பார்த்துக் கொண்டிருக்கிற பொழுதே அந்தப் பெரிய காக்காய் ஒரு சிறு காக்கையை அலகால் கொத்திற்று. வீட்டுப்பாடம் செய்யவில்லை என்ற அவ்வளவுதான்.

சில சமயம் அய்யர் வீட்டுக் கூரை பெரியதாகப் புகையும். அடுக்களையிலிருந்து கம்மென்று வாசனை வீசும். நான் இன்ன கறி, இன்ன பட்சணம் என்று முடிவு செய்து கொள்வேன். அப்பொழுதெல்லாம் வாயில் நீர் ஊறிவிடும். என்னை அறியாமல் கன்னத்தில் வழிந்து விடுவதும் உண்டு. அம்மா வந்து துடைத்துவிடுவாள்.

வானத்தை மணிக்கணக்காய்ப் பார்த்துக் கொண்டிருப்பேன். ஆஹா எவ்வளவு அழகு! மேகக்கூட்டம் கும்பல் கும்பலாக யாத்திரை செய்த வண்ணமிருக்கும். எங்கு செல்கிறதோ? சில சமயம் சோம்பல் பிடித்தாற்போல் படுத்துவிடும். அசைவே இராது. எனக்கு மேகத்தின் மேல் படுத்துக்கொள்ள வேண்டும்போல் இருக்கும். மேகத்தை வாரிவாரித் தலை வழியே போட்டுக் கொள்ளவேண்டும் போல் இருக்கும். தூய வெள்ளையாக, மங்கிய கறுப்பாக, ஒரே கறுப்பாக, சாம்பல் வெள்ளையாக... புதுசு புதுசாக வேஷம் போட்டுக்கொண்டு வரும். உருமாறி உருமாறி, உருவத்திற்குள் உருது விழுந்துவிடும். மயில் மாதிரி, ஒரு ராட்சசன் படுத்துக் கிடப்பது மாதிரி, குதிரை நாலுகால் பாய்ச்சலில் பறப்பது மாதிரி, மிகப் பெரிய ஆலவிருட்சம் மாதிரி.

ஒரு நாள் ஒரு தங்க ரதம். ஆறு குதிரைகள். சாரதியில்லாமலே தேர் ஓடுகிறது. மறு நிமிஷம் உருக்குலைந்து போய்விட்டது.

ஒரே ஒருநாள் மட்டும் ஏனோ, மேகம் ஒரு கட்டில்போல் திரண்டு விட்டது. அதில் நோஞ்சலாக, குச்சி மாதிரி ஒரு குழந்தை படுத்துக் கிடக்கிறது. அன்று அதைப் பார்த்து நான் ஏங்கி ஏங்கி அழுதேன்.

அம்புலியை எப்பொழுதும் பார்க்க முடியாது. எப்பொழுதாவது ஒரு தடவை சன்னலோடு தெரியும் சுற்று வட்டத்திற்குள் வரும். சில நாட்களில் மறைந்து போகும். மீண்டும் ஒரு நாள் திடீரென்று வட கோடியில் அம்புலியின் விளிம்பு தெரியும். பின்னால் தினம் தினம் ஊர்ந்து ஊர்ந்து தென்கோடியை நோக்கி நகர்ந்து நகர்ந்து சன்னலின் நடு மையத்தில் வரும். அன்று ஒரே கொண்டாட்டம்தான். அம்புலி என் முகத்தையே பார்த்துக் கொண்டிருப்பது போலிருக்கும். என்னைப் பார்த்து வா, வா என்று அழைப்பது போலிருக்கும். சில நாட்களில் மீண்டும் மறைய ஆரம்பித்து விடும். இரண்டொரு நாட்கள் மிகுந்த சிரமத்தோடு உன்னி உன்னிப்பார்ப்பேன். பின்னால் அப்படிப் பார்த்தாலும் தெரியாதபடி மறைந்து விடும்.

நக்ஷத்திரங்கள் முதல் பார்வையில் ஒன்றிரண்டுதான் தெரியும். பார்க்கப் பார்க்கப் பெருகும். கண்களைச் சுருக்கிக்கொண்டு பார்த்தால், கண்ணிற்கும் தாரகைக்கும் ஒரு ஒளிக் கதிர் விட்டு விட்டு இணையும். கண்ணிற்குள்ளேயே நக்ஷத்திரங்கள் பூத்து மலருவது போலவும் இருக்கும்.

அந்தி நேரத்தில் சன்னலருகே கூட்டம் சின்னங்கள் போல் குஞ்சுக் குஞ்சுத் தும்பிகள் பறக்கும். மேலும் கீழுமாகச் சுற்றிவந்து குளியத்தில் கோலங்கள் போடும்.



## இதயத்துக்கு இதமானது தேன்!

தேனில் நீர், பழச்சர்க்கரை, கரும்புச்சர்க்கரை மற்ற பலவிதத் தாது உப்புக்கள், வேறு சில பொருள்களும் கலந்துள்ளன. இதில் சர்க்கரை மட்டும் 80 சதவீதம் உள்ளது 100 கிராம் எடை தேன் உடலுக்குத் தரும் வெப்பத்தின் அளவு 320 கலோரிகள். பொதுவாக 34 சதவீதம் குளுகோசும், 40 சதவீதம் பழச் சர்க்கரையும், 2 சதவீதம் கரும்புச் சர்க்கரையும் அடங்கியுள்ளன. எல்லாத் தேன்களும் ஏறக் குறைய இதே அளவே சத்துள்ளவை அவற்றின் மணம், நிறம், அமிலத்தன்மை ஆகியவற்றிற்கு அவற்றுள் கலந்துள்ள (சுமார் 5 சதவீதம்) வேறு பொருள்களே காரணம். எந்தப் பூக்களிலிருந்து இவை கிடைத்தனவோ அவற்றின் தன்மையும் தேனுக்கு உண்டு.

ஒருவன் செய்யும் வேலையைப் பொறுத்துத்தான் தேனின் அளவை முடிவு செய்யலாம். உடல் வருந்த நாளெல்லாம் உழைக்கிறவன் அதிகமாக அடர்த்தி மிகுந்த தேனைப் பருக வேண்டும். கொஞ்சம்கொஞ்சமாகத் தேனின் அளவை அதிகமாக்கினால் உடலில் ஏற்படும் களைப்பை நீக்கும்; வேலை செய்யும் திறனும் அதிகமாகும். தேனைப் பருகி மட்டுமே வாழலாம் என்றாலும், அதில் சில உயிர்ச் சத்துக்கள் குறைவு. சராசரியாக ஒரு மனிதன் நாளுக்கு ¼ பவுண்டு தேன் அருந்தலாம். அதாவது வாரம் ஒன்றுக்கு 2 பவுண்டு அல்லது 2 தேக்கரண்டி தேன் ஒரு நாளைக்குப் போதுமானது.

டாக்டர் ஆர்னால்டு ரோலண்டு கூறுகிறார்; "இதயத்தின் மிகச் சிறந்த உணவாக நான் தேனைக் குறிப்பிடுவேன். பலவீனமான இதய நோய் உள்ளவர்களுக்கும், இரத்தக் குழல் பலவீனமுடையவர்க்கும் தேனை அருந்துமாறு சொல்வேன்: படுக்கப் போகும் போதும் இரவில் விழித்துக் கொள்ளும் போதும் ஒரு டம்ளர் நீரில் தேனையும், எலுமிச்சம் பழச் சாற்றையும் கலந்து அருந்த வேண்டும். விரைவில் அவர்கள் நலம் பெறுவர்".

—திரு கி. சுப்பிரமணியம் எழுதிய 'தேன்' என்னும் நூலிலிருந்து.

கண்கள் விண்டது முதல், இறங்குவதுவரை சன்னல் வழியாகப் பார்த்துக்கொண்டே இருப்பேன்.

எனக்கு அலுக்காது; சலிக்காது.

போன பொழுதிற்கெல்லாம், அர்த்தம் கொடுத்துக் கொண்டிருந்தது, அந்த சன்னல்தான்.

ஆனால்—

ஒரு நாள் கண்ணை விழித்துப் பார்த்ததும் சன்னலைப் பார்த்தேன். பார்த்த இடத்தில் சுவர் தான் இருந்தது. என்ன இது? சன்னல் எங்கே?

என் தாயார் பக்கத்தில் நின்று கொண்டு சொன்னாள்.

"நேற்று நீ தூங்கிய பின்பு டாக்டர் வந்திருந்தார். தணுப்புக் காற்று ஆகாது. கட்டிலை இழுத்து சுவர் ஓரம் போடச் சொல்லி விட்டார்."

நான் 'ஓ' வென்று அழுதேன். கேவிக்கேவி அழுதேன்.

அறையில் குடும்பமே கூடி விட்டது. தாயார், தகப்பனார், அக்கா, தங்கை, அண்ணா, தம்பி....

"ஐயோ, குழந்தைக்கு என்ன செய்கிறதோ தெரியவில்லையே" என்று கையை உதறினாள் என் தாய்.

எல்லோரும் அழ ஆரம்பித்து விட்டார்கள்.

என் தகப்பனார் படபடத்தார்.

"எதற்கு அழுகிறாய்? என்ன செய்கிறது சொல்லு, சொல்லுடா சொல்லு? இதோ டாக்டரைக் கூட்டி வந்துவிடுகிறேன்."

என் கன்னத்தில் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

"எதற்கு சொல்லு, என் கண்ணல்லவா நீ. சொல்லு" என்று என் தாயார் கெஞ்சினாள்.

நான் முணுமுணுத்தேன்.
என் தாயார் அவள் காதை என் வாயருகே வைத்துக் கொண்டாள்.

நான் முணுமுணுத்தேன்:

"எனக்கு மூச்சு முட்டுகிறது"

'எல்லோரும் "டாக்டர் டாக்டர்' என்று கத்தினார்கள்.

—'பிரசாதம்' என்னும் நூலிலிருந்து

# ஆயிரம் கலைஞர்கள் அறிமுகம் ஆனார்கள்



பரத நாட்டியக் கலைஞர் செல்வி அனுருபா அரவிந்த்

இனிய கீதம் காற்றில் மெல்ல மிதந்து வருகிறது.

இசை வரும் திசை நோக்கிச் செல்கிறோம்.

விழா மேடை. ரசிகர்கள்... கூட்டம்... இன்னிசையில் மயங்கியோரின் கரவொலிகள்...

போய்ப் பார்க்கிறோம்.

செல்வி சுமித்ரா விஜயராகவன் பாடிக்கொண்டிருப்பதைக் கேள்விப் படுகிறோம்.

ஆம். 'புத்திளங் கலைஞர்கள் அறிமுக விழா' தான் அது.

தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில், ஆண்டு தோறும் நடைபெறும் அழகிய விழாவாகும் அது.

இசைத்துறையில் எத்தனையோ கலைஞர்கள், பயிற்சி பெற்று, பக்குவப்பட்டு, குடத்துள் விளக்காய் இருக்கின்றார்கள். அவர்கள் குன்றிலிட்ட விளக்காய் விளங்க வேண்டாமா?

அந்த வகையில் அவர்களை அறிமுகப்படுத்தும் நோக்கோடு, 1961-லிருந்து இந்த அரிய பணி தொடர்கின்றது.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், பல்வேறு கலைப்பணிகளை பாங்குடன் ஆற்றி வருகின்றது. அந்தப் பணிகளிலே தலையாய பணியாக, இளங்கலைஞர்களை ஊக்குவிக்கும் பணியாக இது விளங்குகின்றது.

தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் சிறந்த சபைகளை, அவை ஆற்றி வரும் கலைப்பணியின் அடிப்படையில் தேர்ந்தெடுத்து, அவற்றின் ஆதரவில் தகுதியும் திறமையும் மிக்க இளம் கலைஞர்களின் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து, அவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இதன்படி, வாய்ப்பாட்டு, பரத நாட்டியம், கதாகாலட்சேபம், இசைக் கருவிகளில் வீணை, நாதசுரம், புல்லாங்குழல், ஜலதரங்கம், கோட்டு வாத்தியம், கிளாரினெட் மற்றும் மேல்நாட்டு இசைக் கருவிகளான மாண்டலின், கிதார், சாக்ஸோபோன் ஆகிய இசைக்கருவிகளில் கர்நாடக இசைப் பாணியில் நடத்த இத்திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் பக்க வாத்தியங்களான மிருதங்கம், கஞ்சிரா, கடம், முகர்சிங், கொன்னக்கோல் போன்றவையும் இத்திட்டத்தில் அடங்கும்.



பாட்டும் பரதமும் பயின்ற ...

இந்த ஆண்டு, இத்திட்டத்தின் மூலம் இசைத்துறையில் வாய்ப்பாட்டு மற்றும் இசைக் கருவிகளில் 22 கலைஞர்களும், பரதநாட்டியத் துறையில் 17 கலைஞர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதில் பங்குகொள்ளும் கலைஞர்கள், தக்க நடுவர்கள் வாயிலாக நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்டுத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.

தேர்ந்தெடுக்கப் பெற்ற கலைஞர்களுக்கு நான்கு நிகழ்ச்சிகள் வீதம் வழங்குவதோடு, கலைஞர்களுக்கும் சபைகளுக்கும் நிகழ்ச்சிகளை நடத்திடும் வகையில், நிர்ணயிக்கப்பட்ட ஊதியமும் வழங்கப் படுகிறது. இதில் மூன்று நிகழ்ச்சிகள் வெளியூர்களில் நடத்த ஏற்பாடு செய்யப்படுகிறது.

''ஒவ்வோராண்டும் சென்னையில் நடத்தப்பெறும் நிகழ்ச்சிகளை இது வரையில் சென்னை சபாக்களின் மூலமாகவே மன்றம் நடத்தி வந்தது. ஆனால், இவ்வாண்டு மேற்சொன்ன நிகழ்ச்சிகளை தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றமே நடத்தலாம் என முடிவு செய்து, அதன் அடிப்படையில் இவ்வாண்டு பிப்ரவரித் திங்கள் 20 முதல் 28 முடிய தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் மன்றம் சிறப்பாக நடத்தியது'' என்று கூறுகிறார் மன்ற நிருவாக அலுவலர் திரு. கே.எல்.இராமன் அவர்கள்.



செல்வி சுமித்ரா விஜயராகவன்

இந்த அறிமுக விழாவை, தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைச் செயலாளர் டாக்டர் ஔவை நடராசன் அவர்கள் தொடங்கி வைத்தார்.

புத்திளங் கலைஞர்கள் அறிமுகத் திட்டத்தில் முதன் முதலில் இருபது பேர்களே பங்கு கொண்டார்கள். ஆனால், இன்றோ இருநூறு பேர் விண்ணப்பம் செய்கிறார்கள். அந்த அளவுக்கு இசைத்துறை வளர்ந்திருக்கிறது; இசைக் கலைஞர்கள் வளர்ந்திருக்கிறார்கள்.

இசைக் கலைஞர்களை அறிமுகம் செய்து வைக்கும் இத்திட்டத்தின் மூலம், தமிழ்நாடு பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக இருக்கிறது என்பது மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.


இவ்வாண்டு நடந்த இந்த விழாவில், பல்துறை இசைக் கலைஞர்கள் கலந்து கொண்டு பாராட்டுப் பெற்றார்கள். அவர்களில் சிலரைச் சந்தித்தோம்.

பரத நாட்டியக் கலைஞர்
திருமதி ஸ்ரீகலா பரத்



செல்வி சுமித்ரா விஜயராகவன், நான்கு வயதிலேயே இசைத் துறையில் ஈடுபாடு கொண்டு, இன்று மிகச் சிறந்த பாட்டு மற்றும் பரதக் கலையில் பரிசும் பாராட்டுகளும் பெற்று வருகிறார்.

சென்னை கிறித்தவ மகளிர் கல்லூரியில் பி.எஸ்ஸி., கம்ப்யூட்டர் சயன்ஸ் இரண்டாமாண்டு பயில்கிறார் இவர். 1986 இல் அதாவது தமது 15ஆவது வயதில் இவரது பாட்டுக் கச்சேரி நடந்தது-டாக்டர்



வருங்கால நாதசுர வித்துவான் திரு பி. எம். பி. வரமூர்த்தி

பாலமுரளி கிருஷ்ணா அவர்கள் தலைமை வகித்து இவரை வெகுவாகப் பாராட்டினார். பரத நாட்டிய அரங்கேற்றம் 1983இல் நடந்தது.

கல்லூரியில் படித்துக்கொண்டே கலைத் துறையிலும்ஆர்வம் செலுத்தும் செல்வி சுமித்ரா விஜயராகவன், பாட்டையும் பரதத்தையும் இரு கண்களாகப் பாவித்து வருகிறார். பத்தொன்பது வயதான இந்த இளங் கலைஞர் கூறுகிறார்:

''சிறிய வயதிலேயே எனக்கு இசைத் துறையில் ஆர்வம் ஏற்பட்டதற்கு அடித்தளமே என் பெற்றோர்கள்தான். என்னுடைய தாய் சுஜாதா விஜயராகவன் நன்றாகப் பாடுவார். என் பாட்டியும் இசையில் ஈடுபாடு உள்ளவர்.

''பாட்டுக்கு என் முதல் குரு திருவனந்தபுரம் திரு.ஆர்.எஸ்.மணி அவர்கள். பரதத்துக்கு ஆசிரியர், கலைமாமணி எஸ்.கே. காமேஸ்வரன் அவர்கள். குஜராத்திலுள்ள அகமதாபாத்திலும், ஆந்திராவிலும் தமிழ்நாட்டில் மற்ற மாவட்டங்களிலும் பரதநாட்டியம் ஆடிப் பாராட்டுதல்கள் பெற்றுள்ளேன்.

''தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம், மதுரை, சிவகாசி, நெல்லை ஆகிய ஊர்களில் பாடியிருக்கிறேன். அங்கெல்லாம் நல்ல வரவேற்பு இருந்தது. இளங் கலைஞர்களை ஊக்குவிக்கின்ற இந்தத் திட்டம் பயனுள்ளது; பாராட்டுக்குரியது.

படிப்பு முடிந்த பிறகும், என் வாழ்நாள் முழுக்க இக்கலைகளைத் தொடருவேன் என்று கூறும் இவர், ஓவியம், விளையாட்டு, பேச்சுப் போட்டிகளிலும் பரிசுகள் பெற்று சகலகலா வல்லவராக விளங்குகிறார்.

பரதநாட்டியக் கலைஞர் திருமதி ஸ்ரீகலா பரத், பிரபல கிரிக்கெட் வீரர் திரு ஸ்ரீகாந்த் அவர்களின் சகோதரி. 27 வயதான இந்த இளங்கலைஞர் திருமணமானவர். இவரது கணவர் திரு பரத், கிரிக்கெட்டில் பிரபல வேகப் பந்து வீச்சாளர். திருமதி ஸ்ரீகலா பரத் கூறுகிறார்.

''நான், கலைமாமணி கே.ஜே. சரசா அவர்களின் மாணவி. என்னுடைய பத்தாவது வயதிலேயே நடன அரங்கேற்றம் நடந்தது. அப்போது என் நடனத்தை நீதிபதி பி.வி.ராஜமன்னார் அவர்களும், பேராசிரியர் சாம்பமூர்த்தி அவர்களும் பாராட்டிப் பேசினார்கள்.

''மாநிலக் கலாச்சாரப் பரிவர்த்தனைத் திட்டத்தின் கீழ், குஜராத் சென்றிருக்கிறேன். ஆந்திராவில் உள்ள ஹம்பியிலும் என்னுடைய நிகழ்ச்சி நடந்திருக்கிறது. சென்னையில்தான் என்னுடைய பரத நாட்டிய நிகழ்ச்சிகள் நிறைய நடந்திருக்கின்றன.

''என்னுடைய தாயாரும், மாமியாரும் இசைத்துறையில் ஈடுபாடு உள்ளவர்கள். பரதநாட்டியம் என் உயிரோடு கலந்தது-அதனால் அதை விடாமல் தொடர்கிறேன்.

''இளங் கலைஞர்களை அறிமுகப் படுத்தும் இந்தத் திட்டம் மிகவும்



திரு கே. எல். இராமன்

பயனுள்ளது. இயல் இசை நாடக மன்றமே நிகழ்ச்சியை ஏற்பாடு செய்வதால், கலைஞர்களுக்குப் பணச் சிக்கல் இல்லை. கூட்டமும் நிறைய கூடுகிறது. வெளியூரில் என்னுடைய நிகழ்ச்சி நடந்தபோது கடைசிவரை கூட்டம் அப்படியே இருந்தது எனக்கு மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் இருந்தது''.

நாதசுரக் கலைஞர் திரு பி.எம். பி.வரமூர்த்தி, தமிழ்நாடு இசைக் கல்லூரியில் நாதசுரம் பயில்கிறார். 22 வயதான இந்த இளைஞர், முதலில் தேனாம்பேட்டை திரு பி.கே. மதுரையிடம் பயிற்சி பெற்றார். அவர் கூறுகிறார்:

''நாதசுரத்தில் நான் மேலும் மேலும் வளர வேண்டும். எதிர்காலத்தில் மிகச் சிறந்த நாதசுர வித்துவானாக வர வேண்டும் என்பதே என் ஆசை. இயல் இசை நாடக மன்றம் என்னைப் போன்ற இளங்கலைஞர்களை அறிமுகப் படுத்துவதைப் பெருமையாகக் கருதுகிறேன்.''

செல்வி அனுருபா, குட் ஷெப்பர்டு மெட்ரிகுலேஷன் பள்ளியில் 11வது வகுப்பு பயிலும் மாணவி. இவர் தனது 5வது வயதிலேயே பரத நாட்டியத்தைக் கற்க ஆரம்பித்து, தனது 11வது வயதில் 1985இல் நீதிபதி திரு எம்.எம். இஸ்மாயில் அவர்கள் தலைமையில் அரங்கேறினார்.

இவர், புகழ் வாய்ந்த தஞ்சைத் தரணியின் பந்தநல்லூர் திரு சொக்கலிங்கம் பிள்ளையின் புதல்வர் கலைமாமணி நாட்டியக் கலாநிதி திரு.சி.சுப்பராயப் பிள்ளையிடம் நாட்டியம் பயின்றவர். அவர் கூறுகிறார்:

"பரத நாட்டியத்தில் பந்தநல்லூர் பாணி தனித் தன்மை வாய்ந்தது. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் 1988-89ஆம் ஆண்டுக்கான திறனாய்வுத் திட்டதிற்கு நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அத்திட்டத்தின் சார்பாக சமீபத்தில் 24.2.89 அன்று இசைக் கல்லூரியில் எனது நாட்டிய நிகழ்ச்சி நடந்தது. மேலும் 27.2.89 அன்று தமிழ்நாடு தொலைத் தொடர்பு மகளிர் இயக்கத்திற்காக ஒரு சிறு நாட்டிய நிகழ்ச்சியையும் நடத்தினேன்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அறிமுகப்படுத்திய பல்துறைக் கலைஞர்கள், இன்று பார் போற்றும் கலைஞர்களாக விளங்குகிறார்கள். இதுவரை இம்மன்றம், ஆயிரம் இளங் கலைஞர்களை அறிமுகப்படுத்தி உள்ளது. இளங்கலைஞர்களின் எதிர்காலம் ஒளிமயமாக விளங்கிட, இசை இயல் நாடக மன்றம் இணையிலாப் பணியினை இனிதே ஆற்றி வருகின்றது.

பேட்டி: பி. வீ. கிரி



# வளரும் வேளாண்மை

கிணற்றிலிருந்து கிடைக்கும் நீரின் அளவு, (அதாவது மின்சார மோட்டாரால் ஒரு நாளைக்கு எவ்வளவு மணிநேரம் நீர் இறைக்க இயலும் என்ற அடிப்படையில்) வறட்சியைத் தாங்கும் குறுகிய காலப் பயிர்களான கம்பு, சோளம், மற்ற பயறு வகைகளைத் தேர்வு செய்து கொள்ளவேண்டும்.

பாத்தி பிடித்து நீர்ப்பாசனம் செய்வதைவிட, பார்-சால் முறையைக் கடைப்பிடிக்கவேண்டும். இதனால் 25 சதம் நீர் மிச்சமாகும். (பரிந்துரை செய்யப்பட்ட இடைவெளியில்)

மேலும்,விதை ஊன்றும்பொழுது பரிந்துரை செய்யப்பட்ட இடைவெளியில் குறுகிய சால் முறையைக் கையாளலாம். ஆரம்பத்தில் மண்வெட்டி அகலத்தில் முக்கால் அடி ஆழத்தில் அல்லது குட்டைக் கலப்பை கொண்டு பார் பிடித்து விதை முளைப்பதற்கு மட்டும் நீர் பாய்ச்சலாம். பின்பு ஒரு மாதம் கழித்து உரம் இட்டு மண் அணைக்கும்போது பரிந்துரை செய்யப்பட்ட இடைவெளியில் பார் சால்களை அமைத்துக் கொள்ளலாம். இதனால் 40 சதம் நீர் மிச்சமாகும்.

பயிர்களை இரட்டைச் சால் முறையால் சாகுபடி செய்து நீரை 30 சதம் மிச்சப்படுத்தலாம். இதனால் பயிர் எண்ணிக்கை குறையாது பார்த்துக்கொள்ள வேண்டும்.

பயிர் வளர்ச்சியில் முக்கிய காலக்கட்டங்களான தூர்கட்டுதல், மஞ்சு கட்டுதல், பூக்கும் பருவம், பால் பிடிக்கும் பருவம் ஆகிய தருணங்களில் நீர் பாய்ச்சலாம். மற்ற சமயங்களில் குறைத்தோ அல்லது நிறுத்தியோ சமாளிக்கலாம்.

களைக் கொல்லிகளைப் பயன்படுத்தி ஆரம்ப கட்டத்தில் களைகளைக் கட்டுப்படுத்துவது.

கழிவுத் தட்டை, சருகு, குப்பைக் கூளம் மற்றும் தென்னை நார்க்கழிவு போன்றவற்றை நிலப் போர்வைகளாகப் பயன்படுத்தி நிலத்து ஈரம் ஆவியாதலைத் தடுக்கலாம்.

## தைல மர வளர்ப்பில் நுண்ணுயிர்களின் பங்கு

பொதுவாக, மரக்கன்றுகள் மெதுவாக வளரும்தன்மை கொண்டவை. அவற்றின் வளர்ச்சியை அதிகரிக்க பல வழிகள் உள்ளன. அவற்றில் ஒன்று நுண்ணுயிர்களைக் கொண்டு வளர்ச்சியை ஊக்குவிப்பதாகும். நுண்ணுயிர்களை உரமாக இடுவதனால் மண்ணின் தன்மை கெடாமல் பாதுகாப்பதோடு, அதன் பலன் நீண்ட நாட்களுக்கு நிலைத்து நிற்கும்.

காடுகளில் வளரும் யூக்கலிப்டஸ், பைன்ஸ் (ஊசி இலை மரம்), ஆல்னஸ்(தீக்குச்சி மரம்) போன்ற மரங்களின் வேர்களில், வேர் வெளிப்பூசணம் என்ற நுண்ணுயிர் இருப்பதாக ஆராய்ச்சிகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இது மரக்கன்றுகளுக்கு வேண்டிய பாஸ்பரஸ் மற்றும் துத்தநாகம் போன்ற செம்பு நுண்ணூட்டங்களையும் ஈர்த்து செடிகளுக்குக் கொடுத்து அதன் வளர்ச்சியை அதிகரிக்கிறது.

> உழவுத் தொழில் சிறக்கப் பல உத்திகளும், வழி முறைகளும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. அவற்றின் மூலம் அமோக விளைச்சல் பெறவும் ஏதுவாகிறது. அந்த வகையில், இந்தக் கட்டுரையும் வேளாண்குடிப்பெருமக்களுக்கு வெகுவாகப் பயன்படும்.

அத்துடன், வேர் வெளிப்பூசணம் வேர்களில் ஒரு தடுப்புச் சுவர் போல் அமைந்து வேர் மூலம் பூச்சிகளும். நோய்க்கிருமிகளும் கன்றுகளைப் பாதிக்கா வண்ணம் காக்கின்றது. இவ்வேர் வெளிப்பூசணத்தை ஆராய்ச்சிக் கூடங்களில் வளர்த்து அவற்றைச் செடிகளுக்கு இடுவதனால் அதன் வளர்ச்சி அதிகமாவதோடு, தண்டின் பருமனும் அதிகரிக்கிறது. இதனால் மரக்கன்றுகள் ஒரு வருடத்தில் வளர வேண்டிய வளர்ச்சியை 7 அல்லது 8 மாதங்களில் அடைந்து விடுகின்றன.

பைனஸ் போன்ற ஊசியிலை மரங்கள் பேப்பர் தொழிற்சாலைக்குப் பயன்படும். இவை குளிர்ப்பிரதேசங்களான ஊட்டி, கொடைக்கானல் பகுதிகளில்தான் வளரும். ஆனால் வேர் வெளிப் பூசணத்தை இடுவதனால் பைனஸ் கரீபியா சமவெளிப் பிரதேசங்களிலும் நன்கு வளருவதை ஆராய்ச்சி மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வகை மரங்களை வரப்புகளிலும், சுமாரான நீர் வசதியுள்ள இடங்களிலும் வளர்ப்பதன் மூலம் பயன் அடையலாம்.

இவ்வகை நுண்ணுயிர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் நுண்ணுயிர்ப் பிரிவில் ஒரு பாக்கெட் ரூ. 3 என்ற விலையில் கிடைக்கிறது. பாலிதீன் பையில் வளர்க்கப்பட்ட மரக் கன்று ஒன்றுக்கு 10 கிராம் வீதம் ஒரு பாக்கெட்டை 20 செடிகளுக்கு இடலாம்.

## பருத்தியில் நூற்புழுத்தாக்குதலால் புதிய வாடல் நோய்

கோவை மாவட்டத்தில் சமீப காலமாக வீரிய ஒட்டுப் பருத்தி ரகம் மற்றும் சில பருத்தி இரகங்



களில் நூற்புழுக்களின் தாக்குதலால் முக்கியமாக மொச்சை வடிவ நூற்புழுவினால் புதிய வாடல் நோய் தோன்றுவது கண்டறியப்பட்டது.

சென்ற டிசம்பர் இரண்டாவது வாரம் சென்னமநாயக்கன்பாளையம் கிராமத்தில் ஒரு விவசாயியின் தோட்டத்தில் எல்.ஆர்.ஏ.5166 பருத்தியில் இவ்வாடல் நோய் தென்பட்டதறிந்து, வேளாண் பல்கலைக் கழக நூற்புழு வல்லுநர் காரணம் கண்டறிந்ததில், திட்டுத்திட்டாக வாடிய வளர்ச்சி குன்றிய செடிகள் 10 சதம் வரை எனக் கணக்கிடப்பட்டது.

அப்பயிரின் வேர் மண் மாதிரிகளை நூற்புழுவியல் துறை, பயிர்ப் பாதுகாப்பு மையம், வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவையில்பரிசோதித்ததில் வேர்ப் பாகத்தில் ஒருசெடிக்கு 50 முதிர்ச்சி அடைந்த மொச்சை வடிவ பெண் நூற்புழுக்களும், மண்ணில்மொச்சை வடிவ நூற்புழு மற்றும் இருவகை வேர்க் கருகல் நூற்புழுக்கள் பயிருக்குச்சேதம் விளைவிக்கும் அளவிற்கும் மேலாக இருப்பது கண்டறியப்பட்டது.

இந்நிலத்தில் பருத்தி தொடர்ந்து மூன்று பருவ காலத்திலும் பயிரிடப்பட்டுள்ளது. இதுபோன்று இடைவெளியின்றியும், மாத்துப்பயிர் விளைவிக்காததாலும் பருத்தியைத் தாக்கும் நூற்புழுக்களின் எண்ணிக்கை மிகுந்து பெருகி பருத்திக்குச் சேதம் ஏற்பட ஏதுவாகிறது.

டிசிஎச் 32 விரிய ஒட்டுப் பருத்தியில் இலை சிவப்பு நிறமாகி, புதிய வாடல் நோய் தோன்றுவது இந் நூற்புழுவால்தான். எனவே, விவசாயிகள் தங்கள் டிசிஎச் 32 பருத்தியில் தற்போது புதிய வாடல் நோய் அறிகுறிகள் தென்பட்டவுடன், கார்போபியூரான் குருணை மருந்தை ஏக்கருக்கு 12 கிலோ வீதம் செடியின் வேர்ப்பாகத்தில் இட்டு உடனே தண்ணீர் கட்டினால், நூற்புழுவைக் கட்டுப்படுத்தி நல்ல மகசூல் காணலாம்.

இது சம்பந்தமாக நூற்புழுவியல் துறை, பயிர்ப்பாதுகாப்பு மையம், வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை-3 என்ற முகவரியில் தொடர்பு கொண்டு தகுந்த ஆலோசனை பெறுமாறு விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**நெட்டைச் சோளத்திற்கேற்ற கைத்தூவுவான்**

சோளப் பயிரில் கதிரைத்தாக்கக் கூடிய கதிர் நாவாய்ப் பூச்சி முக்கியமானது. நெட்டைச்சோளப் பயிர்கள் 4மீ. வரை வளர்கிறது. பழக்கத்திலிருக்கக் கூடிய கைச் சுழற்சித் தூவுவான் மூலம் 1.5 மீ. உயரம் வரை தூவலாம். எனவே 3 மீ-க்கு



மேல் உள்ள பயிர்களுக்குத் தூவுவதற்காக, தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகப் பண்ணை இயந்திரவியல் துறையினர் மேற்கூறிய கைச் சுழற்சித் தூவுவானில் பின்வரும் 4 சேர்க்கை உறுப்புகளைப் பொருத்திவடிவமைத்து உள்ளனர்: வளையும் தன்மையுடைய பி.வி.சி. குழாய், 1.3 மீ. நீளமுள்ள பி.வி.சி. குழல், பொடி பரப்புவான், கைப் பிடியுடன் கூடிய தாங்கி.

வளையும் தன்மையுடைய பி.வி.சி. குழாய், பரப்பியை உயரத்திற்கு ஏற்றவாறு ஏற்றி, இறக்கி பிடிப்பதற்கு வழி செய்கிறது. கைப்பிடியுடன் கூடிய தாங்கி அதிகச் சிரமமின்றி எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் தூவு குழலைத் தூக்கிப் பிடிப்பதற்குப் பயன்படுகிறது. பரப்பியானது ஒரு சாதாரண டின் தகட்டினால் ஆக்கப்பட்டுள்ளது.

தூவுவானைச் சுற்றுவதன் மூலம் காற்றுடன் பொடி உள்ளிழுக்கப்பட்டு பி.வி.சி. குழல் வழியாகப் பரப்பியின் மூலம் பயிர்களுக்குத் தூவப்படுகிறது. ஒரு ஏக்கருக்குத் தேவையான பொடியின் அளவு 10 கிலோ ஆகும். ஒரு ஏக்கர் தூவுவதற்கு ஒரு மணி நேரமாகிறது. இதன் மொத்த விலை ரூ. 625 ஆகும். தூவுவானின் விலை மட்டும் ரூ. 550 ஆகும். இக்கருவி பற்றிய மற்ற விவரங்களுக்கு, பேராசிரியர்-தலைவர், பண்ணை இயந்திரத் துறை, வேளாண் பொறியியல் கல்லூரி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை-641003 என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

**பூச்சி கொல்லி மருந்து இல்லாமல் பூச்சிகளை அழிக்க ஒருபுதியகருவி**

அளவுக்கு அதிகமாகவும் அடிக்கடியும் பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்துவதால் நாளடைவில் பூச்சிகள் மருந்துகளுக்குக் கட்டுப்படாமல் எதிர்ப்புத் தன்மையை அடைந்து விடுகின்றன. எனவே கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக்கழகத்தின் பண்ணை இயந்திரத் துறையும், பூச்சியியல்துறையும்ஒருங்கிணைந்து பூச்சிக் கொல்லி மருந்துகளின் துணையின்றிப் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் கருவி ஒன்றை உருவாக்கியுள்ளன.


இக்கருவி விசைத் தெளிப்பானால் (பவர் ஸ்பிரேயர்) இயக்குவதாகும். விசைத் தெளிப்பானில் உள்ள காற்றூதியின் காற்று உட்புகும் பகுதியில் இணைப்பு ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. இதற்குத் தகுந்தவாறு காற்றூதிக்கும் விசைத்தெளிப்பானின் சட்டங்களுக்கும் இடையே உள்ள இடைவெளியை அதிகரித்துக் கொள்ளவேண்டும். இவ்விணைப்பு விசைத் தெளிப்பானில் உள்ள மருந்து அடிக்கும் பிளாஸ்டிக் குழாய்கள் இரண்டினால் ஆனது. இந்தக்கருவியை இயக்குவது விசைத் தெளிப்பானை இயக்குவது போல ஆகும். விசைத்தெளிப்பான் இயங்கும்போது பிளாஸ்டிக் குழாய்கள் வழியே காற்று வேகமாக உறிஞ்சப்படுகிறது. இக்காற்றுடன் பூச்சிகளும் இழுக்கப்படுகின்றன. இவ்வாறு இழுக்கப்பட்ட பூச்சிகள் பிளாஸ்டிக் குழாயில் பொருத்தப்பட்டுள்ள சல்லடை ஒன்றியால் தடுக்கப்பட்டு பிளாஸ்டிக் ஜாடி ஒன்றில் சேகரிக்கப்படுகின்றன.

இக்கருவி மூலம் நடத்திய ஆய்வுகளில் வெள்ளை ஈ, தத்துப்பூச்சி, கதிர்க்கொசு, புகையான் முதலிய பூச்சிகள் சுலபமாக இழுக்கப்பட்டு அழிக்கப்பட்டன. விசைத் தெளிப்பான் விவசாயிகளின் அன்றாட உபயோகத்தில்காணப்படும் ஒரு பயிர்ப் பாதுகாப்புக் கருவி. ஆகவே விவசாயிகள் மேற்கூறப்பட்டுள்ள இணைப்புடன் விசைத்தெளிப்பானைப் பயன்படுத்தி பூச்சிகளை அழித்துபயன்பெறலாம். இககருவிப்யைப் பயன்படுத்துகையில் பூச்சிக் கொல்லி மருந்துக்கு ஆகும் செலவு தவிர்க்கப்படுகிறது. இந்த இணைப்பின் விலை சுமார் ரூ.170 ஆகிறது. இக்கருவி பற்றிய முழு விவரங்களுக்கு, "பேராசிரியர்-தலைவர், பண்ணை இயந்திரத்துறை, வேளாண் பொறியியல் கல்லூரி, தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக் கழகம், கோவை-641 003" என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

தகவல்: தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம். கோவை-3



# காகதீய மன்னர் கணபதி காசுகள்



தமிழ்நாட்டில் இதுவரை கிடைக்கப் பெறாத காகதீய மன்னன் கணபதியால் வெளியிடப்பெற்றகாசுகள் அடங்கிய ஒரு புதையலை விவசாயி ஒருவர் குறிஞ்சிப்பாடிக்குப் பக்கத்தில் உள்ள வரதராஜன் பேட்டையில் கண்டெடுத்தார். இப் புதையல் தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் பார்வையிடப்பெற்று வட்டாட்சியர் அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

இக்காசுகளை ஆய்வு செய்தபோது, கீழ்க்காணும் காசுகளும், பொருட்களும் அப்புதையலில் அடங்கியிருப்பது தெரிய வந்தது.

1. சங்க மன்னர்களால் வெளியிடப்பெற்றது என்று கருதப்படும் காசுகள்.

2. காகதீய மன்னன் கணபதியால் வெளியிடப்பெற்ற காசுகள்.

3. விஜயநகர மன்னர் காலத்திய காசுகள்.

4. தங்கத் துண்டுகள்

5. தங்கத்தால் செய்யப்பட்ட வளையங்கள்.

மேற்குறிப்பிட்டுள்ள காசுகளில் முதலாம வகையைச்சார்ந்தகாசுகள் தங்கக் காசுகள் ஆகும். இக்காசுகளில் முன்புறம், வலப்பக்கம திரும்பிய யானையின் உருவமும், பின்புறம் மலர்க்கொடிகளும் பொறிக்கப்பட்டுகாணப்படுகின்றன. யானை உருவம் மிக அழகாக அலங்கரிக்கப்பட்டதாகக் காணப்படுகிறது. இத்தகைய காசுகள் தமிழகத்தில் பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

இரண்டாம் வகை காசுகளும் தங்கக் காசுகளே ஆகும். இவற்றின் முன்புறம் "கணப" என்று தமிழ் எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. இவை கணபதி என்ற மன்னன் பெயரைக் குறிப்பதாகக் கருதலாம். இவ்வெழுத்துக்களின் தொடக்கத்திலும், முடிவிலும் 'ஸ்ரீ' என்ற தெலுங்கு எழுத்து காணப்படுகிறது. இவைகளை அடுத்து கன்னன் குழல் ஊதுகின்ற நிலையில் உள்ள உருவமும் மற்றும்சூரியன், சந்திரன், குடை ஆகிய உருவங்களும் காணப்படுகின்றன. இக்காசுகளின் பின்புறத்தில் குறுக்கும் நெடுக்குமாகச் சில கோடுகள் காணப்படுகின்றன. சில காசுகளில் முன்புறம் குழிவாகக் காணப்படுகிறது.

மேலே கூறப்பட்ட எழுத்துக்களும் மற்றும் உருவங்களும் அச்சுக் குத்தப் பெற்றவைகளாகக் காணப்படுகின்றன. அவ்வாறு அச்சுக் குத்தப்பெற்றதால் இக்குறி ஏற்பட்டு இருக்கலாம் என்று கருத முடிகிறது. இவ்வாறு குழிவிலுள்ள காசுகள் ஆந்திரா, கர்னாடகா பகுதிகளில் கிடைத்திருக்கின்றன. இத்ரம்பக் கிடைக்கப்படும் கணப என்று காசுகளில் காணப்படும் எழுத்துக்கள் எழுதப் பெற்றிருக்கும் எழுத்துக்களாக சோழர் கால தமிழ் எழுத்தின் அமைதி உள்ளன. இவ்வெழுத்தின் இவை கி.பி.13ஆம் நூற்றாண்டில் ஆந்திரப் பகுதியைக்கொண்டு காகதீய மன்னன் ஆட்சி செய்த என்பவனால் வெளியிடப் கணபதி என்று ஊகிக்க பெற்றிருக்கலாம் என்று ஊகிப்பது முடிகிறது. அவ்வாறு இருக்கும் என்பது பொருத்தமாக ஆதாரங்களாலும் வரலாற்று தெரிய வருகிறது.

கி.பி.13ஆம் நூற்றாண்டில் காகதீய மன்னன் கணபதி தொண்டை மண்டலத்திலுள்ள காஞ்சிபுரத்தைக் கைப்பற்றி இருக்கலாம் -என்பதும், திருவரங்கம் வரை சென்று அங்கு சில நாள் தங்கியிருந்தான் என்பதும், வரலாற்று ஆசிரியர்களால் கூறப்படும் செய்திகள் ஆகும். இதலை மெய்ப்பிக்கும் வகையில்காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் கோயிலில் காகதீய மன்னன் கணபதி காலத்திய இரண்டு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. ஒரு கல்வெட்டு சமஸ்கிருதத்திலும், மற்றொரு கல்வெட்டு தமிழிலும் எழுதப்பட்டுள்ளது. சமஸ்கிருதத்தில் காணப்படும் கல்வெட்டு 17சுலோகங்களைக் கொண்டதாக உள்ளது. இக்கல்வெட்டில் காகதிய மன்னன்கணபதி ஆணையை ஏற்றுஅவனுடைய அமைச்சர் சாமந்த போஜன், களத்தூர் என்ற ஊரினுடைய வருமானத்தை ஏகாம்பரேஸ்வரர் கோயிலுக்குத் தானமாக வழங்கினான் என்று செய்தி கூறப்பட்டுள்ளது.

**நடன. காசிநாதன்**
**இயக்குநர்,**
**தொல்பொருள் ஆய்வுத்துறை**





கங்க மன்னர் காலத்து காசுகள்
(கி.பி. 8-9-ஆம் நூற்றாண்டு)


அடுத்து உள்ள தமிழ்க் கல்வெட்டிலும் சற்றேறக்குறைய இதே செய்தி தான் கூறப்படுகிறது. இருப்பினும், மற்றொரு மிக முக்கிய செய்தி அதில் காணப்படுகிறது. அதாவது ஏகாம்பரேஸ்வரர் கோயிலில் 'கணபதி சந்தி' என்ற ஒரு விழாவைக் காகத்திய மன்னன் கணபதியே அமைத்தான் என்றும், அதற்காக ஜெயங்கொண்ட சோழ மண்டலத்திலுள்ள களத்தூர் என்ற ஊரினுடைய வருவாயைத் தானம் அளித்தான் என்றும் செய்தி காணப்படுகிறது. கல்வெட்டில் அச்செய்தி ''நம் பெயரால் அமுது செய்து அருளுகிற கணபதி தேவன் சந்திக்கு'' என்ற வாசகம் காணப்படுகிறது.


ஆதலால் காகத்திய மன்னன் கணபதியே காஞ்சிபுரத்திற்கு வந்ததாகவும், அவனே 'கணபதி சந்தி' அமைத்தான் என்பதும் தெரிய வருகிறது. மேற்கூறப்பெற்ற இரு கல்வெட்டுக்களும் சக ஆண்டு 1172 அதாவது கி.பி. 1250இல் எழுதப்பட்டுள்ளன. அது மட்டுமல்லாமல் பாண்டிய மன்னன் விக்கிரம பாண்டியன் என்பான் தன்னுடைய கல்வெட்டில் காகத்திய மன்னன் கணபதியையும், அவனுடைய சிற்றரசன் வீரகண்ட கோபாலனையும் வெற்றி பெற்றதாகத் தஞ்சை மாவட்ட திருவெண்காடு கோவிலிலுள்ள கல்வெட்டில் தெரிய வருகிறது. இக்கல்வெட்டின்காலம் கி.பி. 1258ஆகும். ஆதலால் காகத்திய மன்னன் கணபதி காஞ்சிபுரத்தைக் கைப்பற்றியதும், தமிழகத்தின் வடபகுதியைச் சில காலங்கள் ஆண்டு இருப்பதும் உறுதிப்படுகிறது.



அந்தக் கால கட்டத்தில் மேற்கூறப்பெற்ற காசுகளை. அவன் வெளியிட்டிருக்கலாம் என்று நம்ப முடிகிறது. இக்காசுகளில் மன்னனுடைய பெயர் தமிழிலே இருப்பதால் இக்காசுகள் தமிழகத்தில் வழங்குவதற்காக வெளியிடப்பட்டு இருக்கலாம்என்று கருதப்படுகிறது. இதுவே முதல் ஆதலால் இவை மிகவும் வரலாற்றுச் சிறப்பு பெறுகின்றன. இதற்கு முன்பு கணபதிக்கு பின்பு ஆட்சி செய்த ருத்ராம்பாவின் வளர்ப்பு மகனாகிய பிரதாப ருத்திரனின் காசு தமிழகத்தில் கிடைத்துள்ளது. அக்காசுகளை திரு.ஐ.மகாதேவன் அவர்கள் கண்டறிந்து தமிழகத்திற்குத் தெரியப் படுத்தினார்கள். அக்காசுகள் கூட மிகக் குறைந்த அளவிலே தான் கிடைத்துள்ளன. ஆனால் 'கணப'' என்று எழுதப் பெற்றுள்ள இக்காசு 77 காசுகள் ஒரேபுதையலில் கிடைத்திருப்பது மேலும் முக்கியமான தொன்றாகும்.

தங்கத் துண்டுகளும், தங்க வளையல்களும்





காகதிய மன்னர் கணபதி காசுகள், (கி.பி. 13-ஆம் நூற்றாண்டு)

மூன்றாவது வகையாகக் குறிக்கப்பட்டுள்ள விஜயநகர மன்னன் காலத்திய காசுகள் மிக அதிக அளவில் தமிழகத்தில் பல இடங்களில் கிடைத்துள்ளன. இவைகள் உருவில் மிகச் சிறியதாகக் காணப்படுவதால் இவற்றை மக்கள் ''மிளகாய் விதை காசுகள்' என்றும் 'கொள்ளுகாசுகள்' என்றும் அழைக்கிறார்கள். இக்காசுகளின் முன்புறம் சில புள்ளிகளும், பின்புறம் சில புள்ளிகளும் அவற்றோடு சில கோடுகளும் காணப்படும். வேறு எழுத்துக்கள் யாதும், எழுதப் பெற்றிராது. அதனால் இவைகள் எந்த மன்னனால் வெளியிடப்பெற்றது என்பதை அறிய முடியவில்லை.

தங்கத் துண்டுகளாக ஏழு துண்டுகள் கிடைத்துள்ளன. இவை அணிகலன்கள் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டு இருக்கலாம். ஏனெனில் இக்காசுகளோடு தங்கத்திலான வளையங்களும் கிடைத்துள்ளன.

ஆதலால் மேற்கூறப்பெற்ற தங்கத்தை இது போன்ற வளையங்கள் செய்வதற்கு அவர்கள் பயன்படுத்தி இருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது.


## ஆவணக்காப்பகம்

சென்னை எழும்பூரிலுள்ள தமிழ்நாடு ஆவணக்காப்பகம் பெரும் அளவில் திரட்டிய கிடைத்தற்கரிய அரசு ஆவணங்களைக் கொண்டதாகத் திகழ்கிறது. இது ஒரு வரலாற்று ஆராய்ச்சி நிலையமாகவும் திகழ்கிறது.

மேலும், ஆட்சியாளர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்குத் தேவையான ஆவணங்களை வழங்குகிறது. கடந்த மூன்று ஆண்டுகளுக்குரிய ஆவணங்களைத் தவிர ஏனைய தமிழக அரசுத் தலைமைச் செயலக ஆவணங்களும், கடந்த பத்தாண்டுகளுக்குரிய ஆவணங்கள் தவிர, ஏனைய வருவாய்த் துறை ஆவணங்களும் இக் காப்பகத்தில் உள்ளன. சில துறைத்தலைமை அலுவலகங்களின் ஆவணங்களும் வரலாற்றுச் சிறப்புமிக்க பல்வகை ஆவணங்களும், மற்றும் பழைய அரிய நூல்களும் அறிக்கைகளும் இங்கு இடம் பெற்றுள்ளன.

இங்குள்ள ஆங்கில மொழி ஆவணங்கள் 1670 ஆம் ஆண்டு முதல் உருவாக்கப்பட்டவையாகும். இச்சீரிய ஆவணங்கள் நவீன அறிவியல் முறையில் பராமரிக்கப்படுகின்றன. இங்குள்ள ஆவணங்களுக்கு வழிகாட்டிகள், விவரப்பட்டியல் கள், அட்டவணைகள் போன்ற பார்வைக் குறிப்புச் சாதனங்களும் (Preferenc: Media) உள்ளன. தமிழ் நாட்டின் சிதம்பரம், மதுரை, கோயம்புத்தூர், திருச்சி ஆகிய இடங்களில் மாவட்ட ஆவணக் காப்பகங்கள் உள்ளன.






### தமிழ்வழிக் கல்வி

ஆசிரியர்: புலவர் சுந்தரராசன்,

வெளியீடு: வளனரசுப் பதிப்பகம்,
பி.75, திரு.வி.க. குடியிருப்பு
தேனாம்பேட்டை,
சென்னை-18.

விலை: 12.00 பக்கம்:120

தமிழ் வழிக் கல்வியை வலியுறுத்தும் இந்நூலில் தமிழ்மொழியின் வளர்ச்சி-பெருமை ஆகியவையும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. மூவேந்தர்களின் காலத்தில் முத்தெனப் போற்றப்பட்ட தமிழ்மொழி, களப்பிரர்களின் காலத்தில் சிறிது தளர்ச்சியுற்ற செய்தியும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆட்சிமொழியாகத் தமிழ் ஒளிவீசித் திகழ வேண்டும் என்ற கருத்தை நூலாசிரியர் வலியுறுத்தியுள்ளார். ஆங்கில மொழியின் ஆதிகத்தையும் கட்டிக்காட்டி அது தவிர்க்கப்படவேண்டும் என்பதையும் தெளிவாக்கியுள்ளார்.

கட்டாய இந்தியை எதிர்த்துத் தமிழகம் கண்ட களப்போர்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தில் அறிஞர் பலர் ஈடுபட வேண்டும் என்று அவாவுகிறார். தமிழக அரசு தமிழ் வளர்ச்சித் துறையின் வாயிலாகச் செய்து வரும் தொண்டுகளை எடுத்துக்கூறிப் பாராட்டியிருக்கிறார். மன்னர்கள் காலத்திலிருந்து இக்காலம் வரை கல்வி நிலை எப்படி இருந்தது என்பதை வரலாற்றுக் கண்கொண்டு ஆய்ந்துள்ளார். எளிய இனிய நடை நூலுக்குப் பெருமை சேர்க்கிறது.

—தமிழ்ப்பித்தன்

### சினிமா புரஜக்டர் மெக்கானிசம்

ஆசிரியர்: பா.கலைச்செழியன்
வெளியீடு: பைலட் பப்ளிகேஷன்ஸ்,
309, லிங்கிச்செட்டித் தெரு,
சென்னை-600 001

விலை: ரு. 15 பக்கம்: 149

மக்களைக் கவரும் சாதனங்களில் மிக முக்கிய இடத்தை வகிப்பது திரைப்படமாகும். இந்தத் திரைப் படத்தை நமக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவது புரஜக்டராகும்.

பொதுவாக, தமிழில் தொழில் நுட்ப நூல்கள் முறையாக இருக்கின்றன. இந்தக் குறையை நிறைவு செய்யும் வகையிலே, புரஜக்டரைப் பற்றிய இவ்விளக்க நூல் உதவுகிறது.

புரஜக்டரைப் பற்றிய பல நுணுக்கங்களை, ஆசிரியர் தெளிவுபடுத்தியிருப்பது பாராட்டுக்குரியது. இத்துறையில் பயிலும் மாணவர்க்கு இது ஒரு சிறந்த கையேடாக மட்டுமல்ல, ஆப்பரேட்டர் தேர்வுக்குச் செல்லும் மாணவர்க்கும்கூட இது நல்ல துணையாக விளங்குகிறது.

—பி.வி.கிரி.

### வெற்றியழகன் கவிதைகள்

ஆசிரியர்: புலவர் வெற்றியழகன்
பதிப்பாளர்: புலவர் பதிப்பகம்,
29, அபிபுல்லா குறுக்குத்
தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை-600005.

பக்கம்: 144 விலை ரு:20

'புலவர் வெற்றியழகனின் கவிதைகள் ஒரு பூக்காடு. நடையோ புயல்! மடையுடைத்த வெள்ளம் போல் கருத்துக்கள்! சுயமரியாதைச் சுடர் ஒளிவிடுகிறது. சுவையும் ஏராளம்......' என்றெல்லாம், தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் இந்நூலுக்கு முன்னுரையாம் முடிசூட்டியிருக்கிறார்.

பல்வேறு கால கட்டங்களில், பல்வேறு யாப்புகளில் புனையப்பட்ட கவிதைகளின் தொகுப்பு நூலாகும் இது. தமிழ், இயற்கை, சிறுவர், காதல், சான்றோர், சமுதாயம், பகுத்தறிவு, இந்தி எதிர்ப்பு ஆகிய எட்டுத் தலைப்புகளுக்கு உட்பட்ட பிரிவுகளில் வெட்டி வைத்த செங்கரும்புத் துண்டுகளாக இனிக்கும் கவிதைகள் தரப்பட்டுள்ளன.

'தமிழ்மொழியே எனைக்காக்கும்
உயிராகும்-அது
தன்மானம் விளைக்கின்ற
பயிராகும்..'

—என்பதுபோன்ற சந்தப்பாடல் கனிலாகட்டும், அத்தனையிலும் தமிழ் தித்திக்கிறது; தன்மான உணர்ச்சி கொப்பளிக்கிறது. தமிழறிஞர்கட்கு இந்த நூல் தமிழ் விருந்தாக உருவாக்கப்பட்டுள்ளது.

—'முடிகொண்டான்.

### பிளாக் செய்வது எப்படி?

ஆசிரியர்: டி.என்.ஜி.பால்
பதிப்பாளர்: பைலட் பப்ளி
கேஷன்ஸ், அஞ்சல் பெட்டி
எண்.1545, 309 லிங்கி
செட்டித் தெரு, சென்னை--1

பக்கம்:144 விலை ரு.15

படங்கள் இடம் பெறாத பத்திரிகைகளே இப்போது இல்லை. ஆஃப்செட் போன்ற முன்னேற்றங்கள் அச்சகத் துறையில் வந்துவிட்டபோதும், படங்களை 'பிளாக்' செய்து அச்சிடும் ஆரம்ப கால அச்சக முறை இன்றளவும் வளர்ந்து கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம்.

மிகச் சிரமமான செய்முறையில் உருவாகும் பிளாக்குகள் எத்தனை வகைப்படும்? அதைச் செய்வதற்கான கருவிகள், துணைக்கருவிகள் யாவை? புகைப் படத்தை நெகடிவ் பிலிம் எடுப்பது, தகட்டில் அச்சகப் பிரதி எடுப்பது, எட்சிங் என்பதென்ன? மௌண்டிங் செய்வது எவ்வாறு? பிளாக் செய்வதற்கான பொருட்கள் எங்கெல்லாம் இருந்து பெறப்படுகின்றன, என்பதையெல்லாம் மிக விரிவாக அதே நேரத்தில் எல்லோருக்கும் புரியும்படி எளிதாக கட்டுரைகளாகத் தந்திருக்கிறா[ர்] நூலாசிரியர்.

பிளாக் செய்யும் செய்முறைகள் பற்றிய பல்வேறு கட்டப் படங்களும் கட்டுரைகள் தோறும் போட்டுக் காட்டி விளக்கப்பட்டுள்ளன. 'பிளாக் மேக்கிங் 'தொழிலில் ஈடுபட நினைப்போர் இதைப் படித்துவிட்டே துணிந்து தொழிலில் இறங்கலாம். மிக நல்ல முயற்சி.

—சோழராஜா

நூல்நயம் பகுதிக்கு இரண்டு படிகள் அனுப்புதல் வேண்டும். —ஆசிரியர்.





# யாழ்நூல் தந்த விபுலானந்தர்

**யா**ழ் என்னும் இசைக்கருவி தமிழகத்தில், நெடுங்காலத்திற்கு முன்பு பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. காலச் சுழற்சியில், யாழ் தமிழகத்தை விட்டு மறைந்துவிட்டது. அதனால் யாழ் எப்படி இருக்கும் என்பதே பலருக்கும் தெரியாத நிலை இருந்து வந்தது. யாழ் எவ்வாறு இருக்கும் என்பதைக் கற்பனைக் கண் கொண்டு ஓவியமாகத் தீட்டி வடிவமைத்து, யாழ் குறித்து நூல் ஒன்றையும் படைத்துத் தமிழ்கூறும் நல்லுலகுக்கு அளித்தவர் விபுலானந்த அடிகள். அவரது பிறந்த நாளை (மார்ச் 26) முன்னிட்டு அவரது வாழ்க்கை வரலாறு இங்கே சுருக்கமான அளவில் இடம் பெறுகிறது.

—புலவர் தமிழ்ப்பித்தன்

**ஈ**ழ நாட்டைச் சேர்ந்த காரைத்தீவு என்னும் பகுதியில் சாமித்தம்பியார் கண்ணம்மையார் தம்பதிக்கு மகனாக 1892 மார்ச் 26ஆம் நாளன்று தோன்றினார் விபுலானந்த அடிகள். பெற்றோர் அவருக்குச் சூட்டிய பெயர் மயில்வாகனன் என்பதாகும்.

மயில்வாகனன் ஐந்தாவது வயதில் குஞ்சித்தம்பி ஆசிரியரிடம் கல்வி கற்கத் தொடங்கினார். தமது தந்தையிடமும் தாய்மாமனார்களான வசந்தராயபிள்ளை, சிவகுருநாதபிள்ளை ஆகியோரிடமும் அவ்வப்போது பாடங்கேட்டுப் படிப்பார்.

காரைத்தீவில் இருந்த சைவப் பாடசாலையின் தலைமை ஆசிரியரான வைத்தியலிங்க தேசிகர் அவர்களிடம் தமிழ் மொழியையும் வடமொழியையும் கற்றுத் தேர்ச்சி பெற்ற மயில்வாகனர், தமிழ் இலக்கிய நூல்களிடத்துப் பேரார்வம் கொண்டு பயின்றார். தமது பன்னிரண்டாவது வயதிலேயே பற்பல நூல்களைப் படித்துப் புலமைத் திறம் பெற்றார். யாப்பிலக்கண அமைதி கெடாதபடி பாடல்களை இயற்றினார்.

அக்காலத்தில் நமது இந்திய நாடும் இலங்கைத்தீவும் ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டிருந்ததால் ஆங்கிலக் கல்வியும் ஒருவருக்கு இன்றியமையாதது என்ற சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. அதனால் மயில்வாகனரும் ஆங்கிலப் பள்ளியில் சேர்ந்து பயின்றார். பின்னர் கல்லூரிக் கல்வியையும் பெற்றார். பதினாறாவது வயதில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத் தேர்வு எழுதிய அவர் கல்லூரியிலேயே முதல் மாணவராய்த் தேறினார். அதன் காரணமாக, கல்லூரி முதல்வரின் அன்பைப் பெற்றார். அவரது ஊக்குவிப்பின் காரணமாக ஆசிரியர் பயிற்சியினை மேற்கொள்ள முனைந்தார்.

கொழும்பு நகருக்குச் சென்று ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து இரண்டாண்டுகள் பயின்ற அவர், ஓய்வு நேரத்தில் வெள்ளவத்தையில் இருந்த பண்டிதர் கந்தையா பிள்ளை, தாமோதரம் பிள்ளை போன்றோரிடம் சங்க இலக்கியங்களைக் கற்றுக்கொண்டார். பயிற்சி முடிந்ததும் அர்ச் மைக்கேல் பள்ளியில் ஆசிரியர் பணியை மேற்கொண்டார்.

பயிற்றுவிக்கும் பணியை மேற்கொண்ட போதிலும் பயிலும் பணியிலேயே அவருக்கு விருப்பு அதிகமாயிற்று. அதனால் மறுபடியும் மாணவரானார். 1915ல் அரசினர் பொறியியற் கல்லூரியில் சேர்ந்து அறிவியற்கலையையும் கற்கத் தொடங்கினார். அதிலும் அவர் சிறந்து விளங்கினார். 1916ல் டிப்ளமா தேர்வில் முதன்மை நிலையில் தேர்ச்சி பெற்றார் என்றாலும் தமிழின் மீதிருந்த ஆர்வம் துளியும் குறையவில்லை. ஈழத்திலிருந்து மதுரைக்குச் சென்று மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்திய பண்டிதம் தேர்வெழுதி வெற்றிபெற்றார். அன்று முதல் அவர் பண்டித மயில்வாகனர் ஆனார்.

இராமகிருஷ்ண சங்கத்தைச் சேர்ந்த சர்வானந்தர் என்னும் பெரியார் ஒருவர் இலங்கைக்கு வருகை புரிந்தபோது அவரது தொடர்பு மயில்வாகனருக்குக் கிடைத்தது. அந்தத் தொடர்பு துறவு நிலையில் அவருக்கு ஆர்வத்தை ஏற்படுத்தியது.

அறிவியல் டிப்ளமா பெற்ற மயில்வாகனருக்கு அரசினர் பொறியியல் கல்லூரியில் சாயனத்துணையாசிரியர் பணி கிடைத்தது. அவரது புகழ் பரவியது. அதனால் 1917ல் அர்ச் சம்பத் கிரீவியஸ் கல்லூரியில் விரிவுரையாளர் பணியே கிடைத்துவிட்டது. 1920ஆம் ஆண்டில், மானிபாய் இந்துக் கல்லூரி, மயில்வாகனரை முதல்வராக ஏற்றுக்கொள்ளும் பெருமையைப் பெற்றது.

மாணவர்களுக்குப் பாடம் சொல்லித்தரும்போதே, தமிழ் மொழிக்கும் பிறமொழிகளுக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை எடுத்துரைத்து வந்ததுடன் தமிழ்மொழி எவ்வகையில் சிறப்பு வாய்ந்தது என்பதையும் விளக்கிவந்தார் மயில்வாகனர்.

'ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்' என்ற அமைப்பை இலங்கையில் நிறுவித் திறம்படப் பணியாற்றினார். பிறமொழிகளிலுள்ள நல்ல செய்திகளைத் தமிழில் பெயர்த்துப் பாடலாக வெளியிட்டார்.

மயில்வாகனர் இந்துக் கல்லூரி முதல்வராகத் தொண்டாற்றி வந்த போது அவரது உற்ற நண்பராக விளங்கிய திருவிளங்கம் என்னும் நண்பர் எதிர்பாராமல் நோயுற்றார். சிகிச்சை பயன்படாமல் 1922ல் அவர் மரணமுற்றார். அவரது மரணம் மயில்வாகனரைக் கலக்கமடையச் செய்துவிட்டது. ஏற்கனவே

துறவுநிலையில் நாட்டம் கொண்டிருந்த அவர், துறவியாவதில் முனைப்புக் காட்டினார். சென்னைக்கு வந்து ராமகிருஷ்ண சங்கத்திற்குச் சென்று தனது எண்ணத்தைத் தெரிவித்தார். அந்தச் சங்கத்தினர் அவரைப் பெருமகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு, 'பிரபோத சைதன்யர்' என்னும் புதிய பெயரையும் அவருக்குச் சூட்டினர்.'

'இராமகிருஷ்ண விஜயம்' என்னும் பத்திரிகைக்குரிய கட்டுரைகள் எழுதிவந்த மயில்வாகனர், நாளடைவில் அதன் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார். 'வேதாந்த கேசரி' என்னும் இதழுக்கும் அவர் ஆசிரியர் ஆனார்.

1924ஆம் ஆண்டில் சுவாமி சிவானந்தரிடம் ஞானோபதேசமும் சிவதீக்கையும் பெற்றார். 'சுவாமி விபுலானந்தர்' என்னும் புதிய திருப்பெயரையும் பெற்றார்.

தமிழ்த்தொண்டு, சமயத்தொண்டு, கல்வித்தொண்டு எனப் பல்வேறு தொண்டுகளைச் செய்து வந்த விபுலானந்தர் நாடகக் கலைக்கும் மாபெரும் தொண்டினைச் செய்தார்.

தமிழில் நாடக நூல்கள் அருகிவிட்டதை உணர்ந்த அவர், ஆங்கில மொழி நாடக அமைப்பையும் வடமொழி நாடக அமைப்பையும் நன்கு ஆய்வு செய்து, தமிழ்ப் பண்பாட்டிற்குரிய வகையில் 'மதங்க சூளாமணி' என்னும் நாடக இலக்கண நூலை உருவாக்கினார். நாடக நூல் தீட்டுவதை விட நாடக இலக்கண நூலை உருவாக்குவது என்பது அரியபணி ஆகும்; சிறந்த பணியாகும்.

1925ஆம் ஆண்டில் ஈழத்திற்குத் திரும்பிச் சென்று இராமகிருஷ்ண சங்கத்தார் அங்கு நடத்திய கல்விக்கூடங்களின் பொறுப்பை ஏற்றுச் செயல்பட்டார். முன்னர் இருந்த கல்வி நிலையங்கள் சிறந்து விளங்கவும், புதிய கல்வி நிலையங்கள் உருவாகவும் ஆவன செய்தார். மக்கள் அறிவுக்கண் பெற்று விளங்குவதற்கு அரும்பாடுபட்டார்.

தனது ஞானாசிரியரின் நினைவாக சிவானந்த வித்தியாலயம் என்னும் கல்வி நிலையத்தைத் தொடங்கி, அதன் தலைமையாசிரியராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றி வந்தார். தமிழ் மொழியின் பெருமை, தமிழர் பண்பாட்டுச் சிறப்பு ஆகியவற்றை மாணவர்களுக்குத் தக்க முறையில் போதித்தார். அவரது பெருமையை அறிந்த ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் தமது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்படி அவரை வேண்டிக்கொண்டார். விபுலானந்தர் அந்த வேண்டுகோளை மனமுவந்து ஏற்று, 1931ஆம் ஆண்டில் பேராசிரியர் பணியை மேற்கொண்டார்.

**நல்லோர் அறிவுரை**

மனத்தில் பல தீயவுரைகள் நிறைந்து சேறாகியிருக்கின்றன. சேறுள்ள நீரைத் தெளிய வைக்கத் தேற்றாங்கொட்டையைப் போடுவது மக்கள் வழக்கம். அதுபோன்று கெட்டுச் சேறாகிப் போன மனத்தைத் தெளிய வைக்க வேண்டுமெனில் நல்லவர்களின் அறிவுரையான தேற்றாங் கொட்டை வேண்டும். அவ்வறிவுரையைக் கேட்டுச் சிந்தித்துத் தங்கள் வாழ்வை வளப்படுத்திக் கொள்ளவேண்டும்.

விபுலானந்தர்

நாடகக் கலையில் ஆர்வம் கொண்டிருந்தது போலவே இசைக் கலையிலும் பேரார்வம் கொண்டிருந்தார் விபுலானந்தர். திருஞானசம்பந்தர் தலந்தோறும் சென்று, தேவாரப் பாடல்களைப் பாடிய போது திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்னும் பெரியார், அப்பாடல்களை யாழின் வழியாக இசைத்தார் எனப் பெரிய புராணத்தில் சொல்லியிருப்பதை விபுலானந்தர் சிந்தித்துப் பார்த்தார். சிலப்பதிகார உரை நூல்களிலும் யாழ் குறித்து இடம் பெற்றிருந்த சில செய்திகளை ஆய்ந்தார். அதன் விளைவாக, 'பழந்தமிழ் இசையும் பிற நுண்கலையும்' என்னும் அரிய ஆராய்ச்சி விரிவுரை நிகழ்த்தினார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிவந்தகாலத்தில், அங்கே இசைப்பேரறிஞராக விளங்கி வந்த பொன்னையா பிள்ளை அவர்களின் தொடர்பு, விபுலானந்தரின் இசை ஆய்வுக்குப் பெரிதும் துணையாக அமைந்தது.

சகோடயாழ், செங்கோட்டி யாழ் முதலிய பழைய யாழ்களின் அமைப்புமுறை எப்படி இருக்க வேண்டும் என்பதை ஓவியமாகத் தீட்டிய விபுலானந்தர் தாமே உருவாக்கவும் செய்தார். தக்க இசையறிஞர்களைக் கொண்டு யாழ் இசைத்துக் காட்டவும் செய்தார்.

யாழ் குறித்து, உலகெலாம் புகழும் வண்ணம் 'யாழ்நூல்' என, நூல் ஒன்றினை யாத்து, 1947 ஜூன் திங்கள் 19ஆம் நாளன்று தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருக்கொள்ளம்புதூர் என்னும் ஊரில் அரங்கேற்றம் செய்தார்.

சிவானந்தம் என்னும் இசைவல்லுநரைக் கொண்டு, அந்த யாழை மீட்டச்செய்து மக்களையெல்லாம் இசைவெள்ளத்தில் மூழ்கிடச் செய்தார் விபுலானந்தர்.

யாழ்நூல்-தமிழிசைத் துறையின் பெருமைக்கு வாய்த்த அரிய நூலாகும்.

ஆங்கிலம், தமிழ், வடமொழி, சிங்களம், பாலி ஆகிய பலமொழிகளில் வல்லவராகத் திகழ்ந்த விபுலானந்தரின் தமிழ்த்தொண்டு மூவகைப் பட்டதாகும்.

ஆய்வுசெய்து, தான் கண்டறிந்த நுண்ணிய கருத்துக்களைச் சொற்பொழிவு வாயிலாகப் பொதுமக்களிடம் வெளியிட்டது, ஒருவகைத் தொண்டு.

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடான 'செந்தமிழ்' என்னும் திங்கள் இதழின் வாயிலாகவும், கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடான, 'தமிழ்ப்பொழில்' வாயிலாகவும், தான் ஆசிரியராக இருந்த இராமகிருஷ்ண விஜயம்' வாயிலாகவும் கட்டுரைகள் எழுதி வெளியிட்டது, இரண்டாவது வகைத் தொண்டு.

யாழ்நூல் போன்ற பல நூல்களின் வாயிலாகச் செய்தது, மூன்றாவது வகைத்தொண்டு.

''சங்க நூல்களையும் சைவ சித்தாந்த சாத்திரங்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, அவற்றின் சிறப்பை வெளிநாட்டவர்கள் அறியுமாறு செய்யவேண்டும்'' என்பது விபுலானந்தரின் பேரவா ஆகும்.

சமூகத்தொண்டிலும் பேரார்வத்துடன் ஈடுபட்டார் விபுலானந்தர். பலருக்கும் தனிப்பட்ட முறையில் உதவி செய்துள்ளார். அனாதைகளிடம் மிகுந்த அன்பு காட்டிவந்தார். ஏழைபங்காளராக விளங்கினார். மனித இனத்தில் உயர்வு தாழ்வு கிடையாது என்பது அவரது அசைக்க முடியாத கொள்கை. சர்வ மத சம்மதராகவும் விளங்கினார்.

யாழ்நூலை ஆங்கிலத்திலும் எழுதவேண்டும் என்று சில பெருமக்கள் அவரிடம் வேண்டிக்கொண்டனர். அதற்கு ஒப்புக்கொண்டார் விபுலானந்தர்.

ஆனால்..,அவரது உடல் நலம் குன்றிவிட்டது. யாழ்நூலின் அரங்கேற்றத்தின்போதே குன்றியிருந்தது. உடல்நலக் குறைவு அவரை ஓய்வு கொள்ளவைத்தது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இராமகிருஷ்ண சங்கத்து' நண்பர்களும் மற்றும் பலரும் அவரது உடல் நலம் காக்க முயன்றனர். மருத்துவர்களும் தக்க வகையில் சிகிச்சை மேற்கொண்டனர். என்றாலும், பயன் கிட்டவில்லை. 1947ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 19ஆம் நாளன்று தமது 55வது வயதில் மறைவெய்தினார்.'

விபுலானந்தர் மறைந்தாலும் தமிழ்மொழிக்கு அவர் செய்த சேவை-குறிப்பாக தமிழ் இசைத் துறைக்கு அவர் செய்த தொண்டு காலத்தால் மறையாத நிலையைப் பெற்றுவிட்டது. ●



# ஊரின் பெயர் உருவானது எப்படி?




மக்கள் கூடிவாழும் பகுதியான நகரம், கிராமம் இவற்றை உலகம் முழுவதிலும் குறிப்பிட அழகான பொருத்தமான பெயர்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.

பண்டை நாட்களிலிருந்து ஊர்களுக்குப்பெயர் சூட்டி அழைப்பது என்பது தனித்தமதொரு கலையாகவே வளர்ந்து வந்துள்ளது. ஆனால் ஒரு குறிப்பிட்ட காரணத்தை மனதில் கொண்டு ஊர்களுக்குச் சூட்டப்பட்ட பெயர்கள் அப்படியே இருக்குமென்று சொல்வதற்கில்லை. காலப் போக்கில் அப்பெயர் அவ்வூருக்குச் சூட்டப்பட்டதற்கான காரணமே மறைந்துபோய் காலத்திற்கேற்ப புதிய விளக்கங்களைக் கூறுவதும் உண்டு.

காலமாறுதல்கள் அரசியல் சூழ்நிலைகளினால் சில சிற்றூர்கள் தனித்தன்மையோடு நகர்களாகப் பரிணமிக்கின்றன. சில சமயம் பெருநகரங்கள் தம் புகழும் அழகும் குன்றிச் சிற்றூர்களாகவும் மாறிவிடுகின்றன. அப்படிப் பெருநகரம் சிதையும்போது அது பல ஊர்களாகப் பிரிந்து விடுகிறது. ஊர்கள் பெருநகரங்களாக மாறும்போது பக்கத்திலுள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊர் கூட அந்நகருக்குள் சிறு பகுதியாக மறைந்து விடுகிறது. அப்போது அவ்வூரின் பெயரும் வடிவமும் மாற்றம் பெற்று விடுகிறது.

இப்படி ஊர்களுக்குப் பெயர்களைச் சூட்டும் முறை எங்கே, எப்போது ஆரம்பித்தது என்று சொல்ல முடியாது. எனினும் மக்கள் கூட்டமாக வாழத் தலைப்பட்டபோதும், ஒரு கூட்டத்தின் வாழ்விடத்தையும் மற்றொரு கூட்டத்தினர் வாழ்வதையும் வேறுபடுத்திக் காட்டப் பயன்படுத்திய குறியீட்டுச் சொற்களே நாளடைவில் ஊர்ப்பெயர்கள் தோன்றுவதற்கு வழிகோலியது எனலாம்.

முதன் முதலில் இப்படித் தோன்றிய பெயர்கள் பெரும்பாலும் காரணப் பெயர்களாகவே அமைந்தன. ஆற்றினை, ஒட்டிய ஊர்கள் ஆற்றூர், குளத்தின் கரையிலுள்ள ஊர் குளத்தூர் என்பன போல அவ்வவ் இயற்கைச் சூழல்களை ஒட்டியே பெயர்கள் உண்டாயின. அம்மனிதர்களின் தொடர்புகள், உறவுகள் ஆகியவை விரிய விரிய பல குளத்தூர்களும் பல ஆற்றூர்களும் இருக்கக்கண்டு வேறுபடுத்திக்காட்ட அங்குள்ள காடுகள், மரம், செடி, கொடிகள் இவற்றைக் குறியீடாகக் கொண்டு ஊர்ப்பெயர்களை ஏற்படுத்தினர். கொன்றைக் காடு, மாங்காடு, இரும்பிலி போன்ற பெயர்கள் இதற்குச் சிறந்த உதாரணங்களாம். வளர்ச்சி பெருகப் பெருக மண்ணின் வகைகளை ஒட்டியும் மக்களின் இயல்பான வாழ்க்கை முறைகளை ஒட்டியும் ஊர்ப் பெயர்கள் வரத் தொடங்கின.

உலகத்தில் தோன்றிய முதல் நாகரிகமும், இன்றுவரை அழியாத நாகரிகமும் அன்றைய பேச்சு வழக்கு மொழியைத் தக்கவைத்துக் கொண்டிருக்கின்ற தமிழினம் 5000 ஆண்டுகளுக்கு முன்பே நிலங்களைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என வகைப்படுத்தி, குறிஞ்சியும், முல்லையும் திரிந்து பாலை என்னும் ஐந்தாம் வகை நிலம் தோன்றும் என்பதையும் குறித்துத் தெளிவுபடுத்தி வகைப்படுத்தி வைத்திருந்தனர். இன்ன நிலங்களுக்குரிய ஊர்களுக்கு இன்ன துணையோடு வரும் பெயர்களைப் பயன்படுத்த வேண்டுமென்று வரையறை செய்து வைத்திருந்தனர். முல்லை நில ஊர்கள் பாடி, சேரி என்று முடிபவைகளாகவும் நெய்தல் நில ஊர்கள் பாக்கம் என முடிபவைகளாகவும் வகுக்கப்பட்டிருப்பதை இலக்கியங்களில் காணலாம்.

சங்க இலக்கியங்களுக்குப் பிறகு வந்த காலகட்டங்கள் தொடங்



**பூசை. ச. ஆட்சிலிங்கம்**

இன்று வரை அயலவர் குடியேற்றமும் ஆதிக்கமும் ஏதாவது ஒருவகையில் நம்மைத் தாக்கிக்கொண்டே இருக்கின்றது எனலாம். அடிக்கடி இடம் பெயரும் ஆரியர்களே முதலில் தென்னகம் வந்தனர். அப்போது இங்கு அவர்களது வேதம், மதம் பரவின. அவர்களைத் தொடர்ந்து பௌத்தர்களும், சமணர்களும் தென்னகம் நோக்கி வரத்தலைப்பட்டனர். இப்படி வருபவர்களிடம் அன்று முதல் இன்று வரை ஒரு வழக்கம் கடைப்பிடிக்கப் பட்டிருப்பதைச் சிறிது கவனித்துப் பார்த்தால் புரிய வரும். அதாவது இங்கு வருபவர்கள் முதலில் மக்களோடு சேராமல் ஊர்ப்புறத்தே ஓர் குடியிருப்பை ஏற்படுத்தி அதில் மருத்துவம், கல்வி போன்ற பணிகளை ஆற்றிக்கொண்டு மெதுவாக ஊருக்குள் வந்து, மதங்களைப் பரப்பத் தொடங்கி தங்கள் செல்வாக்கு போதுமான அளவு கிடைத்ததும், ஊருக்குள் ஒன்றிவிடுவர்.

அன்று சமணப்பள்ளிகளும் ஆதுரசாலைகள் என்று தொடங்கி சமயம் பரப்பினர். கடந்த நூற்றாண்டிலிருந்தவர்கள் மருத்துவக் கல்வி போன்ற இயக்கங்களை ஏற்படுத்தினர். இப்படிக் குடியேறியவர்கள் தங்கள் மத, மொழி, இன அடிப்படையில் தங்கள் குடியேற்றங்களுக்கு ஊர்ப் பெயர்களை இட்டனர். முதலில் வந்த பௌத்தர்கள், புத்தர் அடிக்கடி உபதேசிக்க அமர்ந்த அமர்வனம் (ஆம்ரம்-மாமரம்), புத்தர் பேரூரை வென்ற கிருத்ரகூடம் (கிருத்ரம்-கழுகு), தர்மச்சக்கரத்தை உருட்டியது போன்ற இடங்களை நினைவுகூரும் வகையில் மாங்காடுகள், கழுகு மலைகள், சக்கரப்பள்ளிகள் போன்ற ஊர்ப் பெயர்களைச் சூட்டினர்.

அவர்களைத் தொடர்ந்து வந்த சமணர்கள், சத்தியத்தின் மீது வைக்கப்படும் நம்பிக்கையை ஒட்டி சத்தியமங்கலம், பேர் அமண்பாக்கம், சிற்றமண்பூர் போன்ற ஊர்ப் பெயர்களை உண்டாக்கினர். மூன்றாம் நூற்றாண்டிலிருந்து ஆறாம் நூற்றாண்டு வரை சமண சமயமே தமிழகத்து மேலோங்கி இருந்தது. தமிழ் அரியணையிலிருந்து அவர்களைப் போராடிக் கொண்டிருந்தபோது, ஏழாம் நூற்றாண்டில், சைவத்தின் புனிதமிக்க கண்களாக திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் தோன்றினார்கள். இவர்களது இடைவிடாத உழைப்பால் சமய மறுமலர்ச்சி ஏற்பட்டது. மீண்டும் தமிழ் ஆட்சிமொழியானது. சமணம் வெறுக்கப்பட்டுச் சைவம் மேலோங்கியது. இவர்கள் காலத்தில் அவர்களது வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக்கொண்டு ஊர்ப் பெயர்கள் தோன்றின. திருஞானசம்பந்தரின் ஒரு சமயப்பெயர் ஓடம், திருஞானசம்பந்தரை எதிர் கொண்டழைத்த எதிர்கொள்பாடி, திருநாவுக்கரசர் பல்லவ மன்னனால் கடலில் போடப்பட்டுக் கரையேறியதை உணர்த்தும் கரையேறிவிட்ட குப்பம் போன்ற பெயர்கள் உண்டாயின.

இவர்கள் காலத்திற்குப் பிறகு ஏற்பட்ட சமய மறுமலர்ச்சியால் பல ஊர்களும் புராண இதிகாசங்களை அடிப்படையாகக் கொண்ட பெயர்களும் ஏற்பட்டன. ராமன் வரலாற்றில் குறிக்கப்பட்ட பஞ்சவடி, சித்திரகூடம், அயோத்தியாபட்டினம், பாரதத் தொடர்புடைய அல்லிநகரம், அஸ்தினாபுரம் போன்ற ஊர்கள் வந்தன. ஆழ்வார்கள் வைணவத்தைப் பரப்ப முயன்று பெற்ற வெற்றியினால் பாகவதக் கதைகளை ஒட்டி ஆயர்பாடி, கோகுலம், கண்ணபுரம், கண்ணமங்கலம் போன்ற ஊர்கள் ஏற்பட்டன, இதே காலகட்டத்தில்!

பிற்காலச் சோழர்கள் பெரும் வலிவோடு எழுந்தனர். இவர்கள் பெற்ற வெற்றிகளின் பெயரால் புதிய ஊர்களை உருவாக்கினர். கங்கை வெற்றியைக் கொண்டாடும் கங்கைகொண்ட சோழபுரம், கடாரம் வெற்றியைக் கூறும் கடாரம் கொண்டான் போன்ற பெயர்களும் உண்டாயின. இதே சமயம் சோழ அரசிகளும் தங்கள் பெயரால் சில ஊர்களைத் தோற்றுவித்தார்கள். சேரன்மாதேவி, சோழமாதேவி, சோழகுலவல்லி, வானவன்மாதேவி (மானாமதி) என்பன இவற்றுக்கான சான்றுகளாகும். தன் பட்டப்பெயர்களாலும் அரசர்கள் (மதுரையை அழித்தவன் எனப்பொருள்படும்) மதுராந்தகன் பெயரால் மதுராந்தகம் போன்ற பெயர்களை உருவாக்கினர். சில ஊர்களுக்குத் தம் பட்டப் பெயரையே சூட்டினர். ஆனால் அப்பெயர்கள் காலவெள்ளத்தில் நிற்கவில்லை. உதாரணமாக திருக்கச்சூருக்கு நித்தியவிநோதநல்லூர், திருக்கழுக்குன்றத்திற்கு உலகளந்த சோழபுரம் என்று பெயர்களை வழங்கினர். ஆனால் இது நடைமுறைக்கு வரவில்லை.

இதே காலக்கட்டத்தில் வருணாசிரம முறைகள் கடுமையாகப் பின்பற்றப்பட்டன. இதனால் ஏடும், எழுத்தாணியும் குறிப்பிட்ட ஒரு சமூகத்தாரிடம் மாட்டிக் கொள்ள அப்பொழுது ஏற்பட்டிருந்த இறைபக்தியையும், பக்தி உணர்வையும் பயன்படுத்திக் கொண்டு ஊர்ப் பெயர்களைச் சிதைத்தும் மாற்றியும் எழுதினர். இதனால் பல அழகிய தமிழ்ச்சொற்கள் மறைந்து வடமொழிச்சொற்கள் ஏற்படலாயின. மயிலாடுதுறை மாயூரமாகவும், திருமுதுகுன்றம் விருத்தாசலம் ஆகவும் மொழி மாற்றப்பெற்றன. ஊர்ப்பெயர்களுக்கேற்பப் புராணக் கதைகளும் புராணக்கதைகளுக்கேற்ப ஊர்ப் பெயர்களும் சிதைந்தன. அப்பணி இன்றுவரை தொடர்ந்துவருகிறது.



அவர்களுக்குப் பிறகு தெலுங்கர் ஆட்சி, மராட்டியர் ஆட்சி என்று புதிய புதிய அரசுகளும், புதிய புதிய குடியேற்றங்களும் தோன்றின. அப்போதெல்லாம் புதிய ஊர்ப் பெயர்களும் தோன்றலாயின. தெலுங்கர்களான விஜயநகரர் காலத்தில் ஏற்பட்ட குழலால்விஜய நகரம், உத்தமபாளையம், பொன்பட்டி போன்ற ஊர்கள் ஏற்படலாயின. அவர்களது வீழ்ச்சிக்குப் பின் முகமதியர்கள் இந்து, பார்சி, உருது கலந்த ஊர்ப் பெயர்களைத் தோற்றுவித்தனர். பப்பைக்குடி, வத்தலாஸ் போன்றவைகள் அவற்றில் சிலவாம். பிறகு நம்மை நெடுங்காலம் ஆண்ட ஆங்கிலேயர்களது வருகையும் கிறித்துவ மதத்தின் தீவிர நடவடிக்கைகளும் ஜார்ஜ்புரம், சகாயமாதாபுரம் போன்ற கிறித்துவச் சாயல் பெயர்களை ஊர்களுக்குத் தந்தன எனலாம். ஆங்கிலேயர் வாயில் நுழைய முடியாத பெயர்கள் ஒருவழியாகிவிட்டன. சதுரங்கப்பட்டினம்-சட்ராஸ், மாயூரம்-மாயவரம், தரங்கம்பாடி-டிராங்குபார் என்றெல்லாம் ஆகிவிட்டது. இன்னும் என்னென்ன மாற்றங்கள் நிகழ இருக்கின்றதோ! யாரறிவார்?

தமிழகத்தின் ஊர்ப்பெயர்களை ஆராயவேண்டும் என்ற எண்ணத்தைத் தோற்றுவித்தவர்களே ஆங்கிலேயர்தாம்; அவர்கள் 1900 ஆண்டுகளில் வெளியிட்ட அரசுப் பதிவிதழ்களில் கூடுமான ஊர்ப்பெயர்களுக்குரிய விவரங்களைச் சேகரித்து ஆய்ந்து எழுதினர். போதுமான கல்வெட்டுச் சான்றுகள், வரலாற்றுக் குறிப்புகள் ஆகியவை இல்லாததால் இவை செம்மையாக இல்லை. அதனையடுத்து, சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை போன்றவர்கள் நேரடியாகவும், தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான், ரசிகமணி டி.கே.சி. போன்றவர்கள் மறைமுகமாகவும் இதில் ஈடுபட்டனர்.

இப்பொழுதும் பல ஆராய்ச்சி மாணவர்கள் இப்பணியில் ஈடுபட்டிருந்தாலும் அவர்கள் போதிய வெற்றிபெறவில்லை என்றே சொல்ல வேண்டும். ஊர்ப்பெயர்களின் தன்மையையும், பழமையையும் கண்டறிய வரலாற்றுப் பின்னணி, இலக்கிய ஈடுபாடு, பாவிலுக்கும் மேலாகக் கள ஆய்வு போன்றவையே சிறந்த திறவுகோலாகும். அவர்களையே. இத்துறை, புதிய பெயர்களையும் மீட்டுருவாக்கமும் காண எதிர் நோக்கிக் கொண்டுள்ளது.

உதாரணத்திற்கு ஒரு பெயரை இங்கே விளக்கலாம். சென்னையை அடுத்த பொன்னேரிக்கு அருகில் சின்னம்பேடு என்னும் கிராமம் உள்ளது. இது அருணகிரிநாதரின் பாடல் பெற்ற ஊராகும். அவர், இதனைச் சிறுவை என்றே குறிக்கின்றார். பண்டைய நான்முதல் சமீபகாலம் வரை முருகேச முதலியார் இவ்வூர் பற்றிய விளக்கத்தில், 'இராமரின் புதல்வர்களான இலவன், குசன் என்னும் சிறுவர்கள் இராமர் அனுப்பிய அசுவமேதக் குதிரைகளைப் பிடித்துக் கட்டி விட்டார்களாம். இதனால் கோபமுற்ற இராமர், இலக்குவன், அனுமன் போன்ற பெரும் வீரர்களை அனுப்ப அச்சிறுவர்கள் அவர்களை எல்லாம் தோற்றோடும்படிச் செய்துவிடுகின்றனர்.

'இராமரே போருக்கு வந்து போரிட அச்சிறுவர்கள் அவரை நோக்கி அம்பு எடுத்துத்தொடுக்க, சீதை அங்கு வந்து சமாதானம் செய்கிறாள். இப்படிச் சிறுவர் அம்பெடுத்த காரணத்தால் அவ்வூர் 'சிறுவர்அம்பேடு' என்று பெயர் பெற்று, அதுவும் சிதைந்து, சிறுவரம்பேடாய் இப்பொழுது 'சின்னம்பேடாகிவிட்டது' என்பர் என்று இதுவரை வெளியிட்ட குறிப்புகள் கூறுகின்றன. அவர்கள் இதற்குச் சான்றாகச் சிறுவராகியே வந்து அம்பெடுத்த சிறுவாபுரி என்னும் திருப்புகழைச் சான்று காட்டுவர். உத்திரராமாயணத்தில் வரும் கதையைத் தொடர்புப்படுத்த அருணகிரிநாதர் இவ்வூர் திருப்புகழை அருளியிருக்கின்றார்.

எனினும் உண்மை அதுவன்று. அவ்வூர் ஒரு காலத்தில் சமணர்கள் நிறைந்து வாழ்ந்த ஊர். அதன் உண்மையான பெயர் சிற்றமண் பேடு (சிறு அமணர் பேடு) என்பதே ஆகும். இதனை ஒட்டியுள்ள ஊர் வடக்கு நல்லூர் என்பது. இது சமணர்களின் அநேகர் சல்லேகனை என்னும் வடக்கிருந்து உயிர்நீத்த ஊராகும். சின்னம்பேட்டிலே பாழ்பட்டநிலையில் சமணதீர்த்தங்கரரான பார்சுவநாத சுவாமிக்குக் கோயில் ஒன்று உள்ளது. இப்பார்சுவநாத சுவாமிக்குத் தொடர்புடைய வரலாற்றில் தரணேந்திரன் எனும் நாகவடிவுடையன் இவரை வழிபட்டு இங்குள்ள ஒரு துவாரத்தின் வழியாக நாகலோகம் சென்றான் என்பர். இவ்வட்டாரத்தில் கிடைக்கும் நூற்றுக்கணக்கான நாகசிலைகள் தரணேந்திரயட்சனையும் பார்சுவநாதர் வழிபாட்டையும் குறிக்கும். ஆதலின் இதற்குச் சிற்றமண்பேடு என்பதே சரியான ஊர்ப்பெயராகும்.

மொழி இயல் அறிவியலின் வழியாகப் பார்த்தாலும் சிறுவரம்பேடு சிரம்பேடு ஆகுமேயன்றிச் சின்னம்பேடு ஆகாது. அதே சமயம் சிற்றமண்பேடு-சின்னமண்பேடு-சின்னம்பேடு ஆகும். இதுபோன்ற களங்களிலேயே சென்று செய்கின்ற ஆய்வுப்பணிகளே முழுமையையும் நிறைவையும் தரும்.

## முதல் கேலிச் சித்திர இதழ்!



**1841**-ஆம் ஆண்டில், 'பஞ்ச்' என்ற பெயரில், முதன் முதலாகக் கார்ட்டூன் இதழ் இங்கிலாந்தில் வெளிவந்தது.

டேவிட்லோ, பெர்னார்ட் பார்ட்ரிட்ஜ், பிராங் டைசன், மாக்ஸ் பீர்பாம், டாம் வெப்ஸ்டர் மற்றும் பல சிறந்த ஓவியர்களின் ஓவியங்களைக் கொண்டு 'பஞ்ச்' இதழ் மக்களிடையே செல்வாக்கினைப் பெற்றது.

1851-ஆம் ஆண்டில், 'டெல்லி ஸ்கெட்ச் புக்' (Delhi Sketch Book) என்னும் பெயரில் இந்தியாவில் கார்ட்டூன்களையே கொண்ட மாத இதழ், முதலாக வெளிவந்தது. ஏழாண்டுகள் வரை லார்ட் டல்ஹௌசி, லார்ட் கானிங் ஆகியோர் ஆட்சிக் காலத்தில் இவ்விதழ் சிறப்புற நடைபெற்றது.

கார்ட்டூன்களை வெளியிடும் வழக்கம் பாரதியாரின் 'இந்தியா'விலிருந்துதான் தொடங்குகிறது என்று சிலர் கூறுவர். ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வெளிவந்த தமிழ் இதழ்கள் சில இம்முயற்சியை மேற்கொண்டுள்ளன. அவை சமுதாய சீர்திருத்தம் பற்றிய சித்திரங்களாக அமைந்தன. அவற்றுள்ளும் பல மேலை நாட்டு இதழ்களில் வெளிவந்தவற்றின் மறுபதிப்பாகவும் இருந்தன.

அரசியல் துறையில் கார்ட்டூன்களை வெளியிட்டு வாசகர்களைக் கவர்ந்த சிறப்பு பாரதியாருக்கு உரியதாகும்.


1906-ஆம் ஆண்டில் பாரதியார் தமது 'இந்தியா' வார இதழில் கார்ட்டூன்களைத் தொடர்ந்து வெளியிட்டார். அவை மக்களைக் கவர்ந்தன. இதழின் விற்பனையைப் பெருக்கத் திற்கு அவை பெரிதும் துணை செய்தன என்னும் உண்மை உணரப்பட்ட போதிலும் பாரதியாருக்குப் பின், தொடர்ந்த பன்னிரண்டு ஆண்டுகளில் வெளிவந்த தமிழ் இதழ்களில் கார்ட்டூன்கள் வெளியிடப்படவில்லை.

தமிழ்த் தென்றல் திரு வி. க. வை முதல் வாசிரியராகக் கொண்டு வெளிவந்த 'தேசபக்தன்' நாளிதழுக்கு அடுத்த ஆசிரியராய் வந்தவர் வ.வெ.சு. ஐயர். அவர் பொறுப்பேற்ற பின் வாரத்திற்கு ஒருமுறை 'கார்ட்டூன்' வெளியிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

1920-இல் வெளிவந்த 'தமிழ்நாடு' வார இதழில்தான் ஆசிரியர் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, கார்ட்டூன்களைத் தொடர்ந்து வெளியிட்டு, இதழின் ஓர் அங்கமாக அதனைப் பிறர் கருதுமாறு செய்தார்.

—திரு. மா.சு. இளங்கோவன், எழுதிய 'இதழியல் நோக்கு' என்னும் நூலிலிருந்து.

மாணவர் பக்கம்



# விலை மதிப்பில்லாத பேனா

"அம்மா! அம்மா!" என்று கத்திக் கொண்டே அறைக்குள்ளிருந்து வெளியே வந்தான் பாபு.

"என்ன பாபு? ஏன் இப்படி கத்தறே?" சமையலறையிலிருந்து அம்மா கூடத்திற்குள் நுழைந்தாள்.

"என் பேனா ஒன்றைக் காணோம், பார்த்தீங்களா?"

"ஏன்'பா..நீ தானே படிக்கிறாய், எழுதுகிறாய்..உன் பேனாவை எடுத்து நான் என்ன செய்யப் போகிறேன்?"

"அம்மா, நான் பேனாவைப் பார்த்தீங்களா என்றுதானே கேட்டேன்! எடுத்தீங்களா, எழுதினீங்களா என்றா கேட்டேன்?"

"அது சரி! வழக்கமாக உன் பேனாவை அலமாரியில்தானே வைத்திருப்பாய்... அங்கே பார்த்தியா?"

"அது எப்பொழுதும் நான்வைத்திருக்கிற பேனா! இப்போ நான் தேடுவது அதுவல்ல...இன்னொரு பேனா!"

"இன்னொரு பேனாவா? உனக்கு ஏது?"

"அதை அப்புறமா சொல்றேன். இப்பொழுது பேனாவைத் தேடணும். அப்பா எங்கே?"

"அவர் கடைக்குப் போயிருக்கிறார். உன் தங்கையைக் கேட்டுப் பாரேன்!"

"அவளையும் காணோம்!"

'என்ன அண்ணா?' என்று கேட்டுக் கொண்டே தங்கை வெளியே இருந்து வீட்டிற்குள் வந்தாள்

'நீலா, என் பேனாவைப் பார்த்தியா?'

'புதுசா வாங்கினியா?"

'இல்லே பழசுதான்!'

'ஏது?'

'ஒருத்தர் கொடுத்தார். அதெல்லாம் எதற்கு? பேனாவைப் பார்த்தியா?'

'ஏதோ ஒரு பேனா மேஜையின் மேல் இருந்தது. அப்புறம், அதை எடுத்துப் பையிலே போட்டதா ஞாபகம்"

'எந்தப் பையிலே போட்டாய்?"

'இங்கே இருந்த பையிலேதான் போட்டேன்.. ஆமாம் பை எங்கே?'

'சரிதான்...நீ பையைத் தேடு... நான் பேனாவைத் தேடுகிறேன்.."

அடுத்த கணம்....

அந்த வீடு அல்லோலகல்லோலப்பட்டது.

நீலா புத்தக அலமாரியிலும், பாபு மேஜை பீரோவிலும், அம்மா பெட்டி டப்பிகளிலும் தேடோ தேடென்று பேனாவைத் தேடலானார்கள்.

ஒரு வேளை, பீரோ அடியில் விழுந்திருக்குமோ என்று பீரோவின் கீழே கையை விட்டுத் துழாவினான் பாபு. அடுத்த நொடியில் 'வீல்' என்று கையை உதறிக் கொண்டு எழுந்தான் பாபு.

அம்மாவும் தங்கையும் 'என்ன? என்ன?' என்று கத்திக் கொண்டே ஓடி வந்தனர்.

பாபு பயந்த முகத்துடன் கையை நீட்டி தரையைக் காட்டினான். அங்கே, ஒரு தேள் கொடுக்கைத் தூக்கிக் கொண்டு யாரைக் கொட்டலாம் என்று காத்திருந்தது.

'பிள்ளையாரப்பா... பிள்ளையாரப்பா...' என்று சொல்லிக் கொண்டே, சமையல் அறையிலிருந்து துடைப்பத்தை எடுத்து வந்து தேளை அடித்துக் கொன்றாள் அம்மா..

**மா. தா. ஸ்ரீதர்,**
ஒன்பதாம் வகுப்பு,
ஸ்ரீ இராமகிருஷ்ணா மிஷின்
மேல் நிலைப் பள்ளி
சென்னை-17

தங்கை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தேளை வீதியில் எறிந்து விட்டு உள்ளே நுழைந்தாள் அம்மா. பின்பு பாபுவைப் பார்த்து, 'ஒரு பழைய பேனாவிற்கா இத்தனை ஆர்ப்பாட்டம்?" என்று கேட்டாள்.

"அம்மா! அது சாதாரண பேனா இல்லே! விலை மதிப்பில்லாத பேனா!"

"அது என்ன அப்படிஅதிசயம்?"

பாபு சொன்னான்:

நேற்று மாலை நான் பள்ளிக் கூடத்திலிருந்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்தேன். சிக்னலோ, சுரங்கப் பாதையோ இல்லாத அந்தச் சாலையில் ஒரு பெரியவர் பஸ் வருவதைப் பார்க்காமல் சாலையைக் கடந்து கொண்டிருந்தார்.

அந்த 'வி' பஸ் படுவேகமாக வந்து கொண்டிருந்தது.

ஆபத்தை உணர்ந்தே நான் வேகமாக ஓடி அப்பெரியவரை நடைபாதை ஓரமாகத் தள்ளிவிட்டு நானும் கீழே விழுந்து விட்டேன்.

நல்ல வேளை! பஸ் யார் மீதும் மோதாமல் போய் விட்டது. நாங்கள் தப்பித்துக் கொண்டோம்!

அந்தப் பெரியவர் நான் தள்ளியதால் கீழே விழுந்ததைப் பற்றிக் கொஞ்சமும் வருத்தப்படாமல் நான் விழுந்ததைப் பற்றிக் கவலைப்பட்டு, 'உனக்கு ஏதாவது அடி பட்டதா?' என்று கேட்டார்.

நான் 'இல்லை!' என்றேன்.


'ஒரு பெரிய விபத்திலிருந்து என்னைக்காப்பாற்றினாய்! இந்தா, இதை வைத்துக் கொள்!' என்று ஒரு நீலநிறப்பேனாவைக் கொடுத்து என்னை வாழ்த்தினார். அதைத் தான் தேடுகிறேன்.

அப்பொழுதுதான் கடையிலிருந்து காய்கறிகளை வாங்கிக் கொண்டு வந்த அப்பா உள்ளே நுழைந்தார். நுழைந்து, 'இங்கே என்ன கதை நடக்குது?' என்று கேட்டார்.

'ஒரு பேனாவைக் காணோமாம். அதைத் தேடிக் கொண்டு இருக்கிறோம்'' என்று சொன்னாள் அம்மா; சொல்லி காய்கறிப் பையை அப்பாவிடம் இருந்து வாங்கிக் கொண்டாள்.

'இதோ! இந்தப் பையிலேதான் பேனாவைப் போட்டிருந்தேன்!" என்றாள் தங்கை.

அம்மா காய்கறிகளைக் கீழே கொட்டினாள். அத்துடன், அந்தப் பெரியவர் அன்புடனும் ஆசியுடனும் கொடுத்த விலை மதிப்பில்லாத பேனாவும் விழுந்தது! பாபு மகிழ்ச்சியோடு அதை எடுத்து வைத்துக் கொண்டான்.



# கண்டுபிடிப்பு


பூங்கோவன்

'தந்தி இல்லாக் கம்பி'தனைத்
தந்தவர் தாமே மார்கோனி
சிந்தை கவரும் 'பேசும்படம்'
தாமஸ் எடிசனின் முயற்சியாகும்!


சிந்தனை யாளர் வாட்டர்மேன்
சிறப்பாய்க் கண்டார் 'பேனா'வை!
விந்தை யான 'தொலைக்காட்சி'
வழங்கிய அறிஞர் பேயர்டு!

'பறக்கும் விமானங் கண்டவர்கள்
பார்புகழும் ரைட் சகோதரர்கள்,
சிறக்கும் இரயிலின் 'இன்ஜினைத்
தந்தவர் அறிஞர் ஸ்டீபன்சன்!

ஒன்றைக் கண்டால் அதைப்போல
உடனே செய்து பழகிடுக!
இன்றையத் தேவைக்கு ஏற்றபடி
இன்றே கண்டு பிடிப்போமே!



## ரொட்டி மியூசியம்



ரஷ்யாவிலுள்ள ஒரு கிராமத்தில் விந்தையான அருங்காட்சியகம் ஒன்று இயங்கி வருகிறது. அது என்ன என்பதை உங்களால் ஊகிக்க முடிகிறதா? ரொட்டி மியூசியம்தான் அது.

ரொட்டியின் வரலாறு என்பது, பல நாடுகளின் தேசிய பழக்க வழக்கங்களோடு சம்பந்தப்பட்டது. உதாரணமாக, பாகிஸ்தானில் திருமணத்துக்கு முன்பாக மணப் பெண், 50 பவுண்டு ரொட்டித் துண்டு தயாரிப்பதற்குத் தேவையான ரொட்டி மாவைப் பிசைந்து தர வேண்டுமாம்.

ரொட்டித் துண்டைப் பகிர்ந்து கொள்பவர்கள் வாழ்நாள் முழுவதும் நண்பர்களாக இருப்பார்கள் என்பது இஸ்லாமிய நாடுகளில் பழங்காலத்தில் நிலவிய ஒரு கருத்தாகும்.

இன்று ரொட்டியானது, நாடுகளுக்கிடையே சமாதானம் மற்றும் நட்புறவுக்கு அடையாளமாக இருக்கிறது.

ரஷ்ய கிராமத்தில் உள்ள ரொட்டி மியூசியத்தில், அந்தக் கிராமத்தில் அகழ்வாராய்ச்சிகளின் போது கண்டறியப்பட்ட, 900 ஆண்டுகளுக்கு முற்பட்ட கோதுமை தானியங்கள் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன. 5,300 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட தஷூர் பிரமிடின் உள்ளே கண்டு பிடிக்கப்பட்ட பண்டைய கால தானியங்களின் புகைப்படங்களும் அந்த மியூசியத்தில் இடம் பெற்றுள்ளன.

இப்போதைய ரொட்டி தயாரிப்பு முறை பண்டைய எகிப்தில்தான் தோன்றியது என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

மியூசியத்தில் உள்ள ஒரு அறையில், சோவியத் விண்வெளி வீரர்கள் லியோனி பொபோவும், விளதிமிர் ரியூமினும் விண்வெளிப் பயணத்தின் போது சாப்பிட்ட ரொட்டியின் மாதிரியும் வைக்கப்பட்டுள்ளது.

## அறிஞர்களின் அனுபவ மொழிகள்

அறியாமையுடன், தன்னடக்கம் இல்லாமல் ஒருவன் நூறாண்டுகள் வாழ்வதைக் காட்டிலும் அறிவுத் தெளிவுடன் சுயநினைவோடு ஒரு நாள் வாழும் வாழ்க்கையே சாலச் சிறந்தது.

—புத்தர்

சிந்திக்கும் பொழுதைவிட அதன் செயல்புரிகின்ற போதே நாம் முழு அறிவு பெறுகின்றோம்.

—இங்கர்சால்

சோம்பேறி இரண்டு முட்களுமில்லாத கடிகாரம் அது ஓடினாலும் பயனில்லை; நின்றாலும் பயனில்லை.

—சௌப்பர்

நமது உடல்,நோய் இல்லாமல் நலமுடன் இருப்பது முதன்மையான இன்பம். நமது மனதில் கவலை இல்லாமல் இருப்பது இரண்டாவது இன்பம். மற்ற உயிர்க்கு உதவியாக நாம் வாழ்வது மூன்றாவது இன்பம்.

டாக்டர் மு.வ.


ஒவ்வொரு நண்பனும் என்றாவது ஒரு நாள் பகைவனாக மாறக்கூடும் என்ற உணர்வுடன் பழகு. ஒவ்வொரு பகைவனும் என்றாவது ஒருநாள் நண்பனாக மாறக்கூடும் என்ற நினைவுடனே பழகு.

—பெர்னாட்ஷா

ஒரு காரியத்தைச் சரியாகச் செய்ய அதிக நேரம் ஆகாது; தவறாகச் செய்து விட்டு அதற்குச் சமாதானம் சொல்லத்தான் அதிக நேரம் தேவைப்படும்.

—லாங் பெலோ

# இந்தியாவில்



**அடையாறு :** சென்னையில் உள்ளது. தியாசாபிகல் சொசைட்டியின் தலைமையகம். நளின கலை வளர்க்கும் கலாஷேத்ரா அமைந்துள்ளது.

**அஜந்தா-எல்லோரா :** மகாராஷ்டிரா மாநிலத்தில் அவுரங்காபாத் அருகே உள்ளது. பௌத்த குகைக் கோயில்களுக்கும், அற்புதமான ஓவியங்களுக்கும் புகழ் பெற்றது.

**ஆம்பூர் கோட்டை :** ராஜஸ்தானில் ஜெய்பூர் அருகேயுள்ள மாபெரும் கோட்டை. ராஜபுத்திரக் கட்டடக் கலையின் அருமையான வேலைப்பாடுகள் அடங்கியது.

**ஆனந்த்:** குஜராத் மாநிலத்தில் பால் பண்ணைக்குப் பெயர் பெற்ற இடம். அமுல் தயாரிப்புகள் இங்கேதான். கூட்டுறவுத் துறையில் பெரிய சாதனை நிகழ்த்தியுள்ள இடம்.

**பேலூர் :** கல்கத்தா அருகே உள்ளது. சுவாமி விவேகானந்தர் ஏற்படுத்திய ராமகிருஷ்ண மடத்துக்குப் புகழ்பெற்றது.

**பக்ரா :** பஞ்சாப்பில் சட்லெஜ் நதி மீது கட்டப்பட்டுள்ள பக்ரா அணை இருக்கும் இடம்.

**பீஜப்பூர்:** கர்நாடகத்தில் உள்ளது. அடில்ஷாமீ சுல்தான்களின் தலைநகராக இருந்தது. உலகின் பெரிய மாடம் கொண்ட கோல்கும்பாஸ் உள்ள இடம்.

**சிரபுஞ்சி :** உலகில் அதிக மழை பெய்யும் இடம். மேகாலயாவில் இருக்கிறது. ஆண்டில் பெய்யும் மழை 500 அங்குலம்.

**கன்னியாகுமரி :** அரபிக்கடலும், வங்காளக்கடலும், இந்துமாக்கடலுடன் கலக்கும் இடம். தென்கோடியில் தமிழ்நாட்டில் உள்ளது. கன்னியாகுமரி அம்மன் ஆலயமும், விவேகானந்தர் பாறையும் புகழ்பெற்றவை. சூரியோதய,அஸ்தமனக் காட்சிகள் கண்ணுக்கு விருந்து.

**சித்தரஞ்சன் :** மேற்கு வங்காளத்தில் உள்ளது. ரயில் என்ஜின்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை உள்ள இடம். நீராவி என்ஜின்களைத் தயாரித்து வந்த இது இப்போது மின்சார என்ஜின்களைத் தயாரிக்கிறது.

**டார்ஜிலிங் :** மேற்கு வங்காளத்தின் தேயிலைத் தோட்டங்கள் உள்ள மலைவாசஸ் தலம். இமயமலையடிவாரத்தில் உள்ளது.

**தில்வாரா :** ராஜஸ்தானில் மவுண்ட் அபு அருகே உள்ளது. 11, 12, 13-வது நூற்றாண்டுகளில் கட்டப்பட்ட ஐந்து ஜைனர் ஆலயங்கள் புகழ் பெற்றவை. கட்டடக் கலை வடிவமைப்புக்கும், நுட்ப வேலைப்பாட்டுக்கும் சிறப்பானவை.

**குண்டூர் :** புகையிலைப் பயிருக்கும், மிளகாய்க்கும், சிகரெட் தயாரிப்புக்கும் புகழ் பெற்ற ஊர். ஆந்திராவில் உள்ளது.


**கொனார்க் :** ஒரிசாவில் பூரி அருகேயுள்ளது. இந்து கட்டடக் கலையின் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் சூரியன் கோயில் இங்குள்ளது.

**பாட்னா :** பீகாரின் தலைநகர். மகத நாட்டின் புகழ்பெற்ற பாடலிபுத்திரம் இது. ஷெர்ஷா மசூதி. ஹர்மந்திர் உள்ளது. சீக்கியர் குரு கோவிந்த் சிங் பிறந்த இடம்.

**ராஜ்கீர் :** பீகாரில் நளந்தாவுக்குத் தென்மேற்கே 13 கி. மீட்டரில் உள்ளது. புத்த மதத்தினருக்குப் புனிதமான இடம். புத்தரும் மகா வீரரும் போதனை செய்த இடம். ராஜ்கீர் குன்றுகளில் ஏராளமான பௌத்த, ஜைன ஸ்தூபங்களும், கோட்டைகளும் உள்ளன.

**ஸ்ரீநகர் :** ஏரிகள் நிரம்பிய அழகான காஷ்மீர் நகரம். சுற்றுலாத் தலம். படகு வீடுகளும், ஆடம்பர ஓட்டல்களும் கொண்டது. பட்டுத் துணி, மரவேலைப்பாடு, சால்வைகள், கம்பளங்களுக்குப் புகழ் பெற்றது.

**தும்பா :** கேரளத்தில் திருவனந்தபுரம் அருகே உள்ளது. ஐ. நா. உதவியுடன் அமைக்கப்பட்ட ராக்கெட்தளம் உள்ள இடம். இந்திய விஞ்ஞானிகளால் நிர்வகிக்கப் படும் முக்கியமான விண்வெளி ஆராய்ச்சி நிலையம்.



திரு எஸ். சங்கரன் எழுதிய "இந்தியா 1000 சுவையான செய்திகள்" என்னும் நூலிலிருந்து.

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

## ஊராட்சி ஒன்றியங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்டவாறு தொடக்கக்கல்வி, அடிப்படைச் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் விவசாய வளர்ச்சி ஆகிய பணிகள் உள்ளாட்சி அமைப்புகளிடம் இருந்து வந்தன. ஆனால் 1981-82ஆம் ஆண்டில் இப்பணிகளும், அவை சார்ந்த அதிகாரங்களும் உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து எடுக்கப்பட்டன.

உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து அரசால் முன்பு பறிக்கப்பட்ட அதிகாரங்கள் தற்போது பரவலாக்கப்பட்டு அரசின் திட்டங்கள் செம்மையாகச் செயல்படுத்தப்பட வேண்டுமென்ற சீரிய நோக்கத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கே மீண்டும் கொடுக்கப்படுகின்றன.

பள்ளிகளில் உள்ள மதிய உணவு மையங்கள் செவ்வனே செயல்படப் பார்வையிடவும், பள்ளிக் கட்டடங்களை முறையோடு பராமரிக்கும் பணியிலும், உள்ளாட்சி அமைப்புகள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும். உள்ளாட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் ஆகியோர் தங்கள் ஆளுகைக்கு உட்பட்ட மதிய உணவு மையங்கள் புகாருக்குட்படா வண்ணம் செயல்படும் பொருட்டு அவற்றை அடிக்கடி கண்காணித்து வருவர்.

பள்ளிக் கட்டிடங்களை முறைப்படி பராமரிக்கவும் மற்றும் குடிநீர் கழிப்பக வசதிகளை ஏற்படுத்தவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் ஊராட்சி ஒன்றியங்கள் செயல்படுத்தும்.

• அடிப்படைச் சுகாதாரத்தைப் பாதுகாக்கும் பொருட்டு 1.4.89 முதல் துணைச் சுகாதார மையங்கள் அனைத்தும் ஊராட்சி ஒன்றியங்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இயங்கும். ஊராட்சி ஒன்றியங்களே நிர்வகிப்பதுடன் இவைகளைப் பராமரிக்கவும் செய்யும்.

துணைச் சுகாதார மையங்களில் உள்ள கிராமச் சுகாதாரச் செவிலியர், பகுதிநேரப் பெண் உதவியாளர் மற்றும் பலநோக்குச் சுகாதார ஆண் பணியாளர் ஆகியோரும் ஊராட்சி ஒன்றியங்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இனி பணியாற்றுவர்.

வேளாண்மையில் ஒருங்கிணைந்த வளர்ச்சியைக் காணும் வகையில் அத்துறையில் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தற்பொழுது பணியாற்றும் வேளாண்மை இடுபொருள் பிரிவு மற்றும் வேளாண்மை விரிவாக்கப் பிரிவு ஆகியவற்றைச் சார்ந்த அலுவலர்கள் அனைவரும் ஊராட்சி ஒன்றியத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இனி பணியாற்றுவர்.

இத்துறைகளின் மேற்கண்ட அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் தொடர்ந்து அரசு அலுவலர்களாகவே இருப்பர்.

## கிராம நிர்வாக முறையைச் சீர்திருத்தக் குழு

கிராம நிர்வாக முறையை ஆய்வு செய்து, அதனைச் சீர்படுத்துவதற்கான வழி வகையினை ஆராய்ந்து பரிந்துரைகள் வழங்க மூவர் அடங்கிய குழு ஒன்றைத் தமிழக அரசு அமைத்துள்ளது.

இக்குழுவின் தலைவராக திரு. கே.இலட்சுமிகாந்தன் பாரதி இ.ஆ.ப.(ஓய்வு) அவர்களும், உறுப்பினர்களாக திரு.ஏ.எம். சுவாமிநாதன் இ.ஆ.ப., அவர்களும் (ஆணையர் மற்றும் செயலர், வருவாய்த்துறை) திரு.சி.வி.சங்கர் இ.ஆ.ப. அவர்களும் (இணை ஆணையர், வருவாய் நிர்வாகம், சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகம்) செயலாற்றுவர்.

முன்னாள் கிராம நிர்வாக முறை மற்றும் தற்போதுள்ள கிராம நிர்வாகமுறை ஆகியவற்றை ஆய்வு செய்து, கிராம நிர்வாக முறையினைத் தக்க முறையில் சீரமைத்து, மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வழிமுறைகளை ஆய்வு செய்து, மேற்சொன்ன குழு பரிந்துரைகள் வழங்கும்.

மேற்காணும் கிராம நிர்வாகச் சீரமைப்பு குறித்து ஆலோசனைகள் வழங்க விரும்பும் பொதுமக்கள், தங்களது கருத்துக்களை இக்குழுவின் ஆய்விற்காக இணை ஆணையர், வருவாய் நிர்வாகம், எழிலகம், சென்னை-5 என்ற முகவரிக்கு 25.3.89 க்குள் அனுப்பி வைக்கலாம்.

இது குறித்து, பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்டறியும் பொருட்டு, சில மாவட்டங்களுக்கும் இக்குழு பயணம் மேற்கொள்ளும்.

## அரசு வாரியங்கள் மற்றும் தனிப் பதவிகள் கலைப்பு

கடந்த பத்து ஆண்டுகளில் வாரியங்கள், கழகங்கள் இதர அரசு அலுவலகங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கைகள் மிக அதிகமாக உயர்ந்துள்ளன. இப்போது இவற்றின் எண்ணிக்கை 77 ஆகும். இந்த அமைப்புகளின் பணிகளை அரசு மிகுந்த கவனத்துடன் பரிசீலனை செய்தது. பெரும்பான்மையான இந்த அமைப்புகளுக்குத் தலைவர்கள் அலுவல் சார்பற்றவர்களாக (NON-OFFICIAL) இருக்கிறார்கள். இந்த அமைப்புகளின் செயல்முறை அரசுக்குப் பொறுப்புள்ளதாக இருக்க வேண்டுமென்று அரசு அக்கறை கொண்டுள்ளது. மேலும், இந்த நிறுவனங்களின் நிர்வாகச் செலவினங்கள் பெரிதும் குறைக்கப்பட்டு சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது.

இக் கருத்தினை மனதில்கொண்டு இந்த அமைப்புகளின் பணிகளை மிகக் கவனமாக ஆய்வு செய்து, இயல் இசை, நாடக மன்றம், இசைக் கல்லூரிகள் தவிர ஏனைய பொது நிறுவனங்களுக்கு அரசு அலுவலர்கள்தான் தலைவர்களாக நியமிக்கப்பட வேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது. சிறுசேமிப்பு இயக்கத்திற்குப் பொதுமக்களின் ஆதரவைப் பெரிதும் திரட்ட வேண்டியிருப்பதால் மாநில சிறுசேமிப்பு ஆலோசனைக் குழுவிற்கு, அலுவல் சார்பற்றவர் துணைத்தலைவராக இருப்பார். இதர அரசு நிறுவனங்களுக்கு அரசு உயர் அலுவலர்கள் முழுநேர அல்லது பகுதி நேர அடிப்படையில் தலைவர்களாக நியமிக்கப்படுவார்கள். முழுநேர அல்லது பகுதி நேர தலைவராக நியமிக்கப்படுவது, அந்தந்த நிறுவனத்தின் முக்கியத்துவத்தையும், பணியினையும்

## பொதுமக்கள் குறைகள் முதலமைச்சர் தனிப் பிரிவால் தீர்க்கப்பட்டன.

மேதகு தமிழக ஆளுநர் அவர்களிடம் தங்கள் குறைகளைத் தீர்க்கக் கோரிய கீழ்க்கண்ட பொது மக்களின் மனுக்கள் மீது முதலமைச்சரின் தனிப் பிரிவு தீவிர நடவடிக்கை எடுத்து அக்குறைகள் தீர்க்கப்பட்டன:



**கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு :**

கருணை அடிப்படையில் வேலை வாய்ப்புத் தரக் கோரிய சேலம் மாவட்டம் எடப்பாடியைச் சேர்ந்த திருமதி டி. பன்னீர்செல்வி, கருணையின் அடிப்படையில் சேலம் மண்டல திர்வாக மருத்துவ அலுவலரின் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியமர்த்தப்பட்டுள்ளார்.

**வியாபாரத்திற்குக் கடனுதவி:**

பெட்டிக்கடை வைக்கக் கடனுதவி வழங்கக் கோரிய செங்கல்பட்டு மாவட்டம் அத்திப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு பி. ஏழுமலைக்கு, பாரத ஸ்டேட் வங்கியின் மூலம் ரூ. 3000 கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

**ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை வழங்கப்பட்டது:**

ஓய்வு பெற்று இரண்டு ஆண்டுகளாகியும் பெறப்படாத ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடையை வழங்கக் கோரிய திருச்சி மாவட்டம் கடுகூரைச் சேர்ந்த ஓய்வு பெற்ற மகப்பேறு உதவியாளர் திருமதி தெரசா அந்தோணிக்கு, ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடையை உடனடியாக வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

**திருத்திய பட்டா வழங்கப்பட்டது:**




தன்னுடைய நிலப்பட்டாவில் தன் பெயர் தவறாக உள்ளது என்றும், திருத்தி வழங்க வேண்டும் என்றும், தஞ்சை மாவட்டம் வடசேரியைச் சேர்ந்த திருமதி பி. கே. நவநீதம்மாள் கோரியிருந்தார். இந்நிலத்தின் சிட்டாவில் உள்ள பதிவுகள் சரி பார்க்கப்பட்டு, அவர் பெயருக்குப் பட்டா வழங்கப்பட்டது.

பொறுத்தது. பகுதி நேரத் தலைவராக உள்ள அமைப்புகளுக்கு முழு நேர நிர்வாக இயக்குநர்கள் அல்லது தலைமை நிர்வாகிகள் இருப்பார்கள்.

கீழ்க்கண்ட நிறுவனங்களின் பணிகளை, சம்பந்தப்பட்ட அரசுத்துறைகள் சிறப்பாகச் செயல்படுத்த முடியும் என்னும் காரணத்தினால், அந்த நிறுவனங்கள் தொடர்ந்து பணி புரியத் தேவையில்லை என அரசு முடிவு செய்துள்ளது.

**நிறுவனங்கள் வருமாறு :**

1. தமிழ்நாடு ஆழாய்க் கிணறு வாரியம்.
2. வேளாண்மை உயர்மட்டக் குழு.
3. தமிழ்நாடு சீட்டுக் கழகம்.
4. புதுடெல்லியிலுள்ள தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி (அமைச்சர் அந்தஸ்தில் அலுவல் சார்பற்ற ஒருவர் இந்தப் பதவியை முன்னர் வகித்து வந்தார்).
5. அரசு பொருள் போக்குவரத்துக் கழகம்.
6. தமிழ்நாடு சித்த மருத்துவக் கழகம்.
7. தமிழ் வளர்ச்சி உயர் நிலைக் குழுத் தலைவர்
8. தமிழ்நாடு இறைச்சிக் கழகம் (இந்தக் கழகத்தின பணிகள் தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்துடன் இணைக்கப்படுகிறது.)
9. இயக்குநர் - மரபுக் கலை
10. இயக்குநர், திருக்குறள் நெறி பரப்பு மையம்.
11. அரசவைக் கவிஞர் பதவியையும், மற்றும் முப்பது அரசு கலைஞர்களின் நியமனப் பதவிகளையும் நீக்கி விட அரசு முடிவு செய்துள்ளது.

இத்தகைய கழகங்கள், வாரியங்களை நீக்குவதன் காரணமாகவும், அரசு அலுவலர்களின் தலைமையின் கீழ் இயங்கும் அமைப்புகளின் பணிகளை முறைப்படுத்துவதாலும் நிர்வாகத் திறமை அதிகரிக்கும்; செலவினம் குறையும் என அரசு நம்புகிறது.

## பத்திரிகையாளருக்கு ஓய்வூதியம்

நலிவுற்று வறுமையில் வாடும் தமிழ்நாட்டிலுள்ள ஓய்வுபெற்ற பத்திரிகையாளர்களுக்கு தமிழக அரசு மாதம் ரூ. 250 ஓய்வூதியமாக வழங்கி வருகிறது. சென்னை நிருபர்கள் சங்கமும், வேறு பல பத்திரிகையாளர்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் 2.2.89 அன்று வேண்டுகோள் விடுத்தபோது இத்தொகை ரூ. 400 ஆக உயர்த்தி வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்றே அறிவித்திருந்தார்கள். அதற்கொப்ப இவ்வூதியத்தை 1.3.89 முதல் மாதம் ரூ. 400 ஆக உயர்த்தி அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

## பதவிக் காலம் நீட்டிப்பு

ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், ஊராட்சி, பேரூராட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலத்தை 3 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளுக்கு நீட்டித்த 1989ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் திருத்தச் சட்டம் 27.2.89 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

## புதிய ரகக் கருவி கண்டுபிடிப்பு

பருவ நிலை, மழை, புயல், வெள்ளம் போன்ற தட்ப வெப்ப நிலைகளை பத்துநாட்களுக்கு முன்னதாகவே விவசாயிகளுக்கு அறிவிக்கச் செய்யும் புதிய ரகக் கருவி ஒன்றை கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகம் கண்டுபிடித்துள்ளது. இக் கருவி நெல் அதிகம் சாகுபடியாகும் பகுதிகளுக்கு முதற்கட்டமாக வழங்கப்படும்



## மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் — சீர் மரபினருக்கும்...

# இருபது சதவிகித தனி இட ஒதுக்கீடு

சமுதாய ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பின் தங்கியிருக்கிற வகுப்பினருக்குக் கல்வி கற்பதில் பல சலுகைகள் வழங்குதல், கல்விக் கூடங்களிலும், அரசுப் பணிகளிலும் இட ஒதுக்கீடு செய்தல்,—போன்றவைகளுடன், அவர்களது பொருளாதார மேம்பாட்டிற்கும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு, சமூக நீதி கிடைக்கச் செய்யும் முயற்சியில் இந்தியாவில் உள்ள மாநிலங்களில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது.

அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குத் தனி இடஒதுக்கீடு செய்ய அரசியலமைப்புச் சட்டத்தின் 16 (4) பிரிவு வழிவகை செய்கிறது. தமிழ்நாட்டிலிருந்து எழுப்பப்பட்ட கோரிக்கைகளின் விளைவாக அரசியலமைப்புச்சட்டத்தில் முதல் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, அப்படித் திருத்தப்பட்ட 15 (4) பிரிவின்படி இந்தியக் குடிமக்களுள் சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பிற்படுத்தப்பட்ட நிலையிலிருக்கும் எந்த ஒரு வகுப்பினரின் முன்னேற்றத்திற்காகவும், தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்பினர் முன்னேற்றத்திற்காகவும், அரசு தனி வசதிகளைச் செய்து தர வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

இட ஒதுக்கீடு தொடர்பான பிரச்சினைகள் 1969-ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட 'தமிழ்நாடு முதலாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு (தலைவர்: திரு ஏ. என். சட்டநாதன்), மற்றும் 1982-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட 'தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு (தலைவர்: திரு. ஜே. ஏ. அம்பாசங்கர்) ஆகியவற்றின் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள வகுப்புகளில் பல வகுப்புகள் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் அவர்களுக்குரிய பங்கினைப் பெறவில்லை என்றும், அதே சமயம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் உள்ள சில வகுப்புகள் அவர்களோடு ஒப்பிடும்போது பெருமளவில் பயனடைந்துள்ளனர் என்றும் முதலாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவும், இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவும் தங்களது அறிக்கைகளில் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளன. பல்லாண்டுகளாக இருந்துவரும் இந்தச் சூழ்நிலைதான் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரிலேயே மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக இருப்போருக்குச் சிறப்பு இட ஒதுக்கீடு ( Special Reservation ) தரப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு வழி அமைத்தது. மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரது மக்கட்தொகையில் பெரும் பங்கினராக உள்ள வன்னியர் உள்ளிட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட பல வகுப்புகள் இது குறித்து நெடுங்காலமாகக் கோரிக்கைகள் எழுப்பி வந்தன.

அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவுகள் 16 (4), மற்றும் 15 (4)-இன் நோக்கங்களுக்காக இப்போது 68-விழுக்காடு இட ஒதுக்கீடு அமலில் இருந்து வருகிறது. இதில் 18-விழுக்காடு இட ஒதுக்கீடு ஆதிதிராவிடருக்கும், பழங்குடியினருக்கும், 50 விழுக்காடு இட ஒதுக்கீடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. மீதமுள்ள 32 விழுக்காடு 'பொதுப் போட்டி' (Open Competition)க்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

அனைத்து உண்மைகளையும், பிரச்சினைகளையும் விரிவாகவும் கவனமாகவும் ஆராய்ந்த பிறகு அரசு கீழ்க்காணும் முடிவுகளை மேற்கொள்கிறது:

(1) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பினருக்கு 18 விழுக்காடும்—ஆதி திராவிட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் என்று வழங்கப்படும் (Denotified Communities) உள்ளிட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், முன்னேறிய வகுப்பினர் ஆகிய

அனைத்து வகுப்பினரும் போட்டியிட்டுப் பயனடையக்கூடிய பொதுத் தொகுப்புக்கு 32 விழுக்காடும் உள்ள நிலை, இப்போதுள்ளது போலவே நீடிக்கும்.

(2) இருபது விழுக்காடு இட ஒதுக்கீடு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், (Denotified Communities) என்று அழைக்கப்படுகிற சீர்மரபினருக்கும் இனி அளிக்கப்படும்.

31-01-1957*ஆம் நாளிட்ட அரசு ஆணை தாழ்த்தப்பட்டோர் பெறுகின்ற கல்விச் சலுகைகளை மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும் பெறுவதற்கு வழி வகை செய்வதற்காக, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலை (List of Most Backward Classes) த் தயாரித்து வெளியிட்டிருக்கிறது. 'தமிழ்நாடு முதலாவது பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு (சட்டநாதன் ஆணைக்குழு) இந்த 'மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலை ஆராய்ந்து, இதில் இடம்பெற்றிருந்த தாழ்த்தப்பட்டோர்/பழங்குடியினர் பட்டியலில் இடம் பெற்றுள்ள வகுப்புகளையும், திரும்பத் திரும்பக்கூறப்பட்டிருந்த வகுப்புகளையும், தமிழ்நாட்டில் இல்லாத வகுப்புகளையும் நீக்கி, ஒத்த வகுப்புகளை ஒன்று சேர்த்து, இந்தப் பட்டியலைத் திருத்தி அமைத்தது. இந்த அடிப்படையில் 15-05-1972**தேதியிட்ட அரசு ஆணைப்படி இந்தப் பட்டியல் சீராக்கப்பட்டு வெளியிடப்பட்டது. பின்னர் 30-07-1985*** அன்று அரசு ஆணைப்படி இது மீண்டும் வெளியிடப்பட்டது. அதுபோலவே சீர் மரபினர் என்று வழங்கும் (Denotified Communities) என்கிற வகுப்பாரின் மூலப் பட்டியலும் திருத்தி அமைக்கப்பட்டு அரசு ஆணை 30-07-1985****ல் மீண்டும் வெளியிடப்பட்டது.

மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரில் 39-வகுப்பினர் அடங்குவர். இதில் வன்னியர் வகுப்பினர் அதிக அளவு எண்ணிக்கையினராக இருக்கின்றனர். மக்கட்தொகை எண்ணிக்கைப்படி இதில் வரும் இதர முக்கிய வகுப்பினர்கள் பின்வருமாறு: அம்பலக்காரர், வண்ணார், மருத்துவர், போயர், ஒட்டர் குலாலர், வலையர், மீனவர், தொட்டிய நாயக்கர், ஆண்டிப்பண்டாரம்.

சீர்மரபினர் என்று வழங்கும் (Denotified Communities) என்கிற வகுப்பாரில் மக்கட்தொகை எண்ணிக்கைப்படி குறிப்பிடத்தக்க அளவில் இருக்கும் வகுப்பினர் பின்வருமாறு; மறவர் (தஞ்சாவூர், புதுக்கோட்டை, ரர்மநாதபுரம், திருநெல்வேலி), பிரமலைக் கள்ளர் (ராமநாதபுரம், மதுரை, புதுக்கோட்டை, தஞ்சாவூர்), அம்பலக்காரர் (தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை).

(3) மீதமுள்ள இடங்கள் அதாவது முப்பது விழுக்காடு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் தவிர்த்த இதர, பிற்படுத்தப்பட்ட, வகுப்பினருக்காக (Backward classes) ஒதுக்கீடு செய்யப்படும்.

(4) மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினரின் சமூக, கல்வி, பொருளாதார முன்னேற்றத்தினை விரைவுபடுத்திட ஒரு தனித்துறையினை (Separate Department) ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ள பல்வேறு ஆலோசனைகளை அரசு பரிசீலனை செய்து மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும், சீர்மரபினரும், அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற கல்வி கற்கும் வாய்ப்புகளையும், வேலை பெறும் வாய்ப்புகளையும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் எல்லா வசதிகளையும், திட்டங்களையும் அரசு அதிகரித்தும் விரிவுபடுத்தியும் தரும். குறிப்பாக மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கும், சீர் மரபினருக்கும் எழுத்தறிவு மற்றும் கல்வி வசதிகளைப் பெருக்குவதற்கு, அரசு ஒரு சிறப்புத் திட்டத்தை மேற்கொள்ளும்.

அரசியல் சட்டத்தின் 16 (4)விதிப்படியும் 15 (4) விதிப்படியும் சமூக ரீதியாகவும் கல்வி ரீதியாகவும், பின்தங்கிக் கிடக்கும் வகுப்பினருக்குத் தனி ஒதுக்கீடுகளையும், சிறப்புத் திட்டங்களையும் செய்து அவர்களைக் கைதூக்கி விடுவதில் மத்திய அரசிற்கு பெரும்பங்கு உண்டு. அரசியல் சட்டத்தின் 340-வது பிரிவின்படி அமைக்கப்பட்ட மண்டல் கமிஷன் பரிந்துரைகளைக் கருத்தில் கொண்டு சமூக நீதி குறித்த இந்த முக்கியமான துறையில் மத்திய அரசு ஆக்க பூர்வமாகச் செயல்பட வேண்டும்— என்று தமிழகஅரசு மத்திய அரசை வலியுறுத்தும்.

இத்தகைய நடவடிக்கைகள் மூலம் காலப்போக்கில் அனைத்துத் தரப்பாரிடமும் இப்போது சமுதாய ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் உள்ள ஏற்றத் தாழ்வுகள் நீங்கி, அதன் மூலம் அவர்களுக்குப் போதிய பொருளாதார உயர்வும், சமூக உயர்வும் கிட்டும் என்பது அரசின் நோக்கம். எனவே, இந்தச் செயல் திட்டம் செவ்வனே நிறைவேற அனைத்துத் தரப்பினரும் ஒன்றுபட்டு, ஒத்துழைப்பு தந்து, ஏற்றமிகு தமிழ்நாட்டை உருவாக்க நல்லாதரவு நல்கிட வேண்டும் என்று இந்த அரசு விழைகிறது.

* G.O.Ms.No.353, I.L.C., dated 31.01.1957
** G.O.Ms.No.437, S.W., dated 15.05.1972
*** G.O.Ms.No.1566, S.W., dated 30.07.1985
**** G.O.Ms.No.1567, S.W., dated 30.07.1985



# தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் முடிவுகள்

**வாக்குப் பதிவு நாள்: 11-3-89**

**வாக்கு எண்ணப்பட்ட நாள்: 12-3-89**

## 154. மருங்காபுரி

| | |
|---|---|
| மொத்த வாக்குகள் | 1,43,268 |
| பதிவானவை | 1,10,648 |
| செல்லாதவை | 2,009 |

கே. பொன்னுசாமி (அ.இ.அ.தி.மு.க.) வெற்றி

| | |
|---|---|
| கே. பொன்னுசாமி-அ.இ.அ.தி.மு.க. | 55,287 |
| பி. செங்குட்டுவன்-தி.மு.க. | 44,274 |
| எஸ். ஏ. துரை செபாஸ்டியன் காங். (இ). | 9,054 |
| கே. சுப்ரமணியம் சுயே | 441 |
| எம். சீனிவாசன் ,, | 409 |
| கே. சுப்பிரமணியன் ,, | 379 |
| பி. எம். சுப்ரமணியம் ,, | 144 |
| வி. மாரிமுத்து ,, | 133 |
| வி. சேதுராமன் ,, | 128 |
| வி. முத்துக்குமார் ,, | 114 |
| டி. ஏ. சவரிமுத்து ,, | 70 |
| இ. ஜெகனாதன் ,, | 62 |
| வி.டி.ஆர். வீரப்ப கவுண்டர் ,, | 58 |
| ஆர். வெள்ளைசாமி ,, | 56 |
| டி. கே. கருத்த பாண்டியன் ,, | 29 |

## 144. மதுரை கிழக்கு

| | |
|---|---|
| மொத்த வாக்குகள் | 1,26,225 |
| பதிவானவை | 83,973 |
| செல்லாதவை | 1,081 |

எஸ்.ஆர். இராதா (அ.இ.அ.தி.மு.க.) வெற்றி

| | |
|---|---|
| எஸ். ஆர். இராதா அ.இ.அ.தி.மு.க. | 40,519 |
| என். சங்கரைய்யா-இ.கம். (மார்க்.) | 27,196 |
| எம். கே. இராமகிருஷ்ணன் காங்.(இ.) | 12,778 |
| டி. ஆர். கோபாலன்-பா.ஜ. | 817 |
| பி. பாண்டி சுயே | 221 |
| ஆர். குணசேகரன் ,, | 152 |
| திருமதி பிளாசம் வாஸ் ,, | 131 |
| ஜே. எல். கிருஷ்ணன் ,, | 126 |
| என். தருமராஜன் ,, | 114 |
| ஏ. டி.எஸ். லிங்கம் ,, | 89 |
| டி. ஆர். கிருஷ்ணன் ,, | 75 |
| எஸ். பாலுச்சாமி ,, | 73 |
| எம். அழகர்சாமி ,, | 60 |
| எம். சுந்தரம் ,, | 60 |
| ஜே. டி. ஹரிராம் ,, | 53 |
| வி. எஸ். எம். ஜே. ஜோதிகரன் ,, | 44 |
| டி. எஸ். கதர்வன் ,, | 38 |
| எம். ஏ. கே. கமர்தீன் ,, | 33 |
| எஸ். பி. பேச்சிமுத்து ,, | 33 |
| வி. டி. ஆர். வீரப்ப கவுண்டர் ,, | 33 |
| கே. பொன்னுசாமி ,, | 29 |
| எஸ். வடமலை நீதி ,, | 29 |
| ஏ. இலாஹிமெளலானா | 29 |
| ஓ. கே. லெட்சுமணன் ,, | 28 |
| டி. தெட்சிணாமூர்த்தி ,, | 26 |
| டி. கே. கருத்தபாண்டி | 25 |
| என். ஆர். பிரேம்பாபு ,, | 21 |
| யு.பி. இராஜன் ,, | 18 |
| பி. கே. எம். கணேசன் | 18 |
| எஸ். கமால் ,, | 17 |
| வி.வி. முனிகிருஷ்ணன் ,, | 9 |

## அட்டை சொல்லும் செய்தி

## பொய்க்கால் குதிரை ஆட்டம்

பொய்க்கால் குதிரை ஆட்டம் என்று வழங்கப்படும் புரவி ஆட்டம் தமிழ்நாட்டில் முதன் முதலாக, தஞ்சை மராட்டியக் கலைஞர்களால் நடத்தப்பட்டது எனத் தெரிய வருகிறது. தஞ்சை மராட்டிய மன்னர்களின் ஆதரவு இதற்கு நிறையக் கிடைத்தது.

குதிரையின் உருவத்தை அட்டைகளாலும், மூங்கில் கீற்றுக்களாலும் உருவாக்கி, அதைப் பல வண்ணத் துணிகளால் அணி செய்வார்கள். அட்டைக்குதிரையின் முதுகுப் பகுதியில் ஓர் ஆள் நிற்கும் அளவுக்குக் கூடாக இடம் விடப்பட்டிருக்கும். ஆடுபவர், அந்தக் கூட்டுப் பகுதிக்குள் புகுந்து நின்று, குதிரையைக் கரங்களால் பிடித்திழுத்து ஆடுவார்.

இந்தப் பொய்க்கால் குதிரைக்குக் கால்கள் கிடையாது. ஆடுபவர் மரக்கட்டைக் கால்களைத் தமது கால்களுடன் கட்டிக்கொண்டு ஆடுவார். அவ்வாறு ஆடும்போது குதிரையின் குளம்பு ஒலி கேட்பது போலிருக்கும். ஆடுபவர் கால்களில் சலங்கையும் கட்டிக்கொள்வதால், அதன் இனிய ஒலி தாள இசையை எழுப்பும்.

முன்பெல்லாம் பொய்க்கால் குதிரை ஆட்டத்தின்போது குந்தளம் என்ற கருவியை இசைத்து வந்தனர். தற்காலத்தில் பாண்டு வாத்தியங்கள் இசைக்கப்படுகின்றன. சிலர் நையாண்டி மேளத்தையும் பயன்படுத்துகின்றனர். இசைக்கேற்பக் குதிரையை ஆட்டி அசைத்து ஆடுவார் புரவி நாட்டியக் கலைஞர்.

கோயில் திருவிழாக்களில் இந்த ஆட்டம் நடத்தப்பட்டு வருகிறது. சமூக விழாக்களிலும் சிலர் இந்த ஆட்டத்திற்கு ஏற்பாடு செய்கின்றனர்.

பொய்க்கால் குதிரை ஆட்டத்தில் ஆடவர் மட்டுமின்றிப் பெண்களும் ஈடுபட்டு வருகின்றனர். சில சமயங்களில் இருவரும் இணை சேர்ந்து ஆடுவதும் உண்டு.

கிராமத்து மக்களை மட்டுமல்ல, நகரத்து மக்களையும் கவர்கின்ற ஆற்றல் படைத்த பொய்க்கால் குதிரை ஆட்டக் காட்சி 'தமிழரசு' முகப்பை அணி செய்கிறது.

**நான்காம் அட்டையில்...**

*திருமயிலை தேர்த் திருவிழா*

வண்ணப்படம் உதவி:
தமிழ்நாடு சுற்றுலாத் துறை

## கற்பதில் மூன்று வகை

"தமிழ்க் கவிதைகளை — தமிழ் நூல்களைக் கற்பது மூன்று வகையில்;

ஒன்று: நூலிலுள்ள அருமை பெருமை—நூல் நயம்—இலக்கணக் கலவ கண்டு, படித்து இன்பம் பெறுவது.

இரண்டாவது: அந்த இலக்கியங்களுடன் ஒப்பிட்டு எந்தெந்த வகையில் அது உயர்ந்தது என அறிந்து பிறநாட்டாருக்கும் உணர்ச்சிசெய்வது.

மூன்று: அந்த ஏடுகளின் மூலம் இந்தச் சமுதாயத்திற்கு என்ன பயன் இருக்கிறது என்று ஆராய்ந்து சமுதாயத்திற்கு அதைத் தருவது.

ஏடுகளிலுள்ள நயம் எண்ணி மகிழ்வது என்றால் - அது புலவர் குழுவோடு நின்று விடும். பிறநாட்டார் நமது ஏடுகளை அறிந்து கொள்வதற்கு என்றால் — அது கருத்தரங்கோடு நின்றுவிடும். இதில் சமுதாயத்திற்கு என்ன பயன் என்று ஆராய்வதுதான் முக்கியம்.

—பேரறிஞர் அண்ணா

இந்தியப் பிரதமரின் ஆர்மீனிய நிலநடுக்கப் புனர்வாழ்வு நிதிக்கு தமிழ்நாட்டிலுள்ள பொதுமக்களும் நிறுவனங்களும் 10.3.1989 வரை ரூ.13.67 இலட்சம் நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

சென்னை அடையாறிலுள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையம் இவ்வாண்டு டிசம்பர் துவக்கவில் முறைப்படி திறந்து வைக்கப் பட உள்ளது. இம்மையத்தில் எட்டு மேல் தட்டுகளைக் (gallery) கொண்ட முதல் கட்டப்பகுதி இவ்வாண்டு இறுதிக்குள் தயாராகிவிடும் என்றும், இம்மையத்தில் தலா 5000 சதுர அடி பரப்பு கொண்ட 16 மேல்தட்டுகள் அமைக்கப்படும் என்றும், ஒவ்வொரு மேல்தட்டிலும் சுமார் 50 அறிவியல் கருத்துக்களைக் கொண்ட விளக்கப் பொருட்கள் வைக்கப்பட்டிருக்கும் என்றும் மையத்தின் செயல் இயக்குநர் திரு ஆர்.பெரியசாமி தெரிவித்துள்ளார்.

மலேசிய நாட்டின் மாண்புமிகு எரிசக்தி, தகவல் தொடர்பு மற்றும் தபால்துறை அமைச்சர் திரு டாலுக் லியோ மோக்கி அவர்கள் பெங்களூரில் உள்ள பெல் நிறுவனத்தைப் பார்வையிடச் செல்லும் வழியில், 4.3.89 அன்று சென்னைக்கு வருகைதந்தார். மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்கள் விமான நிலையத்தில் அவரை வரவேற்றார். பின்னர் மலேசிய அமைச்சருக்கு விருந்து அளித்து கௌரவிக்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் குழிபிறையைச் சேர்ந்த ஆத்தூர் கிராமத்தில் (டிரான்ஸ்பரண்ட் குவார்ட்ஸ்) என்ற உயர்வகை கனிமம் கிடைப்பது தெரிய வந்துள்ளது.

இவ்வகைக் கனிமம் சாதாரண குவார்ட்ஸ் கற்களைவிடத் தரத்தில் உயர்ந்தது ஆகும். பண்டைக் காலத்தில் இதை ஸ்படிகக் கற்கள் என்று கூறுவர். இக்கற்களில் இருந்து மூக்குக்கண்ணாடி மற்றும் ஸ்படிக லிங்கம் ஆகியவை செய்தனர். தற்காலத்தில் இக்கற்கள் மின்னணுத் துறையில் உயர்பங்கு வகிக்கின்றன. சில்லிகன் சிப்ஸ் மற்றும் இதர மின்னணுப் பொருட்கள் செய்வதற்கு ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. உள்நாட்டில், கண்ணாடி செய்யப் பயன்படுகிறது.

சென்னையில் பீச்-வேல் இடையே துரித ரயில் விடும் திட்டம் போடப்பட்டபோது அதற்கான செலவு மதிப்பீடு ரூ. 53 கோடியே 50 இலட்சம். 3 ஆண்டுகளுக்குப் பின் தற்போதைய மதிப்பீட்டுத்தொகை ரூ. 105 கோடி. இத்திட்டத்தில் இதுவரை சிமெண்ட் தூண்கள், பாதை வேலைகள்தான் நடந்து வருகின்றன. இது திட்டமிட்டபடி இன்னும் 3 ஆண்டுகளுக்குள் வரவில்லையென்றால் திட்டச் செலவு 3 மடங்கு ஆகிவிடும்.

இத்தகவல்களை வெளியிட்ட மாண்புமிகு மத்திய இரயில்வே அமைச்சர் திரு மாதவராவ் சிந்தியா அவர்கள் இதுவரை ரூ. 33 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், 1989-90ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ.9.85 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

குறைந்தபட்ச ஊதிய சட்டப்படி பீடிசுற்றுதல் உட்பட புகையிலைத் தொழிலுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.


இதன்படி ஆயிரம் ஜாடி பீடி அது எந்த அளவில் இருந்தாலும் ரூ. 11.25 கூலியாகவும், மூக்கூடல் ரக பீடி உள்பட ஆயிரம் சாதா பீடிகள் அது எந்த அளவில் இருந்தாலும் ரூ. 11.05 கூலியாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூலியை 'போனஸ் தொகையுடன் சேர்க்க முடியாது. இந்தக் குறைந்த பட்சக் கூலியைவிட எங்காவது கூடுதலாக வழங்கிக் கொண்டு இருந்தால் அந்த கூடுதல் கூலியே தொடர்ந்து வழங்கப்பட வேண்டும். இந்த அறிவிப்பு 23.2.89 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

# செய்திகள் செய்திகள் செய்திகள்

இந்தியா முழுவதும் ரூ. 1500 கோடிக்கு, பரிசுச் சீட்டுகள் ஒரு வாரத்தில் விற்பனை ஆகின்றன. இதில் ஏறத்தாழ ரூ. 450 கோடி. சீட்டுகள் தமிழ்நாட்டில் மட்டுமே விற்கப்படுகின்றன. தமிழக அரசு பரிசுச் சீட்டு ரூ. 5 கோடிக்குத்தான் விற்பனை ஆகிறது. மீதி 445 கோடி ரூபாய்க்கு வெளிமாநிலப் பரிசுச் சீட்டுகள் விற்கப்படுகின்றன.

தற்போது தமிழ்நாட்டில் பெண்களுக்கு என்று தனியாக 5 இடங்களில் தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் 5 இடங்களில் ரூ. 10 கோடியே 50 இலட்சம் செலவில் பெண்களுக்கென்று தனியாக தொழிற்பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படும்






6..ஆம் பக்கத் தொடர்ச்சி

அவைவரும் தங்களுடைய கருத்துக்களை வழங்க வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்''.

சமயச் சான்றோர்கள் தங்கள் ஆலோசனைகளை வழங்கிப் பேசிய பின்னர், மாண்புமிகு முதல்வர் ஆற்றிய உரை வருமாறு:

இங்கே சமயச் சான்றோர்கள், அறிஞர்கள் ஆகியோர் மேலான கருத்துக்களை எடுத்துரைத்தமைக்கு அரசின் சார்பாக என்னுடைய இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வருகை தந்துள்ள சான்றோர்கள் ஒவ்வொருவரும் எடுத்துக் கூறிய கருத்துக்கள் சிந்திக்கத் தக்கவைகளாகவும், ஏற்றுச் செயல்படத் தக்கவைகளாகவும், அமைவதற்கு ஏற்றவகையில் அதற்கு செயல் வடிவம் தர இந்த அரசு விரும்புகின்றது. வருகை தந்துள்ளவர்களில் அனேகமாக எல்லோருமே ஓரிருவரைத் தவிர இந்து அறநிலையத்துறை-இந்த அமைப்பு மேலும் செம்மையாக, விறுவிறுப்பாக, நேர்மையாக எப்படிச் செயல்பட வேண்டுமென்பதற்கான அரிய ஆலோசனைகளை வழங்கியிருக்கின்றீர்கள்.

இந்து அறநிலையத்துறையின் அவசியம் எப்போது ஏற்பட்டது என்பதற்கான வரலாற்றுச் சான்றுகளையெல்லாம் பெரியோர்கள் இங்கே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அரசின் கண்காணிப்பு இந்தத் துறையிலே இருப்பது எவ்வளவு என்பதை நடைமுறையிலே நாம் கண்டு வருகின்றோம்.

ஒன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். ஏதோ நாங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தபிறகு ஆலயங்களைப் பற்றிக் கவலைப்படுகிறோம் என்று யாராவது கருதினால் சட்ட மன்றத்திலே எதிர்க்கட்சியில் துணைத் தலைவராக நான் பொறுப்பேற்றிருந்த 1962 முதல் 67 வரையுள்ள அந்தக் காலக்கட்டத்திலேயே-இங்கே திருத் தேர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள் அல்லவா, அந்தத் தேர்கள் பல ஆலயங்களில் ஏலம் போடப்படுவதைக் கண்டித்து நான் அன்றைக்கு அவையிலே பேசியிருக்கிறேன்.

நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல அப்போது அறநிலையத் துறை என்பது பல்வகை அதாவது Miscellaneous என்கின்ற அந்தத் தலைப்பிலேதான் ஏதாவது ஒரு மானியத்தைப் பற்றிப் பேசும்போது இடையிலே இதையும் சேர்த்துக் கொள்கிறோம் என்று அதாவது கொசுறு என்று சொல்வார்களே அதைப் போலவே அன்றைக்குப் பேசப்பட்ட துறையாக இருந்தது.

அந்தக் கொசுறு என்கின்ற வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு அப்பொழுது முதலமைச்சராக இருந்த பக்தவத்சலத்திடத்திலே நான் சில கருத்துக்களை அழுத்தம், திருத்தமாக எடுத்துச் சொல்வேன். பழங்காலத் தேர்கள் ஐயாயிரம் ரூபாய், ஆறாயிரம் ரூபாய்க்கு ஏலம் போடப்பட்டு அவை தொன்மை வாய்ந்த தேர்கள் என்ற காரணத்தினால் அதனுடைய தொன்மையும், அதனுடைய கலைத்துவமும் அதனுடைய சிற்ப நயமும் புரியாமல் அவைகள் ஏலம்போடப்பட்டு ஏலம் எடுத்தவர்கள் அந்தத் தேரைப் பிரித்து அதிலுள்ள சிற்பங்களைத் தனித்தனியாக ஆக்கி, பம்பாய் போன்ற இடங்களில் - ஐயாயிரம் ரூபாய்க்கு ஏலம் எடுத்த தேரை ஐம்பதாயிரம் ரூபாய்க்கு அதனை விற்க அந்தத் தொன்மை வாய்ந்த சிற்பங்களையெல்லாம் வெளிநாடுகளில் இங்கிலாந்திற்கோ, அமெரிக்காவிற்கோ அந்த பழைய சிற்பங்களையெல்லாம் விற்கும்பொழுது ஒவ்வொரு சிற்பமும் ஐம்பதாயிரம் ரூபாய் என்கின்ற வகையிலே அவைகளையெல்லாம் அங்கே விற்றார்கள். வெளிநாடு சென்றவர்கள் நண்பர் மணியன் போன்றவர்கள் அமெரிக்காவிலே இதுபோன்ற சிற்பங்களையெல்லாம் கண்டிருக்க முடியும்.



தூய உள்ளமே கோயில், கலிக் தோரைத் தேற்றுவதே தோத்திரம், மக்கட்பணியே மகேசனுக்கு உகந்த வழிபாடு, ஏழை இதயத்தின் மகிழ்ச்சியே இறைவனுக்கு தேர்த்திருவிழா.

—பேரறிஞர் அண்ணா

அதுவும் வெள்ளைக்கார வீடுகளில், விருந்துமண்டபங்களில் நம்முடைய திருத்தேர்களுடைய சிற்பங்கள் எல்லாம் அங்கே அழகுப் பொருட்களாகக் காட்சி தருகின்றன.

ஆக ஆலயங்களிலிருந்து ஏலம் போகும்பொழுது ஐயாயிரம்ரூபாய், பத்தாயிரம்ரூபாய் என்ற அளவிற்கு ஏலம் போனாலும் அத்திருத் தேர்கள் அங்கே லட்ச ரூபாய் பெறுமானமுள்ள விலைக்கு விற்கப்பட்டன. இதை நான் கண்டித்து அப்பொழுதே பேசி அப்பொழுது முதலமைச்சராக இருந்த பெரியவர் பக்தவத்சலம் நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள்.

ஆனால் அந்தந்த ஆலயங்களிலுள்ள தேர்கள் பழுதாகி விட்டதைக் காரணமாகக் காட்டி அந்த ஏலங்கள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டுதான் இருந்தன. திருவாரூர் தேரை பொறுத்தவரையில் ஒரு இருபது ஆண்டுகளுக்குப் பிறகு அந்தத் தேரை ஓட்டிய சிறப்பு முன்பிருந்த கழக ஆட்சிக்கு உண்டு. இப்பொழுதும் அந்தத் தேரை மீண்டும் அங்கே ஓட்ட வேண்டுமென்கின்ற முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த முயற்சி வெற்றி பெறுமென்று நான் நம்புகிறேன்.

ஒரு வேளை இந்தத் தேர்கள் எல்லாம் எதிர்காலத்திலே இல்லாமல் போய் விட்டால் என்ன செய்வதென்று அந்தக் கவலையிலேதான் வள்ளுவர் கோட்டத்தை அமைத்து திருவாரூர் தேரமைப்பாக அமைத்து பல்லாண்டுக் காலத்திற்கு அந்தத் தேர் உலகத்திற்குத் தெரியட்டும் என்ற வகையிலே கழக ஆட்சிக் காலத்திலே அமைக்கப்பட்டது.

இந்தத் துறைக்குச் சில ஆலயங்களின் நிர்வாகங்கள் வந்த காரணத்தால் என்ன ஆதாயம் வந்தது என்பதற்கு ஒன்றிரண்டு உதாரணங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மேட்டுப்பாளையத்துக்கு அருகாமையில் ஒரு காளியம்மன் கோயில், அதற்குப் பரம்பரை அறங்காவலர் தான் இருந்தார்கள்.

பலபத்ரகாளியம்மன் கோயில் என்ற அந்தக் கோயிலுக்கு ஆண்டு வருமானம் ரூ. 1500 ஆக இருந்தது. அதற்கு நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டு இந்தத் துறையில் எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு 75-ஆம் ஆண்டு மாத்திரம் ஆண்டு வருமானம் ஐம்பதாயிரம் ரூபாய்.

ஆலயங்கள் இந்தத் துறையின் கீழ் வருகின்ற காரணத்தால் வருமானம் அதிகரித்துத்தானிருக்கிறது.

பொள்ளாச்சி சுப்ரமணியசாமி கோயிலுக்குப் பரம்பரை அறங்காவலர் இருந்தபோது ஆண்டு வருமானம் பத்தாயிரம் ரூபாய். இந்தத் துறையின் கீழ் அந்தக் கோயிலைக் கொண்டுவந்த பிறகு75-ஆம் ஆண்டு வருட வருமானம் எழுபத்தைந்தாயிரம் ரூபாய்.

செங்கல்பட்டிலுள்ள விநாயகர் கோயிலின் ஆண்டு வருமானம் பத்தாயிரம் ரூபாய். அதை இந்தத் துறையின் கீழ் கொண்டு வந்தபின் 75-ம் வருடம் மாத்திரம் ஒரு லட்ச ரூபாய்.

எனவே இவைகளையெல்லாம் யோசித்து அனைவரையும் சந்திக்கின்ற பொறுப்பை ஏற்று எல்லா இடங்களுக்கும் சுற்றுப் பயணம் நடத்திப் பல்வேறு கருத்துக்களை பரிந்து ஒரு வடிவமாக அமைத்து இந்த அரசுக்கு மூன்று மாத காலத்தில் அறிக்கை தர "இந்து அறநிலையத்துறை ஆக்கப்பணி-ஆலோசனைக் குழு'' என்ற ஒரு குழு அமைக்கப்படும்."

# வெண்பாப் போட்டி - 1




ஈற்றடி : பெண்ணினம் பெற்றதே பேறு

வெண்பா வந்து சேர வேண்டிய இறுதி நாள் : 5.4.1989

தகுதி படைத்த வெண்பாக்கள் வெளியிடப்பெறும். அவற்றில் பரிசு பெற்ற வெண்பாவை எழுதியவருக்கு ஓராண்டு 'தமிழரசு' இலவசமாக அனுப்பப்படும்.

குறிப்பு: அஞ்சல் அட்டையில் வெண்பாவை எழுதி அனுப்பினால் போதும். நேரிசை வெண்பாக்களே அனுப்பப்படல் வேண்டும்.

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், (வெண்பாப் போட்டி)
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600002.

## பார்த்தோம்! படித்தோம்!!



"தமிழரசு - ஒவ்வொரு இதழும் பாதுகாக்கப்பட வேண்டிய சிறப்புக் கொண்டது"

16.2.89 இதழ் அட்டையில் இடம் பெற்றுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர், குடியரசுத் தலைவர் ஆகியோரின் திருவுருவப் படங்கள் அற்புதமாக இருந்தன நன்றி.

பி.ஈஸ்வரநாதன்,
கீழைப்பெருமழை.

மேலும் இவ்விதழின் முகப்பைப் பாராட்டி எழுதி இருப்பவர்கள்— ஆர். அத்தியப்பன், மூணுசாவடி; எம்.பி.இளங்கோ, பி.மேட்டுப் பாளையம்; எம்.பாஸ்கரன், ஆவ ரங்குளம்; ரஹ்மானியா, திட்டச் சேரி, டி.ரமேஷ்குமார், பறங்கிப் பேட்டை;

திரு மாமூலன் எழுதிய "நல்ல காலம் பிறந்தாச்சு" சிறுகதை. சிறந்த கருத்துள்ள அருமையான கதை.'கோபன்' படம் அருமை. பாராட்டுகள்.

எஸ்.பிரபாகரன்
மேல்பாலானந்தல்.

மேலும் இந்தக் கதையைப் பாராட்டி எழுதியிருப்பவர்கள்: வித்யாசேகர், விக்கிரபாண்டியம்; அ.கடக்கரை,பன்னிமேடுஎஸ்டேட்; வெ.சங்கரநாராயணன், திருவண் ணாமலை-1.

கவிஞர் முடியரசன் எழுதிய 'ஆடு மயிலே!' கவிதையும், ஓவியமும் பிரமாதம்.

ப.அ.சண்முகம்
கே.ஆர்.தேவேந்திரன்
கொணவட்டம்.




தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா கருத்துரைகள் பயனுள்ள தாக இருந்தன.

ஜி.மாரிச்சாமி,
திருவேங்கடம்,
ஏ.ஷேக்முஜிபுர்ரஹ்மான்,
திட்டச்சேரி.

'மாணவர் பக்கம் 'அருமையாக உள்ளது.

கே.பாலசுப்ரமணியன்,
செய்துங்க நல்லூர்,
மாவேந்தன்,
பரமன் குறிச்சு.

தமிழரசு ஒவ்வொரு இதழும் பாதுகாக்கப்பட வேண்டிய சிறப்பு மிக்க செய்திகள் அடங்கியதாக உள்ளது.

திருக்குறள்
கு. பாண்டியன் இந்திரா
சலகண்டபுரம்.

'கரும்பில் நீர் நிர்வாகம்' பற்றிய கட்டுரையைப் படித்தோம். எங்களைப்போல உள்ள உழவர்கள் பயனடையும் வண்ணம் அருமையாக உள்ளது. இதுபோல் உழவர்கள் பயனடையும் வகையில் விவசாயச் செய்திகளை மேன்மேலும் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எஸ்.கே.சுப்பிரமணியன்
கோவிலூர்.

புதுதில்லி முதலமைச்சர்கள் மாநாட்டில் முதல்வர் கலைஞர் கருத்துரை உண்மையில் ஒளிமயமான எதிர்காலம் உருவாக உளமார்ந்த கருத்துக்களை வெளியிட்டிருப் பதைப் படித்துப் பரவசம் அடைந் தேன்.

ம.சுப்பிரமணியசிவா,
காரைக்குறிச்சி.

'தமிழில் அறிவியல் நூல்கள்' என்ற தலைப்பில் டாக்டர் வி.சி. குழந்தைசாமி அவர்கள் ஆற்றிய உரை சிந்திக்கத்தக்கது.

அ.இ.ராஜப்பன்
கருமத்தாம்பட்டி.


ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


Verified


/ அதி / நவீன / பாலியெஸ்டர் / வகைகள் /



உங்கள் மனதைக் கவர்ந்தவை மலர்கள்.
அவைகளின் அற்புத வண்ண ஜாலங்களை
உங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது,
மிக நவீனமாக அழகு மிளிரும்
பாலியெஸ்டர் புடவை வகைகளில்!

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங்
• பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DFR/1766/MS88/HTA

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

